

கல்கி
ALKI 1-3-1959
30
நயா
பைசா

உங்கள் கேசத்திற்கு உரிய

பராமரிப்பை அளிக்கிறீர்களா ?

இராஸ்மிக் பர்ப்யூம்ட் கோகனட் ஹேர் ஆயில் உபயோகித்து அன்றாடம் பராமரித்துவந்தால் உங்கள் கேசம் அடர்த்தியாகவும், பளபளப்புடனும் மிளிரும். சுத்தமான தேங்காயெண்ணெயான இராஸ்மிக், கேசத்திற்கு போஷாக்களித்து சம்ரட்சிக்கும். உங்களுக்குப் பிடித்தமான—ரோஜா அல்லது மல்லிகை—நறு மணத்துடன் கிடைக்கும் சீசா ஒன்றை இன்றே வாங்கி உபயோகித்துப் பாருங்கள்.



இராஸ்மிக்

பர்ப்யூம்ட்

கோகனட் ஹேர் ஆயில்



ECH. 3-50 TM

கல்கி

பொருளடக்கம்

அரசியல்

கதைகள்

கட்டுரைகள்

" கல்கி "யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள் ; சம்பவங்களும் கற்பனையே.


எவ்விதத்தில் அணிந்தாலும்
எழிலைத்தரும்
மபத்லால்
பாப்ளின்கள்
ராஜ்யோக் 2x2
நவ்யோக், நயன்கினி
குட்வில் & ப்ரிண்டெட்
நோ அயர்ன்
மானிகோ, மாபினைஸ்டு
மாப்பிரைமா
Manico, Mafinised
Mafprima
தி மபத்லால் பைன்
ஸ்பினனிங் & மான்யூ. கம். லிமிடெட்)
நவசாரி
MF 25



மலர் 18 இதழ் 31 || தமிழ்த்திரு நாடு தன்னைப் — பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார் || விளம்பி ஆண்டு மாசி மீ 17

நிலப் பிரச்னைகளும் சென்னை சர்க்காரும்

மக்கள் சபையில் திரு மஸானிக்குப் பதில் அளிக்கும் வகையில் பாரதப் பிரதமர் நேருஜி நிலச் சீர்திருத்தத் தீர்மானத்தின் மேல் மிக விரிவாகப் பேசியிருக்கிறார்; மிக உருக்கமாகப் பேசியிருக்கிறார்.

"நான் ஒவ்வொரு உழவனிடமும் சென்று கூட்டுறவுச் சாகுபடியில் சேர்ந்து கொள்ளுமாறு கெஞ்சிக் கேட்டுக் கொள்வேன்" என்று பேசியிருக்கிறார்.

உழவுக்கு வேண்டிய பண்டங்களைக் கூட்டுறவு முறையில் விவசாயிக்குக் கொடுக்கும் ஏற்பாட்டை யாரும் ஒப்புக்கொள்வார்கள். இதற்கு யாரும் ஆட்சேபிக்கவில்லை. ஆட்சேபம் எல்லாம் நிலத்துக்கு மேல்வரம்பு கட்டி மிகுதியைப் பறிமுதல் செய்வதைப் பற்றித்தான். அந்த நிலத்தின் சொந்தக்காரன் கதி என்ன? அவனுக்கு ஈட்டுத் தொகை ஏதாகிலும் உண்டா? அந்த நிலத்தின் கதிதான் என்ன? அது யாருக்குப் போவது? எத்தனை பேருக்குப் போகும்? இதனால் என்ன நற்பயன்?—இவைதான் கேள்விகள்.

இவற்றுக்கு நேருஜியின் நீண்ட உரையில் எத்தகைய பதிலும் காணோம். அப்படி எடுத்துக் கொள்ளப்படும் நிலம் நிச்சயம் பலன் தராத கூட்டுறவுச் சாகுபடியில்தான் கொண்டு போய்விடும். இதைத்தான் ஆட்சேபிக்கிறார்கள்.

இவ் விஷயத்தில் நமது சென்னை சர்க்காருக்கு அந்தரங்கத்தில் நம்பிக்கை இல்லை என்பதுதான் நமது அபிப்பிராயம். ஹைதராபாத்தில் மந்திரி திரு சி. சுப்பிரமணியம் நாம் சொல்லும் வாதங்களையெல்லாம் எடுத்துப் பேசினார்.

ஆனால் நாகபுரியில், தாம் முன்பு எடுத்துக் கொண்ட நிலைக்கு மாறாக நின்று பேசியிருக்கிறார்.

இதற்குக் காரணம் என்ன? நேருஜி போகிற போக்கில் போவதுதான் அரசியலில் க்ஷேமம் என்கிற எண்ணமாக இருக்கலாம்!

இதை நாம் சொல்லவில்லை. டாக்டர் சுப்பராயன் சமீபத்தில் ஒரு கூட்டத்தில் பேசும்போது பின்வருமாறு கூறினார்:

"நானும் மந்திரி சுப்பிரமணியமும் நிலச் சீர்திருத்த விஷயத்தில் ராஜாஜியின் கட்சியைச் சேர்ந்தவர்கள்தான். நிலச் சீர்திருத்த விஷயத்தில் ராஜாஜி சொல்வது தான் சரி என்று ஒப்புக் கொள்ளுகிறோம். இருந்தாலும் அதற்கு மாறான முடிவுகளுக்குத்தான் நாங்கள் கைதூக்க வேண்டியிருக்கிறது. ஏனென்றால் கட்சிக் கட்டுப்பாடு முதலியன வந்து சேர்கின்றன." இதை அவர் திரு சி. சுப்பிரமணியம் அவர்களைப் பக்கத்தில் வைத்துக்கொண்டே சொன்னார்.

கட்சிக் கட்டுப்பாடு என்பதின் பெயரில் நாட்டுக்கு நிரந்தரமான தீமை விளைவிக்கும் ஒரு காரியத்துக்கு உடன்படலாமா? நேருஜிக்குக் கோபம் வருகிறது என்பதற்காகக் கிராமப்புற வாழ்க்கையைச் சீர்குலைக்கும் ஒரு காரியத்தில் பொறுப்புள்ள அங்கத்தினர்கள் ஈடுபடலாமா? இதற்காகவா மக்கள் இவர்களைத் தேர்ந்தெடுத்துச் சட்டசபைகளுக்கு அனுப்பியிருக்கிறார்கள்?

இவையெல்லாம் எப்படியாயினும் கட்சிக் கூட்டத்திலாவது மனத்திலுள்ளதை, பயமில்லாமல் சொல்வது கட்சிக் கட்டுப்பாட்டுக்கு விரோதமாகாது. நமது சென்னை மந்திரிகள், காங்கிரஸ் சட்டசபை அங்கத்தினர்களைக் கொண்டு, நிலச் சீர்திருத்தம் தவறானது என்று ஒரு தீர்மானம் நிறைவேற்றி மேலிடத்துக்கு அனுப்பி வைத்தால் நேருஜி விழித்துக் கொள்வார்.

இதில் கட்சிக் கட்டுப்பாட்டுக்கு மாறுபட்ட நிலையொன்றுமில்லை. நிலச் சீர்திருத்த விஷயம் அந்தந்த ராஜ்யங்களின் சொந்த விஷயம். இதில் மத்திய சர்க்கார் தலையிடுவதற்கு உரிமையில்லை.

“நிலச்சீர்திருத்த விஷயத்தில் உச்சவரம்பு நாம் கட்டத் தயாராயில்லை. இது விவசாயத்தைக் கெடுத்துவிடும் என்று அஞ்சுகிறோம்!” என்று சென்னை சட்டசபை தீர்மானம் நிறைவேற்றுவது கட்சிக் கட்டுப்பாட்டுக்காவது, அரசியல் நிர்ணயச் சட்டத்துக்காவது விரோதமாகாது.

இதற்கு வேண்டியது சிறிது தைரியம் தான். நமது மந்திரிகள், மத்திய சர்க்காரின் கைப்பாவைகளாக இயங்கி வருவது சரியல்ல. அவர்கள் எழுந்திரு என்றால் எழுந்திருந்தும், உட்கார் என்றால் உட்கார்ந்தும் தோப்புக்கரணம் போட்டு வருவது கௌரவமும் அல்ல; நாட்டுக்கு நல்லதுமல்ல.

நமது அரசியல் நிர்ணயச் சட்டப்படி சென்னை சர்க்காருக்குச் சுதந்திரம் இருக்கிறது. ஆனால், அதை அனுபவிக்கத் தைரியம் வேண்டும். இது இல்லாதபடியினால் அந்தச் சுதந்திரம் தேய்ந்து தேய்ந்து போய் வருகிறது.

நேருஜியிடம் ஒரு நல்ல குணம் உண்டு. தாம் எடுத்துள்ள காரியத்துக்குப் பொது மக்களிடையே கணிசமான எதிர்ப்பிருக்கிறது என்று தெரிந்த மாத்திரத்தில் தமது யோசனைகளைச் சற்றும் கூசாமல் மாற்றிக் கொள்வார்.

நாட்டில் இப்பொழுது நிலச் சீர்திருத்தத்துக்குப் பலமான எதிர்ப்புக் குரல்கள் கிளம்ப ஆரம்பித்து விட்டன. ஹைதராபாத்தில் சென்ற வாரம் கூடிய கூட்டத்தில் நல்ல தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார்கள்.

தமிழ் நாட்டிலும் விவசாயப் பெருங்குடி மக்கள் உடனடியாகத் தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்துக் கொள்ள வேண்டும்.

இது ஒரு கட்சிப் பிரச்னையல்ல. இது ஒரு தேசியப் பிரச்னை. நாட்டு நலனில் அக்கறை கொண்ட அத்தனை கட்சியாரும் சேர்ந்து ஒரு குரலில் பேச வேண்டிய பொருள் இது.

இது நிலம் படைத்த பெருங்குடி மட்டும் அக்கறை காட்ட வேண்டிய விஷயம் என்று நிலத்தில் இறங்கி உழுது பயிர் செய்பவர்கள் ஒதுங்கியிருக்கக் கூடிய சமயமல்ல. பண்ணைகளைச் சின்னாபின்னமாக்கிச் சிலருக்குத் தானம் செய்வதில் பெரும்பாலோரான உழவுத் தொழிலாளர்கள் ஏதொரு லாபமுமடைய மாட்டார்கள். அவர்களுடைய தொழில் வாய்ப்பும் கட்டாயம் குறையும். தமிழ் நாட்டு ஏழை உழவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறோம்—ஏமாந்து போகவேண்டாம் என்று.

இப்பொழுது வந்துள்ள நிலச் சீர்திருத்தம் அமுலானால் இன்றுவரை சுதந்திரத்தோடு வாழும் உழவர்கள் சர்க்கார் உத்தியோகஸ்தர்களின் கீழ் வெறும் கூலிகளாகவே வாழ நேரிடும்!

“குடும்பக் கட்டுப்பாடு!”

ராஜாஜி


குடும்பக் கட்டுப்பாடு மிக அவசியம். ஆனால் இந்தச் சொற்றொடருக்குக் கர்ப்பத் தடைப் பிரசாரம் என்று பொருள் வைத்துப் பிரயோகித்து வருகிறார்கள்.

சிற்சில பிரத்தியேக வியக்திகள் தகுந்த காரணத்துக்காக குழந்தைகள் பிறவாமலிருக்கத் தடை முறைகள் தேடுவதும் பெறுவதும் யாரும் ஆட்சேபிக்கவில்லை. ஆனால் தற்போது பொதுவாக நடைபெறும் கர்ப்பத் தடைப் பிரசாரம் நாட்டின் ஜனத்தொகையைக் குறைத்துச் சமுதாய முன்னேற்றத்துக்கு உதவும் என்று நான் நம்பவில்லை. இந்திய ஜனத்தொகையைக் குறைத்துவிட வேண்டும் என்ற வாதத்தைச் சரி என்று ஒப்புக் கொண்டாலும், கர்ப்பத் தடைக் கருவிகளை வழங்குவதனால் அந்த எண்ணம் நிறைவேறும் என்று எதிர்பார்க்க முடியாது. சுயநலச் செலவுகளை அதிகப்படுத்திக் கொண்டு சந்தோஷமாக வாழ்வதற்குச் சௌகரியமாகும் என்று - ஏழைகள் அல்ல-வேறு சிலர் இந்தக் கர்ப்பத் தடைப் பிரசாரத்தை வரவேற்கிறார்கள். இந்தப் பிரசாரத்தினால் உண்டாகும் விளைவு கூடா ஒழுக்கம் தான். விவாகம் முடித்துக் கொள்வதற்குத் தற்காலத்தில் ஏற்பட்டிருக்கும் கஷ்டங்களும், தர்மமும் ஆசாரமும் குலைந்த இந்நாளில் விபரீதமாக அதிகரித்திருக்கும் ‘இணை விழைச்சி’ வேகமும், புது நாகரிகத்தில் இளம் பெண்களுக்கு ஏற்பட்டிருக்கும் நவீனச் சூழ்நிலைகளும் எல்லாம் சேர்ந்து கர்ப்பத் தடைக் கருவிகள் ஒழுக்கம் கெடுவதற்குத்தான் பயன்படச் செய்கின்றன. இது இன்னும் மேலும் மேலும் வளரும். பசுவேகத்தை அடக்கித் தற்காப்பைத் தேட வேண்டுமேயொழிய, குற்றங்களை மறைக்கும் கருவிகளை விலை கொடுத்து வாங்குவோர்க்கு விற்பது நாட்டுக்கு நலன் உண்டாக்காது.

ஆஸ்பத்திரிகளில் நோயும் பலவீனமும் கண்டு வைத்திய உத்தியோகஸ்தர்களே இந்தக் கருவிகளைப் பெறத் தகுந்தவர்களுக்கு வழங்க வேண்டும் என்று விதிப்பதே நல்லது.

நிகழ்ச்சிச் சித்திரம்

விஜி



என்ன சேதி?

காந்திஜியின் சீடர்

சென்ற வாரம் சென்னைக்கு வந்த அமெரிக்க நீக்ரோக்களின் தலைவர் மார்டின் லூதர் கிங் அவர்களைக் குறிப்பிட வேண்டும். அவர் தம் மனைவியுடன் வந்து சென்னையில் இரண்டு நாட்கள் இருந்தார். அவருக்கு வயது முப்பதுதான் ஆகிறது.

அவருக்குக் காந்திமகானிடமும், காந்தியடிகள் கண்டுபிடித்த ஒத்துழையாமை முறைகளிலும் அளவு கடந்த ஈடுபாடு. அம்முறைகளைக் கடைப்பிடித்துத் தாம் நல்ல வெற்றி சம்பாதித்திருக்கிறார் என்று அவர் சொல்லும் போது நமக்கு அவரைப் பற்றி அறிந்து கொள்ள ஆவல் எழுவது இயல்புதானே! ஐக்கிய அமெரிக்காவின் தென்பகுதியான அலபாமா ராஜ்யத்தைச் சேர்ந்தவர். அங்கு வெள்ளைத் தோலுடையவர் கறுப்புத் தோலுள்ள நீக்ரோக்களைத் தீண்டத் தகாதவர்களாகப் பாவித்துப் பலவிதங்களில் கொடுமைப் படுத்தி வருகிறார்கள்.



திரு "மார்டின்" லூதர் கிங்

அந்த ராஜ்யத்தில் பஸ்களில் ஒரு பகுதி முழுதும் வெள்ளையர்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்குமாம். நீக்ரோக்கள் ஏறினால், வெள்ளையர் உட்காரும் பகுதியில் இடம் முழுதும் காலியாயிருந்தால் கூட நீக்ரோக்களில் ஒருவர்கூட உட்காரக் கூடாதாம். ஆனால் 1955-ல் அந்த ராஜ்யத்தின் தலைநகரான மாண்ட்கோமரியில் ஒரு நீக்ரோ மாது வெள்ளையருக்கு ஒதுக்கிய இடத்தில் உட்கார்ந்தாளாம். இதைக் கண்டு பொருமி அந்த மாதைக் கைது செய்து விட்டார்கள்!

இது நீக்ரோக்களின் தன்மான உணர்ச்சியைக் கிளறி விட்டது. அன்றிலிருந்து 391 நாட்கள் மாண்ட்கோமரி மக்கள் சாத்விக முறையில் பஸ்களைப் பகிஷ்காரம் செய்தார்கள். நீக்ரோக்கள் எங்கே போக வேண்டியிருந்தாலும் நடந்தே போவது என்று உறுதியாக இருந்தனர். இந்த ஒத்துழையாமை நாட்களில் தவறிக் கூட ஒரு பலாத்கார நிகழ்ச்சி நடக்கவில்லை என்று கிங் பெருமையோடு சொல்லிக் கொண்டார். கடைசியில் நீதி வென்றது. 20-12-1956-ல் நீக்ரோக்களை பஸ்களில் ஒதுக்கி வைக்கக் கூடாது என்று உத்தரவு வந்தது. அதன் விளைவாக 21-12-56-லிருந்து நீக்ரோக்களும் வெள்ளையரும் எவ்விதத் தீண்டாமை முறையுமின்றிச் சேர்ந்தாற்போல் பிரயாணம் செய்கின்றனர்.

நீக்ரோக்கள் அமெரிக்காவில் அடைந்த ஒரு வெற்றி இது. இன்னும் எவ்வளவோ பிரச்னைகள் தீரவேண்டியிருக்கின்றன. அவைகளையும் காந்திய முறையிலேயே தீர்ப்போம் என்று உறுதி கூறுகிறார் மார்டின் லூதர் கிங். ஏனெனில் இந்த ஒரு முறையில்தான் தோல்வியுற்றவர்களும் வெற்றி பெற்றவர்களும் சமமான மனமகிழ்ச்சியை எய்துகின்றனர். உள்ளத்தில் யாருக்கும் கசப்பு உணர்ச்சி தங்குவதில்லை என்கிறார்.

காந்தி மகானின் எளிய வாழ்க்கை முறையில் மெள்ள நம்பிக்கை பிறந்து அமெரிக்க வாழ்க்கை முறையை லட்சியமாகக் கொண்டு வாழத் துடிக்கும் நமக்கு, அமெரிக்காவிலிருந்து காந்திய முறையை விடச் சிறந்ததில்லை என்று ஞாபகமூட்டும் வகையில் மார்டின் லூதர் கிங் இந்தியாவுக்கு விஜயம் செய்திருக்கிறார் என்றே நமக்குத் தோன்றுகிறது.

இந்தியாவில் காந்திமகானுடன் சேர்ந்து அஹிம்சைப் போரில் பங்கெடுத்துக் கொண்ட தலைவர்களைப் பேட்டி காண வந்த மார்டின் லூதர் கிங், ராஜாஜியையும் கண்டு பேசி விட்டுப் போயிருக்கிறார்.

கதம்ப இசைமாலை

1956-ம் ஆண்டில் ஓர் சம்பவம் நிகழ்ந்தது. அமெரிக்காவின் பிரசித்தி பெற்ற இசைவாணரான டாக்டர் கவெல் சென்னை வித்வத் சபையின் சங்கீத விழாவில் பங்கெடுத்துக் கொண்டார். தென்னாட்டுக் கர்நாடக சங்கீதத்தைக் கேட்டு அநுபவித்தார். அதன் விளைவாக, கர்நாடக சங்கீதத்தையும், மேனாட்டுச் சங்கீதத்தையும் இணைத்து ஒரு புதுவித சங்கீதம் சிருஷ்டித்தார். அதற்குச் 'சென்னை ஸ்வரசித்திரம்' என்று பெயரிட்டார். அதைச் சென்னை சங்கீத அகாடமிக்கு அர்ப்பணம் செய்தார்.



ஸ்ரீமதி மார்டின் லூதர் கிங்

இந்தப் புது சங்கீதம் எப்படியிருக்கும் என்று நேயர்கள் கேட்பது காதில் விழாமல் இல்லை!

பாதாம் அல்வாவின் ருசி எப்படியிருக்கும் என்றால் வார்த்தைகளால் சொல்லிக் காட்டிவிட முடியுமா? சாப்பிட்டால்

தானே தெரியும். அதேபோல் சங்கீதமும் கேட்டால்தான் அதன் சுவை தெரியும்! சென்னை அமெரிக்கச் செய்தி ஸ்தாபனத்தாரும், வித்வத்சபையாரும் சேர்ந்து மேற்கண்ட சென்னை ஸ்வரச் சித்திரத்தைக் கேட்க மார்ச்சு 3, 4 தேதிகளில் தேனாம்பேட்டை காங்கிரஸ் மைதானத்திலுள்ள அரங்கில் ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

இந்த இசையை வழங்க நியூயார்க் நகரின் பிரபல ஆர்க்கெஸ்ட்ரா கோஷ்டித் தலைவரான நார்மென் ஷெர்மன் தமது 45 பேர்கள் கொண்ட வாத்திய கோஷ்டியினருடன் வருகிறார். இதில் நம் நாட்டு தபலா வாத்தியத்தையும் ஜலதரங்கத்தையும் இணைத்திருக்கிறார்கள்!

மேல்நாட்டுக் கீழ்நாட்டுக் கலப்புடன் பிறந்த சென்னை ஸ்வரச் சித்திரம் ஒரு புதுமையாக இருக்கும். இசையில் புதுமை விரும்பும் ரசிகர்கள் இந்த அரிய சந்தர்ப்பத்தை நழுவ விடுவார்களா என்ன?

கணித மேதையின் நினைவு

விஞ்ஞானத் துறையில் சேவைசெய்து நமது நாட்டை, விஞ்ஞான உலகுக்கு அறிமுகம் செய்தவர்கள் நமது பாராட்டுக்குரியவர்கள். அப்படிப்பட்ட மேதைகளில் ஒருவரான கணித மேதை ராமானுஜத்தின் நினைவுநாளை, ஜனவரி 25-ம் தேதி சென்னை முத்தியாலுப் பேட்டை உயர்நிலைப் பள்ளியைச் சேர்ந்த எண் நம்பர் கழக மாணவர்கள் சிறப்பாகக் கொண்டாடியிருக்கிறார்கள். கணிதப் பேராசிரியரான டாக்டர் ஏ. நரசிங்கராவ் இந்த வைபவத்துக்குத் தலைமை வகித்திருக்கிறார். காலஞ்சென்ற கணித மேதை ராமானுஜம் அவர்களின் மனைவியார் இந்தக் கூட்டத்துக்கு வந்து சிறப்பித்திருக்கிறார். மேற்படி பள்ளியின் பழைய மாணவரான முகம்மது கனி, "கணக்கு மேதை ராமானுஜத்தால் போட இயலாத கணக்கு ஒன்று உள்ளது. இராமானுஜம் அவர்களின் மனைவியார் வருகையினால் கூட்டத்தில் உண்டான மகிழ்ச்சியை அவர் இருப்பின் அவரால் நிச்சயமாகக் கணக்கிட்டுச் சொல்லமுடியாது" என்றார். தமிழ் மாணவர்களுக்குக் கணிதம் என்றும் எட்டிக்காயல்ல!

ஒரு சூடு

திருவண்ணாமலைத் தொகுதி மக்கள் சபை அங்கத்தினரான திரு வி. ஆர். நரசிம்மன் அவர்கள் 'நம் நாட்டில் பிறந்த பொறி இயல் கலை வல்லுனர்களுக்குக் குறைந்த சம்பளத்தில் வேலை கொடுத்து விட்டு, வெளிநாட்டிலிருந்து சாமான்ய பொறி இயல் நிபுணர்களைக் கொண்டு வந்து அதிகச் சம்பளம் கொடுப்பானேன்?' என்று மக்கள் சபையில் கேட்டார்.

இந்தக் குற்றச்சாட்டு நீண்ட காலமாகவே பலர் உள்ளத்தில் இருந்து வருகிறது. இப்பொழுது பகிரங்கமாகக் கேட்கப்பட்டதால் ஏதாகிலும் பலன் கிட்டும் என்று எதிர்பார்க்கலாமா? அல்லது 'அன்னியக் கடன் உதவியுடன் வரும் கஷ்டம் இது. ஆகவே, இதைச் சகித்துக் கொண்டிருக்க வேண்டியதுதான்' என்று கூறாமல் கூறப்படுமா?

சென்னையில் தேர்தல்

இரண்டு முறைகளுக்குமேல் சென்னை நகராண்மைக் கழகத்தில் அங்கத்தினராக இருந்தவர்களுக்கு மீண்டும் தேர்தலில் நிற்கக் காங்கிரஸ் டிக்கெட் கொடுக்க முடியாது என்று தேர்தல் கமிட்டியார் முடிவு செய்திருக்கிறார்களாம். ஆனால் இந்தத் திட்டத்தை எவ்வளவு உறுதியாக அமுல் நடத்தப் போகிறார்கள் என்பது போகப் போகத்தான் தெரியும்.

மாக்மில்லன் விஜயம்

மேற்கத்திய நாடுகள்-ருஷ்ய உறவில் ஒரு புதுக்கட்டம் ஆரம்பமாகியிருக்கிறது. பிரிட்டிஷ் பிரதமர் மாக்மில்லன் ருஷ்யாவுக்கு விஜயம் செய்திருக்கிறார். ருஷ்ய சர்க்கார் அவருக்கு மிக நல்ல வரவேற்பு அளித்திருக்கிறது. பிரிட்டிஷ் பிரதமரும் "உங்கள் அரசாங்க முறையும் வாழ்க்கை முறையும் எங்கள் அரசாங்க முறைக்கும் வாழ்க்கை முறைக்கும் மாறுபட்டிருப்பினும் உலகில் இரண்டு முறையும் சேர்ந்து வாழ்வதில் எவ்விதக் கஷ்டமும் இருக்க முடியாது" என்று பேசியிருக்கிறார். இருநாடுகளும் உலகில் நிரந்தரமான அமைதி நிலைநாட்ட முயல வேண்டும் என்றும் பேசியிருக்கிறார். இவை யாவும் நேருஜி பேசிவந்த பஞ்சசீலக் கொள்கையையே எதிரொலிப்பது போல் தோன்றுகிறது. இது உலக மக்கள் அனைவருக்குமே மகிழ்ச்சி அளிக்கக்கூடிய விஷயமாகும்.

அமெரிக்க ஜனாதிபதியை ருஷ்யப் பிரதமர் குருஷேவ் ருஷ்யாவுக்கு விஜயம் செய்யும்படி அழைத்தார். இப்படியெல்லாம் அழைத்தால் போதுமா? இன்னும் வெற்றிலை பாக்கு எல்லாம் வைத்து வருந்தி வருந்தி அழைக்க வேண்டும் என்று ஜனாதிபதி ஐஸன்ஹோவர் சொல்லி மறுத்து விட்டார். இது அமெரிக்காவின் பண்பாட்டுக் குறைவைத்தான் காண்பித்தது. ஆனால் இத்தகைய அசட்டுக் கௌரவத்தைச் சாக்கிட்டுக் கொண்டு பிரிட்டிஷ் பிரதமர் ருஷ்யாவுக்குப் போகாமல் இருக்கவில்லை என்பது திருப்தி அளிக்கும் செய்தியாகும்.

மொத்தத்தில் அமெரிக்க அரசாங்கத்தின் ருஷ்ய பீதி குறையாமல் இருந்து வருகிறது. பிரிட்டிஷ் சர்க்காருக்கு ஓரளவு தைரியம் அதிகம் என்றே சொல்லலாம்.

இலங்கையில் பெருங் குழப்பநிலை

கொழும்பு, பிப்ரவரி, 21உ.

சென்ற வாரம் இலங்கைப் பார்லிமெண்டில் அமளிதுமளிப்பட்டு அதன் விளைவாக நாடு முழுவதிலும் கொந்தளிப்பான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அடுத்தபடியாக நாட்டில் என்ன நடக்குமோ என்ற கவலையே ஒவ்வொருவரது மனத்திலும் இருக்கிறதென்றும் கூறினால் மிகையாகாது. அரசாங்கமும் எதிர்க்கட்சிகளும் பலப் பரீசோதனைக்கு வரிந்து கட்டிக் கொண்டு நிற்கின்றன. நாடு முழுவதும் ஒரு மாபெரும் பொது வேலை நிறுத்தத்தை ஆரம்பித்துக் குழப்பத்தை உண்டு பண்ணவும் அக் குழப்பத்தைச் சமாளிக்க மாட்டாமல் அரசாங்கத்தை வீழ்த்தவும் எதிர்க்கட்சிகள் திட்டம் தீட்டிக் கொண்டிருக்கின்றன. இத்தக் குழப்பமான நிலைமையை அரசாங்கத்தின் எதிரிகளும் காடையர்களும் நன்கு பயன்படுத்திக் கொள்ள ஆரம்பிப்பது இயற்கை. அது மாதிரியான சூழ்நிலையில் அடுத்தபடியாக இலங்கையில் என்ன நடக்கும் என்பதை யாரும் நிச்சயமாகச் சொல்ல முடியாது. அதே சமயம் ஆளும் கட்சியினர் கடைசி மூச்சு இருக்கும் வரையில் பதவி துறக்கத் தயாராயிருப்பார்களா? எவ்வித நிலைமையையும் சமாளிக்க அவர்களும் தயாராகி வருகிறார்கள். கவர்னர் ஜெனரல் தலைமையில் மூவகைப் படைகளின் தலைவர்கள் "யுத்த மகாநாடு" கூட்டிப் பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பலப்படுத்தி வருகிறார்கள்.

சென்றவருடமே, ஜூன் மாத வகுப்புக் கலகத்தின் போது அரசாங்கம் அவசர காலச் சட்டத்தைப் பிரகடனப்படுத்தியதல்லவா? அந்தச் சட்டம் இன்னும் நீக்கப்படவில்லை. பிரதிமாதமும் அடுத்தடுத்து அதை மாதந்தோறும் நீடித்து வருகிறது. தற்சமயமுள்ள பொதுஜனப் பாதுகாப்புச் சட்டத்தின்படி நாட்டின் ஏதாவது ஒரு மூலையில் நெருக்கடி ஏற்பட்டால், அங்கு மட்டும் ராணுவ நடவடிக்கை எடுக்க முடியாது. இலங்கை முழுதும் அவசரக் காலச் சட்டத்தைப் பிரகடனப்படுத்திய பிறகே குழப்பம் நடக்கும் பகுதியில் மட்டும் நடவடிக்கை எடுக்க வசதியாக, பொதுஜனப் பாதுகாப்புச் சட்டத்தைத் திருத்தி அரசாங்கம் ஒரு திருத்த மசோதாவைத் தயாரித்துப் பார்லிமெண்டுக்குக் கொண்டு வந்தது. அந்த மசோதாவில் நெருக்கடிக் காலங்களிலே வேலை நிறுத்தங்களைத் தடை செய்யவும் ஷரத்து சேர்க்கப்பட்டிருக்கிறது. இந்த ஷரத்து தொழிலாளர் யூனியன்களின் உரிமையை நசுக்கும் நடவடிக்கையென்று காட்டியுள்ள சகல தொழில் சங்கங்களும் ஒருமுகமாக எதிர்க்கவே, தொழிலாளர் பிரச்னை சம்பந்தமான வேலை நிறுத்தங்கள் சட்ட விரோதமாகக் கருதப்பட மாட்டா என்று மசோதாவைத் திருத்த அரசாங்கம் சம்மதித்தது. ஆயினும் மசோதா பிற்போக்கானதென்றும் ஜனநாயகத்தைப் புறக்கணித்து அரசாங்கத்துக்குச் சர்வாதிகாரம் அளிப்பதாகு மென்றும் எதிர்க்கட்சிகள் ஏகோபித்து எதிர்த்தன. என்றாலும், நாட்டில் இன்று பேராபத்தான நிலைமை உருவாகி யிருப்பதற்கு மசோதாவை எல்லா எதிர்க்கட்சிகளும் எதிர்ப்பது மட்டும் காரணமல்ல. சென்ற வாரம் அதைப்பற்றி பார்லிமெண்டில் விவாதம் நடைபெற்றபோது பல எதிர்க்கட்சிப் பிரதிநிதிகள் பேசுவதற்கு விருப்பம் தெரிவித்திருக்கையில், அரசாங்கம் திடீரென்று ஒத்தி வைப்புப் பிரேரணையைக் கொண்டு வந்து விவாதத்தை முடித்து மசோதாவை அவசரக் கோலத்துடன் நிறைவேற்றிக் கொள்ள முயன்றது. விவாதத்துக்கு முடிவு கட்டுவதை எதிர்க்கட்சியினர் ஆட்சேபித்தார்கள். ஆயினும் ஒத்திவைப்புப் பிரேரணையைச் சபாநாயகர் அனுமதித்தபடியால் அதை மீறி எதிர்க்கட்சித் தலைவரும் அவரது கட்சியினரும் பேசத் தலைப்படவே, அவர்களைப் போலீசார் பலாத்காரமாக அப்புறப்படுத்தினர். நெருக்கடிக்கு இந்தச் சம்பவமே உடனடியான காரணம். கடும் சர்ச்சையிலுள்ள ஒரு மசோதாவை அரசாங்கம் அவசரக்கோலத்துடன் நிறைவேற்ற முயன்றது தவறு என்றாலும், அதற்கு வேறு பல விதங்களில் ஆட்சேபனை தெரிவிக்கச் சந்தர்ப்பம் இருக்கும் பார்லிமெண்டரி சம்பிரதாயங்களை மீறிச் சபாநாயகரின் ஆக்ஞையை எதிர்க்கட்சியினர் மீறியதும் தவறுதானென்பதைப் பத்திரிகைகளெல்லாம் ஒருமுகமாகச் சுட்டிக்காட்டியிருக்கின்றன. இப்போது தவறு யாருடையதாயிருந்தாலும் பாதுகாப்புச் சட்டத் திருத்த மசோதாவை முறியடிக்கவும் அரசாங்கத்தை வீழ்த்தவும் எதிர்க்கட்சிகள் கங்கணம் கட்டிக் கொண்டு புறப்பட்டு விட்டன. அரசாங்கமும் பலப் பரீட்சைக்குத் தயாராகி விட்டது.

—ரஜனி

அருள் வாக்கு

எல்லாப் பொருள்களும் அழிந்த போதிலும் கடைசியில் நிலையாக நிற்கிற ஒரே பொருளான நீற்றை நெற்றியிலும், இயற்கையிலேயே அழகை உடைய ருத்ராக்ஷத்தைக் கழுத்திலும், லக்ஷ்மியின் இருப்பிடமாகிய வில்வத்தைத் தலையிலும், வேதத்தின் மத்திய மணியாக விளங்குகிற சிவ என்னும் திருநாமத்தை நாவிலும் சுத்த ஸ்படிகக் கல்லைப் போல் தூய்மையான மகாலிங்கத்தை உள்ளத்திலும் தரித்துக் கொண்டு பிறவிப் பெரும் பயனை அடைய வேண்டும்.

—ஸ்ரீ சங்கராச்சாரி ஸ்வாமி, காஞ்சி காமகோடி பீடம்



71

பிறப்பு துக்கத்துக்குக் காரணம் என்றும் அதனின்று தப்புவதே மோக்ஷம் என்றும் நம்முடைய பரம்பரைக் கொள்கை. பிறப்புக்குக் காரணம் பற்றும் பாபமும். அவற்றுக்குக் காரணம் அறியாமை. பயனற்ற பொருள்களை அதிகமாக மதித்தும், பயன் தரும் பொருள்களை மதியாமலும் வாழ்க்கை நடத்துதல் அறியாமை. அதனின்று பற்றும் பாபச் செயல்களும் தோன்றுகின்றன. அறியாமையால் பொருளல்லனவற்றைப் பொருளாகக் கொள்கிறோம். அவற்றுக்கு ஆசைப்படுகிறோம். அவற்றுக்காகக் குற்றங்கள் பல செய்கிறோம். அந்தப் பாபத்தின் பயனாக மறு ஜன்மம் எடுக்க நேரிடுகிறது.

வியாபாரம் செய்பவன் அவன் கையாளும் பொருள்களின் உண்மை மதிப்பை அறிந்தவனாக இருக்க வேண்டும். அதைப் போலவே வாழ்க்கையில் நாம் காணும் பொருள்களையெல்லாம் சரியாக மதிப்பிட்டு அதன்படி நடந்து கொள்ள வேண்டும். அப்படிச் செய்யாமல் பொருள்களைத் தவறாக மதிப்பிடுகிற குற்றத்துக்கு மருள் அல்லது மயர்வு என்று பெயர்.

> பொருளல்ல வற்றைப்
> பொருளென்று உணரும்
> மருளானாம் மாணாப்
> பிறப்பு.

மாணா—இன்பமல்லாத, துக்கத்துக்குக் காரணமான.

அறிவு அல்லது ஞானம் பொருள்களின் உண்மைப் பொருளை அறிவது. உள்ளதை உள்ளபடி அறிவது ஞானம். சிறியதைப் பெரியதாகவும், பொய்யை மெய்யாகவும் எண்ணிப் பயனற்றதைப் பெற ஆசைப்படுவதும் நல்ல பயனைத் தரும் பொருளை அலட்சியம் செய்து விடுவதும்—இந்த வகை காரியங்கள் எல்லாம் மயர்வு, மயக்கம், மருள். இதை அறுத்து மெய்ஞ்ஞானம் அடைய வேண்டும். அடைந்தால் பிறப்புச் சுழலில் சிக்காமல் தப்புவோம்.

> ஐயத்தின் நீங்கித்
> தெளிந்தார்க்கு வையத்தின்
> வானம் நணியது உடைத்து.

வானம்—மேலுலகம். வையம்—இவ்வுலகம். நணியது—அண்மையது, சமீபமானது.

இவ்வுலகத்தை விட மேலுலகமே அண்மையாகும். எப்போது? ஐயம் நீங்கி அறிவு அடைந்தபோது. அதாவது கடவுள், தருமம் முதலியவற்றைப் பற்றி ஐயப்படாமல் தெளிந்து நின்றால் நாம் நிற்கும் நிலத்தை விட மோக்ஷம் கிட்ட வந்து நிற்கும். பொருளல்லவற்றைப் பொருளாக எண்ணாமல் ஆன்மிக உறுதியுடன், தருமம், அதருமம், இந்த வேறுபாட்டை ஒப்புக் கொண்டு எப்பொருளையும் அதன் மெய்ப் பொருளை அறிந்து வாழ்க்கை நடத்தினோமானால் வீடு சமீபமே வந்துவிடும்.

ஐயுறாததையும் பயனற்றதையும் பற்றிக் கொள்ளாமல் உறுதியான பக்தியுடன் வாழ்வாய். அப்படி வாழ்ந்தால் நீ நிற்கும் நிலத்தைவிட வீடு உனக்குச் சமீபமாகி விடும் என்கிறார்.

'ஐயத்தின் நீங்கி' என்பதில் 'ஐயம்' என்பது ஆராய்ச்சி அல்லது இலக்கணச் சந்தேகம் அல்ல. கடவுள், பாபம், புண்ணியம் இவற்றைப் பற்றிய ஐயம். அதாவது உண்டு, இல்லை என்கிற ஐயம். இந்த ஐயத்தினின்று நீங்கி உள்ளம் உறுதியான நிலையில் நின்றால் பூமியை விட மேலுலகம் அணியதாகும். அதாவது நிச்சயமாய் அடைவோம்.

***

மெய்யறிவு அடையாதவனுக்குப் பார்வை, ஒலி முதலிய ஐந்து புலனறிவும் இருந்தும் பயனற்றவையாகும். புலன்களினால் அடையும் அறிவு பூரண அறிவு அல்ல.

மெய்யுணர்வு என்றால் ஞானம். அது இல்லாமல் வெறும் பஞ்சேந்திரியங்களால் கிட்டும் அறிவு பயன் தராது.

> ஐயுணர்வு எய்தியக்
> கண்ணும் பயமின்றே
> மெய்யுணர்வு இல்லா தவர்க்கு.

பயம்—பயன், பிரயோசனம். பயம் இன்றே—ஒரு நன்மையும் இல்லை. கண் முதலிய உறுப்புகளால் அடைந்த அறிவு ஒரு நன்மையும் தராது.



26. மோகினி அவதாரம்

பாற்கடலினின்று லக்ஷ்மி தோன்றிய பின்னர், "வாருணி" என்ற மதுபானத்துக்கு உரிய தேவதை மங்கை ரூபத்தில் தோன்றினள். அசுரர்கள் அவளைத் தமக்கென்று தேர்ந்தெடுத்துக் கொண்டனர். அதன் பிறகு கடலினின்று அழகு வாய்ந்த புருஷன் ஒருவன் வெளிவந்தான். அவனுடைய பருத்து நீண்ட புயங்களும், சங்கு போன்ற கழுத்தும், செம்மலர்க் கண்ணும், மாலையும், மஞ்சள் பட்டாடையும், மணி குண்டலமும், சிங்கம் போன்ற நடையும் மனத்தைக் கவர்ந்தன. அவன் கையில் அமுத கலயத்தை ஏந்தி நின்றான். விஷ்ணுவின் அம்சமான அந்தப் புருஷன்தான் ஆயுர்வேதத்தை மாந்தருக்கு அளித்த தந்வந்தரி. அமுதம் நிறைந்த கலயத்துடன் வெளிவந்த தந்வந்தரியைக் கண்ட அசுரர், கடலில் கிடைப்பதை எல்லாம் தாமே அபகரிக்க எண்ணி, அவன் கையினின்று கலயத்தைப் பிடுங்கிக் கொண்டனர். தேவர் கவலை கொண்டு ஹரியிடம் சென்று முறையிட்டார்கள். அவர்கள் பரிதவிப்பதைப்பார்த்த ஹரி, "பயப்படாதீர்கள். அசுரருக்கிடையே சச்சரவை மூட்டி விடுகிறேன்" என்று வாக்களித்தார்.

நாராயணன் கூறியது போலவே அசுரர்கள் ஒருவரோடொருவர் "எனக்கே அமுதம். நான்தான் முதலில் அருந்துவேன்" என்று சண்டை போடலானார்கள். அவர்களுள் பலம் குன்றியவர்கள் தேவர்கள் சார்பில் வாதாடவும் முன்வந்தனர். "நம்மோடு கலந்து தேவரும் முயன்றார்கள்; அவர்களுக்கும் பங்கு கொடுத்தாக வேண்டும்" என்று கூறினார்கள்.

இதனிடையே ஹரி சொல்வதற்கு இயலாத அழகு வாய்ந்த ஒரு பெண்ணாக மாறினார். மங்கையின் குவளைப் பூவெனக் கருமேனியும், தோடுடைய செவியும், பளிங்கு போன்ற கன்னமும், தூக்கிய மூக்கும், பருவத்தால் பருத்த கொங்கையைத் தாங்காது தவிக்கும் மெல்லிடையும், வாயினின்று வெளிவரும் நறுமணத்தை முகர அண்டிய வண்டைக் கண்டு அடைந்த அவள் அச்சமும், தலையில் அணிந்த மல்லிகை மலரும், பொன் மாலையும், கை வளையும், இடையில் அணிந்த வெண்பட்டைச் சுற்றியிருந்த மேகலையின் தோற்றமும், அழகு நடைக்கு இசைந்த கால் கொலுசும், அனைவர் மனத்தையும் கவர்ந்தன. மேலும், தன்னுடைய வெட்கிய பார்வையினாலும், அசையும் புருவத்தினாலும், ஆசை மிகுந்த கண் வீச்சினாலும் அசுர தளபதிகளின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டாள்.

ஒருவரிடமிருந்து மற்றொருவர் அமுத கலயத்தைப் பறித்த வண்ணமாய்ப் போராடிக் கொண்டிருந்த அசுரர்கள், வரும் மங்கையைக் கண்டு எதிர்கொண்டு ஓடினார்கள். "என்ன அழகு! என்ன காந்தி! என்ன இளமை!" என்று அலறிக் கொண்டு அவளிடம் பேசினார்கள். "தாமரைக் கண் படைத்த நீ யார்? எங்கிருந்து வருகிறாய்? யாருடைய பெண்? எங்கள் மனத்தை வசீகரித்து விட்டாயே. உன்னை இதுவரையில் தேவரோ மானிடரோ அணுகியே இருக்க மாட்டார்கள் என்பதை நாங்கள் அறிவோம். கருணைகூர்ந்து பிரமனே எங்களுடைய ஆனந்தத்துக்கென்று உன்னை இங்கு அனுப்பியிருக்கிறார். அனைவருக்கும் சொந்தமான ஒரு பொருளுக்காக நாங்கள் சண்டை செய்கிறோம். நாங்கள் எல்லோரும் சுற்றத்தார்கள். கச்யபர் மைந்தர்கள். ஆகவே, பட்சபாதமின்றிப் பரிசைப் பங்கிடுவாய்" என்றனர்.

இவ்விதம் அசுரரால் கோரப்பட்ட மோகினி வேடம் பூண்ட ஹரி கடைக்கண்ணால் பார்த்துக்கொண்டு புன்முறுவலுடன், "மனம்போன போக்கில் திரியும் பெண்ணிடம் நம்பிக்கைவைக்கலாகுமா? தீராத ஆசையால் வாடும் ஓநாயும் பெண்ணும் அன்புக்கு ஆளாக மாட்டார்கள்" என்றார். இந்த வேடிக்கை வார்த்தைகள் அசுரருடைய நம்பிக்கையை மேலும் அதிகரித்தன. அமுத கலயத்தை அசுரர் அவளிடம் கொடுத்தனர். அதை வாங்கிக் கொண்டு, "நான்தான் அமுதத்தைப் பங்கிடுவேன். நான் எது செய்தாலும் சம்மதிக்க வேண்

டும்'' என்றாள் மோகினி. அதையும் அசுரர் ஒப்புக் கொண்டார்கள்.

பிறகு, ஒருநாள் உண்ணாவிரதம் இருந்து, ஹோமங்களும், தானங்களும் செய்து, இரு சாராரும் வரிசையாக அமர்ந்தார்கள். அப்பொழுது, அப் பெண்மணி, மருங்கசைய, அடிமேல் அடி வைத்து, காற்சலங்கை ஒலிக்க, மதமேறிக் கலங்கிய கண்ணோடு, அமுத கலயத்தைக் கையில் ஏந்திக் கொண்டு அச் சாலையை அடைந்தாள். அவள் நடக்கும்பொழுது மார்பை மூடிய துப்பட்டாவும் காற்றில் அசைந்து அகன்றது. அவளுடைய புன்முறுவலில் இரு சாராரும் தங்களை மறந்து நின்றனர். அசுரருக்கு அமுதம் அளிப்பது பாம்புக்குப் பாலை வார்ப்பது போல் ஆகும் என்று அச்சதுரனை அம் மங்கை கருதினாள். அசுரரையும் தேவரையும் வெவ்வேறு வரிசையில் அமரச் செய்தாள். அழகினால் அருகில் இருக்கும் அசுரரை மயக்கிக் கொண்டே தூரத்தில் வீற்றிருந்த தேவருக்கு மட்டும் அமுதத்தை அளித்தாள். மாதுடன் போரிடுவதற்கு அசுரருக்கு மனம் இசையவில்லை. அவள் காண்பிக்கும் ஆசையில் மயங்கி வாய் மூடி வீற்றிருந்தனர். ஆனால் ராகு தேவ வேடம் பூண்டு சூரியனுக்கும் சந்திரனுக்கும் நடுவில் இருந்துகொண்டு அமுதத்தைப் பருகிவிட்டான். பருகும்பொழுதே ஹரி தம் சுதர்சனத்தால் அவன் தலையை வெட்டி எறிந்தார். அமுதுண்ட தலை அழியவில்லை; உண்ணாத உடல் மாய்ந்துவிட்டது. ராகுவின் தலை அழியாப் பதவியைப் பெற்று இன்னும் சூரிய சந்திரனைத் துன்புறுத்துகிறது.

கலசத்தில் அமுதம் தீர்ந்ததும் நாராயணன் தம்முருவை எய்தினார்.

வாசுதேவனை வழிபடாத அசுரர் இவ்வாறு ஏமாந்து போயினர். அனைவரும் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுதே நாராயணன் கருடன் மீதேறி வைகுண்டம் சென்றார். உடனே தேவர் மீது அசுரர் பெரும் போர் தொடுத்தனர். நாராயணனை நம்பி நீடூழி வாழ்வை நிச்சயம் செய்துகொண்ட தேவர் அசுரரை ஊக்கத்துடன் எதிர்த்தார்கள்.

அசுரரும் தேவரும் கடற்கரையில் கை கலந்து பலவித ஆயுதங்களால் ஒருவரையொருவர் துன்புறுத்தினர். வெவ்வேறு கொடிகள் பறக்க அணிவகுத்து வெண்குடை நாட்டி மின்னும் கவசங்களோடும் பற்பல ஆயுதங்களோடும் துலங்கும் தேவாசுர சேனைகள் நிமிங்கிலம் நிறைந்த இரு கடலை ஒத்திருந்தன.

பலி இந்திரனுடனும், முருகன் தாரகாசுரனோடும், யமதர்மன் காலநாபனோடும், விச்வகர்மா மயனோடும், சம்பரன் த்வஷ்டாவுடனும், விரோசனன் ஸவிதாவோடும், சுக்ரவன் பலியின் நூறு மைந்தருடனும், சந்திரன் ராகுவோடும், வாயுபகவான் புலோமா என்ற அசுரனோடும், பத்திரகாளி சும்ப நிசும்பர்களுடனும், சிவன் ஜம்பனோடும், அக்னி மஹிஷாசுரனுடனும் தனித் தனியே த்வந்த யுத்தம் செய்தனர். பிரகஸ்பதி சுக்ராச்சாரியரை எதிர்த்தார். சனிச்வரன் நரகாசுரனை எதிர்த்தான். போர்க்களத்தினின்று மேலே கிளம்பிய புழுதி திக்குகளை மறைத்தது; ஆனால் சிந்திய ரத்த வெள்ளத்தால் தெளிக்கப்பட்டுத் திரும்பவும் நிலத்திலே படிந்தது. சூடிய முடி வேறு, தலை வேறு, கால் வேறு, உடல் வேறு, சினத்தால் கடித்த உதட்டோடு விளங்கும் முகம் வேறென்று போர்க்களம் பயங்கரத் தோற்றத்தை அளித்தது. தலையில்லா முண்டங்கள் எழுந்தோடி எதிரியை எதிர்த்தன. இந்திரனும் பலியும் வியக்கத் தக்க வீரத்தோடு போராடினார்கள். மாயாவியான பலி மறைந்து நின்றுகொண்டு பெரிய மலை ஒன்றைத் தோற்றுவித்தான்; அம் மலையிலிருந்து பாம்பும் விலங்கும் பயம் தரும் அரக்கரும் வெளிவந்தனர்; மாரி பெய்தது; கடல் பொங்கிக் கரை புரண்டது. தேவர்கள் திகைத்தனர். அச் சமயம் ஹரி அங்கு தோன்றினார்.



அவர் அங்கு வந்ததுமே விழித்ததும் சொப்பனம் மறைவது போல், அரக்கருடைய மாயங்கள் மறைந்து போயின. காலநேமி என்ற அசுரன் விஷ்ணுவை எதிர்த்தான். அவர்கையால்மாண்டான்.

இந்திரன் போர்க்களத்தில் பலியை ஏளனம் செய்தான், "மதி கெட்டவரை மயக்கி மந்திரவாதி பணம் பறிக்கிறான். மாயையை ஏவி தேவரை வெல்லுவது அரிது. இன்றே உன்னைக் கொல்வேன்" என்றான். அதற்கு பலி "புகழும், வெற்றியும், அவமானமும், சாவும் காலத்தால் ஏற்பட்டு மாறி வரும். அறிஞர் இதைப் பொருட்படுத்த மாட்டார்கள். தன்னையே புகழுக்கும், வெற்றிக்கும் காரணமென்று எண்ணும் உன் சொல்லை நாம் மதியோம்" என்று பதில் உரைத்தான்.

அதற்குப் பின் நடந்த போரில் இந்திரன் ஜம்பன் என்ற அசுரனைக் கொன்றான். அவனுடைய சுற்றத்தாரையும் கொன்றான். ஆனால் நமுச் என்ற அரக்கனை மட்டும் இந்திரனால் வதம் செய்ய முடியவில்லை. விருத்திரனைக் கொன்ற வஜ்ராயுதம் நமுசியின் கழுத்தைக் காயப்படுத்தவும் திறமற்றுப் போனது. அப்பொழுது ஆகாயத்தில் அசரீரி வாக்கு கேட்டது. "இந்த அரக்கன் உலர்ந்த கருவியினாலோ, நனைந்த கருவியினாலோ இறக்கமாட்டான். இவ்விரண்டுமின்றி மற்றொன்றைச் சிந்திப்பாய்" என்ற சொல்லைக் கேட்ட இந்திரன் கடல் நுரையை எடுத்து அரக்கனைக் கொன்றான்.

தானவர்கள் தோல்வியுற்று அழிவதை அறிந்த பிரமன் நாரதரைச் சமாதானம் செய்யும்படி இந்திரனிடம் தூது அனுப்பினார். அவரும் "அமுதம் கிடைத்தது. ஸ்ரீதேவியின் கருணையும் கிடைத்தது. இனிமேல் போர் வேண்டாம்" என்று தேவரிடம் கூறினார். தேவர்கள் அவர் சொல்லுக்கு இணங்கிப் போரின்று ஓய்ந்து விண்ணுலகம் சென்றனர்.

மாய்ந்து போன பலியை அசுரர்கள் மேற்கு மலைக்கு அப்பால் தூக்கிச் சென்றனர். அங்கு சுக்கிராச்சாரியார் தம்முடைய திறத்தால் அவனுக்குத் திரும்பவும் உயிரை அளித்தார்.

நிற்க. மோகினி வேடம் பூண்டு தானவரை மயக்கி தேவருக்கு நாராயணன் அமுதம் அளித்த வரலாற்றைச் செவியுற்ற சிவன், தமது பரிவாரங்களுடன் வைகுண்டம் சென்றார். விஷ்ணுவைப் பலவாறு புகழ்ந்தார்.

"மாறுதல் அற்ற தேவரீரை மாந்தர் பலவிதமாய்ப் பார்க்கின்றனர். வேதாந்திகள் பிரம்மம் என்கிறார்கள். மீமாம்சிகள் தர்மம் என்கிறார்கள். சாங்கியர் பிரகிருதிக்கும் புருஷனுக்கும் அப்பால் இருப்பவரென்று எண்ணுகின்றனர். பாஞ்சராத்ரம் என்ற வைஷ்ணவ ஆகமத்தைச் சேர்ந்தவர், ஒன்பது சக்தி வாய்ந்த பரமன் என்று கருதுகிறார்கள். யோக மார்க்கத்தைப் பின்பற்றுவோர் மாறுதல் இல்லாத பரமபுருஷன் என்கிறார்கள். ஆனால்தேவரீருடையமாயையை யார்தான் அறிவார்? உங்களுடைய பல அவதாரங்களைக் கண்டு களித்திருக்கிறேன். ஆயினும் இப்பொழுது எடுத்த மோகினி அவதாரத்தை ஒரு முறை காண விரும்புகிறேன்" என்றார்.

"தேவருள் முதல்வனே! அசுரர் மனத்தில் வியப்பை வளர்க்க நான் பூண்ட வேஷத்தைக் காண்பிக்கிறேன். அந்த வேடம் ஆண்களுக்குக் காமத்தைத் தீயென மூட்டும்" என்றார் ஹரி.

நாராயணன் டீடீரென்று மறைந்தார். அப்பொழுது அங்கே மரங்கள் நிறைந்த ஒரு பூங்காவனம் தோன்றியது. பட்டாடை உடுத்து ஆடைமீது அலங்கார மேகலை அணிந்து நிகரில்லா அழகு வாய்ந்த ஒரு பெண்மணியைச் சிவபெருமான் கண்டார். அவள் ஒரு பந்தை வைத்து விளையாடிக் கொண்டிருந்தாள். பந்தோடு குனிந்து, பந்தோடு நிமிர்ந்து வந்த அவளுடைய மெல்லிடை ஒடிந்து விடுமோ என்று அச்சம் தந்தது. துளிரை வென்ற மெல்லிய பாதங்கள் இங்கும் அங்குமாய்த் துள்ளி அடி வைத்தன. பந்தையே பார்க்கும் கண்கள் சஞ்சலத்தோடு மலர்ந்திருந்தன. கலைந்த கூந்தலையும், நழுவிய நல்லாடையையும் இடது கையால் தாங்கிக் கொண்டு, வலது கரத்தால் பந்தாடும் விந்தையினால் மூவுலகையும் மயக்கினாள்.

இந்த இணையற்ற அழகில் சிவனே மயங்கி மோகத்தை அடைந்தார். மங்கையைப் பின்தொடர்ந்து ஓடினார். ஆனால், மாயமே வடிவான பெண் தப்பித்து மறைந்து விட்டாள். சிவனுக்கும் டீடீரென்று தன் நினைவு திரும்பியது. விஷ்ணுவும் தன்னுருவை எய்திப் பின் வருமாறு மொழிந்தார்.

"என் மாயையில் தாங்களே மயங்கி விட்டீர்களே! ஆயினும் உங்களுக்குத் தானாகவே மனக்கலக்கம் அகன்று விட்டது. மற்றவருக்குத் தெளிவுவருவது எளிதன்று. இன்பத் தோற்றங்களாம் மாயையில் மனத்தை இழந்தவர் பரிதவிக்கின்றனர். முக்குணங்கள் மூலமாய்க் காலத்தில் காரியம் செய்யும் எனது மாயைஉங்களைஉபத்திரவம்செய்யாது."

விஷ்ணுவை வந்தனம் செய்து விட்டுச் சிவன் தம்மிடத்துக்குச் சென்றார்.

சுகர் பரீக்ஷித்து மன்னனுக்கு நாராயணனுடைய ஆமை அவதாரம், லக்ஷ்மியின் தோற்றமும் மணமும், மோகினி அவதாரம், சிவன் மோகினியிடம் மயங்கித் தெளிந்தது, இந்த வரலாறுகளை விவரித்து விட்டு, "இக் கதை பிறப்பையும், இறப்பையும் அகற்றும் திறம் கொண்டது" என்று பலன் கூறினார்.

ஆங்கிலத்தில் திருவாசகம்



கி. சந்திரசேகரன்

பால் கலந்ததாயும், தேன் கலந்ததாயும், நற் கருப்பஞ்சாற்றின் தீஞ்சுவை கலந்ததாயும், ஊன் கலந்ததாயும் உயிரே கலந்து இனிப்பதாயும் திருவாசகத்தைப் புகழ்ந்துள்ளார்கள் ராமலிங்க அடிகள் போன்ற பெரியார்கள். செவிக்கு இனிப்பதாயின் அதற்கு ஓர் எல்லை உண்டு; நாக்குக்குத் தித்திப்பைத்தருவதாயினும் அதற்கும் சலிப்பென்று ஒன்று உண்டு. ஆனால் உள்ளத்தை இனிக்க வைப்பதாயின் அதனைத் தெவிட்டாததோர் இன்பமாய்க் கருதாதவரும் இருப்பார்களா?

திருவாசகத்தைப் பருகாதார் இல்லை; பருகி உளம் உருகாதாரும் இல்லை எனலாம். இதயப் பண்பாட்டையெல்லாம் ஒருங்கே சேர்த்து வெல்லப் பாகாயும், கொம்புத் தேனும் தந்தால் அதையே திருவாசகமெனக் கருதுபவர்தாம் இங்கு உள்ளவர்கள்.

மாணிக்கவாசகப் பெருமான் செய்த திருவாசகம் திருமுறையின் எட்டாவதான பகுதியைச் சேர்ந்தது. தேவாரமும் திருவாசகமும் தமிழ்நாட்டின் மரபே வந்த சமய வழிபாட்டின் அடிப்படை வேர்கள். தமிழராய்ப் பிறந்தயாரும் திருவாசகத்தின் இனிப்பைப் பிறருடன் பங்கிட்டுக் கொள்வதைத் தடை செய்ய மாட்டார்கள். அதனால்தான், 1900 ஆண்டில் டாக்டர் போப் (Pope) முதன் முதலில் இந் நூலை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த பொழுது, அவருடைய தமிழ் அறிவையும் விடத் தமிழின்பால் அவருக்கிருந்த ஆர்வத்தை உணர்ந்தே பலரும் அவருடைய பணியை மெச்சினார்கள். ஆனால் அவருடைய ஆங்கிலம் எவ்வளவு சரியா யிருப்பினும், அவருடைய மொழிபெயர்ப்பில் பல பிழைகள் ஏற்பட இடமிருந்ததைப் பண்டிதர்கள் மறக்கவில்லை. ஒரு சிலர் அவருடைய தமிழார்வத்தையும், தமிழ்ப் பணியையும் வாழ்த்துகையிலேயே அவருடைய ஆங்கில மொழிபெயர்ப்பு திருத்தங்களுடன் சீக்கிரம் மறுபடியும் பிரசுரமாகவேண்டியதை நினைப்பூட்டினார்கள். ஆனால் ஒருவராவது அந்தக் காரியத்தைச் செய்யவில்லை.

திருவாளர் கே. எம். பாலசுப்பிரமணியம் அவர்கள் மற்றவர்களைப்போல் பிறர் பிழையை மட்டும் கவனித்து அதனுடன் தம் பொறுப்பை முடித்துக் கொண்டு விடவில்லை. தமக்குத் திருவாசகத்தை ஆங்கிலமாக்க வேண்டுமென்ற அவா என்று தொடங்கியதோ, அன்றிருந்து இந்தக் காரியத்தைத் தமது தனிப் பணியாய் மேற்கொண்டு முடிந்த அளவில் ஆங்கிலத்தில் ஒன்றையும் விடாமல் மொழிபெயர்த்து உலகுக்கு அளித்திருக்கிறார். அவர்பால் உலகம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளது என்பதை யுணர வேண்டும்.

தமது முன்னுரையில் ஆசிரியர் எவ்விதம் தமக்கு இவ்வித ஆசை பிறந்தது, வளர்ந்தது, உருவாகியது என்பதையெல்லாம் விடாது விளக்கியிருக்கிறார். முன்னுரை எழுத்து நடையில் சிறிது படாடோபம் குறைவாகவே இருந்திருந்தாலும் வாசகர்களுக்குள்ள மதிப்பு இறங்கியிருக்காது. ஆனால் திருவாசகத்தின் காலம், திருவாசகத்துக்கும் உபநிஷத்துக்களுக்கும் உள்ள ஒற்றுமை. இவை போன்ற அரிய விஷயங்களை முன்னுரையில் காண்பதில் தமிழில் பரிச்சயம் இல்லாதவர்களுக்குப் பிரயோசனம் இருக்கலாம். கால நிர்ணயம் என்றுமே சர்ச்சைக்கிடமான விஷயமாதலால் முடிவு காண்பதில் என்றுமே பிறருடைய அங்கீகாரம் கிடைக்குமென்று எதிர்பார்ப்பதற்கில்லை. அதனால் மொழிபெயர்ப்புக்கு எவ்விதமான குறைவும் சொல்வதற்கு வழியில்லை.

ஆங்கில மொழிபெயர்ப்பை ஒவ்வொரு பாட்டின் கீழும் தந்திருப்பதை அவசியம் வாசகர்கள் பாராட்டுவார்கள். ஆங்காங்கே வரிகளையும் கூடவே பக்கத்தில் தந்திருப்பதும் சௌகரியத்துக்கு வழியாகின்றது. அச்சுத் தெளிவும், எழுத்துக் கணிசமும் மிகவும் வசீகரமாயிருக்கின்றன. புத்தகம் நல்ல பருமனுக்குக் கைக்கு அங்கமாயிருப்பதும் ஓர் கவனிக்கத்தக்க விஷயம். வேண்டிய அவசியக் குறிப்புகள், அட்டவணை, பாட்டின்முதல் வரி அகராதி எல்லாம் புத்தகத்தின் பின்பாகத்தில் கொடுக்கப்பட்டிருப்பதும் வெகு உபயோகமானவையே.

மொழிபெயர்ப்பைப் பற்றித் தீர்மானமாய்க் கூறுவது யாவராலும் முடியாது. ஏனெனில் தமிழின் இனிப்பையும், இன்னிசையையும் எளிதில் முற்றும் வேறு பாஷையான ஆங்கிலத்தில் தருவது இயலாத காரியம். கருத்து வேறுபடாமல் இருந்தாலே மொழிபெயர்த்தவரை நாம் பாராட்ட வேண்டியதுதான். மற்றவைகளை எதிர்பார்ப்பது கூட உண்மையில் பயனுடையதா என்றே வியக்க வேண்டி வரும். சில பாட்டுக்களைக் கீழே தருவதிலிருந்து வாசகர்களே தமிழிலிருந்து ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பது எவ்வளவு கடினமான பொறுப்பு என்பதை உணர்ந்து கொள்ளலாம்.

ஒருவனே போற்றி ஒப்பில் அப்பனே
போற்றி வானோர்
குருவனே போற்றி எங்கள் கோமளக்
கொழுந்து போற்றி
வருக என்று என்னை நின்பால் வாங்கிட
வேண்டும் போற்றி
தருகநின் பாதம் போற்றி தமியனேன்
தனிமை தீர்த்தே.

(பக்கம் 78, பாட்டு 68)



இலங்கை சர்வகலாசாலையின் கல்வித்துறைப் பகுதியினர், பேராதனையிலுள்ள சர்வ கலாசாலை செனட் மண்டபத்தில் சென்ற மாதக் கடைசியில் ஒரு அரிய தமிழ்ப் புத்தகக் கண்காட்சியை ஏற்படுத்தி வெற்றிகரமாக நடத்தி முடித்திருக்கின்றனர். முதன் முதலில் 1557ம் ஆண்டு போர்ச்சுகீசியரின் தமிழ்ப் புத்தகம் அச்சானதிலிருந்து இன்று வரையில் வெளியாகியுள்ள பலவகைப்பட்ட புத்தகங்கள் காட்சியில் வைக்கப்பட்டிருந்தனவாம். 1689ஆம் ஆண்டில் அச்சான போர்த்துக்கீசிய மொழி-தமிழ் அகராதி, 1730ஆம் ஆண்டில் அச்சான தமிழ்-லத்தீன் அகராதி, 1834ல் அச்சான பிரஞ்சு லத்தீன்-தமிழ் அகராதிகளும், சுவிசேஷ பத்திரம், மேனாட்டு வைத்திய சாஸ்திரத்தைப் பற்றியும், உடற்கூறு பற்றியும் ரசாயனத்தைப் பற்றியும் நூறு ஆண்டுகளுக்கு முன் தமிழில் வெளியான புத்தகங்கள் வைக்கப்பட்டிருந்தனவாம். பேராசிரியர் விஜயசேகரா கண்காட்சியைத் திறந்து வைத்தார். பலரும் பார்த்து மகிழ்ந்தனர்.

Praise, thou unique one!
Praise Incomparable Sire!
Praise thou Teacher of heavenly ones
Praise, thou Komala's tender shoot
Praise, do bid me come to thee and do accept me as thine own
Praise, do grant Thy foot and save my helpless, lonely self!

ஆசிரியர் 'கோமளக் கொழுந்து' என்பதை 'Komala's tender Shoot' என்று மொழிபெயர்த்திருப்பதை விட Soft என்ற சொல்லால் 'கோமளம்' என்பதைக் காட்டியிருக்கலாம். இங்கு உள்ளதைப் பார்த்தால் 'கோமளம்' என்பதை ஒருவருடைய பெயராகவே ஆங்கிலம் மட்டும் அறிந்தவர்கள் கருத இடமுண்டாகும்.

இன்னொரு பாட்டு:

விண்ணாளும் தேவர்க்கும் மேலாய வேதியனை
மண் ஆளும் மன்னவர்க்கும் மாண்பாகி நின்றானை
தண்ணார் தமிழ்அளிக்கும் தண்பாண்டி நாட்டானைப்
பெண்ணாளும் பாகனைப் பேணு பெருந்துறையில்
கண் ஆர் கழல்காட்டி நாயேனை ஆட்கொண்ட
அண்ணா மலையானைப் பாடுதுங்காண் அம்மானாய்

(பக்கம் 127, பாட்டு 10)

He's the sage's Who's greater than the gods who rule in heaven!
As the grandest of the kings who rule the earth He stands.
He's of cooling Pandiland which fosters Pleasant Tamizh!
He's the partner of the Maid He showed His visible Feet
At famous Perunthurai and made my dog-like self his serf!
let's sing that King Who rules in Annamalai, O Annamalai!

ஓரே ஒரு சிறு விஷயம். 'வேதியன்' 'அந்தணன்' போன்ற வார்த்தைகளை 'Sage' என்றே ஆசிரியர் மொழிபெயர்த்துள்ளார். அவருடைய துணிவை அது நன்கு விளக்குகிறது. ஆனால் முழுவதும் இந்நூலின் ஆங்கில மொழிபெயர்ப்பில் 'வேதியன்' என்பதற்கு 'Sage' என்றே கொடுக்கப்படவும் இல்லை. உதாரணமாக, பக்கம் 179, 7வது பாட்டைக் கவனிக்கலாம். 'வேதியன்' என்பதற்கு 'Brahmin' என்று தந்திருக்கிறது. ஆங்கிலத்தை மட்டும் அறிந்தவர்களுக்கு ஓரே வார்த்தைக்கு இரண்டு இடங்களில் வேறு சொற்களை உபயோகித்ததின் மர்மம் விளங்காது. பின்னால் உள்ள குறிப்புரையிலாவது இந்தச் சொல் மாறுதலின் விளக்கம் செய்திருக்க வேண்டும்.

மொத்தத்தில் பெரியதொரு பொறுப்பு இக் காரியம். இவ்வளவு சிரத்தையுடன் ஆசிரியர் செய்திருப்பதை உணர்ந்துதான் சென்னை சென்னமல்லீச்வரர் ஆலய அதிகாரிகளும் சென்னகேசவப்பெருமாள் தேவஸ்தானமும் இந்தப்புத்தகப் பணிக்கு முன்வந்து பொருள் சகாயம் செய்திருக்கிறார்கள்.

எவ்வளவு சொன்னாலும், ஒரு துணிகரமான வினையின், அதனுக்கு ஈடாகுமா ஆயிரம் குறைகளைக் குறிப்பிடுவது? பெரியோர்களெல்லாம் இந்தப் பெரும் முயற்சியை வாழ்த்துகையில், நாம் மட்டும் பின்னே இருப்போமா? வாழ்க திருவாசகம்! வாழ்க, திருவாசகத்தின் ஆங்கில மொழிபெயர்ப்பு!

[மொழிபெயர்ப்பு ஆசிரியர்: திருவாசக மணி கே. எம். பாலசுப்பிரமணியம் பி.ஏ.,பி.எல்.; வெளியிடுவோர்: சென்னை மல்லீஸ்வரர், சென்னகேசவப் பெருமாள் தேவஸ்தானம், சென்னை-3. விலை: ரூ-10.]

அவள் எவ்வளவு அழகாயிருக்கிறாள்...

அவள் உபயோகிப்பது பாண்ட்ஸ்



நீங்களும் சருமத்தை மிருதுவாகவும், வழவழப்பாகவும், அழகாகவும் வைத்துக் கொள்ள **பாண்ட்ஸ்** வானிஷிங் க்ரீம் உபயோகியுங்கள்

இலேசானதும் பனிக்கட்டிபோல் மென்மையானதுமான பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம் உங்கள் சருமத்தின் மென்மையான அழகைப் பாதுகாத்து, அதை எழிலுடனும், பொலிவுடனும் இருக்கச்செய்யும். எண்ணெய்ப் பசையில்லாத இந்த க்ரீம் தேய்த்துக்கொண்ட மறு விநாடியிலேயே மறைந்து விடுகிறது. பவுடர் போட்டுக் கொள்வதற்குமுன் இந்த க்ரீமைத் தடவிக்கொண்டால் பவுடர் மணிக்கணக்கில் படிந்திருக்கும்.



சருமத்தை சுத்திகரிக்கும் சிறந்த க்ரீம்
தினமும் இரவில் பாண்ட்ஸ் கோல்ட் க்ரீமை முகத்தில் தடவுங்கள். அது உங்கள் மிருதுவான சருமத்தை சுத்தம்செய்து முக அழகைப் பாதுகாக்கும்.

சீஸ்ப்ரோ-பாண்ட்ஸ் இன்கார்ப்பரேட்டட்
(வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யு.எஸ்.ஏ.வில் இணைக்கப்பெற்றது)

சென்னையில் புதிய தொழிற்சாலைகள்



பல்லாவரத்தில் ஆரம்பித்துள்ள இங்கிலீஷ் எலக்ட்ரிக் கம்பெனியின் தொழிற்சாலை.

இந்தியா முழுவதையும் சுற்றிப் பார்த்து விட்டுச் சென்னைக்குத் திரும்பும் தமிழருக்கெல்லாம் சாதாரணமாக ஒரு குறை இருப்பது வழக்கம். தமிழனின் வேலைத் திறமை, சுறுசுறுப்பு, ஊக்கம், தொழிற் சாமர்த்தியம் முதலிய சிறந்த குணங்களைப் பாராட்டி அவற்றைப் பூரணமாகப் பயன்படுத்திக் கொண்டவர்கள், பயன்படுத்திக் கொண்டிருப்பவர்கள் கூட இந்தியாவிலுள்ள தொழிலதிபர்களும் முதலாளிகளும்தான். மூலதனம் பெருவாரியாகப் போட்டுத் தொழில் ஸ்தாபனங்கள் ஆரம்பிக்க வசதி அவர்களிடமிருந்தாலும், நடைமுறையிலும் அவர்களுக்கு உறுதுணையாகவும் நம்பிக்கையுடனும் பல தமிழர்கள் பணியாற்றுகின்றனர். இவ்வளவு திறமை வாய்ந்தவர்களின் சாமர்த்தியம் தமிழ் நாட்டுக்குப் பயன்படாமல் நாம் தொழில் வளத்தில் பின்னணியிலேயே இருக்க நேர்கிறதே என்று பலர் குறைப்படுவதுண்டு.

ஏன் இப்படி இருக்கிறதென்று ஆராய்ச்சியில் ஈடுபடுபவர்கள் சில காரணங்களைக் கூட எடுத்துச் சொல்லுவார்கள். மூலப் பொருள்கள் நமது பிராந்தியத்தில் இல்லை; நிலக்கரி இல்லை. மூலதனம் போட்டுத் தொழில் நிறுவப் பணமில்லை, தொழில் ஊக்கமும் தைரியமும் இல்லை என்று பள்ளிக்கூடப் புத்தகத்திலுள்ள காரணங்களை அள்ளி வீசுவர்.

ஆனால் அந்த நிலைமை இப்போது வேகமாக மாறிக் கொண்டு வருகிறது. நம்முடைய திறமையை நாமே பயன்படுத்திக் கொள்ள ஆரம்பித்து விட்டோம். கடந்த 10, 12 ஆண்டுகளில் சர்க்கார் தொகுதியிலாகட்டும், தனியார் தொகுதியிலாகட்டும் பலப்பல புதுத் தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்பட்டுச் செயல்படுகின்றன. சிமெண்டுத் தொழிலும், சர்க்கரை ஆலையும், ரசாயனத் தொழிற்சாலையும் சைக்கிள் தொழிற்சாலையும் வேகமாகக் கிளம்பியுள்ளன. மேலும் இரண்டு புதிய தொழிற்சாலைகள் பிப்ரவரி 12, 14 தேதிகளில் சென்னைக்கு அருகில் ஆரம்பித்து வைக்கப்பட்டன. இந்த வளர்ச்சி தொழில் வேகமாக விரிவடைவதைக் காட்டுகிறது.


முதலாவது தொழிற்சாலை மோட்டார் டயர்கள் உற்பத்தி செய்யும் டன்லப் கம்பெனியாருடையது. காங்கிரஸ் மகாநாடு கூட்டி சோஷலிசக் கொள்கையை இலட்சியமாக நாட்டுக்கு அமைத்துக் கொடுத்த ஆவடிக்கு இரண்டு மைல் தூரத்தில் அம்பத்தூரில் அமைதியான சூழ்நிலையில் ஆரோக்கியமான இடத்தில் இந்தத் தொழிற்சாலை நிறுவப்பட்டிருக்கிறது. இந்தியாவில் இக் கம்பெனியாரின் முதல் தொழிற்சாலை கல்கத்தாவுக்கு அருகில் ஷாகஞ்ச் என்ற இடத்தில் உள்ளது. இப்போது அம்பத்தூரில் ஆரம்பிக்கப்பட்டிருப்பது இரண்டாவது.

இந்தியாவில் இரண்டாவது தொழிற்சாலையே தவிர, பிரபல டன்லப் கம்பெனிக்குச் சொந்தமான 85 தொழிற்சாலைகளில் இது ஒன்று. இங்கிலாந்தில் மட்டும் 50 தொழிற்சாலைகள் இருக்கின்றன. அமெரிக்காவிலும், பிரான்சிலும், ஜெர்மனியிலும் மற்றும் இடங்களிலும் 35 தொழிற்சாலைகள் இருக்கின்றன. தனித்தனியாக 120 கம்பெனிகளைக் கொண்ட ஒரு பெரிய தொழிற் குழு வென்றே இதைச் சொல்ல வேண்டும். இதில் சுமார் ஒரு லட்சம் தொழிலாளிகள் வேலை செய்கின்றனர். இந்தியத் தொழிற்சாலைகளில் மட்டும் சுமார் ஆறாயிரம் பேர்கள் வேலை செய்கின்றனர். இந்தக் கம்பெனிகள் உற்பத்தி செய்யும் பொருள்களின் மொத்த மதிப்பு சுமார் 310 கோடி ரூபாய்.



திரு எச். ஜீ. தேம்சன்

இவற்றிலிருந்து இந்தக் கம்பெனியின் வளர்ச்சி, வி



புதிதாகத் திறந்து வைக்கப்பட்ட டன்லப் கம்பெனியின் அம்பத்தூர் தொழிற்சாலையில் 'கார்' டயர் செய்யப்படுவதைப் பிரதமர் திரு. காமராஜும் தொழில் மந்திரி திரு ஆர். வெங்கடராமனும் பார்வையிடுகின்றனர்.

வாகம், தொழில்திறம், ஆராய்ச்சி, முன்னேற்றம் எல்லாம் எந்த அளவில் இருக்கின்றன என்பது விளங்கும். அம்பத்தூர் தொழிற்சாலைக்கு இந்தக் கூட்டு ஸ்தாபனத்தின் அவ்வளவு செல்வாக்கும், அறுபது வருஷத்திய தொழில் நுட்ப அநுபவமும் திறனும் கிடைக்கும் என்பதை இங்கே குறிப்பிட வேண்டும்.

இக் கம்பெனியின் ஷாகஞ்ச தொழிற்சாலை மோட்டார் டயர்களும் சைக்கிள் டயர்களும் உற்பத்தி செய்கிறது. இவ்வகையில் ஆசியாவிலேயே இது பெரிய தொழிற்சாலை. இது நமது பாரதத்தில் நிறுவப்பட்டிருக்கிறது என்பது மகிழ்ச்சிக்குரியது. 1936க்குப் பின், இத் தொழிற்சாலை ரப்பர் பெல்டுகள், மோட்டார் பெல்டுகள், சைக்கிள் விளிம்புகள், தண்ணீர்க் குழாய்கள், ரப்பர் மெத்தைகள், தலையணைகள் முதலிய பல விதப் பொருள்களை உற்பத்தி செய்கிறது. இரண்டாவது திட்டத்தின் கீழ் நமது நாட்டின் தேவை எல்லாவிதங்களிலும் மேன்மேலும் அபிவிருத்தியடைந்து விட்டதால், இரண்டாவது தொழிற்சாலை நிர்மாணம் செய்ய வேண்டியது அவசியமாயிற்று. ஏற்கனவே இரண்டு மோட்டார் தொழிற்சாலைகளும், மோட்டார் சைக்கிள் தொழிற்சாலையும், சைக்கிள் தொழிற்சாலையும் கிடைத்துள்ள சென்னையில்தான் இந்த இரண்டாவது தொழிற்சாலை இருக்க வேண்டுமென்று கருதினர். அம்பத்தூர் இதற்கு ஏற்ற இடமாக அமைந்து விட்டது. ஜல வசதி, மின்சார வசதி, ரயில் வசதி, ரோடு வசதி, துறைமுக சமீபம் இப்படி யெல்லாம் அமைந்த இந்த இடத்தில் தொழிற்சாலை ஏற்பட்டிருப்பது சென்னையின் தொழில் வளத்தை உயர்த்தி விடும் என்பதில் ஐயமில்லை.

இந்தியாவிலுள்ள டன்லப் ஸ்தாபனத்தின் மூலதனத்தில் இந்தியர்களுக்கும் ஓரளவு பங்கு உண்டு. எனவே ஆங்கிலேய இந்திய கூட்டுறவு தொழில் வளர்ச்சியில் ஒரு படி என்று இதைச் சொல்ல வேண்டும். தொழிலாளிகளுக்கு விரிவான பயிற்சி அளிப்பதுடன் மேல்நாடுகளுக்கும் அனுப்பி, தொழில் நுட்பங்களில் பயிற்சி பெறும் வாய்ப்புக்களும் இத்தொழிற்சாலை மூலம் நம்மவர்களுக்குக் கிடைக்கும்.

இரண்டாவது தொழிற்சாலை பல்லாவரத்தில் பிரபல ஆங்கிலக் கம்பெனியான இங்கிலிஷ் எலக்டிரிக் கம்பெனியாரால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. நெடுஞ்சாலையை யொட்டி சுமார் 30 ஏக்கர் நிலத்தில் முன்பகுதியில் அழகாக அமைக்கப்பட்டிருக்கிறது. சுமார் ஒன்றரை வருஷத்துக்கு முன்னரே வேலை தொடங்கப்பட்டும், கட்டடங்கள் துரிதமாக முடிவடைந்து உற்பத்தியும் செய்யத் தொடங்கிவிட்டது இந்தத் தொழிற்சாலை.

இரண்டு ஏக்கர் நிலத்தைத்தான் இப்போது உபயோகித்திருக்கிறார்கள். சுமார் நூறு தொழிலாளிகள் வேலை செய்ய வாய்ப்பு இருக்கிறது. தொழிற்கூடம்

விஸ்தாரமான மூன்று 'ஹால்' போன்று தனித்தனியாகத் தடுக்கப்பட்டுக் காற்றோட்டமுள்ளதாக அமைந்துள்ளது. மின்சாரச் சாமான்களின் முக்கியமான சில பொருள்கள் மட்டுந்தான் தற்போதைக்கு இங்கே செய்கிறார்கள். குறிப்பாக, 'பியூஸ்' வகைகள், மின்சார வினியோகத்துக்கான மின்கம்பிகள், தொழிற்சாலைகளுக்குத் தேவையான குறைந்த 'வோல்ட்' ஸ்விட்ச் பெட்டிகள் முதலிய சாமான்கள் தயாராகின்றன. போகப்போக மேலும் பலவிதச் சாமான்கள் படிப்படியாக உற்பத்தி செய்யத் திட்டங்கள் இருப்பதாகத் தெரிகிறது. அப்போது தொழிற்சாலை கட்டடங்களும் விரிவடைந்து பெருகும். எனவே இப்போது காணப்படுவது ஆரம்பக் கட்டம்தான்.

மேலும் இங்கிலீஷ் எலக்ட்ரிக் கம்பெனியாரும் இந்தியாவுக்குப் புதியவர்களல்ல. சென்ற நூறு ஆண்டுகளாக மின்சாரத் துறையில் நுட்பம் வாய்ந்த பல பொருள்களை வழங்கி வருகிறார்கள். இப்போதும் துர்க்காப்பூர் உருக்குச் சாலைக்கும், உத்தரப் பிரதேசத்திலுள்ள ரிஹாண்டு நீர்-மின்சாரத் திட்டத்துக்கும், பக்ரா அணைக்கும், நெய்வேலித் திட்டத்துக்கும் விலையுயர்ந்த பல சாதனங்களை வினியோகம் செய்திருக்கின்றனர். அவர்கள் உற்பத்தி செய்யும் பொருள்களும் மின்சார ரயில் என்ஜின், விமான என்ஜின் முதல் சாதாரண மின்சார வினியோகச் சாமான்கள் வரையில் பல்வேறு துறைகளில் பரவிக் கிடக்கின்றன. இங்கிலாந்திலேயே 17 தொழிற்கூடங்களுள்ளன. இதர நாடுகளில் எட்டு தொழிற்சாலைகள் இருக்கின்றன. எனவே, தொழில் நுட்பத்திலும் அநுபவத்திலும் பலவாயிரத்திலுள்ள தொழிற்கூடத்துக்குத் தலைமை ஸ்தாபனத்தின் பலமும் ஆதரவும் கிடைக்கும்.

ஆனால் இது இந்திய — ஆங்கிலேயக் கூட்டு முறையில் உருவான தொழிற்சாலையன்று. இதற்கு சுமார் 40 லட்சம் ரூபாய் மூலதனம் போடப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. எல்லாம் தாய்க் கம்பெனியான இங்கிலீஷ் எலக்ட்ரிக் கம்பெனியின் முழுப் பொறுப்பிலேயே ஈடு செய்யப்பட்டிருக்கிறது. தொழிற்சாலையும் அதன் கிளையாகவே செயல் புரிகிறது. விஸ்தரிக்கச் சமயம் நேரும்போது இந்திய மூலதனம் வரவேற்கப்படும் என்று சொல்லப்படுகிறது.

இந்தத் தொழிற்சாலையை ஆரம்பித்து வைப்பதற்கென்று இங்கிலாந்திலிருந்து வந்திருந்த திரு எச். ஜி. நெல்சன் தாய்க் கம்பெனியின் நிர்வாக டைரக்டர், இத்தொழிற்சாலையின் வருங்காலத்தைப் பற்றி மிகவும் நம்பிக்கையுடன் பேசினார்.

இக் கம்பெனியார் சொந்தமாக இந்தியாவில் அமைத்திருக்கும் முதலாவது தொழிற்சாலை இதுதான். நமக்கெல்லாம் நன்கு அறிமுகமான பின்னி கம்பெனியாரின் மேற்பார்வையின் கீழ் இத்தொழிற்சாலை அமைக்கப்பட்டுள்ளது.

இவ்விரண்டு தொழிற்சாலைகளும் சென்னை தொழில் துறையில் முன்னேறிக் கொண்டிருக்கின்றது என்பதற்கு அறிகுறி. இதைக் கண்டு தமிழகம் பெருமை கொள்ள வேண்டும்.

—எம். எஸ். வெல்லசாமி

தென்னிந்திய சுருக்கெழுத்தாளர் பத்திரிகைச் சங்கத்தின் ஆதரவில் வீப்கோ கம்பெனியாரின் தமிழ்ச் சுருக்கெழுத்துப் பாட புத்தகமும், தமிழ் டைப்ரைட்டிங் பாட புத்தகமும், 5-2-59 அன்று சென்னை அண்ணாமலை மன்றத்தில் சென்னை லேஜிஸ்லேட்டிவ் சபை சபாநாயகர் டாக்டர் செரியன் அவர்களால் வெளியிடப்பட்டன. இந்த அரிய வைபவத்தில் கல்வி மந்திரி திரு சி. சுப்பிரமணியம், ஸ்ரீமதி சௌந்தரம் கைலாசம், திரு டி. புருஷோத்தம், திரு சி. என். அண்ணாதுரை, திரு மோகன் குமாரமங்கலம், திரு என். எம். பாலி ஆகியோர் பங்கெடுத்துக் கொண்டனர். வீப்கோ கம்பெனியைச் சேர்ந்த திரு கிருஷ்ணசாமி ஐயர், பேச்சாளர்களுக்கும் சபையோருக்கும் அரிய வரவேற்புரை நல்கியதையும் திரு சி. சுப்பிரமணியம் காலத்துக்கு அவசியமான முயற்சியில் ஈடுபட்ட வீப்கோ கம்பெனியாரைப் பாராட்டியதையும் காணலாம்.




நூதன
காஸ்மிகா
டால்கம் பவுடர்
COSMICA

சம்பந்தனுக்கு ஒரு சவுக்கடி



அந்தக் காலத்தில் திருவண்ணாமலையில் சம்பந்தன் என்று ஒரு செல்வச் சீமான் வாழ்ந்து வந்தார். அவரிடம் எவ்வளவு செல்வம் இருந்ததோ அதைவிட அதிகமாகச் செருக்கும், திமிரும் இருந்தன. பிறரையோ பிறருடைய அறிவையோ மதிப்பது கிடையாது. எதற்கெடுத்தாலும் யாரிடமும் எடுத்தெறிந்து பேசி விடுகிற குணமுள்ளவர். தெருவில் கீழே குனிந்து பார்க்காமல் நடக்கப் பழகி விட்டவர்கள் என்றாவது ஒரு நாள் தடுக்கி விழ நேரிடுவது போல இந்த மாதிரிக் குணமுள்ளவர்கள் தலை குனிந்து தோற்கின்ற நிலை எப்போது வருமென்று சொல்ல முடியாது. பிறருக்கு வளைந்து கொடுக்காமல், பணியாமல் வாழ வேண்டுமென்று நினைக்கின்றவர்கள் எல்லோரும் பிறர் மட்டும் தங்களுக்கு வளைந்து கொடுத்தும், பணிந்தும் வாழ வேண்டுமென்று எண்ணுகிறார்கள். திருவண்ணாமலைச் சம்பந்தன் இந்த வகையைச் சேர்ந்த மனிதராக இருந்தார். முள் மரம் போலப் பிறரை நெருங்க விடாமல், நெருங்கினாலும் குத்திப் பிறருக்குப் பயன்படாமல் வாழ்வதில் அவருக்கு என்னதான் இன்பம் கிடைத்ததோ?

அவருடைய காலத்தில்தான் இரட்டைப் புலவர்கள் தமிழ் நாட்டில் ஊருராகப் பயணம் செய்து பாடிப் பயன் பெற்றுக் கொண்டிருந்தார்கள். அவர்களில் ஒருவர் பெயர் இளஞ்சூரியர். மற்றொருவர் பெயர் முதுசூரியர். ஒருவர் குருடர். இன்னொருவர் நொண்டி. குருடர் நொண்டியைச் சுமந்து கொள்ள வேண்டும் என்றும், நொண்டி குருடருக்கு வழியிலுள்ள மேடு பள்ளங்களைச் சொல்லி வழி காட்ட வேண்டுமென்றும், இரண்டு பேருமாகச் சேர்ந்து ஒரு ஏற்பாட்டைச் செய்து கொண்டிருந்தார்கள். அந்த ஏற்பாடு இரண்டு பேரும் சேர்ந்து வாழ்வதற்கு வசதியாக இருந்தது. இருவருமே கவி உள்ளம் படைத்தவர்கள். ஆகையால் கவலைகளை மறந்து வேடிக்கையாகச் சிரித்துப் பேசிக் கொண்டே அவ்வளவாய் வாழ்வதற்குப் பழகியிருந்தார்கள். கண்களும் கால்களும் இல்லாத குருடரும், நொண்டியுமாக இருந்தாலும், மனத்தின் உற்சாகத்தில் நொண்டித்தனமோ குருட்டுத்தனமோ பட்டு விடாமல் காத்துக் கொள்ளத் தெரிந்திருந்தது அவர்களுக்கு. கால்களும் கண்களும் இருந்தும் உள்ளத்தை நொண்டியாகவும், குருடாகவும் வைத்துக் கொண்டு உலகத்தில் உற்சாகமாக வாழ்வது எப்படி என்று தெரியாமல் வேதனைப்பட்டுக்கொண்டிருப்பவர்களைக் காட்டிலும் நன்றாக வாழ்ந்தார்கள் இரட்டையர்கள். இரட்டையர்களுடைய வாழ்க்கை அநுபவங்கள் மிகவும் வேடிக்கையானவை. விநோதம் நிறைந்தவை. உள்ளத்தில் பழுத்துக் கனிந்த கவி உணர்ச்சி இருந்தாலொழிய இப்படிக் கவலையின்றி வாழ முடியாது.

இரட்டையர்களுடைய பாடல்கள் பெரும்பாலும் இரண்டு பேரும் சேர்ந்து ஆளுக்கு இரண்டுவரிகளாகப் பாடி இணைந்தவை. முதல் இரண்டு வரிகளை இளஞ்சூரியர் பாடி நிறுத்தும் பின்னர், பின்னிரண்டு வரிகளை முதுசூரியர் பாடி முடிப்பார். அந்தப் பாடல்களில் குத்தல், கேலி, நகைச்சுவை, உட்பொருள் எல்லாம் நிறைந்திருக்கும். தாமரை இலைத் தண்ணீரைப் போல் உலகத்தில் வாழ்ந்து கொண்டே அங்கு நிறைந்துள்ள ஆசாபாசங்களில் ஒட்டாமல் அவைகளை அலட்சியமாக நோக்கிச் சிரித்துக் கொண்டே போகும் போக்கை இரட்டையர்கள் இயற்றிய சில பாடல்களில் காணலாம்.

இந்த இரட்டையர்கள் ஒரு சமயம் திருவண்ணாமலைக்குப் போயிருந்தார்கள். சம்பந்தனைச் சந்திப்பதற்குச் சென்றார்கள். அவர்கள் போன சமயம் அதிகாலை நேரம். சம்பந்தன் வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்து பரிகாரியிடம் தலைச் சவரம் செய்து கொண்டிருந்தார். வாயிற்படியேறி வீட்டுக்குள் நுழைந்து விட்டார்கள் இரட்டையர்கள். அவர் சவரம் பண்ணிக் கொண்டிருப்பதைப் பார்த்ததும் தாங்கள் வந்த சமயம் சரியில்லை என்று அவர்களுக்கே பட்டது. திரும்பிப் போய் விட்டுச் சிறிது நேரம் கழித்து வரலாமென்று அவர்கள் திரும்ப யத்தனித்தபோது சம்பந்தனே அவர்களை நிமிர்ந்து பார்த்து விட்டார். சவரம் பண்ணிக் கொண்டிருந்த அவர் அப்படி நிமிர்ந்து தங்களைப் பார்த்து விட்ட பிறகு, தாங்கள் இன்னாரென்று அவரிடம் சொல்லிக் கொள்ளாமல் திரும்புவது நன்றாயிருக்காது என்று தோன்றியது. அவர்களுள் கண்ணால் பார்க்க முடிந்தவரான முடவருக்கு. எனவே அவர் சம்பந்தனைப் பார்த்து, "ஐயா! நாங்கள் இருவரும் புலவர்கள். உங்களைப் பார்த்து விட்டுப் போகலாம்



"ரொம்ப அழகாக இருக்கிறவர்கள் எல்லோரும் ரொம்பக் கர்வமாய் இருக்கா. பார்த்தாயா?"

"அதெப்படியோ! நான் ஒன்றும் அப்படிக் கர்வமாக இல்லையே!"

என்று வந்தோம்" என்று கூறினார் அவர். சம்பந்தனுடைய முகத்தில் அவர்களைப் புலவர்கள் என்று அறிந்துகொண்டதற்கு அறிகுறியாக ஒரு சிறிதேனும் மலர்ச்சியோ புன்னகையோ ஏற்படவில்லை. செருக்குடனே முறைத்துப் பார்த்தார்.

சம்பந்தனுடைய முகத்திலும், பார்வையிலும் இருந்த வறட்டுத் திமிரை முடவர் மட்டும்தான் காண முடிந்தது. 'ஆள் மிகவும் கர்வம் பிடித்தவன் போலிருக்கிறது' என்று குருடருடைய காதருகில் நெருங்கி மெல்லச் சொல்லி வைத்தார் முடவர். குருடரும் நிலைமையை ஒருவாறு புரிந்து கொண்டுவிட்டார்.

"ஓகோ! நீங்கள் புலவர்களா? நான் ஒரு நிபந்தனை போடுகிறேன். அந்த நிபந்தனைப்படி உங்களால் ஒரு பாட்டைத் தொடங்கி முடிக்க முடியுமா?" என்று எடுத்த எடுப்பில் யாரோ கூலிக்காரனுக்குக் கட்டளையிடுகிற மாதிரி அலட்சியமாகவும் முரட்டுத்தனமாகவும் அவர்களைப் பார்த்துக் கேட்டார் சம்பந்தன்.

வரவேற்பு, விசாரணை, அளவளாவுதல் ஒன்றுமின்றித் தங்களைப் பார்த்ததும் பார்க்காததுமாக அவர் அவ்வாறு கேட்டது அவர்கள் மனத்தைப் புண்படுத்தியது. மனம் புண்பட்டாலும் அதை இரட்டைப் புலவர்கள் வெளியில் காட்டிக் கொள்ளவில்லை.

"ஐயா! உங்கள் நிபந்தனையைச் சொல்லுங்கள். பாடி முடிக்கிறோம்" என்று சிரித்தபடி சம்பந்தனைக் கேட்டனர். அவர் சொன்னார்: "மன் என்று தொடங்கி மலுக்கு என்று முடிகிறாற் போல் ஒரு வெண்பாப் பாட வேண்டும். உடனே பாட உங்களால் முடியுமா?"

அவருடைய பொருளற்ற நிபந்தனையைக் கேட்டவுடன் இரட்டையர்களுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. மூடர்கள். படித்தவர்களுக்கு நிபந்தனை விதித்து, 'இப்படிச் செய்ய முடியுமா அப்படிச் செய்ய முடியுமா?' என்று கேட்கும் போது எந்தப் படித்த மனிதனுக்கும் ஆத்திரம் வரத்தானே செய்யும்?

"இந்தப் பயலுடைய திமிரை அடக்கிச் சரியானபடி மட்டம் தட்டிவிட வேண்டும்" என்று ஒருவருக்கொருவர் ரகசியமாகக் கூறிக் கொண்டு சம்பந்தனை நோக்கி, "ஐயா! உங்கள் நிபந்தனைப் படியே 'மன்' என்று தொடங்கி 'மலுக்' கென்று முடியுமாறு பாடுகிறோம்" என்று ஒப்புக் கொண்டனர்.

"எங்கே பார்க்கலாம் உங்கள் திறமையை?" என்று சவரம் பண்ணிக் கொண்டிருந்த பரிகாரியிடமிருந்து அரைகுறையாகத் தலையை விடுவித்துக் கொண்டு, இரட்டையர்களைப் பாடச் சொல்லி ஏவிவிட்டுப் பார்த்தார். தாம் சொன்னபடியே இரட்டையர்களால் முடியப் போவதில்லை என்ற அலட்சிய நோக்குதான் அவருடைய அந்தப் பார்வையில் இருந்தது.

இளஞ்சூரியர் கீழ்க்கண்டவாறு முதல் இரண்டு அடிகளைப் பாடினார்:

மன்னுதிரு வண்ணா மலைச்சம் பந்தனுக்கு
பன்னு தலைச்சவரம் பண்ணுவதேன்?


முதலவருடைய குரல் முடிந்ததும் உடனே இரண்டாமவராகிய முதுசூரியர் அடுத்த இரண்டு அடிகளைக் கீழ்க்கண்டவாறு கனீரென்று சொன்னார்:

—மின்னின்
இளைத்த இடைமடவார் எல்லாரும் கூடி
வளைத்திழுத்துக் குட்டா மலுக்கு."

பின்னிரண்டு அடியும் பாடி முடித்ததும், "வருகிறோம் ஐயா! வணக்கம்" என்று குத்தலாகச் சொல்லி விட்டு இரட்டையர்கள் வேகமாக அந்த இடத்திலிருந்து நழுவினர். அதற்கு மேலும் அங்கே தங்கியிருக்க அவர்களுக்குப் பைத்தியமா என்ன? சம்பந்தனுக்குத் தம்முடைய முதுகில் யாரோ சவுக்கினால் ஓங்கி அடித்து விட்ட மாதிரி இருந்தது. வெட்கம் பிடுங்கித் தின்றது. பரிகாசக்கு முன்னும் குறும்பும் கொண்டதுமாக வந்த அந்த இரண்டு பஞ்சைப் புலவர்களும் அப்படித் தம்மை அவமானப்படுத்தி விட்டார்களே என்று தவித்தார் அவர். அப்போது அவருக்கு வந்த கோபத்தில் அரைகுறையாகச் சவரம் பண்ணிக் கொண்ட தோற்றத்தோடு மட்டும் இருக்காவிடில் தெருவில் ஓடிப் போய் அந்தப் புலவர்களைத் துரத்தி யாவது உதைத்திருப்பார் அவர்! அப்படி அந்தப் பாட்டின் அர்த்தம்தான் என்ன?

"திருவண்ணாமலையில் சம்பந்தன் ஏன் சவரம் பண்ணிக் கொள்கிறான் தெரியுமா? சிறுசிறு பெண்களெல்லாம் விளையாட்டாக அவன் குடுமியை வளைத்து இழுத்துப் பிடித்துக் கொண்டு தலையில் குட்டி விட்டுப் போகிறார்கள். அந்தக் குட்டு வலி பொறுக்க முடியாமல்தான் சம்பந்தன் குடுமியையே சவரம் பண்ணிக் கொள்கிறான்" என்பதுதான் பாட்டின் கருத்து. எவ்வளவு குறும்புத்தனமான கற்பனை பாருங்களேன்! அந்தக் குறும்புத்தனத்திலேயே சம்பந்தன் சொன்ன நிபந்தனையும் நிறைவேறியிருந்தது!

— வளவன்


MICO
LICENCE BOSCH
MICO LICENCE BOSCH
India's First-
Equals
World's Best
By Every Test
எல்லாவிதமான
என்ஜின்களுக்கும்
ஏற்றதாக
மைக்கோ
ஸ்பார்க் பிளக்
கிடைக்கும்
மோட்டார் இண்டஸ்ட்ரிஸ் கம்பெனி லிட்.,
பெங்களூர்-1


கலப்பு மனத்தால்தான் ஜாதி
பிரச்னைக்கு தீர்வுகாண முடியும்..
"மகாத்மா காந்தி"
இக்கருத்துரைக்கு விளக்கமாக
அமைந்திருக்கும் சித்திரம்..
நரசு ஸ்டுடியோஸ்
கூடி வாழ்ந்தால்
கோடி நன்மை
டைரக்ஷன்: D.S.ராஜகோபால்
சென்னை: கெயிட்டி, பாரத்,
காமதேனு, மகாலக்ஷ்மி
மற்றும் தமிழ்நாடெங்கும் நடைபெறுகிறது..

பாண்டிமாதேவி

அத்தியாயம் 30


வம்புக்கார வாலிபன்

குழல்மொழிக்காக ஏற்பாடு செய்திருந்த கப்பலின் அலங்கார அறைக்குள்ளிருந்து அந்த இளைஞன் சிரித்துக் கொண்டே எதிரே வந்ததைப் பார்த்தபோது நாராயணன் சேந்தனுக்கு ஏற்பட்ட திகைப்பு உடனே கோபமாக மாறியது. வேடிக்கையும், குறும்புத்தனமும் தென்படுகிற சேந்தன் முகத்தில் முதன் முதலாகக் கடுமையான சீற்றத்தைக் காண முடிந்தது. "தம்பி! நீ சரியான திருட்டுப் பயல் என்பதைக் காட்டி விட்டாயே. நீ பெரிய கள்ளன். இந்தக் கப்பலில் ஏறக் கூடாதென்று கண்டித்துச் சொல்லியும் எங்கள் கண்களில் மண்ணைத் தூவிவிட்டு எப்படியோ மாயமாக உள்ளே புகுந்து விட்டாய். இவ்வளவு தூரம் வம்புக்கு வந்துவிட்ட பின்பு உனக்கெல்லாம் இனிமேல் மதிப்பும், மரியாதையும் கொடுத்துக் கொண்டிருப்பதில் பயனில்லை. நீ என்னிடம் வாங்கிக் கட்டிக் கொண்டுதான் போகப் போகிறாய்"— என்று தன்னுடைய மத்தளம் போன்ற புயங்களை மடக்கி அங்கியை மடித்து விட்டுக் கொண்டு அந்த வாலிபனை நெருங்கினான் சேந்தன். அவனுடைய உருண்டை முகத்திலும் பெரிய வட்டக் கண்களிலும் சினம் முறுக்கேறி யிருந்தது.

குழல்மொழி பயந்து மருண்ட பார்வையோடு அறை வாயிலிலேயே நின்றுவிட்டாள். அந்த இளைஞன் எப்படி எப்போது கப்பல் அறைக்குள் புகுந்திருக்க முடியுமென்பது அவள் அனுமானத்துக்கு எட்டவே இல்லை. அவளுக்கும் அந்த இளைஞன்மேல் ஆத்திரம் உண்டானாலும் சேந்தன் அவனை அடிப்பதற்காகக் கையை ஓங்கிக் கொண்டு போனபோது சிறிது வேதனையாக இருந்தது. உள்ளத்தின் ஒரு மூலையில் அந்த இளைஞனுக்காக அனுதாபத்தின் மிகச் சிறிய ஊற்றுக் கண் திறந்து வருவதை அவளால் தடுத்துக் கொள்ள முடியவில்லை. ஆனால் சேந்தனிடம் அந்த இளைஞன் நடந்துகொள்ளத் தொடங்கிய விதத்தைப் பார்த்தபோது அவள் தன் அனுதாபத்தையே மாற்றிக் கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டு விட்டது. அவள் எண்ணியதைப் போல் அவன் சாதுப் பிள்ளையாண்டானாக இருக்கவில்லை. பெரிய வம்புக்காரனாக இருந்தான். தன்னை நோக்கிக் கையை ஓங்கிக் கொண்டு அடிக்க வந்த சேந்தனை எதிர்த்துக் கொண்டு முறைத்தான் அவன். "ஐயா! சும்மா மிரட்டிப் பயம் காட்டாதீர்கள். நான் நல்லவனுக்கு நல்லவன். கெட்டவனுக்குக் கெட்டவன். 'ஏதோ இளம் பிள்ளை தானே' என்று கையை ஓங்கிக் கொண்டு வருகிறீர்கள். உங்களுடைய ஆத்திரம் உண்மையானால் நானும் உங்களிடம் பொல்லாதவனாக நடந்து கொள்ள வேண்டியதுதான்"-என்று அவன் விறைப்பாக நிமிர்த்து நின்று



நா. பார்த்தசாரதி



வலது கையால் இடையிலிருந்த வாளின் பிடியைத் தொட்டுக் கொண்டே கூறினான். அது நாராயணன் சேந்தனுடைய கோப நெருப்பைக் கொழுந்து விட்டெரியச் செய்தது. அவன் சினத்தோடு கூச்சலிட்டான். "அடே, பொட்டைப் பயலே! நீயும் உன் கீச்சுக் குரலும் நாசமாய்ப் போக. கடவுள் உன் திமிருக்கு ஏற்றாற்போல் தொண்டையை அடைத்துதான் வைத்திருக்கிறான் உனக்கு. வாளைக் கையில் உருவிக் கொண்டு என்னை ஏமாற்றி விடலாமென்று பார்க்கிறாய்! ஏதாவது வம்பு செய்தாயோ, உன்னை அப்படியே குண்டுக் கட்டாகக் கட்டித் தூக்கி மேல்தளத்தில் இருக்கும்படியே கடலில் எறிந்து விடுவேன். என்னுடைய இந்தக் கைகளில் ஒளிந்து கொண்டிருக்கும் வலிமையை நீ அறிய மாட்டாய், நேற்றுப் பயல் நீ. கொஞ்சம் வணக்கமாகவே பேசு. இந்த விறைப்பெல்லாம் என்னிடம் வைத்துக் கொள்ளாதே."

"சரிதான், ஐயா! கொஞ்சம் நாக்கை உள்ளுக்குள்ளே அடக்கியே பேசுங்கள். நீங்கள் இருப்பது முழங்கால் உயரம். ஆகாயத்தைப் பிளக்கும்படி பெரிதாகக் கூச்சல் போடுகிறீர்களே. கடவுள் எனக்குத்தான் தொண்டையைக் குட்டையாகப் படைத்து என் திமிரை மட்டம் தட்டிவிட்டார். உங்களுக்கு என்ன காரணத்துக்காக உடம்பையே இப்படிக் குட்டையாகப் படைத்தாரோ தெரியவில்லை. போகட்டும்! இதோ அறைவாசலில் நின்று கொண்டிருக்கும் இந்தச் சகோதரிக்கு முன்னால் உங்களை அநாவசியமாக அவமானப்படுத்த வேண்டாமென்று பார்க்கிறேன். இல்லையானால்......?" அவன் முடிக்கவில்லை. அதற்குள் சேந்தன் குறுக்கிட்டு, "இல்லையானால் என்ன செய்துவிடுவாயாம்?" என்று கொதிப்போடு கேட்டுக் கொண்டே இன்னும் அருகில் நெருங்கினான். ஆனால் அந்த இளைஞனோ சேந்தன் நெருங்க நெருங்க அவன் கைக்கெட்டாதபடி ஒரு பாக தூரம் பின்னுக்கு நகர்ந்து நின்று கொண்டான். அறை வாசலில் நின்று பார்த்துக் கொண்டிருந்த குழல்மொழி அந்த இளைஞனின் செயலைக் கண்டு மெல்லச் சிரித்துக் கொண்டாள். வீராதி வீரனைப் போல் பேசிக் கொண்டே பின்னுக்கு நகரும் அந்த வாலிபன் முகத்தில் பயமும், பதற்றமும் தோன்றுவதைக் குழல்மொழி கவனித்தாள். சேந்தனும் 'பெரிய ஆள்'தான். பிரமாதமாக அடித்து நொறுக்கி விடப் போகிறவனைப் போலக் கையை ஓங்கிவிட்டு அடிக்கப் பயந்து தயங்குவதையும் குழல்மொழி கவனித்தாள். இரண்டு ஆண்பிள்ளைகளுமே ஒருவருக்கொருவர் பயந்து கொண்டு வெளியில் தைரியசாலிகளாக நடிக்கும் அந்த நிலையைக் கூர்ந்து கவனித்தபோது அவளுக்குச் சிரிப்புத்தான் வந்தது. சேந்தன் அந்த வாலிபனை அதட்டினான்: "அடேய்! பேசாமல் நான் சொல்கிறபடி கேள். இப்போது கப்பல் போய்க் கொண்டிருக்கும் இந்த இடத்திலிருந்து துறைமுகம் அதிக தூரமில்லை. கடலில் குதித்துக் கரைக்கு நீந்திப் போய்விடு. இல்லாவிட்டால் நானே பிடித்துத் தள்ளி விடுவேன். என்னால் முடியாவிட்டால் கப்பல் மீகாமனையும், மற்ற ஆட்களையும் கூப்பிட்டு, உன்னைப்



பிடித்துக் கடலில் தள்ளச் சொல்வேன். உன்மேல் சிறிது கூடக் கருணை காட்ட மாட்டேன். நீ கெட்ட குறும்புக்காரப் பயல்.''

''ஆகா! அதற்கென்ன? உங்களால் மட்டும் முடியுமானால் தாராளமாகப் பிடித்துத் தள்ளிவிடுங்கள். அதற்கு முன்னால் உங்களிடம் ஒரு வார்த்தை. நான் திருடுவதற்காகவோ, வேறெந்த வகைகளிலாவது ஏமாற்றி வஞ்சகம் செய்வதற்காகவோ, இந்தக் கப்பலில் ஏறவில்லை. இன்றைக்கு விழிஞத்தில் நின்ற கப்பல்களில் வேறெந்தக் கப்பலிலும் என் விழ இடமில்லை. ஒரே கூட்டம். நானோ இலங்கைத் தீவு வரை பயணம் செய்ய வேண்டும். மிகவும் அவசரம். துறைமுகத்தில் விசாரித்ததில் இந்தக் கப்பல் இலங்கைத் தீவுக்குப் போனாலும் போகலாமென்று கூறி அருகில் நின்ற உங்களையும் இந்தச் சகோதரியையும் சுட்டிக் காட்டி விசாரிக்கச் சொன்னார்கள். நான் வந்து விசாரித்தேன். நீங்கள் இடமில்லை யென்று கண்டிப்பாக மறுத்துச் சொல்லி விட்டீர்கள். எனக்கோ அவசரம். இந்தக் கப்பலை விட்டால் வேறு வழியில்லை என்பதைப் புரிந்து கொண்டேன். நீங்களும் சகோதரியும் மேல்தளத்தில் பேசிக் கொண்டு நின்றபோது உங்களுக்குத் தெரியாமல் ஏறிக் கீழ்த் தளத்திலுள்ள இந்த அறைக்குள் ஒளிந்து கொண்டேன். இப்போது நீங்கள் வந்து பார்த்து விட்டீர்கள். கடலில் தள்ளுவேன் என்கிறீர்கள். அப்படிச் சொல்ல உங்களுக்கு உரிமை உண்டு. ஆனால் உங்களைக் கொஞ்சம் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன் நான். இவ்வளவு பெரிய கப்பலில் நீங்கள் இரண்டே இரண்டு பேர்கள்தானே பயணம் செய்கிறீர்கள், நான் ஒருவன் கூட இருந்து விட்டதனால் உங்களுக்கு என்ன குடி முழுகி விடப் போகிறது? என்றால்



உங்களுக்கு என்ன கெடுதல் வந்து விடப் போகிறது?"

"இரண்டு பேர்கள் போகிறோம், அல்லது வெறும் கப்பலை ஓட்டிக் கொண்டு போகிறீர்கள். அதைப் பற்றிக் கேட்க நீ யார் தம்பி? உனக்கு இடமில்லையென்றால் பேசாமல் போக வேண்டியதுதானே? இந்தக் குறுக்குக் கேள்வி யெல்லாம் உன்னை யார் கேட்கச் சொன்னார்கள்?" என்றான் நாராயணன் சேந்தன்.

தொடக்கத்தில் சேந்தனிடம் எதிர்த்துப் பேசி வம்பு செய்த அந்த வாலிபனின் முகத்தில் இப்போது சிறிது கலவரமும் பதற்றமும் தோன்றியது.

"சகோதரி! என்னை உங்கள் உடன் பிறந்த தம்பிபோல் நினைத்துக் கொள்ளுங்கள். பெண்களுக்கு நெகிழ்ந்த மனமும் பிறருக்கு விட்டுக் கொடுத்து இரங்கும் பண்பும் அதிகம் என்பார்கள். நீங்களோ இப்படிப் பராமுகமாக இருக்கிறீர்களே. இப்படி நடுக்கடலில் வைத்துக் கொண்டு, 'உன்னைப் பிடித்துக் கடலில் தள்ளி விடுவேன்' என்று பயமுறுத்தினால் நான் என்ன செய்வேன்? இந்த மனிதரிடம் கொஞ்சம் நீங்கள் எனக்காகச் சொல்லுங்கள். இந்தப் பிரயாணத்தின்போது நடுநடுவே நான் உங்களுக்கு எவ்வளவோ உதவியாக இருப்பேன். நான் உங்கள் மனிதன். உங்கள் ஊழியனைப் போல் நினைத்துக் கொள்ளுங்கள்."

அந்த வாலிபனுடைய இரைப் பணிவைக் கண்டு குழல்மொழி சிரித்தாள். சேந்தன் ஏளனம் நிறைந்த குரலில், "கெஞ்சினால் மிஞ்சுவது, மிஞ்சினால் கெஞ்சுவது என்கிற விவகாரம் வைத்துக் கொள்ளாதே. சிறிது நேரத்துக்குமுன்னால் அசகாயசூரனைப்போல் வாளை உருவத் தயாராகி விட்டாய். இப்போது என்னடா வென்றால் சரணாகதி நாடகம் போடுகிறாய். நான் உன்னை இதுவரை ஒன்றுமே செய்யாமல் நின்று பேசிக் கொண்டிருப்பதனால்தான் நீ எனக்குப் பயப்பட மாட்டேனென்கிறாய். கொட்டினால் தேள்; கொட்டாவிட்டால் பிள்ளைப் பூச்சி. இரு, இரு. இப்போதே ஆட்களைக் கூப்பிட்டு உன்னைக் கடலில் தூக்கி எறியச் சொல்லுகிறேன்" என்று சொல்லிக் கொண்டே ஆட்களைக் கூப்பிடுவதற்காகக் கைகளைச் சேர்த்துத் தட்டப் போனான். அப்போது அந்த வாலிபன் விருட்டென்று அருகில் பாய்ந்து சேந்தனுடைய கைகளைப் பிடித்துக் கொண்டு மேலும் குழைவான குரலில் கெஞ்சத் தொடங்கி விட்டான். சேந்தன் திகைத்துப் போனான். குளிர்ந்த செந்தாமரைப் பூக்கள் இரண்டு தன் கைகளைக் கவ்விக் கொண்டிருப்பது போல் சுகமாகவும் மிருதுவாகவும் இருந்தன, நாராயணன் சேந்தனுக்கு அந்த வாலிபனின் கைகள்.


"ஐயா! ஆரம்பத்தில் நான் உங்களிடம் சிறிது வரம்பு கடந்துதான் பேசி விட்டேன். அதற்காக என்னை மன்னித்து விடுங்கள். இந்தத் தென் கடலில் எங்கு போக வேண்டுமானாலும் எனக்கு வழிகள் நன்றாகத் தெரியும். அநேகமாக ஒவ்வொரு தீவிலும் சில நாட்கள் இருந்திருக்கிறேன் நான். இலங்கை போன்ற பெரிய தீவுகளில் உங்களுக்கு என்னால் எவ்வளவோ உதவிகள் செய்ய முடியும். தென் கடலில் அங்கங்கே, கடம்பர்கள் என்ற ஒருவகைக் கடற் கொள்ளைக்காரர்கள் கப்பல்களை நடுக்கடலில் கொள்ளையடித்துத் துன்புறுத்தி வருகிறார்கள். அந்தக் கொள்ளைக்காரர்கள் எப்படி இருப்பார்கள், எப்போது வருவார்கள் என்ற நெளிவு சுளிவெல்லாம் எனக்குத் தெரியும். உங்கள் கப்பலுக்கு அவர்களால் தொல்லைகள் வராதபடி நான் காப்பாற்றுவேன். நீங்கள் என்னைக் காப்பாற்றுங்கள். தயவுசெய்து இந்தக் கப்பலிலேயே உங்களோடு என்னையும் பிரயாணம் செய்ய விடுங்கள்."

இதைக் கேட்டுச் சேந்தன் பலமாக 'ஓகோ' வென்று சிரித்தான். குழல்மொழியும் சிரித்துக் கொண்டுதான் நின்றாள். "சரியான பயல்தான் அப்பா நீ! பெரிய சூரனைப் போல் நடித்துவிட்டுக் கடைசியில் இந்த முடிவுக்குத்தானா வந்தாய்? இவ்வளவு பணிவையும் தொடக்கத்திலேயே எங்களிடம் காட்டிக் கப்பலில் அனுமதியின்றி ஏறிவிட்டதற்காக மன்னிப்பும் கேட்டுக் கொண்டிருந்தாயானால் விவகாரம் இவ்வளவுக்கு முற்றியிருக்காதே. உன்னைச் சொல்லி என்ன தம்பி, 'குற்றம்' உலகம் முழுதுமே பண்பாட்டுக்குப் பஞ்சம் வந்துவிட்டது. எதையும் செய்ய முடிந்த தீரன் பணிவாக அடங்கி ஒடுங்கி வாழ்ந்தால் அந்தப் பணிவைப் போற்றலாம். கையாலாகாதவன் பணிவது தான் உலக வழக்கமாகி விட்டது. முடிகிறவரை ஆண்மையும் வீறாப்பும் காட்டுவது. முடியாவிட்டால் பணிந்து அடங்கிவிடுவது. மனிதர்கள் பழகிப் பழகி வாழத் தெரிந்து

இரண்டு பெரிய நன்மைகள்



மெட்ரிக் முறை எடைகள் அளவுகளை நாம் மேற்கொள்ளுவது நமக்கு இரண்டு முக்கியமான வழிகளில் நன்மையாக முடிகிறது. உள்நாட்டில் பல பல (எடை-அளவு) முறைகளிருந்ததால் ஏற்பட்டு வந்த குழப்பங்களும் இழப்புகளும் அறவே நீங்கும்.



அதே சமயத்தில் உலக முழுவதிலும் நிலை பெற்றுள்ள ஒரு திட்டத்தை நாமும் மேற்கொண்டவர்களாகிறோம். மெட்ரிக் முறையானது உலகம் முழுவதுமே அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது.

இந்த இரண்டு பெரிய நன்மைகளையும் அடைவதற்கு முதற்படியாக மெட்ரிக் எடை முறையை ஏற்கனவே மேற்கொண்டிருக்கிறோம். இராஜ்யங்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட சில பகுதிகளிலும் தொழில் துறைகளிலும் மெட்ரிக் எடைகளை அமுலாக்கியிருக்கிறோம்.



மெட்ரிக் முறை

சுலபமானது
ஒரே சீரானது

இந்திய அரசாங்கத்தால் வெளியிடப்பட்டது

DA [illegible]

கொண்டுவிட்ட இரகசியம் தான் இந்தப் பணிவு. இதனால்தான் உலகத்தில் உண்மை வீரர்களே குறைந்துவிட்டார்கள்" என்று சொல்லிவிட்டுக் குழல்மொழியின் பக்கமாகத் திரும்பி, "அம்மணி! நீங்களும் பார்த்துக் கொண்டுதானே நிற்கிறீர்கள். புலியாக இருந்த பயல் அதற்குள் இப்படிப் பூனையாக மாறி விட்டானே! இந்தக் காலத்து இளைஞர்களுக்கு எதிலுமே உறுதி கிடையாது. அலைபாயும் மனம், அலைபாயும் நினைவுகள், அலைபாயும் செயல்கள். அதனால்தான் எதிலும் தோல்வி மனப்பான்மையும், நம்பிக்கை வறட்சியும் அடைந்து கெட்டுப் போகிறார்கள். மனத்தை எந்தச் செயலிலும் ஆழமாகக் குவித்து ஈடுபட விடமாட்டேனென்கிறார்கள். மேலோட்டமான அகலத்தையும், பரப்பையும் பார்த்தே உணர்ச்சி மயமாக வாழ்ந்து அழிகிறார்கள். இதோ, இந்த வாலிபனையே எடுத்துக் கொள்ளுங்களேன். பார்ப்பதற்கு எவ்வளவு அழகாக இருக்கிறான். பண்பில் எவ்வளவு மோசமாயிருக்கிறான்!" என்றான் நாராயணன் சேந்தன்.

குழல்மொழிதான் சிரிப்பதை நிறுத்திக் கொண்டு அந்த வாலிபனை நோக்கி, "உன்பெயர் என்ன அப்பா?" என்று கேட்டாள். வாலிபன் மனத்தில் எதையோ சிந்திப்பவனைப் போல் சிறிது தயங்கினான். பின்பு குழல்மொழியைப் பார்த்துப் புன்னகை செய்து கொண்டே, "சகோதரி! என் பெயர் 'கூத்தன்'" என்றான்.

"உனக்குப் பொருத்தமான பெயர்தான் தம்பி! சிலபேருக்குப் பொருத்தமான பெயர் கிடைப்பதில்லை. இன்னும் சிலர் பெயருக்குப் பொருத்தமாக நடந்து கொள்வதே இல்லை. நீ இரண்டு வகையிலும் கொடுத்து வைத்தவன். 'கூத்தன்' என்ற பெயருக்கு நடிப்பவன் என்று பொருள். நீ நடப்பது, சிரிப்பது, பெண்குரலில் பேசுவது, பயமுறுத்தல், கெஞ்சுதல், உன்னுடைய தோற்றம், எல்லாமே செயற்கையாக நடிப்பதுபோல்தான் இருக்கின்றன. உன் இயல்போடு ஒட்டியதாகவே தெரியவில்லை. நீ கூத்தனேதான்!" சேந்தன் தற்செயலாக அவன் பேரைக் கேட்டதும், தன் மனத்தில் பட்டதைத்தான் மேற்கண்டவாறு கூறினான். ஆனால் அதைச் செவியுற்றதும் அந்த வாலிபனது முகத்தில் அவ்வளவு பீதியும் பரபரப்பும் ஏன் உண்டாயினவோ? சற்றுக் கூர்ந்து கவனித்தால் அவன் உடல் மெல்ல நடுங்கிப் புல்லரித்து ஓய்வதுகூடத் தெரியும். சேந்தன் குழல்மொழியைப் பார்த்துப் பின்வருமாறு கேட்டான்:—"அம்மணி! நீங்கள் சொல்லுங்கள். இவனை என்ன செய்யலாம்? போனால் போகிறதென்று இப்படியே நம் கூட இந்தக் கப்பலில் பயணம் செய்வதற்கு அனுமதித்து விடலாமா? அல்லது கடலில் பிடித்துத் தள்ளி விடலாமா?"

சேந்தனுடைய கேள்விக்குக் குழல்மொழி பதில் சொல்லுமுன் அந்த வாலிபனே முந்திக்கொண்டு, "கடலில் தள்ளி விடுங்கள். இந்தக் கடலில் அல்ல. உங்களுடைய கருணைக்கடலில் என்னையும் தள்ளிக் கொண்டு காப்பாற்றுங்கள்" என்றான். அதைக் கேட்டு மகா மண்டலேசுவரரின் அருமை மகள் உள்ளம் பூரித்தாள். சேந்தனோ முகத்தைச் சுளித்துக் கொண்டு சொன்னான்:- "பயல் வியமாகப் பேசுவதில் உலகத்தை விலைபேசி விற்றுச் சுருட்டிக் கொண்டு போய் விடுவான் போலிருக்கிறது. அதைப் பார்த்து ஏமாந்து விடாதீர்கள், அம்மணி!"

"ஆனாலும் பாவமில்லை! கப்பலில் எத்தனையோ ஊழியர்கள் இருந்தாலும் உங்களுக்கும், எனக்கும் உதவியாக ஒரு ஆள் வேண்டுமல்லவா? இவனும் இருந்துவிட்டுப் போகட்டும். இவன்தான் பழைய முரட்டுத்தனத்தையெல்லாம் விட்டுவிட்டு நம் வழிக்குப் பணிந்து வந்து விட்டானே! இனிமேல் இவனால் நமக்குக் கெடுதல் இருக்காது" என்றாள் குழல்மொழி. அவளுடைய ஆதரவான சொற்களைக் கேட்ட பின்புதான் அந்த வாலிபனுடைய முகத்தில் மலர்ச்சி வந்தது.

"என்னமோ, உங்கள் பாடு; இவன் பாடு. இவனைக் கட்டி மேய்ப்பதற்கு என்னால் முடியாது. நான் மேல்தளத்துக்குப் போகிறேன்" என்று முகத்தைத் திருப்பிக் கொண்டு போய் விட்டான் நாராயணன் சேந்தன்.

"சகோதரி! இந்தக் குட்டை மனிதர் யார்? கொதிக்கிற எண்ணெயில் கடுகு வெடிக்கிறமாதிரி ஏன் இப்படித் திடீர் திடீர் என்று இவருக்குக் கோபம் வந்துவிடுகிறது? இவர் உங்களுக்கு உறவா?" என்று சிரித்துக் கொண்டே கேட்டான் வாலிபன்.

"கூத்தா! அது அவர் சுபாவம். அதை நாம் மாற்ற முடியாது. எனக்குக் களைப்பாக இருக்கிறது. நான் படுத்து உறங்கப் போகிறேன். நீயும் மேல் தளத்துக்குப் போ. நான்

"கூப்பிடுகிறபோது வந்தால் போதும்" என்றாள் குழல்மொழி. கூத்தன் என்ற அந்த வாலிபன் கப்பலின் மேல் தளத்துக்கு ஏறிப் போனான். அவன் சேந்தனோடு ஒட்டிக்கொண்டு, நெருங்கிப் பழக முயன்றான். ஆனால் சேந்தன் நெருங்க விடவில்லை. யாரோ சொல்லி வைத்து ஏற்பாடு செய்திருந்தது போல் கப்பல் ஊழியர்களும் அந்த வாலிபனோடு ஒட்டுதல் இன்றியே பழகினார்கள். அவனுடன் பேச நேரும்போதெல்லாம் 'பொட்டைப் பயல்' 'பொட்டைப் பயல்' என்று வாய்க்கு வாய் திட்டினான் சேந்தன்.

அத்தியாயம் 31

குழைக்காதன் திரும்பி வந்தான்

கோட்டாற்றுப் படைத்தளத்தின் பிரும்மாண்டமான முரசமேடையில் நின்று கொண்டு கண்களின் எதிரே கடல்போல் பரந்து தோன்றும் படையணிவகுப்பைப் பார்த்துக் கொண்டிருந்த தளபதி வல்லாளதேவன், படைக்கோட்டத்தின் வாசலில் ஆபத்துதவிகள் தலைவனின் உருவத்தைப் பார்த்ததுமே பரபரப்படைந்தான். அவனைச் சந்தித்து அவன் கொண்டுவரும் விவரங்களை அறிந்துகொள்ள வேண்டுமென்ற ஆவலாலும், பரபரப்பினாலும், ஒரு கணம் தன் நிலை, தான் நின்றுகொண்டிருந்த சூழல் எல்லாவற்றையுமே மறந்துவிட்டான் தளபதி. அப்படியே இறங்கி ஓடிப்போய்க் குழைக்காதன் கொண்டுவரும் செய்தியை அங்கேயே அவனை நிறுத்தித் தெரிந்து கொண்டுவிட வேண்டும் போலிருந்தது. பல்லாயிரக்கணக்கான படைவீரர்கள் தனக்கு மரியாதை செய்வதற்காகக் கூடி அணிவகுத்து நிற்கும் சூழ்நிலையை உணர்ந்து அப்படி இறங்கிச் செல்லாமல் சமாளித்துக் கொண்டான். பெரிய சூழ்நிலைகளில் சிறிய ஆசைகளை அடக்கிக் கொள்ளத்தான் வேண்டியிருக்கிறது.

முரசமேடைமேல் தன் பக்கத்தில் நின்றுகொண்டிருந்த படையணித் தலைவர்களில் ஒருவனைக் குறிப்புக் காட்டி அருகே அழைத்தான். "அதோ; வாயிற்புறமாகக் குதிரையிலிருந்து இறங்கி வந்துகொண்டிருக்கும் ஆபத்துதவிகள் தலைவனை நேரே இங்கே அழைத்து வா" என்று சொல்லி அனுப்பி வைத்தான். அவன் மேடையிலிருந்து இறங்கி வேகமாக வாயிற் பக்கம் நடந்தான். அந்த மாபெரும் அணிவகுப்பின் நடுவே— அசையாது நிற்கும் சிலைகளைப் போன்று வரிசை வரிசையாக நிற்கும் வீரர்களை வகிர்ந்து கொண்டு ஒரே ஒரு ஆள் நடந்து சென்றது. நெற்குவியலினிடையே ஒரே ஒரு எறும்பு ஊர்கிற மாதிரித் தெரிந்தது. உயரமான மேடைமேலிருந்து பார்க்கும்போது தளபதிக்கு அப்படித்தான் மனத்துக்குள் உவமை தோன்றியது. அத்தனையாயிரம் வீரர்களின் கூட்டத்தில் மூச்சுவிடுகிற ஓசையாவது கேட்க வேண்டுமே! அவ்வளவு அமைதி. தளபதி என்ற ஒரு மனிதனுக்கு அத்தனை மனிதர்களும் கட்டுப்பட வேண்டியிருக்கிறது. அவனுடைய ஒரு சுட்டுவிரலின் அசைவுக்குக்கூட அந்தக் கூட்டத்தில் விளைவு உண்டு. இதை நினைத்துக் கொண்டபோது, திடீரென்று தான் மிகமிகப் பெரியவனாக மாறி உயர்ந்து விட்டதுபோலவும், அந்த உயரத்தின் நீண்ட நிழலில் மகாமண்டலேசுவரர் என்ற அறிவின் கூர்மை சிறியதோர் அணுவாய்த் தேய்ந்து குறுகி மங்கி மறைந்து விட்டது போலவும், ஒரு பொய்யான பூரிப்புத் தளபதி வல்லாளதேவனுக்கு ஏற்பட்டது. ஒரே ஒரு கணம்தான் அந்தப் பூரிப்பு நிலைத்தது. அடுத்த கணம் ஆழம் காண முடியாத மகாமண்டலேசுவரரின் அந்தக் கண்களும், ஒரு திசையைப் பார்த்துக் கொண்டிருந்தாலும் எட்டுத்திசையை உணர்ந்து கொள்ளும் பார்வையும், உருவெளியில் பெரிதாகத் தோன்றி அவன் சிறுமையை அவனுக்கு நினைவுபடுத்தின. தென்பாண்டி நாட்டின் எத்தனையோ ஆயிரம் வீரர்களுக்கு வாய் திறந்து கட்டளையிடும் அவனை, வாய் திறவாமல் கண் பார்வையாலேயே நிற்கவும், நடக்கவும், செயலாற்றவும் ஏவுகிற அரும் பெரும் ஆற்றல் அந்த இடையாற்று மங்கலத்து 'மலைச் சிகரத்தினிடம்' இருந்தது.

மனத்தைத் தடுக்க முயன்றாலும், முடியாமல் மறுபடியும், மறுபடியும் அவன் சிந்தனை இடையாற்றுமங்கலம் நம்பியையே சுற்றிக்கொண்டு மலைத்

தது. ஆபத்துதவிகள் தலைவனைக் கூட்டிக் கொண்டு வர வாயிற்புறம் சென்றவன் கூட்டிக் கொண்டு வந்து விட்டான்.

நெடுந்தூரம் பயணம் செய்துவந்த அலுப்பும், களைப்பும் குழைக்காதனிடம் தெரிந்தன. அலைந்து திரிந்து வந்தவன் முகத்தில் காணப்படும் ஒரு கருமை அவன் முகத்தில் படிந்து ஒளிமங்கியிருந்தது. மேடையில் ஏறி அருகில் வந்து தளபதியை வணங்கினான் அவன்.

"நேரே அங்கிருந்துதான் வருகிறீர்களா?" தளபதி கேட்டான். 'ஆம்' என்பதற்கு அறிகுறியாகக் குழைக்காதனின் தலை அசைந்தது. அந்த இடத்தில் பொதுவாக எல்லோரும் காணும்படி நின்றுகொண்டு குழைக்காதனிடம் ஒரு அந்தரங்கமான செய்தியைப் பற்றி விசாரிப்பது நாகரிகமற்ற செயலாகும் என்று தளபதிக்குத் தோன்றியது.

"குழைக்காதரே! கொஞ்சம் இப்படி என் பின்னால் வாருங்கள்" என்று குறிப்பாக மெதுவான குரலில் கூறிவிட்டு மூச மேடையின் பின்புறத்துப் படிகளில் இறங்கி ஆயுதச் சாலையை நோக்கி நடந்தான் வல்லாள தேவன். குழைக்காதனும் மௌனமாக அவனைப் பின்பற்றிப் படியிறங்கிச் சென்றான். அந்த இரண்டு பேர்கள் படியிறங்கி நடந்து செல்லும் திசையில் அங்கே கூடியிருந்த வீரர்களின் பல ஆயிரம் விழி இணைகளின் பார்வைகள் இலயித்துப் பதிந்தன. ஆயுதச்சாலையின் தனிமையான ஒரு மூலையில் வந்து தளபதியும் குழைக்காதனும் நின்றார்கள்.

"குழைக்காதரே! இரகசியமான செய்திகளைப் பொதுவான இடங்களில் பேசுவது காய்ந்த வைக்கோற் போரில் நெருப்பைப் பத்திரப்படுத்தி வைக்க முயல்வதுபோல மடமையான செயல். சில சந்தர்ப்பங்களை நாம் தவறாகப் பயன்படுத்திக் கொள்கிறமாதிரிச் சில சந்தர்ப்பங்கள் நம்மைத் தவறாகப் பயன்படுத்திக் கொண்டுவிடும். அதனால்தான் இவ்வளவு முன்னெச்சரிக்கை...சரி. நீங்கள் போன காரியம் என்ன ஆயிற்று? அதைப்பற்றிச் சொல்லுங்கள்."

"ஆவது என்ன? இந்த விநாடி வரை எல்லாம் சரியாகத்தான் நடைபெற்றிருக்கின்றன. இனிமேல் எப்படியோ? காரியத்தை முடித்துக் கொண்டு வெற்றியை நம்முடைய தாக்கிக் கொண்டுவர வேண்டிய திறமை தங்களுடைய திருத்தங்கையாரின் கைகளில் இருக்கிறது."

"நீங்கள் எதுவரை உடன் சென்றிருந்தீர்கள்?"

"விழிஞம் வரை நானும்கூடப் போயிருந்தேன். அவர்களுடைய கப்பலில் தங்கள் தங்கையார் ஏறிக்கொள்கிறவரை மறைந்திருந்து பார்த்துவிட்டுத்தான் திரும்பினேன்."

"தாங்கள் கப்பலில் ஏறக்கூடாதென்று அவர்கள் மறுக்கவில்லையா?"

"மறுக்கவில்லையாவது? அவர்களாவது மறுக்காமல் விடுவதாவது? மகாமண்டலேசுவரருக்கு மதியமைச்சன் போல் திரிகிறானே அந்தக் குட்டையன்; தங்கள் தங்கையாருக்கு இடமில்லை என்று கடைசி வரையில் சாதித்து விட்டான்."



"அடேடே! அப்புறம் எப்படி இடம் கிடைத்தது?"

"நேர்மையாக இடம் கிடைக்கவே இல்லை. அவர்கள் பார்க்காத நேரத்தில் தங்கள் தங்கையார் கப்பலின் மேற்றளத்தில் ஏறி ஒளிந்துகொண்டு விட்டார்கள். கப்பல் புறப்படுகிற வரை நான் மறைந்திருந்து பார்த்துவிட்டுத்தான் வந்தேன். விழிஞத்தில் புறப்பட்டவன் நேரே இங்கே குதிரையை விரட்டிக்கொண்டு வந்து சேர்ந்தேன்."

"குழைக்காதரே! என் தங்கையின் ஆண்வேடத்தைப் பார்த்து மகிழும் வாய்ப்பு எனக்குக் கிடைக்காமற் போய்விட்டதே என்று இந்த நெருக்கடியான நிலையிலும் எனக்குச் சிறிது மனக்குறைவு உண்டாகத்தான் செய்கிறது!" என்று சொல்லி விட்டுச் சிரித்தான் தளபதி.



தேசிய கலாசார விருதுபணத்தின் ஆதரவின் கீழ் புதுதில்லியில் தியாகராஜர் விழா ஜனவரி 29, 30-ந் தேதிகளில் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. இந்நிகழ்ச்சியில் உள்நாட்டு ராஜாங்க மந்திரி திரு பி. என். நந்தா இன்னிசையாக்குத் தலைமை வகித்தார்.

"மகா சேனாதிபதி அப்படி ஒரு குறையை உணர வேண்டியது அவசியம்தான். ஏனென்றால் தங்கள் உடன் பிறந்த தங்கையார் அவ்வளவு தத்ரூபமாக ஆண் வேடத்தோடு போருக்குக் காட்சியளிக்கிறார்கள். அவர்கள் அந்த மாறுவேடத்தோடு அன்றிரவு அரண்மனைத் தோட்டத்தில் வந்து என்முன் நின்றபோது எனக்கே அடையாளம் புரியவில்லையே! மிக அருமையாக நடிக்கிறார்கள். விழிஞத்தில் அந்தக் குறுக்குத்துவனுக்கும், மகா மண்டலேசுவரரின் புதல்விக்கும் முன்னால் ஆண் வேடத்தோடு தங்கள் தங்கையார் சிரித்துச் சிரித்துப் பேசிய சீரைப் பார்த்து அடியேன் அயர்ந்து போனேன்."

"என்ன செய்யலாம்! வேடம் போட்டு நடித்துப் பிறரை ஏமாற்றி வாழ்வதெல்லாம் அறத்தின் நோக்கத்தில் பாவம்தான். சில சமயங்களில் வாழ்வதற்காகப் பொய்யாக நடிக்க வேண்டியிருக்கிறது. நடிப்பதற்காகவே வாழ்கிற வாழ்வை மகா மண்டலேசுவரரைப் போன்றவர்களே வைத்துக் கொண்டிருக்கிறார்களே?"

"ஆ! தாங்கள் மகாமண்டலேசுவரரைப் பற்றிப் பேச்செடுத்ததும் தான் எனக்கு நினைவு வருகிறது. இப்போது அரண்மனையின் எல்லா அரசியல் காரியங்களும் அவர் பொறுப்பில்தான் நடக்கின்றன. அதங்கோட்டாசிரியர், பவழக் கனிவாயர் எல்லோரும் ஊருக்குப் போய் விட்டார்கள். மகாராணியாருடைய நினைவுகளெல்லாம் சமயத் தத்துவங்களில் திரும்பி யிருக்கின்றன. கரவந்தபுரத்துக்குச் செய்தி அனுப்புவது, வடதிசைப் போர் நிலவரங்களைக் கண்காணிப்பது எல்லாம் மகா மண்டலேசுவரரே பார்த்துச் செய்கிறார்."

"செய்யட்டும்! நன்றாக அவரே முழுச் சர்வாதிகாரமும் நடத்தட்டும். நான் ஒருவன் அங்கே யிருந்தால் தனக்கு இடையூறாக இருக்குமென்றோ, என்னவோ, என்னையும், 'படை ஏற்பாடுகளைக் கவனி' என்று இங்கே அனுப்பி விட்டார். எதற்கெடுத்தாலும் மகாராணிகூட அவர் பக்கமே தலையசைக்கிறார். ஒவ்வொரு வீட்டிலும் நாய்களைக் காவலுக்கு மட்டும் தான் வைத்துக் கொள்வார்கள். குளிப்பாட்டி மஞ்சள் தடவி, மரியாதை செலுத்துவதற்குப் பசுமாட்டை வைத்திருப்பார்கள்." தளபதி வல்லாளதேவன் தாழ்வு மனப்பான்மையோடு பேசினான்.

தகுதியாற் பெரியவர்கள் தங்களை விடத் தாழ்ந்தவர்களிடம் பலவீனமான சமயங்களில் மனம் திறந்து தங்களைத் தாழ்வாகச் சொல்லிக் கொண்டுவிட நேர்ந்தால் அதைக் கேட்பவர் பதில் கூறாமல் அடக்கமாக இருந்து விடுவதுதான் அழகு. ஆபத்துதவிகள் தலைவன் அந்தமாதிரியே தளபதிக்குப் பதில் கூறாமல் அடக்கமாக நின்றான்.

சிறிது நேரம் அமைதியில் கழிந்தது. எதையோ சிந்தித்துக் கொண்டிருப்பதுபோல் நின்ற தளபதி திடீரென்று முக பாவத்தை மாற்றிக் கொண்டு, "பரவாயில்லை! மகா மண்டலேசுவரர் அரண்மனையிலிருக்கட்டும். குழல்மொழி, நாராயணன் சேந்தன் ஆகியோர் தெற்கேயிருக்கட்டும். இடையாற்றுமங்கலத்துக்குத் திரும்புறன் நீங்கள் அங்கே போய் ஒரு காரியத்தைச் சாதித்துக் கொண்டுவர வேண்டும். இடையாற்றுமங்கலம் நிலவெசந்த மண்டபத்துக்கு அருகில் விருந்தினர் மாளிகைக்குக் கீழே ஒரு நிலவறை உண்டு. அதில் ஏராளமான ஆயுதங்களை மகாமண்டலேசுவரர் சேர்த்து வைத்திருக்கிறார். எப்படியாவது அவற்றை இங்கே கிளப்பிக் கொண்டு வந்துவிட வேண்டும். பரம இரகசியமாக இதைச் செய்யுங்கள். வேண்டிய ஆட்களையும் கூட்டிக் கொள்ளுங்கள். அறிவு தங்கியிருக்கிற இடத்தில் ஆயுதங்களும் தங்க வேண்டாம்" என்றான் தளபதி வல்லாளதேவன்.

(தொடரும்)

கல்கி

மாவட்டச் சிறுகதைப் போட்டி

முதற் பரிசு ரூ. 200.   இரண்டாவது பரிசு ரூ. 100

★

★ ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு மாவட்டத்தை இலக்காகக் கொண்டு இந்தச் சிறுகதைப் போட்டி நடத்தப்படும். ஒவ்வொரு மாதமும் தேர்ந்தெடுக்கப்படும் கதைகளில் இரண்டு கதைகளுக்குப் பரிசு வழங்கப்படும்.

★ தமிழ்நாட்டின் மாவட்டங்களான கன்யாகுமரி, திருநெல்வேலி, மதுரை, ராமநாதபுரம், திருச்சி, தஞ்சை, தென் ஆற்காடு, செங்கற்பட்டு, வட ஆற்காடு, சென்னை, சேலம், கோயமுத்தூர், நீலகிரி ஆகிய பதின்மூன்று மாவட்டங்கள் இந்தப் போட்டியில் இடம் பெறும்.

★ எல்லா மாவட்டங்களைப் பற்றிய கதைப் போட்டிகளிலும், எல்லாத் தமிழ் எழுத்தாளர்களும் கலந்து கொள்ளலாம்.

★ கதைகள் பண்பட்ட தமிழ் நடையில் அந்தந்த மாவட்டத்தைப் பின்புலமாகக் கொண்டு, முழுவதும் அந்தப் பிரதேச மணம் கமழ்வதாக இருப்பதோடு சொந்தக் கற்பனையாகவும் இருக்க வேண்டும்.

முதற் போட்டி

தஞ்சை மாவட்டம்

விதிகள்

1. கதைகள் தஞ்சை மாவட்டத்தின் சூழ்நிலை எல்லா வகையிலும் அமையுமாறு எழுதப்பட வேண்டும். தஞ்சைப் பிரதேசத்தைச் சேர்ந்த ஊர்கள், பழக்க வழக்கம், தொழில், காவிரிக் கரை வாழ்வு போன்றவற்றைச் சித்திரிக்கும் கதைகளே இப் போட்டியில் இடம் பெறும்.

2. கதைகள் 'கல்கி' இதழின் ஐந்து பக்கங்களுக்குக் குறையாமல் ஏழு பக்கங்களுக்கு மேற்போகாமல் இருக்க வேண்டும்.

3. ஒரு எழுத்தாளரே ஒன்றுக்கு மேற்பட்டும் கதைகள் அனுப்பலாம்.

4. பரிசுக் கதைகளைத் தேர்ந்தெடுக்கும் விஷயத்தில் 'கல்கி' ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது.

5. பரிசு பெறாத கதைகளில் பிரசுரிக்கத் தகுதி யுடையவை, உரிய சன்மானம் அளித்துக் 'கல்கி'யில் பிரசுரத்துக்கு ஏற்றுக் கொள்ளப்படும்.

6. பிரசுரத்துக்கு ஏற்றுக் கொள்ளப்படாத கதைகளைத் திரும்பப் பெற விரும்புவோர் கதைகளோடு உரிய தபால் பில்லைகள் இணைக்க வேண்டும்.

7. கதைகள் சம்பந்தமாக எவ்விதக் கடிதப் போக்குவரத்தும் வைத்துக் கொள்வதற்கில்லை.

8. தஞ்சை மாவட்டப் போட்டிக்கான கதைகள் மார்ச்சு மாதம் 31-ந் தேதிக்குள் 'கல்கி' காரியாலயத்துக்கு வந்து சேர வேண்டும்.

9. போட்டி முடிவு ஏப்ரல் மாத இறுதிக்குள் அறிவிக்கப்படும்.

10. கதைகளின் உறைகளிலும், கதைகளின் தலைப்புக்களிலும் "கல்கி தஞ்சை மாவட்டச் சிறுகதைப் போட்டி" என்று குறிப்பிட வேண்டும்.

குறிப்பு: தஞ்சை மாவட்டத்தின் சிறுகதைப் போட்டி முடிவு வெளியாகும் இதழிலேயே அடுத்த மாவட்டச் சிறுகதைப் போட்டிக்குரிய விவரங்கள் அறிவிக்கப்படும்.

ஆசிரியர், கல்கி

கூடிவாழ்ந்தால் கோடிநன்மை



புராணக் கதைகள் நாடகங்களாக நடிக்கப்பட்டு வந்த காலத்தில், மெதுவாக, சமூகச் சித்திரங்கள் மேடையில் தலை காட்டத் தொடங்கின. அப்பொழுது பெரும்பாலும் சமூகச் சீர்திருத்த நாடகங்கள் தான் நடத்தப்பட்டன. அப்புறம், வெறும் சீர்திருத்த நோக்கம் மட்டும் அல்லாமல் சுவாரஸ்யமான கதைப் பகுதியையும் கொண்ட நாடகங்கள் வெளிவரலாயின.

குடியின் கேட்டை விளக்கும் நாடகம், குதிரைப் பந்தய ஒழிப்பைப் பற்றிப் பிரசாரம் செய்யும் நாடகம், பெண் கல்வியைப் பற்றிப் பேசும் நாடகம், ஆணுக்கொரு நீதி, பெண்ணுக்கொரு நீதி என்று வேற்றுமைப்படுத்தும் சமூகத்தை வேரோடு களைந்தெறிய முதல் முழக்கம் செய்யும் நாடகம், சுதந்திர தாகத்தைத் தணிக்கும் நாடகம், சாதி, மத பேதத்தைச் சாடும் நாடகம் இப்படிப் பலவிதமான நாடகங்கள் மேடையில் அரங்கேற்றம் செய்யப்பட்டு வந்தன.

இப்பொழுது நம் சமூகத்தில் மேற்கூறிய நிலைகள் ஓரளவு மறைந்து விட்டன என்றே கூறலாம். ஆகவே, நாடகங்களின் கருத்தும் மாறலாயின. பலவித உணர்ச்சிகளையும் சிறந்த கருத்துக்களையும் அடிப்படையாகக் கொண்ட நாடகங்கள் வந்து வெற்றியும் பெறத் தொடங்கின.

நாடக மேடைகளில் மட்டும்தான் அப்படியிருந்தது என்பதற்கில்லை. வெள்ளித் திரையிலும் அத்தகைய சீர்திருத்தக் கருத்துக்கள் முழங்கி வந்தன. சீர்திருத்தக் கொள்கைகளைப் பச்சையாகக் கூறும் பழக்கம் மாறி, கதைப் பகுதியோடு சேர்த்துக் கூறும் வழக்கம் வரலாயிற்று.

நரசு ஸ்டூடியோஸ் தயாரிப்பான "கூடி வாழ்ந்தால் கோடி நன்மை" என்ற படம் கூடச் சாதி வித்தியாச மனப்பான்மையைக் கண்டிக்கும் கருத்துடன்தான் எடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் ஆவேசம் காட்டாமல் விளையாட்டாகவே கண்டிக்கப்பட்டிருக்கிறது. வெறும் பிரசாரமாயில்லாமல் இருப்பது பாராட்டுக்குரியது தானே!

மாம்பழம், விளாம்பழம், இலந்தைப் பழம் முதலிய பழங்களுக்கெல்லாம் தனித்தனியே உரிய காலங்கள் உண்டு. அந்தந்தக் காலங்களில்தான் அந்தந்தப் பழங்களைக் காண முடியும்.

சினிமாப் படங்களில் ஹாஸ்யம் அதிகமாக இடம் பெறும் காலம் இது. அந்தக் காலத்தை "சபாஷ் மீனா" ஆரம்பித்து வைத்தது. அனேகமாக, "கூடி வாழ்ந்தால் கோடி நன்மை" இந்தத் துறையில் கடைசிப் படமாயிருக்கலாம்.

இந்தச் சந்தர்ப்பத்தில், கண்ணீரைச் சிந்த வைக்கும் கருத்தோவியம் ஒன்று வெள்ளித் திரையில் வெளியாகும் போதும், அப்புறம் அதைத் தொடர்ந்து வெளிவரும் படங்களெல்லாம் கண்ணீர் வெள்ளமாகத்தான் இருக்கும்.

நம் படாதிபதிகளிடம் உள்ள பெரிய குறை இதுதான். புதிய கருத்துக்களில் ஆர்வமே கிடையாது. ஆர்வம் இல்லாமல் மட்டும் இருந்தால் பாதகமில்லை. புதிதாக ஒரு கதையையோ, கருத்தையோ புனைந்து அதைப் படத்தில் புகுத்துவதற்குத் துணிவும் தைரியமும் இல்லாமல் இருப்பதை நினைக்கும் போது தான் வருத்தமாயிருக்கிறது. ஒரு ஹிந்திப் படம் கதைப் போக்கின் சிறப்புக்காக, கலை நுணுக்கங்களில் கையாளப் பட்டிருக்கும் விசேஷ உத்திகளுக்காக, உள்ளத்தைத் தொடும் பாடல்களுக்காகத் தொடர்ந்து பல வாரங்கள் நம் ஊரில் ஓடுவதைப் பார்க்கும் போது பொறாமை உண்டாகவில்லை என்றாலும், நம் தமிழ்ப் படங்களை நினைத்து வருந்தாமல் இருக்க முடியவில்லை. மேலே கூறிய விசேஷ அம்சங்களுடன் ஒரு தமிழ்ப் படம் வெளி வந்து அது வடநாட்டில் பல வாரங்கள் ஓடினால் தான் என் மனதுக்கு நிம்மதியாயிருக்கும்.

நல்ல விஷயங்களுக்குச் சான்றோர்களைப் பின்பற்றுவது மிக மிக நல்லது தான். ஆனால், கலைகளிலும் படங்களிலும் ஆட்டு மந்தை முறையைப் பின்பற்றினால் நாம் எந்தக் கலைகளிலும் முன்னேற முடியாது. நமக்கென்று ஒரு தனி வழி வகுத்துக் கொண்டு எந்நாட்டவரும் பிரமிக்கும் வண்ணம் முன்னேற முயல வேண்டும். கதைப் பகுதியும், உணர்ச்சியின் உயிரோடு கலந்து நிற்கும் நிகழ்ச்சிக் கோவைகளும் குறைவாக இருப்பதனால்தான் நம் படங்கள் வாரக்கணக்கில் ஓடுவது தடைப்படுகிறது. இதைத் தவிர மற்றொரு பெரிய குறை, ஒரு படத்தைப்போலவே இன்னொரு படமும் இருப்பது. எந்தப் படத்திலாவது ஒரு புதுமையான அம்சத்தைக் காண மாட்டோமா என்று நான் வெகு நாட்களாக ஏங்குகிறேன். ஆனால் அந்த ஏக்கம் என்று தீருமோ?

"கூடி வாழ்ந்தால் கோடி நன்மை" யில் கதாநாயகன் (கோபால்) என். என்.

ராஜேந்திரன், வசிக்க ஒரு அறை கிடைக்காமல் தவிக்கிறார். மலையாளக்காரர், கன்னடக்காரர், தெலுங்கர் முதலியவர்கள் வீடுகளிலெல்லாம் தேடியலைந்தும் அவரவர்கள் இனப்பற்றின் காரணமாக இடம் கொடுக்க மறுக்கின்றனர். கடைசியில் ஒரு கன்னடக்காரர் வீட்டில் இடம் இருப்பதையறிந்து தம்மை ஒரு கன்னடக்காரரெனக் கூறிக்கொண்டு சுலபமாகக் குடி புகுந்து விடுகிறார். அத்துடன் சங்கீத, நடன உபாத்தியாயினியாகிய ஜானகி என்னும் ஒரு கன்னடப் பெண்ணின் இதயத்திலும் நிரந்தரமாக இடம் பெற்று விடுகிறார்.

ராஜேந்திரனின் நடிப்பு நன்றாயிருக்கிறது ''அன்பு எங்கே?'' படத்தில் அவர் ஏற்ற பாத்திரம் போன்றதுதான் இதுவும். ஹாஸ்யம் கலந்த பாத்திரமாக அவர் நன்கு சோபிக்கிறார். நடனமும் ஆடுகிறார். அப்பாவிடம் பயந்து நடுங்குகிறார். தங்கையைச் சதா வம்புக்கு இழுக்கிறார். கடைசியில், இடைவேளைக்குப் பிறகு படம் முடியும் தருணத்தில், இனப்பற்றைப் பற்றியும் அதன் தீமையைப் பற்றியும் ஓர் ஆவேசச் சொற்பொழிவாற்றுகிறார்.

பி. சரோஜா தேவி சங்கீத, நடன உபாத்தியாயினியாக வந்து, கோபாலைக் காதலிக்கிறார்; நடனமாடுகிறார். கொஞ்சிக் கொஞ்சிப் பேசுகிறார். இனப்பற்றின் காரணமாகக் கல்யாணம் நின்று போய் விடவே, தற்கொலை முயற்சியில் இறங்கித் தப்புவிக்கப் படுகிறார். கடைசி வரையில் அவர் நடிப்பு நன்றாயிருக்கிறது.

கோபாலின் தங்கையாக வரும் கிரிஜாவும், சித்திரக்காரனாக வரும் பிரேம் நஸீரும் திரைக் கதையின் இன்னொரு காதல் ஜோடி; பிரதானக் கதையின் குறுக்கே வந்து அடிக்கடி தொல்லை கொடுக்கின்றனர்.

டி. பாலசுப்பிரமணியம் கோபாலின் தந்தை சண்முகம் பிள்ளையாக வந்து குலப் பெருமை பேசி, மிரட்டி உருட்டி, மகனின் காதலுக்குக் குறுக்கே நின்று கடைசியில் விழிப்படைகிறார்.

இந்தப் படத்தில் அருமையாக நடித்திருக்கும் எஸ். வி. சுப்பையா ஒரு சிறந்த நடிகர். ''மங்கையர் திலகம்'', ''காலம் மாறிப் போச்சு'', ''வஞ்சிக்கோட்டை வாலிபன்'', ''இல்லறமே நல்லறம்'' முதலிய படங்களில் நடிகர் சுப்பையாவின் நடிப்பை நான் கூர்ந்து கவனித்து வந்திருக்கிறேன். அவரிடம் நடிப்புக் கலை பூரணமாகக் குடிகொண்டிருக்கிறது. பாத்திரத்தை உணர்ந்து நடிக்கும் திறமையும் அமைந்திருக்கிறது.

ஜானகியின் தந்தை நரஸப்பாவாக வந்து அவர் பேசும் பேச்சு, நடிப்பு, பாவம் இவைகளைப் பார்த்தால் ஒரு அசல் கன்னடக்காரர் என்றே மதிக்கத் தோன்றுகிறது. ஹாஸ்யமாகவும் அலட்சியமாகவும் நடிக்கிறார். மகளை இழந்த பின்பு, கண்ணீர்விட்டுக் கலங்கும்போதும் அவர் நடிப்பு சிறந்து நிற்கிறது.

வி. கே. ராமசாமி சிற்சில கட்டங்களில் மாத்திரம் வந்தாலும் நன்றாய் நடித்திருக்கிறார். அவர் வெண்ணெய் வியாபாரத்தின் தத்துவத்தை விளக்கும்போது வேடிக்கையாயிருக்கிறது.

டி. எஸ். ராஜகோபால் இந்தப் படத்தை டைரக்ட் செய்திருக்கிறார். டைரக்ஷனிலும், படத் தயாரிப்பிலும் விசேஷமாகப் பாராட்டிக் கூற எதுவும் இல்லை.

துறையூர் கே. மூர்த்தி படத்தின் வசனத்தை ரஸிக்கும்படி அமைத்திருக்கிறார்.

இந்தப் படத்தில் உள்ள பாடல்கள் ஏழும் மிகமிகச் சுமார். நல்லவேளையாக ஒன்றுகூட நினைவில் நிற்கவில்லை. படம் என்றால் அதற்குப் பாடல்கள் இன்றியமையாத அம்சம் என்ற எண்ணம் நம் படாதிபதிகளுக்கு இருப்பது வருந்தத்தக்க அதிசயம்தான்!

சென்னை ஹைகோர்ட், எழும்பூர் ரயில்வே ஸ்டேஷன், மிருகக் காட்சி சாலை முதலியவைகளைத் தவிர, படத்தில் பார்த்து ரஸித்து மகிழும்படியான விசேஷப் புறக்காட்சி எதுவும் இல்லை.



சோக்ரதர் சம்வாதங்கள்

7. நான்கு ராஜதர்மங்கள்

(பங்கெடுத்துக் கொள்ளுவோர்: சோக்ரதர், ஆதிமந்தஸ், க்ளாகோன் முதலானோர்.)

சோக்: நாம் இதுவரையில் ஓர் ஆதர்ச ராஜ்யத்தை அமைத்தோமல்லவா?

ஆதி: அப்படியே செய்தோம்.

சோக்: ஆதர்ச ராஜ்யமாதலால், அதில் விவேகமும், வீரமும், தன்னடக்கமும், நீதியும் நிறைந்திருக்குமல்லவா?

ஆதி: அது தெளிவு.

சோக்: இந்த தர்மங்களுள் நமது ராஜ்யத்தில் விவேகம் நன்கு பிரகாசிக்கிறது.

ஆதி: அது எப்படி?

சோக்: சமயோசிதமான புத்தியே விவேகமல்லவா?

ஆதி: உண்மை.

சோக்: அவ்விதமான புத்தி ஓர்வித அறிவு அன்றோ!

ஆதி: ஆமாம்.

சோக்: ஓர் ராஜ்யத்தில் பல்வித அறிவுகள் அவசியமன்றோ?

ஆதி: நிச்சயமாக.

சோக்: தச்சனுடைய அறிவைக் கொண்டு மட்டும் நமது ராஜ்யம் விவேகமுள்ளது என்று கூறலாமா?

ஆதி: கூடாது. அதனால் தச்சவேலையில் திறமையுள்ளது என்ற புகழையே பெறலாம்.

சோக்: பானை சட்டி செய்தல், விவசாயம் இவற்றின் அறிவுகளைக் கொண்டு விவேகத்தை நிச்சயிக்கலாமா?

ஆதி: அது எப்படி முடியும்?

சோக்: ஆதலால் ஓர் தனித்தொழிலைப் பற்றி இல்லாமல் ராஜ்யத்தின் எல்லா அலுவல்களைப் பற்றியும், அது தன்னை எப்படி நிர்வகிக்க வேண்டுமென்பதையும், பிற ராஜ்யங்களோடு எவ்விதம் நடந்துகொள்ள வேண்டுமென்பதையும் பற்றிய அறிவு இருக்குமல்லவா?

ஆதி: அவசியம் இருக்க வேண்டும்.

சோக்: அந்த அறிவு என்ன, அது யாரிடம் இருக்கும்?

க்ளா: அது காவலர்களின் அறிவு. அவர்களின் தலைவர்களிடமே பூரணமாகக் காணப்படும்.

சோக்: அந்த அறிவுக்கு என்ன பெயர்?

க்ளா: சமயோசித புத்தி அல்லது விவேகம்.

சோக்: நான்கு தர்மங்களில் ஒன்றை நிர்ணயித்தாகி விட்டது. வீரம் எங்கு இருக்கிறது என்பதும் வெள்ளிடை என்று தோன்றுகிறது.

க்ளா: உங்கள் கூற்று விளங்கவில்லையே!

சோக்: ஒரு ராஜ்யத்தின் வீரம், அதற்காகப் போர் புரிவோரிடம் இருக்கின்றதல்லவா?

க்ளா: வேறுஇடத்தில் ஒருவனும் தேடமாட்டான்.

சோக்: மற்றப் பிரஜைகள் தைரியசாலிகளாகவோ, கோழைகளாகவோ இருக்கலாம். அதனால் ராஜ்யம் வீரமுள்ளதாகவோ, இல்லாததாகவோ மாறிவிடாது. அது சரிதானே?

க்ளா: சரிதான்.

சோக்: அதன் தலைவர் போதித்த நல்ல கொள்கைகளில் எக்காலத்திலும் பிறழாததும், தீய கொள்கைகளை ஏற்க மறுப்பதுமே உண்மையான வீரமல்லவா?

க்ளா: நீங்கள் சொல்வது நன்றாக விளங்கவில்லையே?

சோக்: கல்வி, சட்டங்கள் மூலம் மக்கள் மனத்தில் புகுத்திய கொள்கைகளைத் துன்பத்துக்கு அஞ்சியோ, இன்பத்தால் மயங்கியோ தளராமலிருப்பதால் அல்லவோ நமது ராஜ்யம் வீரமிக்கிருக்கும்? ஓர் உதாரணம் வேண்டுமா?

க்ளா: தயவுசெய்து சொல்லுங்கள்.

சோக்: ரோமத்துக்கு ஊதா சாயம் கொடுக்க விரும்பினால், சாயக்காரர்கள் முதலில் வெகு ஜாக்கிரதையாக அதை வெளுப்பாகச் சலவை செய்கின்றனர். பிறகு வேண்டிய அளவில் ஊதா வர்ணத்தில் தோய்க்கின்றனர். அப்பொழுதே அழியாத சாயம் பாய்கிறது. சரியாகச் சலவை செய்யாமல் சாயம் தோய்த்தால், அது ஊதாவாகவோ, வேறு ஒரு வர்ணமாகவோ தோன்றுவதில்லை.

க்ளா: பார்ப்பதற்கு விகாரமாயிருக்கும்.

சோக்: நமது காவலர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களுக்குத் தேகப் பயிற்சியும், மனப் பயிற்சியும் கொடுப்பதன் நோக்கம் இதுவே. சட்டங்களுக்கு அடிப்படையான கொள்கைகள் அவர்கள் மனத்தில் நன்கு பதிந்து விடும். இன்பத்தாலும் துன்பத்தாலும், அச்சத்தாலும், ஆசையாலும் அவை சிதைவுற மாட்டா. இவ்வாறு சிதைவின்றி நிலைத்திருப்பதே உண்மையான வீரம் என்பது எனது முடிவு.

க. சந்தானம்

க்ளா: நானும் நீங்கள் சொல்வதை ஒப்புக் கொள்ளுகிறேன்! ஓர் காட்டு மிருகம், அல்லது அடிமையின் முரட்டுத்தனத்தைத் தைரியமல்ல என்று நீங்கள் கூறுகிறீர்கள் அல்லவா?

சேக: நிச்சயமாக. இப்பொழுது மீதி இரண்டு தர்மங்களைத் தேடிப் பிடிக்க வேண்டும். முதலில் தன்னடக்கம், பின்னர் நீதி.

கள: ஆமாம்!

சேக: தன்னடக்கமென்பது ஒருவருடைய விருப்பங்களையும், ஆசைகளையும் கட்டுப்படுத்துவதே. "தனக்குத்தானே எஜமான்" என்று கூறுவதில் இது அடங்கியிருக்கிறது.

கள: உண்மை.

சேக: அப்படிக் கூறுவது வைத்தியக்காரத்தனமாகத் தோன்றுகிறது. ஏனென்றால் எஜமானனும், வேலைக்காரனும் ஒருவனேயன்றோ?

கள: அப்படியே.

சேக: ஆனால் அதில் ஓரளவு உண்மையிருக்கிறது. நமது ஆத்மாவில் இரண்டு தத்துவங்கள் சேர்ந்திருக்கின்றன. ஒன்று உயர்ந்தது. மற்றொன்று ஈனமானது. உயர் தத்துவம் ஈனத்தை அடக்கியாளும் பொழுது தனக்குத் தானே எஜமான் என்று கூறப்படுகிறது. ஈன தத்துவம் உயர்ந்ததை அடக்கி விட்டால், தனக்குத் தானே அடிமை என்று சொல்லப்படுகிறது.

கள: அது வியப்பே!

சேக: நமது ராஜ்யத்தில் ஒரு பாகம் தெளிவாக அமைந்திருக்கிறது. அது தனக்குத்தானே எஜமான் என்று சொல்லக்கூடிய நிலைமையில் இருக்கிறது. அதன் உத்தம பாகம் அதம பாகத்தை அடக்கி ஆளுமல்லவா?

கள: உங்கள் கருத்து தெளிவாக விளங்க வில்லையே!

சேக: குழந்தைகள், மாதர், கீழ் வகுப்பார் இவர்களுடைய விருப்பங்களும், ஆசைகளும் பலவிதமானவை. செம்மையான பகுத்தறிவால் செலுத்தப்பட்ட விருப்பங்களும், ஆசைகளும் விவேகமுள்ளவரிடமே எதிர்பார்க்கலாம்.

கள: முற்றிலும் உண்மை.

சேக: பெரும்பாலோரின் சிற்றின்பங்களும், பேராசைகளும் சிறுபாலரின் விவேகத்தால் அடக்கப்பட்டிருப்பதால், நமது ராஜ்யம் தனக்குத்தான் எஜமானன் என்ற பட்டத்துக்கு உரியதாகுமல்லவா?

கள: அதை நான் ஆமோதிக்கிறேன்.

சேக: ராஜ்யத்தின் இந்தக் குணத்தைத் தன்னடக்கம் என்று கூறுவது பொருந்துமல்லவா?

கள: சந்தேகமில்லாமல்.

சேக: இந்தத் தன்னடக்கம் யாரிடம் காணக் கூடும்? காவலர்களிடமா, அல்லது பிரஜைகளிடமா?

கள: இருவரிடமும் என்று எண்ணுகிறேன்.

சேக: தன்னடக்கம் ராஜ்யத்தில் இருக்கும் ஒருவித ஒருமைப்பாடு என்று நாம் நினைத்தது சரிதானே?

கள: அது எங்ஙனம்?

சேக: விவேகமும், வீரமும் ஒரு பாகத்திலிருக்கும் தர்மங்கள். ஒன்றால் ராஜ்யம் சமயோசித புத்தியுள்ளதாகிறது. மற்றொன்றால் வீரம் படைத்ததாகின்றது. தன்னடக்கமோ மக்களின் எல்லா வகுப்பார்களையும் சார்ந்தது. வல்லோரும், எளியோரும், நடுவில் இருப்போரும் சேர்ந்து வாழ்வதற்கு வழி காட்டுவது. தனிமனிதனிடமும் சரி, ராஜ்யத்திலும் சரி தன்னடக்கமே மேலோர், கீழோருக்குள் சமரசமுண்டாக்கி வைக்கும் தர்மமாகும்.

கள: முற்றிலும் அங்கீகரிக்கிறேன்.

சேக: மூன்று தர்மங்களை நிர்ணயித்து விட்டோம். நான்காவது நீதி. அது எங்கே என்று கண்டுபிடிக்க முடியுமானால் நமது சம்வாதம் முடிவு பெறும்.

கள: அதுதான் பாக்கி.

சேக: வேட்டையாடுவோர் போல், நாம் இப்பொழுது நமது இலக்கை நான்கு புறமும் சூழ்ந்து தப்பி ஓடாமல் நெருக்கிப் பிடிக்க வேண்டும். ஆதலால் கூர்ந்து கவனிப்போம். உன் கண்களில் முதலில் அகப்பட்டால் எனக்கும் தெரிவிப்பாய்.

கள: என்னால் சாத்தியப்பட்டால் எவ்வளவு அதிர்ஷ்டசாலியாவேன்! ஆனால் என்னை உமது சீடனாகவும், நீங்கள் காட்டுவதைக் காண்பதற்குரிய கண்களையே பெற்றவனாகவும் பாவிக்க வேண்டும்.

சேக: அப்படியானால் ஈசனைப் பிரார்த்தித்து என்னைப் பின்தொடர்வாயாக.

கள: தொடர்வேன். நீங்கள் வழிகாட்ட வேண்டும்.

சேக: நமக்கு முன் அடர்ந்த காடு. எல்லாம் இருள் மயமாக இருக்கிறது. ஆயினும், நாம் தொடர்ந்து செல்ல வேண்டும்.

கள: செல்லுங்கள்.

சேக: ஆகா! இதோ ஒரு ஒற்றையடிப் பாதை தென்படுகிறது. நமது இலக்கு இனித் தப்பாது.

கள: விரைந்து செல்வோம்.

சேக: நல்ல செய்தி.

கள: என்ன?

சேக: நாம் எவ்வளவு மூடர்கள்!

கள: ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்?

சேக: நமது ஆராய்ச்சியின் ஆரம்பத்திலேயே நீதி நமது காலடியில் விழுந்து கிடந்தது. நாம் கவனிக்க வில்லை. இதைப் போல் இழிவு உண்டா? தோளின்மேல் ஆட்டுக்குட்டியை வைத்துக் கொண்டு ஊரெல்லாம் தேடுவது போல் அல்லவா நமது விவகாரம். அதனால்தான் இவ்வளவு நேரம் தேடியும் காணவில்லை.

கள: நீங்கள் கூறுவது எனக்கு விளங்க வில்லையே.

சேக: நீண்ட நேரம் நீதியைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறோம். ஆனால் அதை அடையாளம் கண்டு கொள்ள வில்லை.

கள: இவ்விதம் புதிர் போடாமல், சீக்கிரம் செய்தியைச் சொல்லுங்கள்.

சேக: நான் கூறுவது சரியா, தவறு என்று நீயே உரைப்பாய். ஆதி முதல் நமது ராஜ்யத்தில் ஒவ்வொரு பிரஜையும் தனக்குரிய பணி செய்ய வேண்டும் என்று வற்புறுத்தி வந்திருக்கிறோமல்லவா?

இந்தத் தத்துவமே நீதி, அல்லது அதன் ஓர் பாகமாகும்.

கள: ஆமாம். ஒவ்வொருவனும் தனது தொழிலை செய்ய வேண்டுமென்று அடிக்கடி கூறியிருக்கிறோம்.

சோக்: தனது கடமையைச் சரிவரச் செய்வதே நீதி என்று கூறத் தகும். இதன் காரணம் தெரியுமா?

கள: தெரியாது. சொல்லுங்கள்.

சோக்: தன்னடக்கம், வீரம், விவேகம் மூன்று தர்மங்களைத் தவிர்த்து, இது ஒன்றே மிஞ்சியுள்ளது. மற்ற தர்மங்கள் நிலைத்திருப்பதற்கு இதுவே அஸ்திவாரமாகும். அவற்றுக்குள் புகுந்து, அவைகளைக் காப்பதும் இதுவே. மூன்று தர்மங்களைக் கண்டுபிடித்தால் மிஞ்சியது நான்காவது என்று ஆதியிலேயே நாம் நிர்மாணித்து விட்டோமன்றோ?

கள: அவசியம்.

சோக்: இந்த நான்கு தர்மங்களில் எது ராஜ்யத்தின் மூலகாரணம் என்று ஆராய்வோம். ஆள்வோருக்கும் ஆளப்படுவோருக்குமுள்ள ஒருமைப்பாடா, அபாயத்திலும் உண்மைக் கொள்கைகளைத் தளரவிடாமல் தாங்கி நிற்கும் திடமா, ஆள்வோரின் வளத்தோடு கூடிய விவேகமா அல்லது இந்த நான்காவது தர்மமா? அதாவது குழந்தைகள், மாதர், அடிமை, கூலிக்காரன், தொழிலாளி, காவலர், பிரஜை—அனைவரும் தத்தம் கடமைகளைச் செய்து; பிறர் வேலைகளில் வீணில் புகாமல் இருப்பதா? இந்தக் கேள்விக்குப் பதில் அளிப்பது எளிதல்ல.

கள: ஆம்! எது முக்கியமென்று கூறுவது கடினமே.

சோக்: இந்த நான்காவது தர்மம் நீதி தானே.

கள: நிச்சயம்.

சோக்: இதை வேறொரு நோக்கில் கவனிப்போம். அரசாள்வோர் சட்டப்படி நியாயம் வழங்கக் கூடியவர்களல்லவா?

கள: அதற்கென்ன சந்தேகம்?

சோக்: எவனுக்கும் தன்னுரிமை யில்லாததை வழங்கக்கூடா தென்றும் அவனுக்கு உரிமையானதை வழங்கவேண்டுமென்பதே நியாயமல்லவா?

கள: நிச்சயமாக.

சோக்: இது நீதி தத்துவமல்லவா?

கள: ஆம்.

சோக்: ஆதலால் ஒவ்வொருவனும் தனக்குரிய கடமை செய்வதும், பொருளைப் பெறுவதும் நீதியாகுமன்றோ?

கள: உண்மை.

சோக்: இப்பொழுது யோசித்துப்பார். சக்கிலியர்களோ, வியாபாரிகளோ தங்கள் செல்வத்தாலோ, கூட்டத்தின் பலத்தாலோ இறுமாப்படைந்து போர்வீரர்கள் குழுவில் புகுந்தும், பின்னர் காவல் கூட்டத்தில் நுழைந்தும் குழப்பம் செய்தால் ராஜ்யம் சீர்குலைந்து விடுமல்லவா?

கள: முற்றிலும் உண்மை.

சோக்: நமது ராஜ்யத்தில் மூன்று வகுப்பார்கள் இருக்க வேண்டுமென்று நிச்சயித்தோம். காவலர், உதவிக் காவலர், மற்றப் பிரஜைகள். இவர்களில் ஒரு வகுப்பார் மற்றவர்களின் வேலையில் குறுக்கிடுவது தீமையல்லவா?

கள: நிச்சயம்.

சோக்: இதுவே அநீதம். அப்படியில்லாமல் வியாபாரிகளும், உதவிக் காவலரும் காவலரும் தத்தம் கடமைகளைச் செய்வது நீதியாகும். அப்பொழுதுதான் நமது ராஜ்யத்தில் நீதி நிலைபெறும்.

கள: முற்றிலும் ஒப்புக்கொள்ளுகிறேன்.

சோக்: அவசரப்படாதே. தனி மனிதன் தர்மங்களை நிர்ணயிப்பதற்கே நாம் ராஜ்யத்தை எடுத்துக் கொண்டோம். ஏனென்றால் பரந்த பிரதேசத்தில் பொருள்களைப் பார்ப்பது எளிது. தனி மனிதனை விட ராஜ்யம் பெரிதாகையால் அதில் நீதியை நிர்ணயிக்க முயற்சி செய்தோம். இப்பொழுது அத் தத்துவம் தனி மனிதனிடம் எவ்விதம் பிரதிபலிக்கிறதென்று நிர்ணயிப்போம். இரண்டு இடங்களிலும் ஒரே தன்மையாக இருந்தால் ஆராய்ச்சி முடிவு பெறும். அப்படியில்லாமல், தனி மனிதனிடம் ஓர் விதமாகவும் ராஜ்யத்தில் மாறியும் காணப்பட்டால், மீண்டும் ராஜ்யத்துக்கும் நீதிக்குமுள்ள தொடர்பை ஆலோசிக்க வேண்டும். இவ்விரண்டு தன்மைகளையும் சேர்த்துப் பார்த்து, பிரகாசிக்கும் இரண்டையும் அரணிக் கட்டைகளைப் போல் ஒன்றோடொன்று உரைத்தால் அதிலிருந்து பொறி கிளம்பிச் சுடராய்ப் பிரகாசிக்கும். அந்த ஒளியில் நீதியின் நித்தியமான சொரூபத்தைத் தேர்ந்து நமது ஆத்மாவில் பதித்துக் கொள்வது சாத்தியமாகும்.

அவர் பெயர் பல்பீர் ஸிங். சீக்கியர் அவர். சுமார் நாற்பத்தைந்து வயது இருக்கும். ஆஜானுபாகுவான உடல். அடர்ந்த மீசையும் தாடியும். சீக்கியர்களுக்கே உரித்தான பாணியில் தலை முடியை நாரதர் கொண்டை போட்டுக் கொண்டு, அதை மூடியவாறு பெரிய தலைப்பாகை ஒன்றும் கட்டிக் கொண்டிருப்பார். கண்களில் கறுப்புக் கண்ணாடி. அதை அவர் கழற்றி நான் பார்த்ததே இல்லை. வலது கால் முட்டுக்குக் கீழே பொய்க்கால். ஆனால் எப்பொழுதும் கணுக்கால் வரையில் நீண்ட பைஜாமாவும், ஸ்டாக்கிங்ஸ்-பூட்ஸும் அணிந்திருப்பார்: ஆதலால் அவர் பொய்க்கால் உடையவர் என்பது சாதாரணமாக யாருக்கும் தெரியாது.

பல்பீர் ஸிங்கை எனக்குக் கடந்த மூன்று வருஷங்களாகப் பழக்கம். எங்களிடையே பழக்கம் ஏற்படக் காரணமாக இருந்தவை எங்கள் மோட்டார் 'சைக்கிள்கள். அவை ஒரே 'மாடல்': ஒரே கடையில் வாங்கப்பட்டவை என்பது மட்டுமல்ல: இரண்டுக்கும் அடுத்தடுத்த ரெஜிஸ்திரேஷன் நம்பர். என் சைக்கிளின் நம்பர் பி. எம். எல். 478: அவருடையது பி. எம். எல். 479. அதோடு அநேகமாக இரண்டுக்கும் அடிக்கடி தலைவலி வரும். ஆகையால் இருவரும் அடிக்கடி மோட்டார் சைக்கிள் ஒர்க்ஷாப்பில் சந்தித்துக் கொள்ளுவோம். இந்தச் சந்திப்புக்களின் பயனாகச் சில நாட்களுக்குப் பிறகு நாங்கள் வேறு எங்கேயாவது ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டால், "ஹலோ! உங்கள் மோட்டார் சைக்கிளுக்கு உடம்பு எப்படி இருக்கிறது?" என்று பரஸ்பரம் விசாரித்துக் கொள்ளுவோம்.

இந்த அளவுப் பழக்கத்துடன் ஆறு மாதங்கள் சென்ற பிறகு, ஒரு நாள் நான் பணம் எடுப்பதற்காகப் பாங்குக்குப் போயிருந்தேன். அங்கே பல்பீர் ஸிங்கும் பேயிங் கௌண்டர் முன்னால் நின்றுகொண்டிருந்தார்.

வழக்கப்படி மோட்டார் சைக்கிளின் சுகத்தை இருவரும் விசாரித்துக்கொண்ட பிறகு, "நீங்கள் இங்கே தான் கணக்கு வைத்துக் கொண்டிருக்கிறீர்களா?" என்று கேட்டேன்.

"ஆமாம்: இது மற்றோர் ஒற்றுமை" என்றார் பல்பீர் ஸிங்.

கவுண்டருக்குள்ளே உட்கார்ந்திருந்த பாங்குக் கிளார்க் ராமசாமி என் நண்பன். அவன் எங்கள் சம்பாஷணையைக் கேட்டு விட்டு, "என்னப்பா மற்றோர் ஒற்றுமை என்கிறாய்? வேறு என்ன ஒற்றுமை இருக்கிறது உங்களிடையே?" என்று கேட்டான்.

நான் மோட்டார் சைக்கிள் விஷயத்தை அவனிடம் சொன்னேன்.

அவன் சிரித்து விட்டு, "அப்படிப்பட்ட ஒற்றுமை இங்கே கூட ஒன்று இருக்கிறது. உன் கணக்கு நம்பர் 2109: அவர் கணக்கு நம்பர் 2110" என்று கூறினான்.

"ஓ! ஐ ஸீ" என்றார் பல்பீர் ஸிங்.

நான் திடுக்கிட்டேன். நானும் ராமசாமியும் தமிழில் பேசிக் கொண்டதை யெல்லாம் இவர் எப்படிப் புரிந்து கொண்டார்?

"உங்களுக்குத் தமிழ் தெரியுமா?" என்று வியப்புடன் அவரைக் கேட்டேன்.

"தெரியாது: ஆனால் அவர் எனக்கு எண்ணைக் கூறியதிலிருந்து ஊகித்தேன்" என்றார் அவர். அந்தச் சந்திப்பின்போது நான் நாங்கள் ஒருவர் பெயரை மற்றவர் தெரிந்து கொண்டோம்.

பல்பீர் ஸிங் போன பிறகு ராமசாமி, "என், அப்பா! உனக்கு எப்பொழுது முதல் ஆவி உலகத்திறுக்கு பிடித்தது?" என்றான்.

பரசாரமனின்







ஆவி

"ஆவியாவது! உலகமாவது! என்ன ராமசாமி, உளறுகிறீர்?"

"இல்லை, ஸர்தார்ஜி ஆவி உலகத் தொடர்பு நிலயம் ஒன்றை நடத்தி வருபவராயிற்றே; ஒருநாள் அவரோடு அந்தப் பழக்கமோ என்று கேட்டேன்" என்றான் ராமசாமி.

"எனக்கு அவ்வளவு தூரம் ஒன்றும் கலந்துப் போகவில்லை, ராமசாமி!"

"அது என்னவோ அப்பா! நீயும் நானுந்தான் ஆவி உலகத் தொடர்பில் நம்பிக்கை இல்லாதவர்களாக இருக்கிறோம். இந்த மனிதர் அதிலே கொள்ளை கொள்ளையாகப் பணம் சம்பாதிக்கிறார். தினந்தோறும் ஐம்பது-நூறு என்று டிபாசிட் செய்து கொண்டிருக்கிறார் என்றும் பார்த்துக் கொண்டேன்."

"சரிதான்; அப்படியானால் பம்பாயில் பைத்தியங்கள் மலிந்து விட்டன போலிருக்கிறது!" என்றேன் நான்.

ஆனால் அடுத்த தடவை பல்பீர் ஸிங்கைச் சந்தித்தபோது, அவர் என்னையும் மெல்ல அந்தப் பைத்தியக்காரக் கும்பலில் சேர்த்துவிடப் பார்த்தார். அன்று அவர் தாமாகவே தமது நிலயத்தைப் பற்றிச் சொல்லி, "வாருங்களேன் ஒரு நாள் அங்கே. இந்தாருங்கள் என் விலாசச் சீட்டு" என்று தமது விசிட்டிங் கார்டை எடுத்துக் கொடுத்தார்.

"ஆகட்டும்" என்று கூறி விட்டு, அவர் தலைமறைந்ததும் விலாசச் சீட்டைக் கிழித்துப் போட்டு விட்டேன்.

ஆனால் பல்பீர் ஸிங் என்னை விடுவதாயில்லை. சந்திக்கும் போதெல்லாம் வெறுமனே "என் நிலயத்துக்கு வர மாட்டேன் என்கிறீர்களே; வர மாட்டேன் என்கிறீர்களே" என்று கேட்டுக் கொண்டிருந்தவர் திடீரென்று ஒரு நாள், பார்க்கும் போய் ராமசாமியிடம் கேட்டோ, அல்லது வேறு எந்த விதமாகவோ என்னுடைய விலாசத்தையும் நான் எழுத்தாளன் என்பதையும் தெரிந்துகொண்டு என்னுடைய வீட்டுக்கே வந்து விட்டார்.

இதுவரை ஆவி, உலகம், தொடர்பு என்றெல்லாம் எல்லாரும் பேசிக் கொள்வதைத்தான் நான் கேட்டிருந்தேன். ஆனால், இறந்தவர்களோடு நமக்குத் தொடர்பு ஏற்படுத்தி வைப்பார்கள் என்ற அளவுக்குத் தான் அதைப்பற்றி எனக்குத் தெரியும். அந்தத் தொடர்பை எப்படி, எப்பொழுது ஏற்படுத்தி வைப்பார்கள் என்ற விவரமெல்லாம் தெரியாது. ஆகையால் அதையாவது கேட்டுத் தெரிந்து கொள்ளுவோம் என்று எண்ணியவனாக, "மிஸ்டர் பல்பீர் ஸிங்! ஆவி உலகத் தொடர்பு என்றால் என்ன? அதை எனக்கு முதலில் விளக்குங்கள்" என்று கேட்டேன்.

"என்ன ஸார் கேலி பண்ணுகிறீர்கள்? இது கூடத் தெரியாதா, எழுத்தாளராகிய உங்களுக்கு?" என்று கேட்டவாறே சிரித்தார் அவர்.



மாயாவி

"எழுத்தாளன் சகலமோ வல்லவனாக இருக்க வேண்டுமென்ற கட்டாயமில்லை, மிஸ்டர் பஷீர் விக்!"

"அப்படியானால் சொல்லுகிறேன். உங்களுக்கு இது தெரிந்திருக்கலாம். அதாவது, சாவு என்பது உடலுக்குத்தான்; ஆவிக்கு அழிவில்லை என்பது. இறந்த பிறகும் அந்த ஆவி தன் பெண்டு-பிள்ளைகள், உறவினர், நண்பர் எல்லாருடனும் கலந்து பழகத் துடிக்கிறது. ஆனால் அதற்கு உருக் கிடையாது. உருவில்லாமல் குரல் மட்டும் கேட்டால் நீங்கள் பேய்-பிசாசு என்று நடுங்கி ஓடி விடுகிறீர்கள். ஆனால் அதன் ஆவல் நிறைவேறுவதில்லை. ஆவி உலகத் தொடர்பு நிபுணர்களாகிய நாங்கள் அவற்றை வசப் படுத்தும் கலையைக் கற்றிருக்கிறோம். ஆகையால் உங்களுக்கும் ஆவிகளுக்கும் இடையே ஒரு பாலமாக இருந்து தொடர்பு ஏற்படுத்தி வைக்க முடிகிறது."

"அதாவது, அந்த ஆவியும் நாங்களும் சந்திக்கச் செய்வீர்கள், இல்லையா?"

"சந்திப்பதா? எதை? ஆவியையா? ஆவிக்குத்தான் உருவம் கிடையாதே, ஸார்!"

"அப்படியானால் அதன் குரலை மட்டும் கேட்கச் செய்வீர்கள் போலிருக்கிறது!"

"குரலையும் நீங்கள் கேட்க முடியாது. ஏனென்றால் உருவமின்றிக் குரலை மட்டும் கேட்டால் பேய் — பிசாசு என்று நடுங்கும் மனப்பான்மை நீங்கள் வளர்த்துக் கொண்டிருப்பதால் ஆவி உங்களிடம் நேரில் வந்து பேசாது."

"பின்?"

"ஓர் உதாரணம் சொல்லுகிறேன். இறந்து போன தாத்தாவுடனோ, அல்லது வேறு யாரோ ஒருவருடனோ நீங்கள் பேச விரும்புகிறீர்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள். முதலில் எங்களுக்கு அவரைப் பற்றிய முழு விவரமும் தர வேண்டும்."

"விவரமா? அது எதற்கு உங்களுக்கு?"

"ஏன் ஸார், ஆவி உலகத்தில் உங்கள் தாத்தாவின் ஆவி மட்டுந்தான் இருக்கிறதா? கோடிக்கணக்கான ஆவிகளிடையே நாங்கள் உங்கள் தாத்தாவைக் கண்டுபிடிக்க வேண்டுமென்றால், அது எளிதான காரியமா? சில சமயம் ஓர் ஆவியைக் கண்டுபிடிக்க ஒரு மாதம், இரண்டு மாதங்கள் என்றுகூட ஆகும், ஸார்! ஆகையால் நீங்கள் முழு விவரமும் தந்த பிறகு, நாங்கள் அந்த ஆவியைக் கண்டு பிடித்து உங்களுக்கு விவரம் தெரிவிப்போம். பின்னர் உங்களுக்குச் சௌகரியமான நாள் ஒன்றைச் சொன்னால் அன்று சந்திப்புக்கு ஏற்பாடு செய்வோம்."

"புரிந்தது; அப்புறம்?"

"நீங்கள் என்ன என்ன கேள்விகள் கேட்கப் போகிறீர்கள் என்பதையும் எங்களிடம் முன்னதாக அறிவித்துவிட வேண்டும்."

"அது எதற்கு மிஸ்டர் பஷீர் விக்?"

"சொல்லுகிறேன், கேளுங்கள். ஆவி உலகம் கட்டுப்பாடுகள் நிறைந்தது. அங்கிருந்து ஓர் ஆவிகூடத் தன் பிரியம் போல் வெளியே போய் வர முடியாது. அவைகளை வசப்படுத்தும் திறன் பெற்ற நாங்கள் மட்டுந்தான் குறிப்பிட்ட ஒரு நேரத்துக்கு அவைகளை வரவழைக்க முடியும். அந்த நேரத்தை நாங்கள் திட்டவட்டமாக முன்னறிவிப்புச் செய்துவிடவேண்டும். குறிப்பிட்ட நேரத்துக்கு மேல் ஒரு விநாடிகூட அவை தங்க மாட்டா. தவிர, நீங்கள் எந்தச் சமயத்திலோ நடந்த விஷயங்களைப் பற்றிக் கேள்வி கேட்கிறீர்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள். அதையெல்லாம் சந்திப்பு நேரத்தில் நினைவுக்குக் கொண்டு வந்து பதிலளிப்பது என்பது அவற்றின் நேரத்தை வீண் அடிப்பதாகும். ஆகையால் நீங்கள் முன்னதாகவே கேள்விகளைத் தெரிவித்து விட்டீர்களானால், நாங்கள் அவற்றை அவைகளுக்கு அறிவித்து விடுவோம். அவை தயாராக வந்து 'டக் டக்'கென்று உங்கள் கேள்விகளுக்கு விடையளித்து விட்டுச் செல்லும்."

"ஆமாம்; நாங்கள் நேரடியாக அதன் குரலைக் கேட்க முடியாது என்றீர்களே? பின் அது தரும் விடை எங்களுக்கு எப்படித் தெரியும்?" என்றேன்.

"அதற்குத்தானே ஸார், நாங்கள் இருக்கிறோம். இன்னும் தெளிவாகச் சொல்லுகிறேனே. சந்திப்புக்கு நாம் நிர்ணயிக்கும் நாளில் நீங்கள் எங்கள் நிலையத்துக்கு வர வேண்டும். எப்பொழுதுமே ஆவிச் சந்திப்பு இரவில்தான் நிகழும். நிலையத்தில் இருக்கும் மேசையைச் சுற்றி, அன்றைய சந்திப்புக்கு வந்திருப்பவர்கள், ஒருவர் கையை ஒருவர் பிடித்துக் கொண்டு வட்டமாக அமர்ந்து கொள்ள வேண்டும்."

"கையைப் பிடித்துக் கொள்ளுவானேன்?"

"சந்திப்பு நிகழும்போது அறையிலுள்ள விளக்குகள் எல்லாம் அணைக்கப்பட்டுவிடும். கூட்டத்தில் இருளுக்குப் பயப்படுபவர்கள் இருக்கலாம். தவிர, ஆண்-பெண் எல்லாரும் கலந்து அமர்ந்திருப்பார்கள்; விஷமம், திருட்டு முதலியன அந்த இருட்டில் நடந்து கலாட்டா ஏற்பட்டு விடாதிருக்கத்தான்."

"சரி; பிறகு?"

"விளக்குகள் அணைக்கப்பட்ட சிறிது நேரத்துக்கெல்லாம் நாங்கள் அங்கே ஆவி உலகச் சூழ்நிலையை ஏற்படுத்துவோம். பிசாசுகள் கத்துவது போன்ற பயங்கரச் சத்தம் கேட்கும்; முரசு முழங்கும்; கொம்புகள் ஊதப்படும்; மணிகள் ஒலிக்கும்."

"இதெல்லாம் எதற்கு? ஏற்கனவே பயம் கொண்டவர்கள் இன்னும் பயமடையவா?"

"அவர்கள் பயந்தாலும் சரி; தைரியமாக இருந்தாலும் சரி; இந்தச் சூழ்நிலையை ஏற்படுத்தாவிட்டால் ஆவிகள் நிலையத்துக்கு வரமாட்டா."

"ம்......அப்புறம்?"

"நான் அங்கேயே மேசைக்கு அப்பால் நிற்பேன். ஒவ்வொருவராகப் பெயர் சொல்லி அழைத்துக் கேள்வி கேளுங்கள் என்பேன். அவர்கள் தங்கள் கேள்விகளை உரத்துக் கத்திக் கேட்க வேண்டும். உடனே ஆவி என்னிடம் அதற்குரிய பதிலைக் கூறும். நான் அதை அவர்களிடம் சொல்வேன்."

"ஆமாம்; முன்பே அறிவிக்கப்படாத கேள்வி ஒன்றை ஒருவர் கேட்டால்?...."

"ஆவி பதில் தராது. உடனே மறைந்து போய்விடும். பிறகு ஒருபோதும் அந்த நபருக்காக அது வரவே வராது."


அரசியலை விரும்புவோர் சிலரே . . .
ஆனால் எல்லோரும் விரும்புவது
Parry's பாரிஸ் மிட்டாய்களே
ஏனெனில் அவை ருசியுள்ளவை, ஆரோக்கியமானவை, சுத்தமானவை
தயாரிப்போர்: பாரிஸ் கம்பெனி லிமிடெட், மதராஸ்

மேலும் மலிவானது!

குடும்பம் முழுவதற்கும் ஒரே டால்க்



ப்ரோடெக்ஸ்

சர்வ பிரயோக டாய்லட் பவுடர்

ஜயன்ட் சைஸ் அழகிய
டப்புடன் கிடைக்கும்!

வழக்கமாக 2-நிமிஷம் பிரஷால் தேய்த்தால்

கால்கேட் டூத் பவுடர்

மூன்று நன்மைகளையும் அளிக்கிறது!

✓ வாயில் நறுமணம்!

✓ ஒளிவீசும் பற்கள்! ✓ சொத்தை குறையும்!

வாய்க்குப் பாதுகாப்பும், சுத்தமான ஒளிப் பற்களும் பெற, பல் டாக்டர் அங்கீகரிக்கும் இந்த முறையில் தினசரி கால்கேட் டூத் பவுடரை உபயோகியுங்கள்:

- ★ சாப்பிட்டவுடன் கால்கேட் டூத்பவுடரால் பற்களை 2 நிமிஷம் பிரஷ் கொண்டு தேய்க்கவும்.
- ★ பல்லின் நுனி, முன்புறம், பின்புறம் எல்லாவற்றையும் தேய்க்கவும்.
- ★ எப்போதும் ஈற்றிலிருந்து பல் நுனி நோக்கித் தேய்க்கவும்.



கைகண்ட முறையை இன்றே கையாளுங்கள்!

பல் டாக்டர் அங்கீகரித்த சிறந்த பலன்தரும் முறை!

பக்கீர் லீம் இல்லையெல்லாம் விளக்கியும் கூட எனக்கு என்னவோ இன்னும் இதில் நம்பிக்கையே ஏற்படவில்லை. ஆகையால், ''அது சரி; இத்தகைய தொடர்புகளால் என்ன பயன்?'' என்று கேட்டேன்.

''சரியாகப் போயிற்று; என்ன பயன் என்று கேட்கிறீர்கள்? இறந்தவர்களுடன் பேசுவதே ஒரு பரபரப்பூட்டும் புதுமை இல்லையா? தவிர, வேறு எத்தனையோ விதத்தில் இது உதவக் கூடும். தாங்கள் அறிந்திராத, ஆனால் அறிந்தாக வேண்டிய விஷயங்களைத் தெரிந்து கொள்ளலாம். ஓர் உதாரணம் சொல்லுகிறேன். கல்பா-தேவியில் வியாபாரம் செய்து கொண்டிருந்த மார்வாரி ஒருவர் திடீரென்று ஒருநாள் இறந்து விட்டார். இறப்பதற்குச் சில நாட்களுக்கு முன் அவர் தமது மகன் முன்பாக வேறொரு மார்வாரிக்குப் பற்றுச் சீட்டுக்கூட இல்லாமல் கைமாற்றாக ஆயிரம் ரூபாய் கொடுத்திருந்தார். தந்தை இறந்த பிறகு மகன் அந்த மார்வாரியிடம் பணத்தைக் கேட்டபோது, அவர் உன் அப்பாவிடம் கொடுத்து விட்டேன் என்றார். அவர் கொடுத்தார் கொடுக்கவில்லை என்பதை அவன் நிச்சயப்படுத்திக் கொள்ளுவது எப்படி? என் நிலையத்தைப் பற்றிக் கேள்விப்பட்டு அங்கே வந்தான். அவன் தந்தையின் ஆவியுடன் தொடர்பு ஏற்படுத்திக் கொண்டு விசாரித்தேன். மார்வாரி பணம் கொடுத்து விட்டதாக அறிவித்தது தந்தையின் ஆவி. பையன் பூரணத் திருப்தியுடன் திரும்பிச் சென்றான். இதுமட்டுமில்லை; ஆவி வெறும் கேள்விகளுக்குப் பதில் சொல்வது மட்டுமின்றிச் சில சமயம் தன்னைச் சார்ந்தவர்களுக்குப் பண உதவி கூடச் செய்யும்.''

''பண உதவியா?''

''ஆமாம் ஸார், ஆமாம். ஆவிகள் நினைத்த மாத்திரத்தில் எவ்வளவு பணம் வேண்டுமானாலும் தர முடியும். ஆனால் பண உதவி கோருவதற்கு அவர்கள் காட்டும் காரணம் ஆவி ஒப்புக்கொள்ளக் கூடியதாக இருக்க வேண்டும். பொய் சொல்லி உதவி கோரினால் அது பதில்கூடச் சொல்லாது மறைந்து விடும். அப்படி எத்தனையோ பேர்கள் செய்து ஏமாந்திருக்கிறார்கள்.''

''ஆனால், இதுவரையில் யாருக்காவது பணம் வரவழைத்துக் கொடுத்திருக்கிறீர்களா?''

''என் நிலையத்தில் இரண்டே இரண்டு பேருக்குத்தான் பணம் கிடைத்திருக்கிறது. அதுவும் மிகச் சிறிய தொகை. ஒன்று: ஒருவன் மற்றொருவனிடம் ஐந்நூறு ரூபாய் கடன் வாங்கி விட்டுத் திருப்பிக் கொடுக்காமலே செத்துப் போனான். கடன் கொடுத்தவன் இப்போது அதைத் திருப்பித் தருமாறு ஆவியைக் கேட்டான். உடனே கொடுத்து விட்டது. இன்னொரு கேஸ், ஓர் அநாதைப் பையன், படிப்புக்காக ஆயிரம் ரூபாய் வேண்டுமென்று தன் தந்தையின் ஆவியைக் கேட்டான். அதுவும் உடனே கிடைத்து விட்டது.''

ஆவித் தொடர்பின் மூலம் பணம்கூடப் பெறலாம் என்பதை அறிந்தபோது, 'ஆவித் தொடர்பு புரட்டு' என்ற எண்ணம் என்னிடமிருந்து கரையத் தொடங்கி விட்டது. ஆமாம்; பின் என்ன? ஆவியின் வரலாறுகளைத் தெரிந்துகொண்டு விடுகிறார்; கேட்கப் போகும் கேள்விகளையும் முன்னதாகவே அறிந்துகொண்டு விடுகிறார். எனவே, பதில் வேண்டுமானாலும் ஜோடித்துச் சொல்லி விடுகிறார் என்று நினைக்கலாம். ஆனால் பணம் வரவழைத்துக் கொடுப்பதென்றால், அதைக் கூட அவர் கையிலிருந்து போட்டுக் கொடுப்பார் என்று நினைக்க முடியுமா? இவர்கள் கொடுக்கப் போகும் ஐந்து-பத்துக்கு எந்த முட்டாள்தான் ஐந்நூறு, ஆயிரம் என்று கைவிட்டுக் கொடுப்பான்? ஆகையால் இதில் ஓரளவு உண்மை இருக்கத்தான் வேண்டும் என்று தோன்ற ஆரம்பித்தது எனக்கு.

• • •

ஆவி உலகத் தொடர்பில் நம்பிக்கை பிறந்த மறுநாளே அதைப் பரீட்சை செய்து பார்க்கும் சந்தர்ப்பம் ஒன்றும் தற்செயலாக வாய்த்தது. நான் வசித்த கட்டடத்தில் மற்றொரு 'பிளாக்'கில் பாமா என்றோர் அம்மாளும், பாஸ்கரன் என்ற அவள் மகனும் வசித்து



வந்தனர். அந்த அம்மாள் விதவை. அவளுடைய கதை மிகவும் சோககரமானது. அவளுடைய கணவன் பரசுராமன் என்பவர் இருபது வருஷங்களுக்கு முன் இதே பம்பாயில் ஒரு கம்பெனியில் பெரிய பதவியில் இருந்தாராம். யாருடைய கெட்ட காலமோ, திடீரென்று அவர் சூதாட்டத்தில் கலந்து, ஏராளமான பணத்தைத் தொலைத்துக் கடனாளியாகி விட்டார். கடன் தொந்தரவு காரணமாகக் கம்பெனியிலிருந்து அவரைப் போகச் சொல்லி விட்டனர். வேறு வழியின்றி அவர் ராணுவத்தில் சேர்ந்து மேஜராகப் பர்மா போர்முனைக்குப் போனார். போய் ஒரு மாதம் ஆனபிறகு பாமா அம்மாளுக்கு யுத்த இலாகாவிலிருந்து ஓர் அநுதாபக் கடிதமும், பரசுராமனின் சம்பளமும் வந்தனவாம். பர்மாவில் ராணுவ சேவையில் ஈடுபட்டிருந்தபோது, அவர் விமான விபத்து ஒன்றில் உயிர் இழந்ததாக யுத்த இலாகாக் கடிதம் அறிவித்தது. பாவம், அந்த அம்மாள் மேலும் ஓர் ஆறு மாதங்கள் பம்பாயில் தங்கி, எவ்வளவோ கஷ்டப்பட்டுத் தனது கணவ

வின் ஒரே இன்ஷுரன்ஸ் பாலிசிக்குரிய பணமாகிய ஐயாயிரம் ரூபாயை வாங்கிக் கொண்டு, மகனுடன் ஊர் போய்ச் சேர்ந்தாள்.

அதன் பிறகு இரண்டு வருஷங்களுக்கு முன் அவள் தனது இருபத்து மூன்று வயது மகன் பாஸ்கரனுடன் மீண்டும் பம்பாய்க்குவந்தாள். அவளுடைய கணவரின் தூரத்து உறவினர் ஒருவர் எங்கள் கட்டடத்தில் வசித்துவந்தார். அவர் அவளுக்கும் பாஸ்கரனுக்கும் தமது வீட்டிலே தங்க இடம் கொடுத்து, பாஸ்கரனுக்கு ஒரு கம்பெனியில் காஷியரின் அஸிஸ்டெண்டாக வேலையும் வாங்கிக் கொடுத்தார்.

பாஸ்கரன் நல்ல பையன். சுறுசுறுப்பு உடையவன். விசுவாசத்துடன் உழைக்கக் கூடியவன். கம்பெனியின் மானேஜர், மானேஜிங் டைரக்டர் எல்லாருக்கும் அவனை மிகவும் பிடித்து விட்டது. ஆகையால் வேலையில் சேர்ந்த மறு வருஷத்தில் பிரதம காஷியர் திடீரென்று மாரடைப்பால் இறந்துபோன போது அவன் அந்தப் பதவிக்கு உயர்த்தப் பட்டான். அது மட்டுமா? பம்பாயில் இடக் கஷ்டம் என்றும் தீராப் பிரச்னையாக இருக்கும் இந்நாளில், பாஸ்கரனின் உறவினர் வேலை மாற்றலாகி, நாகபுரிக்குப் போய் விடவே, அவனுக்கு எங்கள் கட்டடத்திலுள்ள அவர் 'பிளாக்'கும் கிடைத்தது. 'பயல் அதிர்ஷ்டசாலி'தான் என்று நானும் என் மனைவியும் பேசிக் கொள்ளுவோம்.

எங்கள் கட்டடத்துக்கு வந்த நாளிலிருந்து பாமாவும் என் மனைவியும் பெரிய 'தோஸ்த்' ஆகி விட்டனர். அந்த அம்மாள், ''அண்ணா! அண்ணா!'' என்று என்னிடமும் ஒரு சகோதரியைப் போல் பழகுவாள்.

பஸீர் வில் என் வீட்டுக்கு வந்துபோன அன்று இரவு ஏழு மணி இருக்கும்; பாமாவும் பாஸ்கரனும் கவலையுடனும் கலக்கத்துடனும் என்னிடம் வந்தனர். அழுது அழுது அவர்கள் முகம் வீங்கிப் போயிருந்தது. விஷயத்தை விசாரித்தபோது நான் அதிர்ந்து போனேன். விதியின் விளையாட்டை என்னவென்று சொல்லுவது!

பாஸ்கரனின் ஆபீஸ் மானேஜர் ஒரு பார்ஸிக்காரர். அவர் ஒருவருக்குத்தான் கம்பெனியின் சார்பில் பண வரவு - செலவு செய்ய அதிகாரம் வழங்கப் பட்டிருந்தது.

ஒரு மாதத்துக்கு முன்பு மானேஜருக்கு ஏதோ பணமுடை ஏற்பட்டிருக்கிறது. ஆபீஸ் பணத்திலிருந்து பத்தாயிரம் ரூபாய் தருமாறும், அதைக் கையிருப்பில் இருப்பதாகவே காட்டி வருமாறும், இன்னும் சில தினங்களில் தமக்கு வரவேண்டிய பணம் வந்ததும் இப் பத்தாயிரத்தைப் போட்டு விடுவோமென்றும் அவர் பாஸ்கரனிடம் கூறியிருக்கிறார். அவன், பாவம், என்ன செய்வான்? பணம் கொடுக்கா விட்டால் மானேஜரின் கோபத்துக்கு ஆளாக நேரிடும். கொடுப்பதோ கம்பெனியின் சட்ட திட்டத்துக்கு விரோதம். மானேஜர் ஆனாலும் சரி, மானேஜிங் டைரக்டர் ஆனாலும் சரி, 'வவுச்சர்' இல்லாமல் பணம் கொடுத்தால், அப்பணத்துக்கு அவன்தான் ஜவாப்தாரியாக வேண்டும். இருந்தாலும் வேறு வழியின்றி அவன் பணத்தைக் கொடுத்து விட்டான்.

ஆனால் சில நாட்கள் என்று கூறிய மானேஜரிடமிருந்து ஒரு மாதமாகியும் பணம் வரவில்லை. இடையே ஆபீஸ் கணக்குப் பரிசோதனை வேறு ஆரம்பமாகி விட்டது. ஆடிட்டர் அன்று ஆபீஸ் ரொக்கத்தைச் சரி பார்க்க வந்தபோது விஷயம் வெளியாகி விட்டது. மானேஜிங் டைரக்டருக்கு உடனே விவரம் அறிவிக்கப்பட்டது. மானேஜர் தாம் பணம் வாங்கியதை ஒப்புக் கொண்டார். ஆனால் திருப்பித்தர அப்பொழுது அவரிடம் பணம் இல்லை. ஆகையால் பாஸ்கரன்தான் உடனே பணத்தைக் கட்ட வேண்டும்; இல்லாவிட்டால் ஜெயிலுக்குப் போக வேண்டும் என்ற நிலை ஏற்பட்டது. மானேஜிங் டைரக்டர் அவனிடம் பிரியம் உடையவராதலால், ஒரு வாரம் அவகாசம் கொடுத்து, அதற்குள் பணத்தைக் கொண்டு வந்து கட்டி விட்டால், அவனைத் தொடர்ந்து வேலையில் வைத்துக் கொள்ளுவதாகவும், போலீஸ் நடவடிக்கை எடுப்பதில்லை யென்றும் கூறி வீட்டுக்கு அனுப்பியிருந்தார். மானேஜர் ஒரு வாரத்துக்குள் தமது பணம் வராதென்று கையை விரித்து விட்டார். ஆகையால் இப்பொழுது பாஸ்கரன் பாடுதான் திண்டாட்டமாகப் போய்விட்டது. இதுதான் நடந்த விஷயம்.

''பாவிப் பிள்ளை இப்படிச் செய்து விட்டதே! வேலையும் போய், இவன் ஜெயிலுக்கும் போக நேர்ந்து விட்டால் நான் யாரை நம்பி வாழ்வேன்!'' என்று பயமாகக் கதறி அழுதாள் பாமா.

ஆனால் நான் என்ன செய்ய முடியும்? நூறு-இருநூறு கொடுத்து உதவலாம்? தலை கீழாக நின்றாலும் என்னால் பத்தாயிரம் ரூபாயைப் புரட்டிக் கொடுக்க முடியாதே! நாகபுரியிலிருக்கும் அவளுடைய உறவினருக்குத் தந்தி கொடுக்கலாமென்றால் அவர் நிலையும் இதுவே தான். அவர் பெரிய குடும்பஸ்தர். வாங்குகிற சம்பளம் அவர் குடும்பச் செலவுக்கே பற்றுவதில்லை. என்ன செய்வது? எப்படி இந்தப் பாவப்பட்ட குடும்பத்துக்கு உதவுவது என்று சிந்தித்தபோது எனக்குச் சட்டென்று பஸீர் வில்லின் ஆவி உலகத் தொடர்பு நிலையத்தின் நினைவு வந்தது. ஆம்! அது ஒன்றுதான் நம்மால் செய்ய முடியும். பரசுராமனின் ஆவியை வரவழைக்கச் செய்வோம். பணம் கேட்போம். சரியான காரணத்துடன்தான் பணம் கேட்கிறோம். அவளுடைய மகனின் வருங்காலமே இந்தப் பணம் கிடைப்பதைப் பொறுத்துத்தான் இருக்கிறது. பெரும்பாலும் கிடைக்கலாம்.

இவ்வாறு முடிவு கட்டிய நான் மறுநாள் பாஸ்கரனை அழைத்துக் கொண்டு பஸீர் வில்லின் ஆவி உலக நிலையத்துக்குச் சென்றேன். அவரிடம் பாஸ்கரன் யார் என்பதை விளக்கி, அவன் மாட்டிக் கொண்டிருக்கும் இக்கட்டையும் விளக்கியபோது அவர் மிகவும் மனம் வருந்தினார். அவன் தந்தை பரசுராமனின் ஆவிக்கு அவசர அழைப்பு அனுப்பி மறுநாள் இரவே வரவழைப்பதாக வாக்களித்தார். ''ஆனால் பணம் கிட்டுமா, கிட்டாதா என்பதை நான் கூற முடியாது. பெரும்பாலும் கிடைக்கலாம். எதற்கும் முயன்று பார்ப்போம்'' என்றார்.

மறுநாள் இரவு நானும் பாஸ்கரனும் மீண்டும் அவர் நிலையத்துக்குச் சென்றோம்.

நிகழ்ச்சிகளெல்லாம் முன்பு பல்பீர் ஸிங் என்னிடம் விவரித்ததுபோலவே நடந்தன. அன்று முதலாவதாகப் பரசுராமனின் ஆவியைத் தான் அவர் வரவழைத்தார். பாஸ்கரன் பணம் கேட்டான். 'இனிமேல் இம்மாதிரி முறை தவறிய காரியங்களில் ஈடுபடுவதில்லை என்று வாக்களித்தால் பணம் தருகிறேன்' என்று ஆவி சொல்லுவதாக அறிவித்தார் பல்பீர்ஸிங். பாஸ்கரன் அவ்வாறே வாக்குறுதி அளித்தான். மறு நிமிஷம் பல்பீர்ஸிங் ''பணம் வந்து விட்டது, பாஸ்கரன்! பத்தாயிரத்துக்கு ஓர் ஆயிரம் அதிகமாகத் தந்திருப்பதாக உன் தந்தை அறிவிக்கிறார். அந்த ஆயிரத்தை நீ செலவுக்கு வைத்துக் கொள்ளலாம். பணம் என்னிடம் இருக்கிறது. நிகழ்ச்சி முடிந்து விளக்கும் போட்டதும் தருகிறேன்'' என்று கூறினார்.

பணத்தை வாங்கி வந்தோம்; பாஸ்கரனின் வேலை பிழைத்தது என்பதை விவரித்துச் சொல்லவும் வேண்டுமா?

சினிமாவாகக் கண்ட இந்தச் சம்பவத்துக்குப் பிறகு ஆவி உலகத் தொடர்பில் எனக்கு அசைக்க முடியாத நம்பிக்கை ஏற்பட்டு விட்டது. அதை அடிப்படையாகக் கொண்டு, தொடர்ந்து சில கதைகள் எழுதி, நம் மக்களுக்கு அதில் நம்பிக்கை பிறக்கச் செய்ய வேண்டும் என்று கூடத் திட்டமிட்டு விட்டேன். ஆனால்—

இரண்டு நாட்களுக்குப் பிறகு காலை ஒன்பது மணி இருக்கும்; ஆபீசுக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தேன். பாமா வந்து, ஒரு பத்து ரூபாய் நோட்டைக் கொடுத்து, ''இந்த நோட்டை யாரும் வாங்கிக் கொள்ள மாட்டேன் என்கிறார்கள். ஸ்டேட்பாங்கில் கொடுத்து வேறு நோட்டு மாற்றித் தருகிறீர்களா?'' என்று கேட்டாள்.

அவள் கொடுத்த நோட்டு செல்லுபடியாகும் நோட்டுத்தான். ஆனால் பல இடங்களில் கிழிந்து ஒட்டுப் போடப்பட்டிருந்தது. அதில் ஏதோ ஒரு பாங்கின் முத்திரையும், அந்த பாங்கு அக்கவுண்டென்டின் கையெழுத்துங்கூட இருந்தன. இருந்தாலும் அது மிகவும் சிதைந்து போயிருந்ததால் யாரும் வாங்கிக்கொள்ள மாட்டார்கள். ''இதை யாரிடமிருந்து வாங்கினீர்கள்? பார்த்து வாங்க வேண்டாமா? குருடன்கூட இவ்வளவு மோசமான நோட்டை வாங்கிக்கொள்ள மாட்டானே!'' என்று கடிந்து கொண்டேன்.

''நான் வாங்கினால் பார்த்து வாங்காமல் இருப்பேனா, அண்ணா? இது அன்று உங்கள் ஆவி உலக நிபுணர், பாஸ்கரனின் அப்பாவிடமிருந்து வாங்கித் தந்த நோட்டுக் கத்தையில் இருந்தது. ஆவி உலகத்திலேகூட மோசமான நோட்டுகள் நடமாடுகின்றன போலும்'' என்றாள் பாமா ஒரு சோகச் சிரிப்புடன்.

''சரி! நான் ஸ்டேட் பாங்குக்குப் போய் மாற்றி வருகிறேன்'' என்று கூறி, நோட்டை வாங்கி வைத்துக் கொண்டேன்.

ஆபீசுக்குப் போகும் வழியில் எனக்கு ஓர் ஆலோசனை தோன்றியது. ஸ்டேட் பாங்குக்கு நாம் அலைவானேன்? ராமசாமியிடம் கொடுத்து விடலாம். அவன் பாங்கிலிருந்து தினசரி யாராவது ஸ்டேட் பாங்குக்குப் போகத்



மனைவி: நான் உங்கம்மா பேசறதே என்னுடையைப் பத்திச் சொன்னதும் இரண்டு பக்கமும் கேட்ட பிறகுதான் முடிவு சொல்ல வேணும் என்று சொல்லுகிறீங்களே!

கணவர்: அடடா! நான் சேவாயோன் சிக்கரிடம் பத்திரிகையைச் சொல்லிக் கொண்டிருக்கிறேன்!

தானே போவார்கள். அவர்களிடம் கொடுத்து மாற்றி வரச் செய்வான் என்று எண்ணிய நான் அவன் பாங்குக்குப் போய் விஷயத்தைச் சொல்லி நோட்டைக் கொடுத்தேன்.

அவன் அவசரமாக அதைப் பிரித்துப் பார்த்துவிட்டு, ''அட பாவி! நான் படாத பாடுபட்டு இதை ஒரு வழியாகத் தள்ளி விட்டேன். நீ மறுபடியும் என் தலையிலேயே கட்டி விட்டாயேடா'' என்றான்.

''என்னடா! ஆவி உலகத்தில் இருப்பவர்கள் கூட உங்கள் பாங்கில் கணக்கு வைத்துக் கொண்டிருக்கிறார்களா?'' என்று கேட்டேன்.

''ஆவி உலகத்தில் இருப்பவர்கள் இல்லை; ஆவி உலகத்தோடு தொடர்பு ஏற்படுத்தி வைப்பவர்கள்தான். உன் நண்பர் பல்பீர் ஸிங் நாலைந்து நாட்களுக்கு முன் பதினோராயிரம் ரூபாய் பாங்கிலிருந்து எடுத்துக் கொண்டு போனார். இது ஸ்டேட் பாங்குக்குப் போய், நம்பர் அழிந்திருக்கிறது என்று நிராகரிக்கப்பட்ட நோட்டு. எப்படியோ என்னிடம் வந்துவிட்டது. யார் தலையிலாவது வைத்துக் கட்டாவிட்டால் என் கைப்பொறுப்பு ஆகிவிடும். ஆகையால் உன் நண்பருக்குக் கொடுத்த நோட்டுக்கட்டுகளிடையே இதையும் வைத்து எண்ணிக் கொடுத்தேன்!''

என் மனம் எங்கோ அதல பாதாளத்தில் விழுந்து நொறுங்கியது. இதைக் கேட்டதும், 'என்ன? பதினோராயிரம் ரூபாயைக் கையிலிருந்து கொடுத்தா, பரசுராமனின் ஆவி கொடுத்ததாகப் பித்தலாட்டம் செய்து விட்டார் பல்பீர் ஸிங்? இருக்கட்டும், சொல்கிறேன்!' என்று கறுவிக்கொண்டே அவர் வீட்டுக்குச் சென்றேன்.

ஆனால் அவர் வீட்டுக்குச் சென்று அவரைச் சந்தித்தபொழுது சொன்னது இதுதான்: ''நீங்கள் எந்த எண்ணத்தோடு இந்தப் பணத்தைக் கொடுத்திருந்தாலும் சரி, அது அந்தப் பாவப்பட்ட பையனுக்கு உயிர் கொடுத்தது. ஆகையால் அவன் சார்பில் நன்றி செலுத்துகிறேன்'' என்றேன்.

பல்பீர் ஸிங்கின் முகம் விகாரமடைந்தது. அதை மறைக்க முயன்று கொண்டே, "இல்லை, சார்! அவன் தந்தையின் ஆவி கொடுத்தது தான் அந்தப் பணம்" என்றார்.

"விஷயம் எல்லாம் வெட்ட வெளிச்சமாகி விட்ட பிறகு இன்னும் ஏன் பொய் சொல்லுகிறீர்கள் மிஸ்டர் பல்பீர் ஸிங்? பயப்படாதீர்கள்! நான் உங்கள் குட்டை உடைத்து விட மாட்டேன்" என்றேன்.

"என்னை நம்புங்கள், சார்! அது அவன் தந்தை கொடுத்த பணந்தான்." நான் காண, முதல் தடவையாக அவர் தமது கறுப்புக் கண்ணாடியைக் கழற்றி விட்டுக் கண்களில் வழிந்த நீரைத் துடைத்துக் கொண்டார்.

நான் திடுக்கிட்டேன். "அப்படியானால் மிஸ்டர் பல்பீர் ஸிங், நீங்கள்...."

"ஆமாம்; நான்தான் அவன் தந்தை பரசுராமன்."

"ஐயோ! அப்படியானால் எதற்கு மனைவி-மக்கள் முன்னே இப்படிச் சீக்கியராக வேஷம் போட்டுக் கொண்டு வசிக்கிறீர்கள்?"

"அது விதி செய்த சதி சார்! விவரமாகச் சொல்கிறேன், கேளுங்கள். ஆங்கிலப் படையினரால் நானும் இன்னும் சிலரும் எதிரி முற்றுகையிட்டிருந்த ஓர் இடத்தில் குண்டு வீசுவதற்காக வெடிகுண்டு விமானத்தில் அனுப்பப்பட்டோம். ஆனால் எதிரியின் பீரங்கிகள் எங்கள் விமானத்தைச் சுட்டு வீழ்த்தி விட்டன. விபத்தில் நான் உயிர் இழக்கவில்லை. இப்படியானும் உரு மாறிக் காலையும் இழந்ததோடு பிழைத்துக் கொண்டேன். ஆனால் ஜப்பானியர் என்னைக் கைது செய்து போர்க் கைதிகள் முகாமுக்கு அனுப்பி விட்டனர். யுத்தம் முடிந்த பிறகுதான் எனக்கு விடுதலை கிடைத்தது. மனைவியையும் மகனையும் காணப் பம்பாய்க்கு விரைந்து வந்தேன். ஆனால் அவர்களைக் காண முடியாதபடி செய்து விட்டது விதி. நான் வசித்து வந்த வீட்டுக்கு வந்து என் மனைவியின் பெயரைச் சொல்லி விசாரித்தபோது, யுத்தத்தில் நான் இறந்து விட்டதால், எனது இன்ஷூர் பணத்தை வாங்கிக் கொண்டு அவள் குழந்தையுடன் ஊர் சென்று விட்டதாக அறிந்தேன். அந்தப் பணத்தைக் கொண்டுதான், பாவம், அவளும் குழந்தையும் கஷ்ட வாழ்வு வாழ்ந்து கொண்டிருக்க வேண்டும். இந்நிலையில் நான் உயிரோடு இருப்பதாகக் காட்டிக் கொண்டால், இன்ஷூர் கம்பெனிக்கு அந்தப் பணத்தைத் திருப்பிக் கொடுக்க வேண்டியும், பொய்யாகக் 'கிளெய்ம்' போட்டுப்பணத்தை வாங்கியதாக என் மனைவியின்மீது வழக்கும் தொடரப்படலாம். ஆகையால், 'அவர்களுடன் வாழ நாம் கொடுத்து வைக்கவில்லை; வேறு எங்கேயாவது சென்று மாறுபெயரில் வாழ்ந்து பிழைத்துக் கொள்ளுவோம்' என்று எண்ணிப் பஞ்சாபுக்குச் சென்றுவிட்டேன். அங்கே ஒரு வருடம் இந்தொழிலைக் கற்று இங்கே வந்து பிழைத்துக் கொண்டிருந்தேன். என்றாவது ஒரு நாள் யார் மூலமாவது என் மனைவி அல்லது மகனின் இருப்பிடம் தெரியும். அப்பொழுது நான் சம்பாதித்திருப்பதை யெல்லாம் ஊர் பெயர் கொடுக்காமல் அவர்களுக்கு அனுப்பி விட்டுத் தேசாந்திரம் போய் விட வேண்டும் என்று நிச்சயித்திருந்தேன். அந்த உதவியை நீங்கள் எனக்குச் செய்தீர்கள். அதோடு என் மகனைக் கண்ணுறக் காணவும், அவனை ஓர் அவக்கேட்டிலிருந்து மீட்கும் பாக்கியத்தைப் பெறவும் வகை செய்து தந்தீர்கள்.

"சார்! இன்று நீங்கள் இங்கே வந்திரா விட்டால், நானே நானே உங்களைத் தேடி வந்திருப்பேன். என் மகனுக்குத் தாய் மாமன் ஸ்தானத்திலிருந்து சிறை செல்ல இருந்த அவனைக் காப்பாற்றப் பெருமுயற்சி செய்த உங்களிடம் மட்டும் என்னை யாரென்று காட்டிக் கொண்டுவிட வேண்டும், அதை என் மனைவிக்கோ மகனுக்கோ அறிவிப்பதில்லை என்று வாக்குறுதி பெற்றுக்கொண்டு உங்களிடமே என் பணத்தையெல்லாம் ஒப்படைத்து, அவன் தந்தையின் ஆவி தந்ததாகக் கூறி விடச் செய்ய வேண்டுமென்று இதோ, பாங்கிலிருக்கும் என் பணம் முழுவதற்கும் செக்குக்கூட எழுதித் தயாராக வைத்துக் கொண்டிருக்கிறேன்......" பல்பீர்ஸிங் தம்முடைய பையிலிருந்து ஒரு செக்கை எடுத்துக் காட்டினார்.

என் மனம் எங்கோ லயித்திருந்தது. ஆம்; இவரை இந்த இக்கட்டிலிருந்து மீட்டுக் குடும்பத்துடன் சேர்த்து வைக்க வழி ஏதேனும் இருக்கிறதா என்று அது ஆராய்ந்து கொண்டிருந்தது. அதற்கு ஒரே ஒரு வழிதான் இருந்தது. அதாவது, எந்த இன்ஷூரன்ஸ் கம்பெனியிலிருந்து பாமா பணம் பெற்றுக் கொண்டாளோ, அந்தக் கம்பெனியாரிடம் சென்று விஷயத்தை யெல்லாம் விவரித்து அவர்கள் பணத்தைத் திருப்பிக் கொடுத்து விடுவது. பாமா, யுத்த இலாகாவின் அறிவிப்பின் காரணமாகத்தானே கணவன் இறந்து விட்டதாகக் கருதிக் 'கிளெய்ம்' போட்டுப் பணம் பெற்றாள்? ஆகையால் அது எப்படி அவள் குற்றமாகும்? இந்த முடிவுடன் நான், "மிஸ்டர் பல்பீர் ஸிங்....இல்லை, மிஸ்டர் பரசுராமன்..." என்று ஆரம்பித்தேன். அவர் என்னை இடைமறித்து, "நான் இனி பல்பீர் ஸிங்கும் அல்ல; பரசுராமனும் அல்ல; பரசுராமனின் ஆவி" என்று திருத்தினார்.

"எப்படி வேண்டுமானாலும் இருக்கட்டும். நீங்கள் எந்தக் கம்பெனியில் இன்ஷூர் செய்திருந்தீர்கள்?"

"விக்னேசுவரா லைப் இன்ஷூரன்ஸ் கம்பெனியில்."

"அப்படியானால் நீங்கள் பரசுராமனின் ஆவி அல்ல; பரசுராமனேதான்."

"என்ன? எப்படி?"

"ஏன் ஸார், நீங்கள் ஆவி உலக ஆராய்ச்சியில் இறங்கி, அந்த உலகத்துக்கே போய் விட்டீர்களா? இந்த உலகத்தில் வசிப்பவராகவே தெரியவில்லையே! விக்னேசுவரா இன்ஷூரன்ஸ் கம்பெனி திவால் ஆகி நாலு வருஷங்கள் ஆகின்றன, சார்! போங்கள்; அந்த ஐயாயிரம் ரூபாய்கூட உங்களுக்கு லாபந்தான்!" என்றேன் நான்.

நீங்கள் நம்பினாலும் நம்புங்கள்; நம்பாவிட்டால் போங்கள். இப்பொழுது பரசுராமனின் 'ஆவி' பம்பாயில் ஒரு கம்பெனியில் உதவி மானேஜராகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறது!



NEWS OF THE INDUSTRY

இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அழகு சாதனங்கள் இப்பொழுது மேல் நாடுகளில் வெகுவாகப் பாராட்டப்படுகின்றன.

இங்லாந்திலிருந்து பிரசுரிக்கப்படும் "சோப்ஸ், பெர்ஃயூமரிஸ் & காஸ்மேடிக்ஸ்" என்ற பத்திரிகையில் எங்கள் தயாரிப்பான "ஸாண்டால்" "ஸாண்டல்வுட்" முகப் பவுடர்களை வெகுவாகப் புகழ்ந்து எழுதியதை அப்படியே இங்கு பிரசுரிப்பதில் பெருமிதமடைகிறோம்.

மேல்நாட்டு பெண்மணிகள் எங்கள் தயாரிப்புகளின் அபூர்வ குணங்களை மிகவும் பாராட்டுகிறார்கள்.

தரத்தையே பெரிதாகக் கருதுவோர்கள்

டி. எஸ். ஆர்.

தயாரிப்புகளையே உபயோகிக்கிறார்கள்

T.S.R. of Kumbakonam

Last year we had the pleasure of returning trial samples of their sandalwood Face Powder from T.S.R. & Company, manufacturing perfumers, of Post Box 24, Kumbakonam, South India. As a result of our comments, the trial formula has been slightly revised. The sandalwood used in this powder is now effectively micronised, at which fine particle size it becomes smooth, adherent and very pleasant to touch.

We illustrate below T.S.R. & Company's new Face Powder and Talcum Powder, both based on this finely divided sandalwood. The perfuming of the products has been ably accomplished, with the result that the sandalwood-rose odour is well rounded and very persistent. Further details may be had direct from the makers.

Packaging for Men

A new luxury range of men's toilet preparations was introduced in July by Cyclax of London, under the style o



ஒரே ஒரு நிமிஷம்

"டிக் டிக்"

எனக்குச் சங்கீதத்தைப் பற்றி அதிகமாகத் தெரியாது. ஆனால் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற ஆர்வம் உண்டு. எனது நண்பன் சிவராமன் பிடில் வாசிப்பான். இரண்டொரு ஜூனியர் கச்சேரிகளில் அவனுக்கு 'சான்ஸ்' கிடைத்திருக்கிறது. தேங்காய் மூடிக் கச்சேரிகள் ஏராளம். குமார் கல்யாணங்களில் அவனுக்குத்தான் முதல் அழைப்பு பக்கவாத்தியம் வாசிக்க.

ஒரு நாள் மாலே என்னைத் தேடிக் கொண்டு வீட்டுக்கு வந்தான் சிவராமன். வழக்கம் போல் அவனை வரவேற்று உபசரித்தேன். ஒரு பத்து ரூபாய் கைமாற்ருக வேண்டும் என்று கேட்டான். உடனே பர்ஸைத் திறந்து கொடுத்தேன். என் மதிப்புக்கும் ஏன், மரியாதைக்குமே உரிய நண்பனுக்கு இதைக்கூடவா நான் செய்யக் கூடாது? உள்ளேயிருந்து என் மனைவி ஏதோ சபிப்பது இலேசாகக் கேட்டது. நான் பொருட்படுத்தவில்லே. என்னுடைய நண்பனின் திறமையும் சாமர்த்தியமும் அவளுக்கு என்ன தெரியும்?

" உட்காரு சிவராமா ! போகலாம், என்ன அவசரம்?" என்று சொல்லிவிட்டுச் சங்கீதத்தைப் பற்றியும் சங்கீத வித்வான்களைப் பற்றியும் அறிந்து கொள்ள வேண்டும் என்ற என் ஆவலைப் பூர்த்தி செய்து கொள்வதற்கு முற்பட்டேன்.

" சிவராமா ! செம்பொன்னூர் கோயில் சிவப்பிரகாசம் என்று ஒரு நாதஸ்வர வித்வான் இருந்தாராமே?" என்றுகேட்டேன்.

" ஆமாண்டா ஆமாம் ! எனக்கு நன்ருகத் தெரியும். ஏதோ இருக்கும் அவ்வளவுதான் " என்று கூறினன்.

" ஓகோ !" என்றேன் நான். நான் கேள்விப்பட்டதற்கும் அவன் சொல்வதற்கும் சம்பந்தமே யில்லேயே என்று யோசித்தேன்.

" அது, சரி! குலமங்கலம் குமரேசன் என்பவர் இப்பொதெல்லாம் கொஞ்சம் பிரசித்தமாக இருக்கிருரே ? அவர் பாட்டை நீ கேட்டிருக்கிருயா ?" என்றேன்.

" பேஷாகக் கேட்டிருக்கிறேன். கீர்த்தனேகளெல்லாம் பாடுவான். ஆனால் அவனுக்கு ராக ஞானம் பூஜ்யம் !" என்ருன்.

எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. எவ்வளவு அழுத்தம் திருத்தமாகச் சொல்கிருன். என்ன இருந்தாலும் நம்முடைய சிவராமனுக்கு இணை உண்டோ! எவ்வளவு தைரியம்? அவனிடம் எனக்கு இருந்து வந்த மதிப்பு அதிகரித்தது.

" நான் போய் வருகிறேன் " என்று கூறிக் கிளம்பினன் அவன்.

" கொஞ்சம் இரு, சிவராமா! காப்பி சாப்பிட்டு விட்டுப் போகலாம் " என்று சொல்லி விட்டு உள்ளே யிருந்த என் சகதர்மிணியைக் கூப்பிட்டுச் சொன்னேன்.

அவள் முணுமுணுத்துக் கொண்டே; 'லொட்' டென்று டம்ளரை வைத்து விட்டுப் போனுள். எனக்குக் கோபம் கோபமாக வந்தது. சிவராமன் எப்படிப்பட்டவன்? எவ்வளவு திறமை? என்ன ஞானம்? அவன் மதிப்பை உணராமல் இப்படி அலட்சியம் செய்கிருளே இவள்?

சிவராமன் காப்பியை உறிஞ்சினுன்.

"சிவராமா! கோட்டுவாத்தியம் கோதண்டராமனுக்கு இன்று ரேடியோவிலே கச்சேரி " என்று கூறினேன்.

" இதோ, பார்! நான் சொல்றேன்னு கோவிச்சுக்கக்கூடாது! சுருதி சுத்தம் இல்லாத பயல்கள் கச்சேரி செய்ய எதற்கு வரவேண்டும்? மைக்குக்கு முன்னுல் உட்கார்ந்துண்டு சுருதியை வீட்டிலே வெச்சுட்டு வந்துட்டேன்னு சொல்லவா ? தலேயிலே எழுத்து !" என்று வலி எடுக்காமல் முன் நெற்றியில் ஒரு முறை தட்டிக் கொண்டான் சிவராமன்.



சிவராமனிடம் எனக்குப் பக்தியே உண்டாகி விட்டது. சங்கீதத்தில் எவ்வளவு திறமை இருக்க வேண்டும், இப்படி ஆணித்தரமாகப் பேசுவதற்கு?

அடுப்பங்கரையிலிருந்து என் மனைவியின் குரல் கர்ண கடூரமாய் என் காதில் விழுந்தது. என் அருமை நண்பன், என் மதிப்புக்கும் பக்திக்கும் உரியவனிடமா இப்படிக் கேட்பது? " அதெல்லாம் சரிதான்! உங்க நண்பருடைய வாசிப்பு எப்படின்னு கேளுங்கோ?" என்றல்லவா கேட்டு விட்டாள்?

காப்பியை உறிஞ்சிக் குடித்தான் சிவராமன். " அதற்கென்ன? கொஞ்சம் சாதகம் பண்ணினுல் எல்லாம் தானுக வந்து விட்டுப் போகிறது!" என்று அலட்சியமாகச் சொல்லி விட்டுப் போனுன்.


'என்ன நெஞ்சழுத்தம்? எத்தனே திறமையான பதில்?' என்று நான் வியந்து போனேன். என் மனைவி மட்டும் சிரித்தாள். அசடு! சிவராமன் மகிமை அவளுக்கு எங்கே தெரியப் போகிறது?

உங்கள் பேராதரவைப் பாராட்டி "ஆஷா" அழகு சாதனத் தயாரிப்பாளர்கள் கண்ணைக் கவரும் காலண்டர் ஒன்றை அவர்களுடைய லவண்டர் பிரில்லியன்டைன். அல்லது ஒரு டீலக்ஸ் பவுடர் பெட்டி வாங்குபவர்களுக்கு இலவசமாக வழங்க முன்வந்திருக்கிறார்கள்.

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்

B·I

சென்னை - நாகப்பட்டினம் - பினாங்கு - சிங்கப்பூர்



S. S. ரஜூலா

மேற்படி கப்பல் கீழ்க்கண்ட தேதி வாக்கில் புறப்படும்

சென்னையிலிருந்து	நாகப்பட்டினத்திலிருந்து
1959 மார்ச் 13	1959 மார்ச் 14

பிரயாணத்திற்குரிய தஸ்தாவேஜுகளைக் காண்பித்து வேண்டிய அளவு பங்க் வசதியுள்ள டிக்கட்டுகளையும், குறிப்பிட்ட அளவு பர்த் வசதியற்ற டிக்கட்டுகளையும் (சாப்பாட்டுடனோ அல்லது சாப்பாடின்றியோ) எங்கள் கம்பெனியின் ஏஜெண்டிடமிருந்து நேரடியாகப் பெற்றுக் கொள்ளலாம்.

பினாங், போர்ட் ஸ்வெட்டன்ஹாம், சிங்கப்பூர் முதலிய இடங்களுக்கு நேரடியாக ஏற்றிச் செல்லவும், சிங்கப்பூரில் கப்பல் மாற்றி பாங்காக்கிற்கும் மற்றும் ஆஸ்திரேலிய & நியூஸிலண்ட் துறைமுகங்களுக்கும் சரக்குகள் அனுப்பவும் ஏற்றுக்கொள்ளப்படும்.

பிரயாணிகள் மற்றும் சாமான்கள் ஏற்றுமதி விபரங்களுக்குத் தயவுசெய்து எழுதவும்

பின்னி & கோ., (மதராஸ்) லிமிடெட் 7, அரமனைக்காரத் தெரு, சென்னை-1	மதுரா கம்பெனி பிரைவேட் லிமிடெட் முதல் லைன் பீச் ரோடு, நாகப்பட்டினம்

ஏஜெண்டுகள்: பிரிட்டிஷ் இந்தியா ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி லிமிடெட்

புறாக் கூண்டு போன்ற குவார்ட்டர்ஸுக்குள் மிகுந்த அசதியுடன் நுழைந்தான் சிவானந்தம். விடியற்காலம் நான்கு மணிக்கே அலுவலில் ஏற்பதற்காக ஸ்டேஷனுக்குச் சென்று விட்டான். ஸ்டேஷன் அருகேதான், ரயில்வே அலுவலுக்கு அளித்திருந்த வீடு இருந்தது. நினைத்தபோதெல்லாம் வந்து போக முடியும். என்றாலும் பட்டாம்பாக்கம் புகைவண்டி நிலையத்திலிருந்த ஸ்டேஷன் மாஸ்டர்கள் மட்டும், அலுவலில் இருக்கும் போது வீட்டுக்குக் கூடச் செல்வதில்லை. சட்டத்தை அவ்வளவு கருத்துடன் கண்காணிப்பவர்கள் அவர்கள்!

என்றுமில்லாதபடி, தள்ளாடிய வண்ணம் உள்ளே நுழையும் மகனைக் கண்டதும், செல்லம்மா திடுக்கிட்டு விட்டாள்.

"உடம்புக்கு என்ன, சிவா?"

"ஒன்றுமில்லே, அம்மா!"

பதிலிறுத்த குரலில் கூடத் தெம்பின்மை தெரிந்தது. மூன்று நாட்கள் பட்டினி கிடந்தவன் குரல் போல் தொண்டை மெலிந்திருந்தது.

தாய் அவனைப் பார்த்தபடியே நின்றாள். கோட்டை ஆணியில் மாட்டி விட்டு, வெள்ளைக் கால்சராயைக் கழற்றினான் அவன். தலையின் முன்புற மயிர்க் கற்றை நெற்றியில் விழுந்து வியர்வையில் ஒட்டிக் கொண்டிருந்தது.

செல்லம்மா மற்றொரு அறையான சமையற்கட்டுக்குச் சென்று, சாப்பாட்டுத் தட்டை எடுத்து வைத்தாள். தம்ளரில் நீர் எடுத்து வைத்து விட்டு, நிமிர்ந்தபோது சிவானந்தம் எதிரே நிற்பதைக் கண்டாள்.

"நான் குளித்து விட்டு வந்து பிறகு சாப்பிடுகிறேன்."

"உடம்பு சரியில்லே போலிருக்கே, தம்பி! சாப்பிட்டு விட்டுக் கொஞ்சம் தூங்கு. சாயங்காலம் சுடுதண்ணீர் போட்டுத் தரேன்..."


ஒட்டி உலர்ந்து போயிருந்த அம்மாவைப் பார்த்தான். அவள் முகத்தில் பாசமும் கவலையும் கொந்தளித்துக் கொண்டிருப்பதைக் கண்டான்.

"எனக்கு ஒன்றுமில்லேயம்மா. ஸ்டேஷனில் கொஞ்சம் அதிக வேலே. களைப்பாயிருக்கிறது. அவ்வளவுதான்" என்று புன்னகை பூத்தபடியே சொன்னான்.

அவன் அம்மாவுக்கு அவன் ஒரே மகன். அவன் மேல் இருக்கும் பாசத்துக்கு எல்லை கட்டக் கூற முடியுமா?

உழைத்து உழைத்து, அவனுக்காகக் கவலைப்பட்டுக் கஷ்டப்பட்டு அவள் உடல் வற்றி விட்டது. எப்போதோ ஓய்வு கொடுத்திருக்க வேண்டும். அவனுக்கு அம்மாவை உட்கார வைத்து அவளை வேலை எதுவும் செய்யவிடாமல், தன் கையாலேயே சோறு பொங்கிப் போடவும் சிவானந்தம் தயார்தான். அவனும் பல தடவைகள் சொல்லிப் பார்த்து விட்டான். அவள் கேட்கவில்லே. ஏன், சம்பளம் கொடுத்துச் சமையற்காரி வைத்துக் கொள்ளலாம் என்ற யோசனையைக் கூட அவள் ஏற்கவில்லே.

சிவானந்தத்துக்கு வயது இருபத்தெட்டு ஆகிறது. எல்லோ



கருணை உள்ளம்

டி.எஸ். கோதண்டராமன்

ரையும் போல் காலாகாலத்தில் கல்யாணம் செய்து கொண்டு சந்தோஷமாக வாழ்ந்தவன்தான். வந்தவள், தங்கவில்லை. பூச்சூட்டலுக்காகப் பிறந்த வீடு சென்றவள், பின் புகுந்த வீட்டுக்குத் திரும்பவேயில்லை. எல்லோரும் விதியைத் திட்டினார்கள். சிவானந்தத்துக்குத் தெரியும், அது தன் பொறுமைக் குணத்துக்குக் கிடைத்த பரிசு என்று.

அவன் முதல் மனைவியை இழந்து நாலு வருஷங்களுக்கு மேல் ஆகிறது. இன்னொரு பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்ளும்படி அவனுடைய தாயார் வற்புறுத்திக் கொண்டே இருக்கிறாள். ஒரு மாதமாக அவள் நச்சரிப்பது எல்லையைக் கடந்துவிட்டது. செண்பகம் கிராமத்துக்கு வந்தாலும் வந்தாள், செல்லம்மாளின் தொணதொணப்பு அதிகமாகி விட்டது.

சிவானந்தத்தின் வீட்டுக்கு வழக்கமாக, அவன் அந்த ஸ்டேஷனுக்கு மாற்றலாகி வந்த மூன்று மாத காலமாகப் பால் விட்டுக் கொண்டிருந்தவனின் பெண், செண்பகம். கடலூர் கான்வென்டில், உபகாரச் சம்பளம் பெற்றுப் பத்தாவது படித்திருந்தாள்.

பரீட்சைகள் முடிந்து அவள் பட்டாம்பாக்கம் வந்திருந்தாள். செல்லம்மாவுடன் சிநேகம் செய்து கொண்டாள். அடிக்கடி குவார்ட்டர்ஸுக்கு வந்து அவளுடன் பேசிக் கொண்டிருப்பாள். சிவானந்தத்தின் கண்களில் செண்பகம் பல தடவைகள் பட்டிருக்கிறாள். அவளை அவன் லட்சியம் செய்ததேயில்லை. அம்மா, செண்பகத்தைக் கல்யாணம் செய்து கொள்ளும்படி வற்புறுத்தத் தொடங்கியதும், அவள் மேல் அவனுக்கு வெறுப்புக்கூட உண்டாகி விட்டது. 'அம்மாவை உன் வலைக்குள் சிக்க வைக்கிறாயா, நீ?' என்று தனக்குள் பொருமினான்.

செல்லம்மாவுக்கோ, அன்றைய தினத்திலிருந்தே செண்பகம் தன் மருமகளாகித் தன் வீட்டிலேயே தங்கி விட மாட்டாளா என்று இருந்தது. மகனிடம், வாய் ஓயாமல் அவளுடைய அழகையும், அறிவையும், குடும்பப் பொறுப்பையும் பற்றி அளந்து கொண்டிருந்தாள். "அவள் ஏழைதான். பரம்பரை ஏழை இல்லை. அவளுடைய அப்பா கூட ரயில்வேயில் ஸ்டேஷன்மாஸ்டராக இருந்தவர்தானாம். திடீரென்று அவர் இறந்து விடவே குடும்பம் நொடித்து விட்டது. இல்லாவிட்டால், அவர்கள் நமக்குச் சமதைதானே?" என்று தயக்கம், சமாதானம் இரண்டையும் அவளே சொல்லிக் கொண்டாள்.

அம்மாவின் விசித்திரமான குணத்தை வியந்தபடியே சிவானந்தம் திண்ணையிலிருந்து வீட்டுக்குள் நுழைந்தான்.

"வேட்டியைக் கட்டிக் கொண்டு சோற்றைத் தின்றுவிட்டுப் போ. பசிக்கவில்லையா, தம்பி? சீக்கிரம் குளித்து விட்டு வரக் கூடாதா?"

அவன் இடிப்படிந்தான்.

"இன்றைக்குத் திடீரென்று அதிகாரி வந்திருந்தார்!" என்று சொல்லி நிறுத்தினான் சிவானந்தம்.

"உம்?"

"யாரும் எதிர்பார்க்கவேயில்லை. பதினொரு மணி வண்டியில், மூன்றாம் வகுப்புப் பெட்டியிலிருந்து 'திடும்' என்று இறங்கினார். அவரைக் கண்டதுமே எனக்குக் கதிகலங்கி விட்டது. 'சரி இன்றோடு இந்த வேலை தீர்ந்தது' என்று முடிவு கட்டி விட்டேன்."

"என்ன பயம்?"

"இரவில் 'டியூடி' பார்த்த கல்யாணசுந்தரம், 'அவசரத் தேவை' என்று ஸ்டேஷன் பணத்திலிருந்து பத்து ரூபாய் எடுத்துக் கொண்டு விட்டார். சாயங்கால வண்டியில் சம்பளம் வந்ததும் போட்டு விடுவதாகச் சொன்னார். என்னால் தடை செய்ய முடியவில்லை.

"பதினொரு மணி வண்டியில் வந்த அதிகாரி, வண்டி நகர்ந்ததுமே 'ஸ்டேஷனைப் பரிசோதனை செய்ய வேண்டும்' என்று சொல்லி விட்டார். எனக்கு நெஞ்சு 'திக், திக்' கென்று அடித்துக் கொண்டது. 'சார்! ஸ்டேஷன் பணத்தில் பத்து ரூபாய் குறைவாக இருக்கும்' என்று முன்னதாகவே சொல்லி விடலாமா என்று நினைத்தேன். அப்புறம் அப்படிச் சொல்வதும் அபாயம்தான் என்று பேசாமல் இருந்து விட்டேன்.

"ரிஜிஸ்தர்கள் எல்லாவற்றையும் பார்த்துக் கையெழுத்துப் போட்டார் அவர். சாமான்களெல்லாம் சரியாக இருக்கின்றனவா என்று 'செக்' பண்ணினார். கடைசியாக டிக்கட் கொடுக்கும் இடத்துக்கு வந்தார். எனக்குக் கைகால்களெல்லாம் உதறல் எடுக்க ஆரம்பித்து விட்டன! 'இதோ, இன்னும் ஐந்தே நிமிஷங்கள்தான்! அத்துடன் இந்த வேலைக்கு முழுக்குப் போட வேண்டியது தான்' என்று நிச்சயித்துக் கொண்டேன்.

"அதிகாரி நாற்காலியில் உட்கார்ந்தார். 'ஸ்டேஷனில் இன்று வசூலான பணத்தை எடுத்து எண்ணிக் காட்டும்' என்றார். அம்மா! நான் எப்படித் தவித்துப் போய் விட்டேன், தெரியுமா? உண்மையைச் சொன்னால், அவர் நம்புவாரா? நான்தான் கையாண்டதாகக் குற்றம் சாட்டுவார். வேலையிலிருந்து

தாற்காலிக நீக்கம் செய்வார். - இப்படி எண்ணிக்கொண்டே இரும்புப் பெட்டியைத் திறந்தேன்.

"அப்பொழுதுதான் உள்ளே நுழைந்த பஷீர், அதிகாரிக்குச் சலாம் போட்டான். ஸ்டேஷனுக்கு வடவண்டைப் புறம் நின்று வசூலித்திருந்த டிக்கட்டுகளை மேஜைமேல் வைத்தான். அதிகாரி என்னையே பார்த்துக் கொண்டிருந்தார். பஷீர் டிக்கட்டுகள் இருந்த பெட்டியில் எதையோ தட்டினான். 'என்னடா?' என்று கேட்டேன். 'எம்மாம் பெரிய பல்லி!' என்று சொல்லி விட்டுக் கதவருகே வந்து நின்றான்.

"இரும்புப் பெட்டியிலிருந்து எடுத்த பணத்தை எண்ணி முடித்தேன். கணக்குப்படி சரியாக இருந்தது. டிக்கெட்டுகள் விற்பனைத் தொகையை எடுக்கும் போது என் கைகள் நடுங்கின. அதில் தானே பத்து ரூபாய் குறையப் போகிறது? என் உடம்பு முழுவதும் வியர்த்துக் கொட்டிக் கோட்டுக் கூட நனைந்து விட்டது. சமாளித்துக் கொண்டு எண்ணினேன். டிக்கட்டுகள் விற்பனை ரிஜிஸ்தரில் கண்ட தொகைக்குப் பத்து ரூபாய் குறைவாக இருந்தது!



"அதிகாரி கேலியாக என்னைப் பார்த்தார். எனக்குக் கலவரம் அதிகமாகி விட்டது. பஷீரைப் பார்த்தேன். அவன் எவ்விதத்திலேனும் என் உதவிக்கு வர மாட்டானா என்றிருந்தது. திருப்திகரமான பதிலாகச் சொல்லி, இந்தப் பெரும் ஆபத்திலிருந்து என்னைத் தப்புவிக்க மாட்டானா என்று அசட்டுத்தனமாக எண்ணினேன். என் வாயிலிருந்து சொல் கிளம்பவில்லை.

" 'கணக்குச் சரியாக வரவில்லையா, சார்!' என்று அவன் கேட்டான்.

'ஆமாம். பத்து ரூபாய் குறைகிறது.'

" 'சரியாக எண்ணிப் பாருங்க, சார்! அந்த சார் நோட்டைக் கண்ட இடத்திலே வைச்சுடுவார்' என்று சொல்லிக் கொண்டே அருகில் வந்தான். டிக்கட்டுகளை அடுக்கி வைத்திருக்கும் பெட்டியில் கண்களைச் செலுத்தினான். அதோ, அந்த மூலையிலே செருகி யிருக்கிறதே, அதைப் பாருங்க' என்றான்.

"எடுத்துப் பார்த்தேன். பத்து ரூபாய் நோட்டு! நான் வியந்துப் போய் நின்றேன். பளிரென்று எனக்கு உண்மை புரிந்து விட்டது. பஷீர்தான் பல்லியை விரட்டும் சாக்கில் பணத்தை அங்கே வைத்திருக்கிறான்! அதிகாரியைக் கண்டதும், நிலைமையைப் புரிந்து கொண்டு, முன் யோசனையுடன் அவன் அப்படிச் செய்திருக்கா விட்டால் என் பாடு அதோகதிதான்!"

"பாயிண்ட்ஸ்மென்னாக இருந்தாலும் பஷீருக்கு எவ்வளவு நல்ல மனசு! என்ன புத்திசாலித்தனம்! அவன், 'நமக்கென்ன?' என்று பேசாமல் இருந்திருந்தால், உன் வேலையே போயிருக்குமே?"

அம்மாவின் கடைசிச் சொற்கள் சிவானந்தத்தைச் சுரீரென்று தைத்தன. 'உன் வேலையே போயிருக்குமே?'

பஷீரின் உதவியால், சமயோசித நடவடிக்கையால், சிவானந்தத்துக்கு வேலை பிழைத்து விட்டது.

ஆனால், சிவானந்தம் என்ன செய்தான்? உடன் உழைக்கும் ஸ்டேஷன் மாஸ்டர் ஒருவரின் வேலை பறி போவதைப் பார்த்துக்கொண்டு, வேண்டுமென்றே பேசாமல் இருந்தான்!

கையைக் கழுவிக் கொண்டு வந்தான் சிவானந்தம். வீட்டுக்கு வெளியே முன் புறத்தில் போடப் பட்டிருந்த ஈஸிச் சார்ப்பில் சாய்வு நாற்காலியில் சாய்ந்து கொண்டான். சாய்ந்தபடியே ஒருமணி நேரம் தூங்கி விடுவது அவன் வழக்கம். இன்று தூக்கம் வரவில்லை அவனுக்கு.

பழைய நினைவு - நான்கு வருஷங்களுக்கு முன் நடந்த சம்பவம் - அவனைக் குடைந்தெடுக்க ஆரம்பித்தது.

அப்போது அவனுக்குத் தெற்குக் கோடிப் பிரிவுகளில் 'ரிலீவிங்' வேலை. தலைமை ஸ்தானமான தென்காசியில் குடும்பம் இருந்தது. அங்கிருந்தபடியே, உத்தரவாகும் ஸ்டேஷன்களுக்குப் போய் வந்து கொண்டிருந்தான்.

ஏதோ ஒரு ஸ்டேஷனில் ஒரு மாதம் போய்த் தங்கும்படி நேர்ந்தது. அப்படித் தங்கியதால்தான் கந்தசாமியிடம் பொருமை கொள்ளும்படி ஆயிற்று.

சிவானந்தத்தை விட ஏறக்குறைய பத்து வருஷங்கள் அதிக அனுபவம்

உடையவர் கந்தசாமி. அந்த ஸ்டேஷனின் நிலையான உதவி ஸ்டேஷன் மாஸ்டர். என்றாலும், சுற்றுப்புற மக்களிடம் பெரிய அதிகாரிகளுக்குரிய மரியாதையைப் பெற்று வந்தார்.

என்ன காரணத்தாலோ, ஸௌனந்தத்துக்கு முதல் பார்வையிலேயே அவரைப் பிடிக்கவில்லை. அவன் வேலையிலிருந்த சிறு தவறுகளை அவர் சுட்டிக்காட்டியதால்தானோ என்னவோ, அவன் வெறுப்பு வளர்ந்துகொண்டே வந்தது.

ஒருநாள் கந்தசாமி காலை அலுவலில் இருந்தார். ஸௌனந்தத்துக்கு அன்று மாலை அலுவல். பதினொரு மணிக்கே ஸ்டேஷனுக்கு வந்து விட்ட அவன், பிளாட்பாரத்தின் ஒரு கோடியில், மரத்தின் நிழலில், சிமெண்ட் பெஞ்சியில் உட்கார்ந்து காற்றை அனுபவித்துக் கொண்டிருந்தான்.

கிழக்கேயிருந்து மேற்கே செல்லும் பிரயாணி வண்டி ஸ்டேஷனில் வந்து நின்றது. மேற்கிலிருந்து வரும் சாமான் வண்டியுடன் அந்த ஸ்டேஷனில் 'கிராஸிங்'. கூட்ஸ் வண்டியை வாங்குவதற்குக் கைகாட்டியை இறக்கியாகி விட்டது

ஸௌனந்தத்தின் கண்கள், எங்கோ சுற்றி விட்டு, இருப்புப் பாதையை வந்தடைந்தன. சட்டென்று ஓர் இடத்தில் நிலைத்தன. 'என்ன விபரீதம்! 'பாயிண்ட்' இன்னும் மாற்றப்படாமலே இருக்கிறதே?' என்று அதிசயித்தான்.

ஸௌனந்தம் 'விருட்'டென்று எழுந்தான். கைகாட்டியை இறக்கிய பாயிண்ட்ஸ்மேன், நேர்ப்பாதையிலிருந்து லூப் பாதைக்கு வண்டியைச் செலுத்தும் 'பாயிண்டை' மாற்ற மறந்து விட்டான். பிரயாணி வண்டி நிற்கும் பாதையிலேயே கூட்ஸ் வண்டியும் வந்து மோதிச் சேதமாகி...

'கந்தசாமி அல்லவா, அலுவலில் இருக்கிறார்? அவருக்கா உதவி செய்வது? ஹாஹா! ஐயா, கந்தசாமி! இந்த ஸ்டேஷனில் ராஜாபோல் கர்வமாக இருந்தீரே? தொலைந்தீர், நீர்!'

கூட்ஸ் வண்டி, இரண்டாவது கைகாட்டியருகே மெதுவாக ஊர்ந்து வந்து கொண்டிருந்தது.

ஸௌனந்தத்தின் மனம் எக்காளமிட்டது. கூட்ஸ் வண்டி முதல் கைகாட்டியை நெருங்கி விட்டது.

இன்னும் சில நிமிஷங்கள். மாபெரும் விபத்து நிகழ்ந்து விடும். பிரயாணிகள் செத்து விடுவார்கள்.

'ஐயோ!' என்று அலறினான் ஸௌனந்தம். கந்தசாமியிடம் வஞ்சம் தீர்த்துக் கொள்ள இதுவா சந்தர்ப்பம்?

அவனுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. தனக்குத் திடீரென்று மந்திரசக்தி உண்டானால், கூட்ஸ் வண்டியைச் சற்றுத் தூரத்திலேயே நிறுத்திவிட மாட்டோமா என்றிருந்தது.

'பாயிண்'டை மாற்றுவதற்கு இனி மேல் நேரமில்லை. 'சிவப்புக் கொடியைக் காட்டியாவது கூட்ஸ் வண்டியை நிறுத்தலாம்' என்ற எண்ணத்துடன், ஸ்டேஷன் மாஸ்டர் அறைப் பக்கமாக ஓடி வந்தான் அவன்.

அவனுக்குப் பின்னும், கூட்ஸ் எஞ்சினின் 'கூ கூ' என்ற இடைவிடாத சத்தம் துரத்திக் கொண்டே வந்தது.

திரும்பினால் கூட்ஸ் வண்டி பாயிண்ட் அருகில் நின்றுவிட்டிருந்தது. பயர்மேன் இறங்கி, பாயிண்டைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

இரண்டே நிமிஷங்களில் கூட்டம் கூடி விட்டது. பாயிண்ட் மாற்றப்படாதிருப்பதைக் கவனித்த கூட்ஸ் வண்டியின் டிரைவர், திடீரென்று 'பிரேக்' போட்டு வண்டியை நிறுத்தியிருந்தார். பிரயாணிகளின் உள்ளத்தில் அவர் ஒரு ரட்சகராக உயர்ந்து விட்டார்!

அதிகாரிகளுக்குத் தந்திகள் பறந்தன. தந்தியை விட வேகமாகச் செய்தி பரவி, ஒவ்வொரு ரயில்வே சிப்பந்தியின் வாயிலும் புகுந்து புறப்பட்டது.

ஒரு மாதத்துக்குப் பின், கந்தசாமியை வேலையிலிருந்து நீக்கியிருப்பதாக உத்தரவு வந்தது. ஸௌனந்தத்துக்கு மகிழ்ச்சி என்று இல்லாவிட்டாலும் சிறிது கூட வருத்தம் ஏற்படவில்லை. அந்தச் சமயத்தில், கந்தசாமியின் மனைவியும் குழந்தைகளும் கூட ஊரில் இல்லை. தனியாக இருந்த அவரிடம், கிராமவாசிகள் வந்து தங்கள் வருத்தத்தைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

அன்று மாலையே, ஸௌனந்தத்துக்கு 'கண்ட்ரோல்' போனில் செய்தி வந்தது. - 'மனைவி மறைந்தாள்'.

அவனுடைய பொறாமைக்குத் தகுந்த தண்டனை கிடைத்து விட்டது. வேலை இழந்து, சோற்றுக்கு வழியில்லாமல் கந்தசாமி தவிப்பதைப் போல், மனைவியை இழந்து ஸௌனந்தம் இப்பொழுது தவிக்கப் போகிறான்?...

இத்தகைய பேரிழப்புக்குப் பின் அந்தப் பிரதேசங்களில் வேலை செய்வதற்கே ஸௌனந்தத்துக்குக் கஷ்டமாக இருந்தது. மனுவுக்கு மேல் மனுவாக எழுதி, விழுப்புரத்தைத் தலைமை ஸ்தானமாக மாற்றிக் கொண்டான். புதிய சூழ்நிலையில் அவன் குணங்களும் மெதுவாக மாறிக் கொண்டு வந்தன.

நினைவுகளின் அழுத்தத்தில் அவன் சாய்வு நாற்காலியில் தூங்கிப் போனான்.

கடலூரிலிருந்து வீட்டுக்கு வேண்டிய சாமான்களை வாங்கிக் கொண்டு திரும்பினான் சிவானந்தம். சற்றுத் தூரத்திலிருந்தே, வீட்டின் முன்புறத் தாழ்வாரத்தில் தன்னுடைய தாயாரும் செண்பகமும் பேசிக் கொண்டிருப்பதைப் பார்த்து விட்டான். 'வேறு வேலை கிடையாதா, இந்தப் பெண்ணுக்கு!' என்று நினைத்து வெறுப்பைக் கொட்டிக் கொண்டான்.

சிவானந்தம் வருவதைக் கண்டதும், செண்பகம் எழுந்து உட்புறம் சென்றாள்.

உள்ளே நுழைந்து சாமான்களைக் கீழே வைத்து விட்டுச் சட்டையைக் கழற்றுகையில், வாசலில் 'சார்' என்ற குரல் கேட்டது. பக்கீர், உள்ளே நுழையும் இடத்தில் நின்று கொண்டிருந்தான்.

"என்னப்பா?"

"ஒன்றுமில்லே, சார்! சின்னசாமி காலையிலேதான் வந்து சொன்னான். நீங்கள் மட்டும் இல்லாதிருந்தால் அவனுக்கு வேலையே போயிருக்குமாம்!"

சிவானந்தம் அலட்சியமாக 'தலை' யாட்டினான்.

செல்லம்மா, அவசரமாகக் கேட்டாள்: "என்ன நடந்தது, பக்கீர்?"

"உங்களுக்குத் தெரியாதா?"

"தெரியாதே!"

"நேற்று சின்னசாமி வாகனை 'ஷண்டிங்' பண்ணுறப்போ பாயிண்டைத் தப்பாகப் போட்டுட்டான். ஐயா மட்டும் பார்த்துச் சொல்லியிருக்காவிட்டால் வாகன் பாயிண்ட் மேலே ஏறிக் கீழே விழுந்திருக்கும். 'மெயின்லைன்' லே வண்டி, வண்டி வாங்க முடியாது."

மகனின் சாமர்த்தியத்தையும் பிறருக்கு உதவி புரியும் கருணை உள்ளத்தையும் நினைத்து மகிழ்ச்சிப் பெருக்கில் வாயைப் பிளந்து நின்றாள் செல்லம்மா. 'நான் வரேன்' என்று பக்கீர் சொல்லி விட்டுப் போனது கூட அவளுக்குத் தெரியாது.

"என்னம்மா, அப்படியே நின்று விட்டாய்?" என்று கேட்டான் சிவானந்தம். அவள் உணர்வு பெற்றுச் சிவானந்தத்தைப் பார்த்தாள்.

"இல்லே, தம்பி! என்னமோ ஞாபகம். செண்பகத்தின் அப்பாவைக்கூடப் பாயிண்டுத் தகராறிலேதான் வீட்டுக்கு அனுப்பிச்சுட்டாங்களாம்."

சிவானந்தத்தின் புருவங்கள் உயர்ந்தன. அந்தப் பெண்ணின் தந்தை ஸ்டேஷன்மாஸ்டராக இருந்தவர் என்பது தெரியும் அவனுக்கு. ஆனால், அவர் வேலையிலிருந்து நீக்கப்பட்டவர் என்பது தெரியாது.

"என்ன சொல்றீங்க, அம்மா?"

"பாயிண்ட்ஸ்மேன், பாயிண்டைச் சரியாகப் போட்டிருக்காரு. இல்லையான்னு அவர் கவனிக்கவில்லையாம். பாசஞ்சர் வண்டி இருந்த பாதையிலே கூட்ஸ் வண்டியை வாங்கப் பார்த்தாராம். வேலையைவிட்டு நீக்கினதும் அதே கவலையில் ஒரு வருஷத்துக்குள்ளே செத்துப் போயிட்டாராம். செண்பகம் ஒரு நாளைக்குச் சொன்னாள்!"

சிவானந்தத்தின் உடம்பு மெல்ல அதிர ஆரம்பித்தது. தன் வாழ்வின் எதிர்பாராத, ஆனால் மிக முக்கியமான ஒரு கணம் தன் எதிரே நிற்பதாக உணர்ந்தான்.

"செண்பகம்!"

அதட்டல் போல் இருந்தது அவன் குரல். அடுத்த அறையிலிருந்த அவள் நடுக்கத்துடன் தலையை நீட்டினாள்.

"உன் அப்பாவின் பெயர் என்ன?"

"கந்தசாமி!"

இஞ்சினிலிருந்து நீராவியை வெளியேற்றும்போது, 'ஸஸ்ஸ்' என்று ஒலி கேட்குமே, அதைப் போன்ற ஒலி அவன் இதயத்தில் எதிரொலித்தது.

"மதுரை டிவிஷனில் அவர் வேலை பார்த்தாரா?"

"ஆமாம்."

கீழே விழுந்து விடப் போகிறோமே என்ற அச்சத்தில் சட்டென்று நாற்காலியில் உட்கார்ந்தான் சிவானந்தம். செல்லம்மா, செண்பகம் இருவருமே அவன் விசித்திர நடவடிக்கையைக் கவலையோடு பார்த்துக் கொண்டிருந்தனர்.

"ஏன் தம்பி, இப்படிக் கேட்கிறே?"

அவன் வெகுவாகச் சமாளித்துக் கொண்டான். தன் குரலை இயற்கையாக வைத்துக் கொள்ள முயன்றான்.

"அவர் என் சிநேகிதர், அம்மா!"

அவன் கண்களில் நீர் துளித்தது. நண்பரின் மறைவுக்காக வருந்தி அவன் கண்ணீர் விடுகிறான் என்று அம்மா நினைத்தாள். 'எவ்வளவு இளகிய நெஞ்சு இவருக்கு!' என்று செண்பகம் வியந்து போய் நின்றாள்.

அடுத்த நாள், அம்மா சாதம் போட்டுக் கொண்டிருந்தாள்.


"அம்மா! உனக்கு மருமகள் வரவேண்டிய காலம் நெருங்கி விட்டது!"

கையில் பிடித்த கரண்டியுடன் அம்மா வியப்பாய் நின்றாள்.

"பெண்ணு யாரு?"

"உனக்குப் பிடித்தவள்தான், செண்பகம்!"

சிவானந்தத்தின் நெஞ்சம் நெகிழ்ந்த காரணம் புரியாமல் செல்லம்மா அதிசயித்து நின்றாள்!



அனைவரும்
அதிசயிக்கும்
அழகிற்கு....
சந்திரகாந்தா
ரெமி டால்கம் பவுடர்

மானத்தாமரை

சுதர்சன்

தமிழாக்கம்: ரா. வீ.

7. தாமரை இலைத் தண்ணீர்

சாருமதிக்கு விடை கொடுத்து அனுப்பிவிட்டுக் கண்ணீரும் கம்பலையுமாக அசையாச் சிலையாகச் சுதாகர் உட்கார்ந்திருந்த அதே சமயம் அவர் வீடு தேடி இரண்டு சந்நியாசிகள் வந்து விட்டனர். கடமையில் கருத்துக்கொண்ட சுதாகர் எழுந்து சமைத்து அவர்களுக்கு உணவு அளித்தார். இதெல்லாம் யந்திரம் போலச் செய்து விட்டாரே யொழிய அவருடைய மனம் ஒரு நிலையில் இல்லை. பிறகு தாம் சாப்பிடாமல் பட்டினியாகவே படுத்துவிட்டார். ஆனால் நள்ளிரவு கழிந்த பின்னுங்கூட அவருக்குத் தூக்கம் பிடிக்கவில்லை. மனம் 'குருட்டுக் குருட்டு' என்று ஏதோ யோசனையில் ஆழ்ந்திருந்தது. கடைசியில் களைப்பு மேலிட்டால் கண்களைச் சுற்றிக் கொண்டு தூக்கம் வந்த பொழுது, அவரை யாரோ எழுப்பி விட்டார்கள். பெரிய பண்ணையார் வீட்டில் கொள்ளைக்காரர்கள் புகுந்து சூறையாடிக் கொண்டிருக்கிறார்கள் என்று தெரிய வந்தது.

சுதாகர் உடனே தம் தடியை எடுத்துக் கொண்டு பெரிய பண்ணையார் வீட்டை நோக்கிப் புறப்பட்டார். பத்துக் கொள்ளைக்காரர்களுக்கு எதிரே வீட்டில் உள்ள அத்தனை பேரும் கைகட்டி வாய் பொத்து நின்று கொண்டிருந்தனர். அத்தனை பேருக்கும் மத்தியில் கொள்ளைக்காரர்கள் பண்ணையாரின் புதல்வியின் காது, மூக்கு, கை, கால்களிலிருந்து நகை நட்டுகளைக் கழற்றிக்கொண்டிருந்தார்கள். பாவம், அந்தப் பெண் செய்வதும் வகையறியாது விக்கித்து நின்றுகொண்டிருந்தாள். சொந்தக்காரர்களும் மூச்சுப் பிரியாமல், ஆண்டவன் விட்ட வழி என்று நின்று கொண்டிருந்தனர். பக்கத்து வீட்டுக்காரர்களைப் பற்றியோ கேட்க வேண்டியதே இல்லை. நமக்கு என் இந்த வீண் வம்பு என்று எண்ணிப் பயந்து தங்கள் தங்கள் வீட்டுக்குள்ளேயே பதுங்கிக் கிடந்தனர். அவர்கள் ஏதாவது வாயைத் திறந்தால் கொள்ளைக்காரர்கள் அவர்கள் கழுத்தைச் சீவி விடலாம் அல்லவா? அவரவர்க்கு அவரவர் உயிர் வெல்லம் தானே? ஆகவே, வீட்டுத் தாழ்ப்பாளை அழுத்திப் போட்டுக் கொண்டு ஒரு மூலையில் உட்கார்ந்து நடுங்கியவண்ணம் சாகாமல் செத்துக் கொண்டிருந்தனர்.

பண்ணையார் வீட்டில் தொண்ணூறு வயதுத் தொண்டு கிழவி ஒருத்தி இருந்தாள். ஆட்டம் கொடுத்துப் போன அவள் குரலுக்கு அந்தச் சமயம் எங்கிருந்துதான் அந்த உறுதி வந்ததோ, தெரியவில்லை! "இந்த ஊரில் தடித்தடியாக இத்தனை மீசை முளைத்த ஆண்பிள்ளைகள் இருக்கிறார்களே! யாருக்காவது வாயைத் திறந்து நாலு வார்த்தைகள் பேசத் தைரியம் இருந்தால்தானே? ஆண் பிள்ளைகளாம், ஆண்பிள்ளைகள்! சாண் பிள்ளைகள்தான்!" என்று பொரிந்து தள்ளி விட்டாள். அவளுடைய வார்த்தைகளைக் கேட்ட கொள்ளைக்காரர்கள் 'கடகட' வென்று வீடே அதிரும்படி சிரித்தனர். அதே சமயம் அவர்களுடைய சிரிப்பொலியையும் மேவிக் கொண்டு சுதாகரின் குரல் வந்தது. "இங்கே ஆண் பிள்ளைக்கு ஒரு குறை





வும் இல்லை, அம்மா! இதோ வந்து விட்டேன்!" என்று சொல்லிக் கொண்டே உள்ளே நுழைந்த சதாகர் தம் தடியைத் 'தம்' மென்று தரையில் ஊன்றினார். சதாகருக்கு யாரிடம் என்ன பயம்? வந்ததும் தம் கம்பீரமான குரலை உயர்த்தி, "உயிர்மேல் ஆசை இருந்தால் ஓடி விடுங்கள், உடனே! இல்லாவிட்டால் எல்லோரையும் ஏககாலத்தில் எமலோகத்துக்கு அனுப்பி விடுவேன். ஜாக்கிரதை! இங்கே கையால் ஆகாதவர்கள்தான் இருக்கிறார்கள். கொள்ளை கொண்டு போகலாம் என்று எண்ணி வந்தீர்களோ? இந்தக் கிழவன் உயிருடன் இருக்கும்வரையில் இந்தக் கிராமத்துக்குள்ளே நுழைந்து பாழும் கொள்ளை அடிக்க முடியாது. தெரியுமா?" என்று கர்ஜித்தார்.

அவருடைய அந்தக் கர்ஜனையைக் கேட்ட கொள்ளைக்காரர்கள் கதி கலங்கிப் போய்ப் பேசத் தோன்றாமல் வாய் அடைத்து நின்றனர்.

பிறர் வீட்டில் பற்றி எரியும் தீயில் குதிக்கத் தைரியம் வேண்டாமா? பிறர் படும் துன்பங்களைத் தாமே வலியச் சென்று ஏற்றுக் கொள்ள நெஞ்சு உரம் வேண்டாமா? மன்னுயிருக்காகத் தன்னுயிரைக் கொடுக்க வரும் மனிதன் சாதாரண மனிதனாக ஒருநாளும் இருக்க முடியாது. அசாதாரண மனிதனாகத்தான் அவன் இருக்க வேண்டும். சாதாரண மனிதனிடத்தில் அத்தகைய துணிவும் தைரியமும் ஏது?

கொள்ளைக்காரர்களின் தலைவன் முன்னே வந்து, தன் கம்பீரமான குரலில், "நீ யார்?" என்று அவரை அதட்டிக் கேட்டான்.

சதாகர் தம் தடியைப் பூமியில் மறுபடியும் ஓங்கிக் குத்தி விட்டு, "நானா? நான்தான் சதாகர்!" என்றார். சதாகர் என்று அவர் சொன்ன அந்தச் சொல் கொள்ளைக்காரர்களுடைய உள்ளத்தில் மந்திரத்தைப் போல வேலை செய்தது. கொள்ளைக் கூட்டத்தின் தலைவன், "அப்படியா? நாங்கள் தங்களுடன் சண்டையிட மாட்டோம். தாங்கள் அடியுங்கள்;

பட்டுக் கொள்வோம். தவறிக்கூடத் தங்கள் மீது கை ஓங்க மாட்டோம். கைது செய்து சிறையில் அடையுங்கள்; வாய் திறந்து வார்த்தை பேச மாட்டோம்" என்றான். பிறகு தன் கூட்டாளிகளைப் பார்த்து, "எல்லாவற்றையும் கீழே வைத்து விடுங்கள். ஒரு [illegible] காசு கூட இங்கிருந்து எடுத்துப்போகக்கூடாது. இவர்தான் வையகத்தின் தெய்வம். இந்தத் தெய்வத்தின் உத்தரவுக்கு மீறி நடக்கக் கூடாது; ஆம், நடக்கவே கூடாது!" என்று கடுமையான உத்தரவு பிறப்பித்தான்.

அடுத்த கணம் கொள்ளைக் கூட்டத்தினர் வந்த வழியே அவ்விடத்தை விட்டு அகன்று விட்டனர்.

மறுநாள் கிராமத்து மக்கள் அனைவரும் சதாசகரின் குடிசைக்கு வந்து அவரது கால்களைக் கையால் தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொண்டனர். முதல்நாள்வரை அவர்கள் மனத்திலே தாழ்ந்திருந்த சதாசகர் மீண்டும் உயர்ந்து விட்டார். மனித மனம் என்பது ஒரு பச்சோந்திதான் போலும்! நிமிஷத்துக்கு நிமிஷம் நிறம் மாறும் போலும். மகான் சதாசகர் தங்கள் கிராமத்தை விட்டுப் போய் விடுவாரோ என்ற அச்சம் அவர்களை அவரெதிரே கைகட்டி வாய் புதைத்து நிற்கச் செய்தது.

பண்ணையார், "நீங்கள் எங்கள் கிராமத்தை விட்டுப் போகக் கூடாது. இங்கேயே இருப்பதாக எங்களுக்கு நீங்கள் வாக்குறுதி அளித்தாக வேண்டும். அப்புறம்தான் நாங்கள் இங்கிருந்து நகருவோம்" என்றார். அவருடைய குரலில் பணிவுடன் கூடப் பிடிவாதமும் தொனித்தது.

பக்கத்தில் நின்று கொண்டிருந்த இரண்டொருவர், "இந்த ஊரை விட்டு இவர் போய் விடுவாரோ? எங்களை மீறி இவர் போவது எங்கே? நாங்கள் வழிமறித்துத் தடுக்க மாட்டோமா? பாதையில் படுத்து இவரைப் போக வொட்டாமல் பார்த்துக் கொள்ள மாட்டோமா? எங்கள் மதியை மீறிப் போவதென்றால் அப்புறம் சத்தியாக்கிரகம்தான்! எங்கள் பக்தி சிரத்தைக்கு மதிப்புக் கொடுக்காமல் இவரால் இருந்துவிட முடியுமா? அப்புறம் எங்கள் பக்தியும் சிரத்தையும் என்ன ஆவது?" என்றனர்.

அருகிலேயே நின்றுகொண்டிருந்த இன்னொருவன், "வைரத்தை வெறுங் கல் என்று நினைத்துக் கொண்டிருந்த வரையில அலட்சியமாக இருந்து விட்டோம் என்பது என்னவோ உண்மைதான்! வைரத்தை வைரம் என்று தெரிந்துகொண்டபின்பு விடுவோமா? இதுகாறும் மூடியிருந்த எங்கள் கண்கள் திறந்துகொண்டன. இனி இந்தத் திருவடிகளை விடமாட்டோம்! இது முக்காலும் சத்தியம்" என்றான் உணர்ச்சிப் பெருக்கில்.

சதாசகரின் இருதயம் எப்பொழுதுமே அன்பு சுரக்கும் ஊற்று அல்லவா? இந்தச் சொற்களைக் கேட்டதும் அவருடைய கண்களில் நீர் பனித்தது. "என்னிடம் இல்லாதவற்றையெல்லாம் இருப்பதாகக் கூறி எதற்காக வீணில் என்னை வெட்கித் தலைகுனியச் செய்கிறீர்கள்? என்னிடத்தில் அப்படி என்ன அசாதாரணமான விஷயத்தைக் கண்டுவிட்டீர்கள்? நானும் உங்களைப் போன்ற ஒரு சாதாரண மனிதன்தானே? இறைவன் அளித்த இந்த உடல் இருக்கும் வரையில் என்னால் இயன்ற தொண்டைச் செய்ய வேண்டும் என்று விரதம் கொண்டிருக்கிறேன். அதை ஆயுள் உள்ளவரையில் செய்ய வேண்டியது என் கடன். வேறு இடத்தில் போய்ச் செய்யும் பணியை இங்கேயே செய்துவிட்டுப் போகிறேன். எங்கு செய்தால் என்ன? எதுவும் பணிதானே? இறைவன் இங்கும் இருக்கிறார்; அங்கும் இருக்கிறார். எங்கும் இருக்கிறார். அவர் ஒளி எங்கும்தான் வீசுகிறது. அவருடைய திருவடி எங்கும்தான் நிறைந்திருக்கிறது. இங்கே செய்தாலும் அல்லது எங்கு சென்று செய்தாலும், அவர் என் பணியை ஏற்றுக் கொள்ளத்தானே போகிறார்? வேறு இடத்துக்குச் சென்று நான் அப்படி என்ன பிரமாதமாகப் புரட்டிவிடப்போகிறேன்? நீங்கள்சொல்ல வேண்டிய





செள. வசந்தா — திரு எஸ். ஸ்ரீனிவாசன்
மணமகன் மாறுபதுறை வக்கீல் திரு என். சேஷாத்ரி அய்யங்காரின் புதல்வன். மணமகள் சாமநாதபுரம் வக்கீல் திரு ஆராவமுத அய்யங்காரின் புதல்வி. வாழ்க, மணமக்கள் !

இல்லை. நான் இங்கேயே இருக்கிறேன். கவலைப்படாதீர்கள் !" என்று எல்லோரையும் சமாதானப்படுத்தினார்.

அதற்குப் பிறகு சதாசுகர் மீண்டும் பழைய சதாசுகராகவே மாறி விட்டார். வைகுநாத்வாசிகளும் பழைய மதிப்பும் மரியாதையும் அவரிடம் வைத்தனர். ஆறு ஆண்டுகளுக்கு முன்பு சதாசுகரை எப்படிக் கண்ணின் மணி யென்று போற்றிப் புகழ்ந்து வந்தார்களோ, அப்படியே இப்பொழுதும் போற்றிப் புகழலாயினர். அவர்களுக்கு அவரிடம் ஏற்பட்டிருந்த வெறுப்பு, நான்கு நாட்கள் வீசிவிட்டு மறைந்து விடும் ஜுரத்தைப் போல் ஓடி மறைந்து விட்டது.

'இவர் மீது என்ன தவறு? இவர் கடன் பணி செய்து கிடப்பது தானே? இவரிடம் யார் வந்தாலும் இவர் இதே மாதிரித்தான் அவர்களுக்குத் தொண்டு புரியப் போகிறார். நல்லவரா கெட்டவரா என்று சீர்தூக்கிப் பார்த்துத் தொண்டு செய்வது இவரிடம் கிடையாது. கஷ்டப்படுபவர்களைக் கண்டால் கனிந்து உருகிக் கருணை புரியும் குணம் படைத்த இவர் மீது நாம் அபாண்டம் சுமத்த முற்பட்டோமே! நம் புத்தியை என்னவென்பது? கஷ்டத்தில் அடிபட்டு அவன் வந்தான். இவர் அவனுக்கு உதவி புரிந்தார். அவனுக்கு உடையவன் வந்தான். உடனே மகிழ்ச்சியுடன் அவனை அவனோடு சேர்த்து அனுப்பி விட்டார். தாமரை மலர் தண்ணீரில்தான் இருக்கிறது. ஆனால் அது தண்ணீரில் நனைவதுண்டா? அதன் தண்டுகளிலும் தகிக்கும் வெய்யில் விழத்தான் செய்கிறது. ஆனால் அந்த வெய்யிலினால் தாமரைத் தண்டில் சூடேற்ற முடிகிறதா? அப்படிப்பட்ட சதாசுகரைப் போய்க் குறை சொல்ல முற்பட்ட நாம் என்ன ஜனங்கள்?'

கிராமத்து மக்கள் மனம் மாறி இவ்வாறெல்லாம் பேசிக் கொள்ளலாயினர். அன்று அப்படிப் பேசியவர்களா இன்று இப்படிப் பேசுகிறார்கள்? இவர்களுக்கு நாக்கு ஒன்றுதானா, அல்லது இரண்டா என்று சந்தேகப்படும் அளவுக்கு அவர்கள் அடியோடு மாறிப் போயிருந்தனர்.

ஆனால் சாருமதியும் ராமுவும் சென்றபிறகு சதாசுகரின் முகத்தில் மகிழ்ச்சி தாண்டவமாடவே இல்லை. மனத்தில் பழைய அமைதி நிலவவே இல்லை. இருவரும் விடைபெற்றுப் போகும்போது, அவருடைய மகிழ்ச்சியையும் அமைதியையும் தங்கள் கூடவே எடுத்துக்கொண்டு போய் விட்டார்கள் போலும்! சதா சர்வ காலமும் சதாசுகர் எதையோ பறிகொடுத்தவர் போலவே காணப்பட்டார். இப்பொழுதெல்லாம் அவர் எங்கேயாவது வெளியே சென்று வந்தால் அவரை எதிர்நோக்கி முன்னைப் போல் வாசற்படியிலேயே நின்று தவம் கிடப்பார் யாரும் இல்லை. இரவு வேளைகளில் அவர் எங்கேயாவது வெளியே புறப்பட்டால், 'சீக்கிரம் வந்து விடுங்கள்!' என்று அன்புக் கட்டளையிட்டு அனுப்புவாரும் இல்லை. அருகில் அமர்ந்து கொண்டு அவரைத் தன் மழலைமொழிகளால் யாரும் மகிழ்விப்பதில்லை. பிடிவாதம் பிடித்து, 'இதை வாங்கிக் கொண்டு வா, அதை வாங்கிக்கொண்டு வா!' என்று யாரும் தொந்தரவு செய்வதில்லை. வாயைக் கிளறி வழக்குச்சண்டைக்கு இழுத்து யாரும் வயிறு வலிக்கச் சிரிக்க வைப்பதும் இல்லை. வெளியிலே சென்று எவ்விதமான புகாரும் அவரிடம் எவரும் கொண்டு வருவதில்லை. இதெல்லாம் இல்லாமற் போகவே, சதாசுகரின் மனத்தை என்னவோ செய்தது: வாழ்க்கையே வெறிச்சோடி விட்டாற் போலத் தோன்றியது. குடியிருக்கும் குடிசையும் கசந்தது. குழந்தை குட்டிகள் இருந்து எப்பொழுது பார்த்தாலும் 'கலகல'வென்றிருந்த இடம், எல்லோரும் போய் விட்டால் வெறிச்சோடிப் போவது இயல்புதானே? ஒரு காலத்தில் அவருக்கு இந்தக்

குடிசைதான் அமர போகம் அளிக்கும் அரண்மனையாகத் திகழ்ந்தது; பிரேமை, தூய்மை, பிரகாசம் எல்லாம் அந்தக் குடிசையிலே தவழ்ந்து விளையாடிக் கொண்டு சொர்க்க போகத்தை அள்ளிச் சொரிந்து கொண்டிருந்தன. இப்பொழுது அவ் வீட்டை விட்டு அவை விடைபெற்றுச் சென்று விட்டன. ஆகவே, குபேர மாளிகையாகத் திகழ்ந்த அந்தக் குடிசை கொடிய மிருகங்கள் வாழும் காடாக மாறி விட்டது. அவருக்கு உலகமே தலைகுப்புறக் கவிழ்ந்து விட்டாற் போலத் தோன்றியது.

அடிக்கடி அவருக்கு லக்ஷ்மணபுரியிலிருந்து கடிதங்கள் வந்து கொண்டிருந்தன. 'சாருமதி எப்பொழுதும் வருத்தமே உருவாக இருக்கிறாள். ராமுவும் முன்போல் மகிழ்ச்சியுடன் காணப்படுவதில்லை. அடிக்கடி எதையாவது நினைத்துக் கொண்டு அழுகிறான். ஆனால் தங்களிடமிருந்து கடிதம் வந்து விட்டால் இருவருடைய முகங்களும் மலர்ந்து விடுகின்றன' என்று ஒரு கடிதம் வரும். 'எனக்குக் கவலையோ, வருத்தமோ கிடையாது. நான் சந்தோஷமாகத்தான் இருக்கிறேன். அவர்களையும் சந்தோஷமாக இருக்கச் சொல்லுங்கள்!' என்று சதாசகர் பதில் கடிதம் எழுதிப் போடுவார். 'நீங்கள் சாப்பாட்டுக்குக் கஷ்டப்பட்டுக் கொண்டிருப்பீர்களே!' என்று சாரு விசாரித்து எழுதுவாள். 'எனக்கு என்ன சாப்பாட்டுக்குக் கஷ்டம்? என் சமையலுக்கு உள்ள ருசியே தனி! என் கைச்சமையலைப் பற்றி உனக்கு என்ன தெரியும்? நீ நம்பினால் நம்பு; நம்பா விட்டால் போ. சமையல் ருசியாக இருக்கவே, எனக்குப் பசி அசாத்தியமாகி விட்டது!' என்று சதாசகர் அவள் கடிதத்துக்குப் பதில் எழுதுவார். வேறு ஒரு கடிதத்தில் சாருமதி, 'உங்கள் உடம்பு எப்படி இருக்கிறது?' என்று கேட்டு எழுதுவாள். 'என் உடம்புக்கு என்ன? சுகமாகத்தான் இருக்கிறேன். முன்பு நீ இங்கே இருந்தபொழுதுதான் இரவு பகல் உன் கவலையினால் என் உடம்பு தேய்ந்து வந்தது. கடவுள் கண் திறந்து உரியவனிடத்தில் உன்னைச் சேர்த்து விட்டபிறகு கவலை யெல்லாம் ஒழிந்து நான் ஒரு சுற்றுப் பருத்துக்கூடப் போய் விட்டேன்!' என்று பதில் கடிதம் அனுப்புவார் சதாசகர்.

இப்படியாகச் சில தினங்கள் வரை சாருமதியினிடமிருந்து கடிதங்கள் வந்து போய்க் கொண்டிருந்தன.

அருள் வாக்கு

நாம் நன்றாகப் பேசுகிறோம், எழுதுகிறோம். உலகம் புகழ்ந்து மாலை போடுகிறது. இந்த மாதிரி சமயங்களில் நமக்கு அகம்பாவம் பலமாக வந்து விடும். அப்போது சற்று யோசித்துப் பார்க்க வேண்டும். அந்தப் புகழ்ச்சிக்கு எல்லாம் உண்மையான தகுதி நமக்கு உண்டா? எல்லாம் அம்பாளின் அனுக்கிரகம் அல்லவா? எந்த இடத்திலிருந்து நமக்கு அந்த சக்தி எல்லாம் வந்ததோ, அந்த இடத்துக்கே நம் புகழ் நமது ஸ்தோத்திரம் அனைத்தையும் அர்ப்பணிக்க வேண்டும். அப்படிச் செய்வதன் மூலம் நம் அகம்பாவம் மறைந்து அன்னையின் அருள் கிடைத்து நாம் க்ஷேமத்தை அடைவோம்.

—ஸ்ரீ சங்கராச்சாரியார், காஞ்சி காமகோடி பீடம்

அதற்குப் பிறகு அவை நின்று போய் விட்டன. சதாசகர் பல கடிதங்கள் எழுதினார். எதற்கும் பதில் வரவில்லை. கடைசியில் ரிஜிஸ்தர் தபால் வேறு எழுதிப் பார்த்து விட்டார். அதற்கும் பதில் வராமற் போகவே, அவருக்கு எரிச்சல் எரிச்சலாக வந்தது. 'என்ன இருந்தாலும் சாருமதி பெண். கரம் பிடித்த கணவனிடம் போய்ச் சேர்ந்து வாழத் தொடங்கி விட்டாள். பெண்ணாய்ப் பிறந்தவர்களுக்குப் பெற்ற தாய் தந்தையர்கூடப் பெரிதாகத் தோன்றுவதில்லை. சாருமதியோ காலக் கோளாறினால் கொஞ்ச காலம் நம்மிடையே வந்து தங்கியவள். இப்பொழுது அஷ்டக் கிரகங்கள் விலகி அவளை அவளுடைய கணவனிடம் கொண்டு சேர்த்து விட்டன. இனி நம்மை நினைப்பாளா? மதிகெட்டுப் போய் நாம்தான் அவள் நினைவாக இருக்கிறோம். அதற்கு அவளா பிணை?' என்று மனத்தைத் எவ்வளவோ தேற்றிக் கொள்ளத் தான் முயன்றார். ஏன், அவளை மறந்து விட்டவர் போல் வெகு அலட்சியமாகவே கூட இருக்க முற்பட்டார். இருந்தாலும், இடையிடையே அவள் நினைவு எழுந்து அவர் மனத்துப் புண்ணைப் பசுமையாக்கி வருத்தத்தைக் கொடுக்கத்தான் செய்தது.

'நான் ஒரு சர்வ முட்டாள். என்னைப் போன்ற முட்டாள் இந்த உலகத்திலேயே இருக்க முடியாது. தொண்டுதான் பிரதானம் என்று வீட்டிலிருந்து புறப்பட்ட நான்

இங்கே வந்து அன்பு வலையில் சிக்கிக் கொண்டு அல்லலுற அல்லவா தொடங்கி விட்டேன்? பள்ளிக்கூடம் போகும் பொழுது வழியில் குரங்காட்டியின் வித்தைகளையோ மந்திரவாதியின் கண்கட்டுவித்தைகளையோ கண்டு ரசிப்பதற்காக நின்றுவிடுவானே, பள்ளி மாணவன்! அவனைப் போன்ற காரியம் செய்யும் நான் ஒரு முட்டாள்தானே?" என்று தமக்குத் தாமே முட்டாள் பட்டம் கட்டிக் கொள்வார். உள்ளத்தில் உறுதியான இடம் பெற்றுவிட்ட அவர்களை எப்படியாவது மறக்க வேண்டும் என்று முயன்ற சாதகருக்கு ஓரளவு வெற்றி கிட்டியிருக்க வேண்டும். இல்லாவிட்டால் பழைய நாட்கள் பழையபடி திரும்பி வருவது என்பது ஏது?

இப்பொழுது பழைய நாட்கள் மீண்டும் வந்து விட்டன. பழையபடி குடிசை 'கலகல' வென்று இருக்கத் தொடங்கியது. முன் போலவே யாத்திரிகர்கள் கூட்டமும் அவர் குடிசைக்கு வந்து போகத் தொடங்கியது. சாதகர் பழைய சாதகராகவே மாறி விட்டார். அவருடைய தொண்டு பழைய விதமே நடக்கத் தொடங்கியது. அதே நிச்சிந்தையான உறக்கம் அவரை ஆட்கொண்டது. இதே போல் ஒரு வருஷம் ஓடி விட்டது. மறுபடியும் வருஷாவருஷம் போலவே, குளிர்காலம் தொடங்கியது. மலைப் பிரதேசத்தின் மனோகரக் காட்சிகள் மங்கின. இந்த நாட்களில் சாதகரின் குடிசையைத் தேடி வரும் பிரயாணிகள் மிகமிகக் குறைவாகத்தான் இருந்தனர். சிற்சில சமயம் யாருமே வருவது கூட இல்லை. ஆகவே சாதகர் நாள் முழுவதும் உட்கார்ந்து ராமாயணமோ, கீதையோ பாராயணம் செய்யத் தொடங்கி விடுவார். மாலை வேளைகளில் வைஜநாத்தில் உள்ள பக்தி சிரத்தை நிறைந்த பலர் அவர் குடிசையை நாடி வருவார்கள். சாதகரின் சமீபத்தில் எரிந்து கொண்டிருக்கும் கும்மட்டிக்கு எதிரிலே குளிருக்கு இதமாக நெருங்கி உட்கார்ந்துகொண்டு அவரிடம் வேத சாஸ்திரங்களைப் பற்றிக் கேட்பார்கள்; ஞான யோகம் - கர்ம யோகம் - பக்தி யோகம் இவற்றைப் பற்றிப் பேசுவார்கள். அமிர்தவர்ஷமான அந்தப் பேச்சில் அவர்களுக்குப் பொழுது போவதே தெரியாது. 'சாதகரைப் போன்ற மகான் அருகில் இருக்கும் பாக்கியத்தைப் பெற்றோமே!' என்று அவர்கள் எண்ணி எண்ணிப் புளகாங்கிதம் அடைவார்கள்.

திடீரென்று ஒரு நாள் சாதகர், "நான் லக்ஷ்மணபுரிக்குப் போகப் போகிறேன்!" என்றார்.

அதைக் கேட்ட அவர்கள் மனத்துக்குள் பயந்து போய்க் கைகட்டி வாய் புதைத்து நின்றனர். 'இப்படி ஒரு குண்டைத் தூக்கிப் போடுகிறாரே! ஒரு வேளை இனி இவர் இந்த ஊருக்கே திரும்பிவர மாட்டாரோ?' என்ற சந்தேகம் அவர்களது புத்தியைப் பேதலிக்கச் செய்து விட்டது. ஆனால் நல்ல வேளையாகச் சாதகர் அவர்களை அதிகம் சோதிக்கவில்லை. "இன்னும் ஒரு வாரத்துக்குள் திரும்பி வந்து விடுகிறேன். கவலைப் படாதீர்கள்!" என்றார். அப்புறம்தான் அவர்களுக்குப் போன உயிர் திரும்பி வந்தது போலிருந்தது. (தொடரும்)

The following particulars regarding the ownership of the 'KALKI' the weekly newspaper, are published as called for by Rule 8 of the Registration of Newspapers (Central) Rules, 1956.

FORM IV

1. Place of Publication: Madras
2. Periodicity of its Publication: Weekly
3. Name of Printer & Publisher
   R. Ananthanarayanan

   Nationality: Indian

   Address: 20, Dr. Guruswami Mudaliar Road, Kilpauk, Madras-10
4. Name of the Editor:
   T. Sadasivam


   Nationality: Indian

   Address: 20, Dr. Guruswami Mudaliar Road, Kilpauk, Madras-10
5. Name and address of individuals who own the newspaper and partners or shareholders holding more than one per cent of the total capital

   Sri T. Sadasivam, 20, Dr. Guruswami Mudaliar Road, Madras-10. Srimathi M. S. Subbulakshmi, 20, Dr. Guruswami Mudaliar Road, Madras-10. Sri R. Ananthanarayanan, 20, Dr. Guruswami Mudaliar Road, Madras-10. Sri K. Rajendran, 62, Fourth Main Road, Gandhi Nagar, Madras-20. Sri M. P. Kalyanasundaram, 3, WaterWorks Colony Madras-10. Sri V. Vaidyanathan 15, Ramanathan Street, Thiagarayanagar Madras-17.

1-3-59

R. Ananthanarayanan
Publisher


Lakmé
டால்கம் பௌடர்
யூடி கோலான்
லிப்ஸ்டிக்
பேஸ் பௌடர்
டஸ்டிங் பௌடர்
Lakmé
லக்மே
அழகின் அலங்காரத்திற்கென
ப்ரஞ்சு முறையிலிருந்து
தயாரிக்கப்பட்ட சாதனங்கள்
Lakmé
லக்மே ஒரு டாடா தயாரிப்பு



உலகநாதனைக் காரர் சென்று இழுத்துச்சென்ற ஞானவி. "அட, கண்டக்டர்! உனக்கு பஸ் சார்ஜ் வேறு தண்டம் அழ வேண்டியிருக்கிறதே. எறித் தொலை!" என்று கூறியவாறே பீமநகர் செல்லும் வண்டியில் ஏறினாள். பெண்கள் பக்கமாக அவனையும் உட்கார வைத்தாள்.

பஸ் கிளம்ப ஆரம்பித்ததும், திடுதிப் பென்று பெண்கள் பலர் வந்து விடவே கண்டக்டர், "இந்தாம்மா! பையனை இந்தப் பக்கம் வரச் சொல். பெண்கள் ஒரு பக்கமாக இருக்கட்டும்" என்றான்.

ஆண்களுக்கு உரிய சீட்டில் உலகநாதன் உட்கார வந்தான். அவனுக்குப் பாம்பின் வாயிலிருந்து மீண்டது போன்ற ஆனந்தம். அன்றைக்குக் காருக்குள் கூட்டம் அதிகம். மேலும் பிரயாணிகள் வேறு வந்து குழுமி விட்டார்கள்.

"பையனுக்கும் எனக்கும் மாரியம்மன் கோவில் டிக்கெட் இரண்டு கொடு" என்று ஞானபெய்யம்மாள் காசைக் கொடுத்து டிக்கெட்டை வாங்கிக் கொண்டாள். பஸ் வேகமாகப் போய்க் கொண்டிருந்தது. அதன் வேகத்தால் பிரயாணிகள் இடம் விட்டு இடம் அசைந்து கொடுத்து ஆடிக் கொண்டிருந்தார்கள். தன் சித்தியின் கண்ணையே கணக்குச் செய்துகொண்டு வந்த உலகநாதன், சரியான சமயம் பார்த்தான். பாலக்கரை போலீஸ் திருப்பத்தில் வண்டிகள் அதிகமாக இருந்த காரணத்தால் பஸ் சற்று நின்றது. கண் இமைக்கும் நேரத்தில் முன் பக்கத்து வழியாக உலகநாதன் இறங்கி விட்டான். அவன் இறங்கியதை யாரும் கவனிக்கவில்லை. கார் தொடர்ந்து போய்க் கொண்டிருந்தது.

"ஐயோ! உலகநாதனைக் காணவில்லையே! காரை நிறுத்து. ஐயா!" என்று கத்தினாள் ஞானவி.

"வீட்டுக்குத் தானாக வருவான் அம்மா! ஏன் சத்தம் போடறே?" என்று எல்லோரும் சமாதானம் செய்தார்கள். ஆனால் அவள் யார் சொல்லையும் கேட்காமல் இறங்கிக் கார் வந்த வழியாகப் பின்னால் போனாள். இறங்கிய உலகநாதன் இறங்கிய இடத்திலா நின்று கொண்டிருப்பான்? சிட்டாகப் பறந்து போய் விட்டான்.

எப்படிப் போனாளோ, அப்படியே வீசிய கையும் வெறும் கையுமாகத் திரும்பி வந்தாள் ஞானவி.

"எங்கே அம்மா, அந்தப் பொடிப் பயல்?" என்று கேட்ட பொன்னுரங்கம் புளிய மிளார் ஒன்றைத் தயார் செய்து வைத்திருந்தான் உலகநாதனை அடிப்பதற்காக.

7. எமன் பொன்னுரங்கம்!

"டேய், பொன்னுரங்கம்! நீ நேரே டவுன் ஸ்டேஷனுக்குப் போய், அங்கே தாண்டவராய மாமனிடம் தகவல் சொல்லி விட்டு வா. உலகநாதன் பயலைத் தேட அவனால்தான் முடியும்!" என்று கூறினாள் ஞானபெய்யம்மாள்.

பொன்னுரங்கம் தன் தாய் மாமன் தாண்டவராயனை அழைத்து வருவதற்கு ஓடினான். சிறு பையனான சீனுவுக்கோ அழுகை அழுகையாக வந்தது.

• • •

பீமநகர் பஸ்ஸை விட்டு இறங்கிய உலகநாதன் திருச்சிச் சந்திப்புக்கு ஓட ஆரம்பித்தான். சித்தி தன்னைத் துரத்திப் பிடிக்க முடியாது என்பது அவனுக்குத் தெரியும். இருந்தாலும் இனம் தெரியாத பயம் அவனை அப்படி ஓட வைத்தது.

திருச்சிச் சந்திப்பில் பகல் நேரத்தில் கூட்டம் இருப்பதில்லை. அங்கே அவனைப் போன்ற சில சிறுவர்கள் கோலி ஆடிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் காசு வைத்து ஆடுவதைப் பார்த்தான். அவர்களில் எவரும் கவலைப்படுவதாகத் தெரியவில்லை. காசு வைத்து ஒன்பது குழிக் கோலி ஆடியே அவர்கள் காலம் கழிப்பதாக எண்ணினான். தொலைவில் ஒரு பஸ் வரவே, அவர்கள் ஆட்டத்தை அந்தரத்தில் விட்டு விட்டுச் சுமை தூக்குவதற்கு ஓடினார்கள். அந்தச் சிறுவர் கூட்டம் சுமை தூக்கிப் பிழைக்கும் கூட்டம் என்பதை உலகநாதன் அறிந்துகொண்டான்.

சிறிது நேரத்துக்கெல்லாம் பஸ்ஸில் கூலி தூக்கப் போன சிறுவர் கூட்டம் திரும்பி வந்து மீண்டும் ஒன்பது குழிக் கோலியில் பந்தயம் வைக்கத் தொடங்கியது. அவர்களுள் ஒருவன் உலகநாதனைப் பார்த்து, "நீயும் ஆடேன், காசு பந்தயம் காலணா" என்றான். 'பையன் கையில் காசு இருக்கும். பிடுங்கிக் கொள்ளலாம்' என்ற எண்ணம் அவனுக்கு.

"என்னிடம் பணமே இல்லை!"

"பார்த்தால் நல்லவனாக இருக்கிறாய். உன்னிடம் பணம் இல்லையா?"

"பணம் எப்போதும் நல்லவர்களிடம் இருக்காதாம்" என்று வேதாந்தம் பேசினான் உலகநாதன். சோம்பேறிச் சிறுவர்கள் அவன் வார்த்தையைப் புரிந்து கொள்ளவில்லை.

சூதாடிகள் தங்கள் வசம் இழுப்பதற்குத் தாமாகவே பணம் கொடுப்பார்கள். பின்னர் விளையாடி அத்தனையும் பிடுங்கிக் கொள்வார்கள். அப்படியே ஒருவன் பணத்தை எடுத்துக் கொடுத்தான்.

அதே வேளையில் டாக்ஸி டிரைவர் ஒருவன் தொலைவில் [ஹாரன் அடிக்கவே,

திருச்சி

மோர்சைக்கோட்டை ஓடி விட்டான். அவன் இடத்தைப் பிடித்து ஆடுவதற்கு ஒரு கை தேவைப்பட்டது. எதிர்க்கட்சி யான் "டேய், பையா! வாடா. காசு என் புறம். விளையாட்டு உன் பக்கம்" என்று கூட்டுச் சேர்த்துக் கொண்டான். உலக நாதனுக்கு இரவுவரை பொழுது போக வேண்டுமல்லவா? அதுவரை பசியை மறப்பதற்கு விளையாட்டு ஒன்றே துணை. எனவே, அவன் கோலிக்கா வாங்கி உருட்டினான். ஆடிப் பழக்கமே கிடையாது. ஆறும் மனசில் ஒரே சிந்தனை. வெற்றி பெற்றால் உடன் ஆடுபவன் தயவில் ஏதேனும் இரண்டு இட்டிலிக்குக் காசு வருமல்லவா?

சொன்னதைச் சொன்ன படியே எதிர்க் கட்சியான் சொல்லும் கோலி களைக் குறி வைத்து அடித்தான். முதல் ஆட்டம், இரண்டாம் ஆட்டம் கைதேர்ந்த ஆட்டக்காரன் போல் அடித்தான். தொடர்ந்து வெற்றிக்கு மேல் வெற்றி. எதிர்க்கட்சியிலுள்ள அறு எட்டு இவன் கட்சி ஆளிடம் சிக்கிக் கொண்டது. நிலைய ஆடி விட்ட எதிர்க் கட்சிக்குப் புதுப் பயலால் தங்கள் காசு போய் விட்டதென்று ஆத்திரம் மூண்டது; தோல்வியால் குரோதம் பிறந்தது. அவனை அடிக்க வேண்டும் என்று கறுவினர். தனக்குச் சம்பாதித்துத் தந்தான் என்பதற்காக நன்றி இருந்தது. இவன் கட்சிப் பையனுக்கு. ஆகவே அடி தடியே வந்துவிட்டது. ஒருவர் குடுமியை ஒருவர் பிடித்து அடித்துக் கொண்டார்கள்; கடித்துக் கொண்டார்கள். அடிப்பதைக் கண்டபோது அங்கிருந்து ஓடி ஒளிய வேண்டும் போல் இருந்தது உலகநாதனுக்கு. வீட்டை விட்டு ஓடி வந்தவன் கண்ணில் வெளியுலகம் கோரமாகக் காட்சி தந்தது. வெளியுலகம் இன்னும் அநாகரிகமாக இருப்பதை உலகநாதன் உணர்ந்தான். 'தலை பிழைத்தால் தம்பிரான் புண்ணியம்' என்று அவன் 'குட்ஷெட்' பக்கம் ஓட ஆரம்பித்தான்.

இதற்குள்ளாக, டாக்ஸிக்காரருக்கு வெற்றிலை பாக்கு வாங்கப் போன பயல் எதிரே வந்து பிடித்துக் கொண்டான்.



அருள் வாக்கு

புனிதமான கங்கை நதி கிழக்கு நோக்கி ஓடுகிறது. நர்மதை மேற்கு நோக்கிச் செல்கிறது. இப்படிப் பல நதிகள் பல்வேறு திசைகளில் சென்றபோதிலும் இறுதியில் எல்லையற்ற கடலில் இரண்டறக் கலக்கின்றன. அதுபோல் பரம்பொருள் ஒன்றே. நாம ரூபங்கள் பல. பாதைகளில் வேற்றுமை இருக்கின்றன. ஆட்கொள்ளும் வஸ்து ஒன்றே. அவ்வழியில் ஈடுபட்ட ஆழ்வார்களையும் நாயன்மார்களையும் வணங்குவோம். அவர்களது அன்பு ததும்பும் பாடல்களைப் பாடுவோம். ஆழமானதும் மலைபோல் கனமானதுமான ஞானம் படைத்த அவர்கள் திருவாக்கை அநுபவிப்போம். உண்மை ஆனந்தத்தை அடைவோம்.

—ஸ்ரீ சங்கராச்சாரியார்-காஞ்சிகாமகோடி பீடம்

ஒரு வேளை புதிய பையனுனை உலகநாதன் வெற்றி பெற்றுத் தன் நண்பர்களின் காசைப் பிடுங்கிக் கொண்டு போகிறானோ என்ற சந்தேகம் அவனுக்கு. எனவே, மறித்துப் பிடித்துக் கொண்டு சட்டையைப் பற்றி இழுத்து வந்தான். நல்ல வேளை அடி விழவில்லை. உலகநாதனுக்கு உலகத்துள்ளே பிடிக்காதது உதை. பையன் பார்த்த பார்வை அவனுக்குப் பீதியைத் தந்தது. அசல் சிங்கத்தின் அன்புப் பார்வைதான் அந்தச் சோதாவின் பார்வையிலும் தாண்டவமாடியது.

"டேய்! அவன் ஆடித்தாண்டா நமக்கு வெற்றி. அதனால் விட்டு விடு" என்றான் பின்னால் வந்தவன்.

தன் கட்சிக்கு வெற்றியைத் தேடித் தந்தான் என்பதற்காக அவனை விட்டுவிட மனம் இல்லை அவனுக்கு. புதுக்கோட்டை பஸ் ஸ்டாண்டு அருகில் ஒரு பயல் ஜம்பம் அடித்துக் கொண்டிருக்கிறானே. அவனை வெல்ல வேண்டும்; அந்த ஏணிப் பயலைத் திவாலாக்க வேண்டும் என்ற எண்ணம் ஓங்கியது. எனவே, உலகநாதனைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு, "டேய் கோஷ்டி! ஏணி இருக்கிறானே. அவனை ஜெயிக்க வேணுமடா" என்றான். துரத்தி வந்த எதிர்க் கட்சிகூட இந்த விஷயத்தில் ஒன்று சேர்ந்துகொண்டது.

"அடே, நம்ம கட்சிக்கு வெற்றி தேடித் தந்தானே. அதற்காக இவனுக்கு ஏதாச்சும் வாங்கிக்கொடு. கொடுத்தால் 'ஏணிப் பயல்' முதுகை நிமிர்த்தி விடலாம்" என்றான் ஒருவன். ஏகமனதாகத் தமக்கு அரைபணம் உதவுவது என்று திட்டம் போட்டனர்.

இந்தச் சிறுவர் கூட்டத்துக்குள்ள நன்றி அறிவுகூடச் சித்திக்கு இல்லையே என்று எண்ணினான் உலகநாதன்.

உணவருந்திய பின் அந்தக் கும்பல் ஏணிப் பயலை நாடிப் புறப்பட்டது. ஏணிப் பயல் ஒரு காலத்தில் கூலி தூக்கிச் சம்பாதித்தவன். அதைவிடச் சுலபமாகத் தன்னொத்த கூலிகளைக் கோலி ஆட்டத்துக்கு இழுப்பான். விளையாட்டில் அவர்களை வென்று வெகு சுலபமாகச் சம்பாதிக்கக் கற்றுக் கொண்டான். புதிதாக வருகிற சின்னப் பயல்களை மிரட்டியும் காலத்தைக் கழித்தான். முக்கியமாக அநாகமான கடைகளுக்கு ஒரு சில சுற்றுக் காரியங்கள் செய்து விட்டுச் சுகவாசியாக வாழ்கிற பையன் அவன். கூலிகளுக்குள் அவன் ராஜா; சோதாக்களுக்குள் அவன் சர்வாதிகாரி. அவனை எவ்வாறேனும் மடக்க வேண்டும் என்பது அவர்கள் திட்டம். அவர்களும் ஒரு காலத்தில் அவனுக்கு அடங்கி வாழ்ந்தவர்கள்தாம். வயது மீறியதாலும், அவ்வாறு மீறிக்கொண்டு வந்தவர்கள் ஒரு கூட்டமாகச் சேர்ந்ததாலும் அவனை எப்படியேனும் வெற்றி கண்டு மண்கவ்வச் செய்ய வேண்டும் என்பதை அவர்கள் தங்கள் வாழ்க்கையின் இலட்சியமாகக் கொண்டிருந்தனர்.

ஏணியின் தயவில்லாமல் அவன் ராஜ்ய பாரத்துக்குள் எந்தப் பயல் நுழைந்தாலும் காசு பறிபோய் விடும். மிரட்டித் தொலைவிலிருந்தபடியே கல்லை எடுத்து அடித்தால் கால் மூட்டு பெயர்த்துவிடும். குறியில் வல்லவன். கால் நீண்டிருந்ததால் 'ஏணி' என்ற காரணப் பெயர் பெற்றுவிட்டவன். தன்னை நோக்கிக் கூட்டமாக நாலு பேர்கள் வரவே அவன் நிமிர்ந்து பார்த்தான். அவர்களில் மூன்று பேர்கள் அவனுக்குத் தெரிந்தவர்கள். ஒருவன் மட்டும் தெரியாதவன். சிங்கத்தின் குகைக்குள் புகுந்து அதை வம்புக்கு இழுக்கும் குள்ள நரிகள்போல் நால்வர் தன்னை நெருங்கி வரவே, "யாருலே புதுப் பயல்?" என்றான் ஏணி.

"ஒன்பதாங்குழி ஆடலாம்; வருயா, ஏணி!" என்றான் ஒருவன்.

"ஏம்லே! பிளாட்பாரத்திலே பிக்பாக்கெட் அடிச்சீங்களா? அல்லது எங்கேயாவது தேட்டை போட்டீங்களா? கையிலே காசு துருதுருக்குதோ?"—ஏணி எழுந்திருக்காமல் சிம்மாசனத்துள்ளே அழுந்திக் கிடக்கும் ராஜகுமாரனைப் போல் பேசினான்.

"ஏணிகிட்டே பைசா கை!" என்றான் போண்டா சிரித்துக் கொண்டே.

"பைசா ஜதை!" என்று சீறினான் ஏணி.

ஏணி தன்னைச் சிலிர்த்துக் கொண்டு சிம்மம் போல் எழுந்து விட்டான். அவனிடம் காசு இருக்கிறது என்பதை அவன் எழுந்த தோரணையே கட்டியம் கூறியது. வந்த கூட்டத்துக்கு அடக்க முடியாத மகிழ்ச்சி. ஆரம்பமே கன ஜோர்!

"ஏலே! எவ்வளவு பந்தயம்? ஒரு ரூபாய்க்கு மேலே இருந்தால் வாங்க!" என்றான் ஏணி.

எல்லோரும் கூடிப்பேசினார்கள். ஆனால் அவர்களுடைய அந்த பாஷை ஞானம் உலகநாதனுக்குக் கிடையாது.

ஆட்டம் ஓரளவு பந்தயத்துடன் இறங்கி வந்து. தனக்கு இட்டிலி கொடுத்தவர்கள் கட்சியில் உலகநாதன் கோலி பிடித்தான்: உருட்டினான். ஏனி ஆரம்பத்தில் சிரித்தான். வரவரப் பல்லைக் கடித்தான். 'சொல்லுகிற|காலைப் 'பட்பட்' என்று அடித்துத் தொலைக்கிறானே இவன்!'

கோபம் வந்தால் பந்தயத்தின் அளவை உயர்த்தத் தோன்றும் அல்லவா? ஏனியின் கோபமும் உயர்ந்தது: பந்தயத்தின் அளவும் உயர்ந்தது. சடசடவென்று காசு கரையவே, ஆட்டத்தில் விறுப்பு கொண்டாலும் தன்னுடைய எதிரிகள் சிரிப்பது ஏனிக்கு அவமானமாக இருந்தது. போச்சு, ஒரு ரூபாய் பத்தணா போச்சு! எப்பொழுதும் அலட்சியமாகவும், குறியாகவும் ஆடுகிற ஏனிக்குக் குறி அத்தனையும் தவறியது. காசு போன கவலையோடு என்றைக்குமேதோல்வியையே அறியாத சிங்கம் தோற்றதைக் கண்டு எதிர்க்கட்சியாளர்களின் பரிகாசம் வேறு சேர்ந்துகொண்டது.

"என்டா! இவனை எங்கேடா கண்டு பிடித்தீர்கள்?" என்று அதிசயப்பட்டான் ஏனி.

"காசு இருக்கா, இல்லையா?"

"கடன் சொல்லி ஆடலாம்."

"கடனுக்கு நாங்கள் ஆடுவதில்லை" என்றான் கூட்டத்துக்குள்ளே நின்றபோக்கிரி மந்திரி. இதற்குள் ஒரு பயல் கண் காட்டினான். ஏனிக்கு வெறி பிடித்தால் பலவந்தமாகக் காசைப் பிடுங்கிக்கொண்டு விடுவான். அதனால் போக்கிரி மந்திரியாக இருப்பவனுக்கு ஓட்டப் பந்தயத்தில்



அதிகப் பழக்கம் இருக்க வேண்டும். பையன் கண் காட்டவே போக்கிரி மந்திரி ஓட்டம் பிடித்தான். தெற்கே திண்டுக்கல் பாதையில் அவன் ஓட ஆரம்பித்ததும் ஒவ்வொரு திசைக்கு ஒரு பயலாக ஓடினார்கள். உலகநாதன் தனியாக விடப்பட்டான். அவனுக்கு எங்கு ஓடுவதென்றும் வழி தெரியாது; பாதை தெரியாது. எனவே அவன் 'திருதிரு'வென்று விழித்தான்.

ஏணிக்கும் பணம் போன கவலை. அதை விடச் சின்னப் பயலிடம் ஏமாந்து போகும் படியாகி விட்டதே என்ற அவமானம். ஆனால் அந்தச் சின்னப் பையனோ திரு திருவென்று விழித்துக் கொண்டிருந்தான். அதைக் கண்டதும் அவனுக்கு என்றுமே இல்லாமல் பரிதாப உணர்ச்சி ஏற்பட்டு விட்டது. "நீயும் ஓடேண்டா!" என்று கூறினான். இருந்தாலும் உலகநாதனுக்குப் பயம்.

"நான் அவர்களோடு வரவில்லை. என்னைப் பயமுறுத்தி அழைத்து வந்தார்கள்!" என்றான் உலகநாதன் அழமாட்டாமல்.

"டேய், தம்பி! நீ நல்ல பையனாக இருக்கிறாய். சூதாடிக் கெட்டுப் போகாதே. வீடு இருந்தால் வீட்டுக்குப் போய்ச் சேர். இந்தப் பயல்கள், ஏன், நான் கூடப் பொல்லாதவன். படிச்ச பிள்ளையாக இருக்கிறாய். எங்களைப் போல் அனாதையாக வரக்கூடாது. நாங்கள் தாய் தந்தையரின் ஆதரவு இல்லாமல் வந்து விட்டோம். ஒரு சமயம் போலீசாருக்கு வேறு வேலை கிடைக்காவிட்டால் எங்களைப் பிடிக்க வருவார்கள். கொண்டு போய்ச் சிறுவர் ஜெயில் இருக்குதாம். அங்கே போடுவாங்களாம். அதனாலே ஜாக்கிரதையாகத் தப்பிப்போய் அவரோடு இருக்கணுமே. எனக்குள்ள ஆசை ஒன்று. நான் என்னமோ முட்டாள்தனமாக மரத்தடியிலே கிடக்கிறேன் என்று எண்ணுகிறாய். நான் இருக்கிறது எதற்குத் தெரியுமா? இட்டே வா. அதோ பார்! அந்தக் கிளையில் ஒரு கறுப்புக் கயிறு தெரியுதா? அதற்குமேல் மரால் வலை இருக்குதா?" என்றான் ஏணி.

"குரங்கு பிடிப்பதற்குக் கண்ணி வைத்திருக்கிறாயா?"

"ஆமாடா! அது கிடைச்சு விட்டால் எனக்கு இனிமேல் கவலை கிடையாது. குரங்கை ஆட்டிக் கொண்டு அப்பாவி மனிதர்களையும் சின்னஞ்சிறு பிள்ளைகளையும் அதற்கேற்றபடி ஆட்டி ஆனந்தமாகக் காசு சம்பாதிப்பேன்" என்றான் ஏணி. அவன் அப்படிச் சொல்லிக் கொண்டிருந்தபோது, 'வீச் வீச்' சென்று குரங்கு ஒன்று கத்தத் தொடங்கியது. மறுகணம் ஏணி பரபரப்பாக மரத்தில் ஏற ஆரம்பித்தான்.

"டேய், பயலே! நீ வந்த சமயம் நல்ல சமயமடா. குரங்கு விழுந்து விட்டது" என்றபடியே உயரப் போனான்.

இந்தச் சமயத்தைப் பயன்படுத்திக் கொண்டு, முன்பே பயந்து கொண்டிருந்த உலகநாதன் ஓட்டம் பிடித்தான். அவன் ஓட்டம் ரயில்வே சந்திப்புக்குள்தான் போய் நின்றது.


ஒலிபெருக்கி அலறிக்கொண்டிருந்தது. அதைவிட அதிகமான ஸ்தாயியில் பிடிபட்ட குரங்கு மரத்தில் அலறிக் கொண்டிருந்தது. பிறர் தன்னைப் பார்க்காத வண்ணம், மாதாகோவிலுக்குப் பின்னால் போய்ப் படுத்துத் தூங்கிக்கொண்டிருந்த உலகநாதன் கண் விழித்து எழுந்து பார்த்தான். எங்கும் தலைகளாகத் தெரிந்தன. 'இத்தனை பெரிய கூட்டம் இங்கு என்ன செய்யப் போகிறது?' உலகநாதன் சிந்தித்து ஒரு முடிவுக்கு வருவதற்குள்ளாக மேடை மீது பேச்சாளர் பேச ஆரம்பித்து விட்டார். மெதுவாக ஆரம்பித்த அவர் பேச்சு போகப் போகச் சூடு பிடித்தது. கொடை இடியாகக் கர்ஜிக்கலானார்.

"தோழர்களே! உழைப்பவனைக் கேவலமாக எண்ணுகிறீர்கள். அவன்தான் சமூகத்தின் முதுகெலும்பு. தானாக உழைத்து உண்பவனே பெரியவன். பிறர் பிழைப்பை, பிறர் பணத்தைச் சுரண்டித் தின்பவன் மிருகம். மிருகத்தைக் காட்டிலும் கொடியவன்!" — பிரசங்கியின் பேச்சு உலகநாதனின் சிறிய மூளையில் சிறிதும் ஏறவில்லை. ஆனாலும் 'உழைக்க வேண்டும்; உழைத்தால் உயரலாம்' என்ற எண்ணம் சிறிது வேர் ஊன்றியது.

பேச்சாளர் பேசப் பேச அவன் பிஞ்சு உள்ளத்தில், 'வாழவேண்டுமானால் காசு வேண்டும்; காசுக்கு வழி உழைப்பது; அல்லது உழைத்து வைத்திருப்பவர்களை ஏமாற்றுவது என்ற எண்ணம் பிறந்தது. ஆனால் அவ்வாறு ஏமாற்றுவது தவறு என்றும் தோன்றியது.

அப்பொழுது கூட்டத்தில் சலசலப்பு ஏற்பட்டது. யாரோ ஒருவர் மணிபர்சைத் தவற விட்டுவிட்டார். 'பிடி, பிடி' என்ற கூச்சல் எழுந்தது. உலகநாதனுக்குப் பயமாகிவிட்டது. காரணம், பர்ஸ் பறிபோன பகுதியிலிருந்து கூட்டத்தில் அவனோடு கொள்ளையடிச்ச பயல்களில் இரண்டொருவர் வெளியேறினர். அவர்கள் தன்னிடம் பர்ஸைக் கொடுத்துத் தன்னைச் சிக்க வைத்து விட்டால்!......

இந்த எண்ணமே அவன் தலையைச் சுழல வைத்தது. அவனுக்கு மேடையில் இன்னும் என்ன பேசுகிறார்கள் என்று கேட்க ஆசைதான். எப்படியும் அங்கிருந்து தப்ப வேண்டும் என்ற எண்ணம் எழவே எழுந்தான். 'அதற்குள் அதோ தெரிந்த முகம் ஒன்று வருகிறதுபோலிருக்கிறதே! அட, சிறுப்பயல் அல்லவா வருகிறான்? கூட்டம் சிதறிச் சிறுப்பயலை மிதித்து விட்டால்?......அவனைப் போய் எப்படியாவது காப்பாற்ற வேண்டும்.' இந்த எண்ணம் எழுந்ததுதான் தாமதம்; உலகநாதன் மெதுவாகக் கூட்டத்துக்குள்ளே நுழையப் போனான். மறுகணம் திரும்பிப் பார்க்காமல் எடுத்தான் ஓட்டம்; சிறுப்பயலுக்குப் பின்னால் எமன் போன்று ரங்கம் வந்து கொண்டிருந்தான். (தொடரும்)


ஸாண்டோஸ்
காப் ஸிரப்
இருமலுக்கு இதமளிக்கிறது
ஸ்விஸர்லாந்து நாட்டு ஸாண்டோஸ் ஆராய்ச்சி சாலையின் மருந்துச் சரக்கு.
SANDOZ
SANDOZ COUGH SYRUP

SCS.P. 2-50 T.M.

நாட்டு வைத்தியம்

— ஸ்ரீ ஹரி —

92. பேன் – 2

ஆம்! முன் அத்தியாயத்தில் சொன்னது போல் சொட்டச் சொட்டத் தலைக்கு எண்ணெய் தேய்த்துச் சீப்பினால் முடி சீவினாலும் - எள்ளுச் செடியைக் காய வைத்துத் தட்டினாலும் எள் உதிர்வது போல, பேனெல்லாம் ஜாரி ஜாரியாக இறங்கி விடும். ஒழுகும் எண்ணெயுடன் வழிந்துக் களையப்படும். இவ்விதம் மிகப் பெரிய அளவுக்குப் பேன்களைத் தொலைக்கலாம்.

முடியெல்லாம் பழம் புளிபோல் அடை அடையாயும் ஜடை ஜடையாயும் ஒட்டி நிற்கும் நிலையில், முடி சீவுதல் எப்படிச் சாத்தியப்படும் என்கிறீர்களா?

இவ்வித உச்ச நிலையை அடையும் முன்பே மேற்சொன்னவிதம் முடி சீவலாம். அல்லது இவ்வித நிலைமை ஏற்பட்டுவிட்டாலும், செய்யக்கூடிய சிகிச்சை ஒன்று உண்டு.

மரக்காளஞ் செடி என்பது ஒரு முட்செடி. ஏறத்தாழக் காரைச் செடியைப் போலிருக்கும். அச்செடியைப் போல் நீண்ட கூரான முட்கள் நிறைந்திருக்கும். அசைப்பில் பார்த்தால் இது செடியா கொடியா என்று ஒரு சந்தேகமும் எழும். இதைக் கொண்டு வந்து மிக ஜாக்கிரதையாக இதன் முட்களைப் போக்கி — மேற்பட்டையை மட்டும் எடுத்துக் கொள்ள வேண்டும். இந்தப் பட்டையைத் தண்ணீர் விட்டு அம்மியில் அரைத்து வெந்நீரில் கரைத்துக் குழம்பாக்கி, தலையிலும், முடியிலும் - கூடுமானவரையில் 'அடை' 'ஜடை' களைப் பிரித்துப் பிரித்துத் தடவிச் சற்று நேரம் விட்டுவிட வேண்டும். பிறகு கொஞ்சம் கொஞ்சமாக ஜலம் தெளித்து முடிகளை - கசக்கிக் கசக்கிச் சுத்தமாக்கி, வெந்நீரிலோ தண்ணீரிலோ அலசி விட்டுக் குளிக்க வேண்டும். உடனே தலை முடிகளை துணியினால் துவட்டிச் சுத்தமாக்கி-சாம்பிராணிப் புகை காட்டி முடியை உலர்த்திவிட வேண்டும். இப்படி இரண்டு மூன்று முறை ஒரு வாரத்துக்குள் செய்தால் அந்த ஒட்டிக் கொண்டும் பழம் புளி-அடை - ஜடையெல்லாம் போய்....முடிகள் பொல பொல வென்று ஒன்றோடு ஒன்று ஒட்டாமல் இருக்கும் நிலை வரும். பிறகு பேனைப் போக்க மேற்சொன்ன விதம் எண்ணெயைத் தேய்த்து வரலாமே!

சுத்தமான படுக்கையில் - சுத்தமான தலையணை விட்டு இரவில் படுக்க வேண்டும். படுக்கப் போகும் முன்பு தலையணையின் மீது கொஞ்சம் துளசித் தழை - அல்லது கருந்துளசியின் இலை இவற்றில் ஒன்றைப் பரப்பி, மேலே தலையணையை வைத்து அதன்மேலே ஒரு வெளுத்த துண்டை விரித்துத் தலை வைத்துப் படுத்துக் கொள்ளவும். துளசியின் நெடி தாளாமல் பேன்கள் தவிக்கும். ஒளியத்தான் தலையில் [illegible] புளி, அடை, ஜடை என்பதொன்றும் இல்லையே! ஆகவே, இப் பேன்கள் தப்பினால் போதுமென்று தலையிலிருந்து இறங்கி வெளியேற முற்படும். தலையணையின்மேல் விரித்துள்ள வெளுத்த துணியில் ஜாரி ஜாரியாய்ப் போய்க் கொண்டிருக்கும் நிலையில் அவ்வப்போது துணியை வீட்டுக்கு வெளியே கொண்டு போய் உதறிச் சுத்தமாக்கிக் கொண்டு வந்து மறுபடியும் தலையணையின் மேல் விரித்துப் படுப்பது - அல்லது வேறு துணியை விரித்துப் படுப்பது. அதிலும் பேன் திரும்பி விடுமானால் மேற்சொன்ன விதமே செய்வது. இப்படிப் பலமுறை செய்தால் மிக மிகச் சுலபமாகப் பேன்களைப் போக்கலாம். ஈர்களெல்லாம் பொரிந்து போய்விடும்.

இவ்விதமே செய்யக் கூடிய வேறொரு சிகிச்சையும் உண்டு. கம்மார் வெற்றிலை என்றும் கறுப்பு வெற்றிலை என்றும் சொல்லும் 'கும்பகோணம் வெற்றிலை' யின் ரஸத்துடன் - பாதரஸத்தையும் சேர்த்துக் குழைத்தெடுத்த குழம்பைத் தலை - முடிகளில் நன்றாய்ப் பூசித் தலையணையின் மேற் சொன்ன விதம் சற்று நேரம் படுத்திருந்தால் போதும். ஆச்சரியப் படும் விதத்தில் பேனெல்லாம் துணியில் வந்து சேர்ந்து விடும்.

எச்சரிக்கை:—இம்மருந்தை உபயோகிக்கும்போது ஒருவிதத்தில் ஜாக்கிரதையாயிருத்தல் அவசியம். தப்பித் தவறி இம் மருந்து நாம் அணிந்துள்ள பொன் நகைகளில் பட்டால் பாதரஸம் பொன் நகைகளின்மேல் வெள்ளிப் பூச்சு போல் ஒட்டிக் கொள்ளலாம். பிறகு

புதியதொரு தொல்லை. ஆகவே மூலவித இடக்குக்கு இடம் தராத முறையில் வேண்டிய முன் ஜாக்கிரதையுடன் இருக்கவும்.

காட்டு ஜீரகம் என்று ஒரு கடைச் சரக்கு. ஏறத்தாழ ஜீரகத்தைப்போலவே இருக்கும். ஆனால் சிறிது கறுப்பாக இருக்கும். ஒரு நுனியில் சிறிது வெளுப்பான ஒரு பொட்டு வைத்தது போல் இருக்கும். இச் சரக்கைச் சிறிது தேங்காயெண்ணெயும் எலுமிச்சம் பழ ரஸமும் விட்டு அரைத்துக் கரைத்துக் குழம்பாக்கி-பால் மிளகு தேய்ப்பதுபோல் தலையிலும், முடியிலும் தடவி ஊறிக் குளித்தால் பேன் ஈர் யாவும் அறவே ஒழியும் என்று சித்தர் வகுத்த தமிழ் நூல்களிலிருந்து கிடைக்கிறது.

காக்கைக் கொல்லி என்று கொட்டை இருக்கிறதாம். இதற்கு நஞ்சுக் கொட்டை என்றும் பேன் கொட்டை என்றும் வேறு பெயர்களுண்டாம். அம்ரிட்டா கோகுலஸ் என்று லத்தீன் பாஷையிலும், இந்தியன் பெர்ரி என்று ஆங்கிலத்திலும், காகமாரி என்று தெலுங்கிலும், காக்கக் கொல்லி—நஞ்சிக்குரு என்று மலையாளத்திலும், காகமாரிபீஜ என்று கன்னடத்திலும் இதற்குப் பெயராம்.

இது இலங்கை, மலையாளம், பர்மா முதலிய இடங்களில் வளரும் ஒருவகைச் செடி. இதன் கொட்டையைக் காய வைத்துக் கடைகளில் விற்பதுண்டு. பார்ப்பதற்குச் சுண்டைக்காய் போல் இருக்கும். ஆனால் மேல்தோல் கறுத்துச் சுருங்கி இருக்கும். இதன் உள், பருப்பு மஞ்சள் நிறமாகவும் நெய்ப்பசையுள்ளதாகவும் இருக்கும். இது கொடியதொரு நஞ்சு. இதைச் சோற்றுடன் கலந்து காக்கைக்கு வைக்க அது அச்சோற்றைத் தின்றவுடன் இறக்கும். ஆகவே இதற்குக் காக்கைக் கொல்லி என்ற பெயர் ஏற்படலாயிற்று.

இந்தக் கொட்டையின் பருப்பை நன்கு பொடி செய்து நீர் விட்டு அரைத்துத் தலையில் தேய்த்து முழுகினால் பேன்கள் ஒழியும். இதுவும் நமக்குச் சித்தர்கள் சமைத்த தமிழ் நூல்களின் வாயிலாகக் கிடைக்கிறது.

எச்சரிக்கை:—இது கொடிய விஷம் என்பது நினைவில் இருக்கட்டும்.

இவ்விதமாகப் பேன் ஈர்களைப் போக்கலாம். முடியும் மழமழப்பும் மினுமினுப்பும் பெற்று மிருதுவானதாகவும் பட்டு-வெல்வெட்டு போலவுமாகும். ஆனால் மறுபடியும் பேன் வாராமல் இருக்கவேணுமே! அதற்கென்ன செய்ய வேண்டும் என்ற கேள்வி பிறக்கிறதல்லவா? இதற்குக் கொஞ்ச காலம் வரையிலும் ஜம்பீராதி தைலம் என்ற தைலத்தை முடி சீவிக் கொள்வதற்குத் தடவ வேண்டும்.

ஜம்பீராதி தைலம். எலுமிச்சம் பழச் சாறு (வடிகட்டிச் சுத்தமாக்கினது) 16 அவுன்ஸ், ஊமத்தை இலைச்சாறு 8 அவுன்ஸ், கரிசிலாங்கண்ணியின் சாறு 8 அவுன்ஸ், தேங்காய்ப் பால் 16 அவுன்ஸ், தேங்காய் எண்ணெய் 16 அவுன்ஸ், இவற்றுடன், ஜாதிக் கோஷ்டம் 2 தோலா, கார்போகரிசி, என்னும் அதிமதுரம் வகைக்கு ஒரு தோலா—இவற்றைக் கல்கமாய் அரைத்துச் சேர்த்துக் காய்ச்சவும். மணல் பாகத்தில் தைலத்தை இறக்கி வடிகட்டி முன் சொன்னவிதம் உபயோகித்து வரவும்.

தாடங்கமஹிமா—

கல்கத்தாவில் இருந்தும் கேரளத்திலிருந்தும் இரண்டு சகோதரிகள் கேட்டிருந்த விஷயம். சமீபத்தில் சென்னை வாசியான ஒரு குழந்தையும் இதே விஷயத்தைப் பற்றிக் கேட்க வந்திருந்தாள்.

காதில் தோடு போட்டுக் கொண்டால் போதும். உடனே புண்ணாகி விடும். ''ஆசைப்பட்டு வாங்கின வைரத் தோட்டை இரண்டு தினங்கள் கூடப் போட்டுக் கொள்ளவில்லையே!'' என்று கல்கத்தா சகோதரி எழுதியிருந்தார். இதே போலத்தான் கேரளத்துச் சகோதரியும் எழுதியது. சென்னைவாசியான குழந்தை பள்ளிக்குச் செல்லும் சிறுமி. வைரத்தோடு அணிபவளல்ல. ஆனாலும், பொன்னு(லா)லான தோட்டைப் பூணுவதில் இந்தத் தொந்தரவு.

குக்கில்நவநீதத்தைப் போடும்படி சொன்னேன். எருமையின் வெண்ணெயில் நிலப்பூசணிக்கிழங்கை (பசையாக) அரைத்துச் சேர்த்து, ஒரு வாரம் தான்ய ராசியில் வைத்திருந்து எடுத்து மேற்பூச்சாக உபயோகிக்கும்படி வெளியூர் சகோதரிகளுக்குத் தெரிவித்திருந்தேன். இப்போது எல்லோருக்கும் உதவக் கூடிய ஒரு மருந்தைச் சொல்கிறேன்.

செம்மண்ணைத் தண்ணீரில் கரைத்து வடிகட்டி எடுக்கவும். அந்த ஜலத்தை வெய்யிலில் காய வைத்துமண் உருட்டும் பாகத்தில் வரும்போது, அதை ஊசி போல் திரியாக்கி, காது குத்தியுள்ள துவாரத்தில் ஈர்க்குச்சிபோல் போடவும். பிறகு காதின் முன்பக்கம் பின்பக்கங்களில் அதைத் தட்டையாக அழுக்கி விட்டு, அவசியமானால் இன்னும் சிறிது அம்மண்ணையே பொட்டுப்போல் வைக்கவும். மறுநாள் கழுவி விடலாம். இப்படியே தினந்தோறும் கொஞ்ச நாட்கள் செய்தால் புண் ஆறி விடும். மறுபடியும் வரவும்செய்யாது. (தொடரும்)

ஜிம்மியின் "லிவர்க்யூர்"

குழந்தைகளின் சால் குலைக்கட்டி வியாதிகளுக்கு

மாதாந்திர விஜயம்

எமது வாடிக்கையாளர்களின் நலனையும், சௌகரியத்தையும் முன்னிட்டு எமது டாக்டர் கீழ்க்கண்ட இடங்களில் ஒவ்வொரு மாதமும் குறிப்பிட்ட தேதிகளில் விஜயம் செய்வார். அப்பொழுது அவரை நேரில் கண்டு ஆலோசிக்கலாம்.

இடம்	தேதி	நேரம்	விலாசம்
கரூர்	1	9 to 11 காலை	சென்ட்ரல் மெடிகல் ஸ்டோர்ஸ்
சேலம்	2	9 to 11 காலை 3 to 5 மாலை	சாந்திநிகேதன் (கோயமுத்தூர் லாட்ஜ், பிராஞ்சு)
ஈரோடு	3	9 to 11 காலை	நவபவனம் லாட்ஜில் (கோஷா ஆஸ்பத்திரிக்கு எதிரில்)
திருப்பூர்	3	3 to 5 மாலை	ஆர். எஸ். வாசன் & கோ. கெமிஸ்ட்ஸ்
கோயமுத்தூர்	4	9 to 11 காலை 3 to 5 மாலை	எல்வர் & கோ., (நாடார் மான்ஷன்) 189, ரங்கைய கவுடர் தெரு
பாலக்காடு	5	8-30 to 11-30 காலை	நாதம் & கோ., மெடிகல் ஷாப்
பொள்ளாச்சி	5	2-30 to 3-30 மாலை	எஸ். எஸ். மணி & கோ., மெடிகல் ஷாப்
உடுமலைப்பேட்டை	5	4-30 to 5-30 மாலை	ராஜேந்திரா & கோ., மெடிகல் ஷாப்
பழனி	5	6-30 to 7-30 இரவு	சண்முகானந்த பவன், ரயில்வே பீடர்ஸ் ரோடு
திண்டுக்கல்	6	9 to 11 காலை	வி. ஆறுமுகம் பிள்ளை & சன்ஸ் ஜெனரல் மர்ச்சன்ட்ஸ்
பெரியகுளம்	6	2-30 to 3-30 மாலை	யூனியன் மெடிகல் ஸ்டோர்ஸ், தென்கரை ரோடு
மதுரை	7, 8 & 22	9 to 11 காலை 3 to 5 மாலை	ஏ. எஸ். வி. நாகலிங்கம் பிள்ளை & சன்ஸ் கெமிஸ்ட்ஸ், வடக்கு சித்திரை வீதி
விருதுநகர்	9	8 to 9 காலை	சரவணமுத்துப்பிள்ளை சத்திரம், மதுரை ரோடு
கோவில்பட்டி	9	10-30 to 11-30 காலை	தனலக்ஷ்மி மெடிகல் மார்ட், கெமிஸ்ட்ஸ்
தூத்துக்குடி	9	3 to 4 மாலை	தூத்துக்குடி மெடிகல் ஸ்டோர்ஸ்
திருநெல்வேலி	10	9 to 11 காலை 3 to மாலை	சந்திரவிலாஸ் ஹோட்டல் திருநெல்வேலி ஜங்ஷன்
நாகர்கோவில்	11	9-30 to 11-30 காலை	என். திரவியம், கெமிஸ்ட்ஸ் & டிரக்கிஸ்ட்ஸ்
ஸ்ரீவைகுண்டம்	11	4 to 5 மாலை	கோமதி நாயகம் பிள்ளை, மெடிகல் ஷாப்
அம்பாசமுத்திரம்	12	8-30 to 10-30 காலை	கோமதி மெடிகல் ஸ்டோர்ஸ், கெமிஸ்ட்ஸ்
தென்காசி	12	12 to 2-30 மாலை	எஸ். இருதயம் & கோ., மெடிகல் ஸ்டோர்ஸ்
திருவனந்தபுரம்	13	9 to 11 காலை 3 to 5 மாலை	எம். வி. கணபதி ஐயர் & சன்ஸ், அட்டக்குளங்கரை
ராஜபாளையம்	14	9 to 11 காலை	வி.எஸ். திருப்பதி ராஜா, ஜெனரல் மர்ச்சன்ட்
ஸ்ரீவில்லிபுத்தூர்	14	12-30 to 1-30 மாலை	ஏ.பி.வி.டி.எ. தோராம கோனார் & கோ., பித்தளை பாத்திரம் வியாபாரிகள்
காரைக்குடி	15	9 to 11 காலை 3 to 5 மாலை	ஏ. வி. & சன்ஸ், டிராவலர்ஸ் ரெஸ்ட் ஹவுஸ்
சிவகங்கை	16	8-30 to 9-30 காலை	மீனாட்சி & கம்பெனி, கெமிஸ்ட்ஸ்
தேவகோட்டை	16	11 to 12 பகல்	ஸ்ரீ மீனாக்ஷி ஸ்டோர்ஸ்
புதுக்கோட்டை	16	3 to 5 மாலை	வசந்தா லாட்ஜ்

ஜிம்மி வெங்கடரமணய்யா & சன்ஸ்

சென்னை திருச்சிராப்பள்ளி கும்பகோணம்



தன் தோழியைக் கவர்ந்த அழகன் தனக்குக் கணவனுக வாய்த்தானே என்று கமலா பூரித்துப் போயிருந்தாள் கடைசியில் அது பொய்யான பூரிப்பு என்பதை அறிந்தபோது....?

விசித்து விசித்து அழுதுகொண்டே வந்தாள் குழந்தை ராஜி! அவள் என் பக்கத்து வீட்டுப் பெண்.

இருபது வருஷத்திய தாம்பத்திய உறவிலே ஒரு குழந்தைக்காகக் காலமெல்லாம் தவம் கிடந்தும், ஒன்று பெறக் கொடுத்து வைக்காதவளாகிவிட்ட நான், இப்போது பதியையும் பறி கொடுத்தவளாகிப் பிறந்தகம் திரும்பி யிருக்கிறேன். இந்த வேளையில் அந்தச் சிறுமி தான் எனக்குப் பெரும் ஆறுதல்! அடுத்த வீட்டில் ஏழெட்டுக் குழந்தைகளுக்கு மத்தியிலே பிறந்து அதனுல் போதிய அரவணைப்புக் கிட்டாமல் ஏங்கும் அந்தப் பிஞ்சு நெஞ்சமும் புண்பட்ட என் பேதை மனமும் இவ்வாறு இரண்டறக் கலந்து உறவாடலுற்றது இயற்கைதானே?

எனவே, அன்று அவள் அழுதுகொண்டே வந்ததைப் பார்த்தவுடன் நான் பதறிப் போனேன். ஆர்வத்துடன் அவளை அள்ளி அணைத்துக்கொண்டு இன்மொழிகள் கூறித் தேற்ற முயன்றேன். அவளோ என் கழுத்தை இறுகக் கட்டிக்கொண்டு, "ஊம்....ஊம்... எங்க அம்மா இன்றைக்குக் காவேரிக் கரைக்குச் சாமி பார்க்கப் போகலியாம். என்னை நீங்கதான் அழைச்சுக்கிட்டுப் போகணும், அக்கா!" என்று உருக்கமாகக் கெஞ்சினுள் விசும்பல்களுக்கிடையே.

அன்று எங்கள் ஊர் குளித்தலையில் தைப் பூசத் திருவிழா. கடம்பர் கோயிலுக்கு எதிரே காவேரிக் கரையில் நிறைந்த மணல் வெளியில் தனித்தனியே பந்தல் வேய்ந்து சுற்றுப்புறத் தேவாலய மூர்த்திகளெல்லாம் எழுந்தருளித் தரிசனம் அளிக்கும் கோலாகல உற்சவம். முன்னிரவுப்போது. எங்கு பார்த்தாலும் ஒரே கூட்டம். நிலவொளியும் தென்றலும் வேறு திருவிழாக் குதூகலத்தை இன்னும் அதிகமாக்கின. இன்பத்தோடு பக்தியைக் குழைத்து அநுபவித்துப் பெரிதும் மனச்சாந்தி அடைவதற்கேற்ற அரிய சந்தர்ப்பம். ஆனுல் இதிலே நான் பங்கெடுத்துக் கொண்டு எத்தனை வருஷங்கள் ஆகின்றன! அடேயப்பா! ஒன்றல்ல, இரண்டல்ல. முழுதாக இருபது ஆண்டுகள் அல்லவா ஆகின்றன!





மனத்திலே பழைய நினைவுகள் புரண்டு என்னைச் சற்றுக் குழப்பியது. ஆகவே அமைதி கலைந்த உள்ளத்தோடு, அம்மோதும் ஜனத்திரள் திரும்பிய திசையெல்லாம் என்னையும் அறியாமல் பின்பற்றியவாறு நான் நடந்து கொண்டே இருந்திருக்கிறேன். ராஜியும் என் கையைப் பத்திரமாகப் பிடித்துக் கொண்டுதான் கூடவே வந்து கொண்டிருந்தாள். இருந்தும், குழந்தை....பாவம்....! திடீரென்று ஏதேனும் கடை கண்ணியைக் கண்டு சற்று நின்றாளோ என்னவோ தெரியவில்லை; சட்டென்று பிடிப்பை விட்டு விட்டாள்! ஒரு நிமிஷம்தான்; உடனேயே அவள் என் கையை விட்டு விட்டதை எப்படியோ உணர்ந்துகொண்ட நான் நின்று பிடித்துப் போய்த் திரும்பினேன். ஆனால் அதற்குள்....ஐயோ, இதென்ன அவலநிலை! ராஜியைக் காணுமே....!

எனக்குத் தலை சுற்றியது. கண்கள் இருட்டிக் கொண்டு வந்தது. 'ராஜி! ராஜீ...!' என்று தொண்டை கிழியக் கத்தியும், காதை அடைக்கும் அத் திருவிழாக் கூச்சலிலே என் குரல் வெறும் ஒலியாகவே தேய்ந்து மாய்ந்தது. அதே சமயம் என்னைச் சுற்றிலும் முண்டியடித்த மாபெரும் கூட்டம் என்னை அன்று மீண்டும் முட்டித் தள்ளி முடிவாக வெளியே கொண்டுவந்து சேர்த்துவிட்டது.

உடனே நான், பயத்தினால் பதறித் துடிக்க என் தேகம் முழுவதும் பெருகி வழியும் வேர்வையைக் கூடத் துடைத்துக் கொள்ளாமல் ராஜியைத் தேடத் தலைப்பட்டேன். அரை பர்லாங் தூரம் நடந்திருப்பேன். எதிரே அப்போது மேலும் நான் முன்னேற முடியாமல் வழியை அடைத்துக் கொண்டு வட்டவடிவமாக நின்று சிறிது தூரத்தில் எதையோ வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது ஒரு ஜனக் கும்பல். எனக்கு இப்போது வேடிக்கை பார்க்கவா நேரம்? குழந்தை எங்கே நின்று கலங்கி நிற்கிறதோ என்ற எண்ணம் வயிற்றைப் பிசைந்தெடுக்கவே வழிமறித்து நின்ற கும்பலை வாய்விட்டுச் சபித்தவாறே கால்களைப் பெயர்த்து மேலே அடியெடுத்து வைக்கலானேன். அதே சமயம் கூட்டத்திலிருந்து வெளியே சென்றும் இருவர் பேசிக் கொண்டனர்.

"ஐயோ, ஐயோ! இது யார் பெற்ற குழந்தையோ!"

"பாவம்! 'அம்மா அம்மா' என்று சொல்லிக் கதறுகிறது! வேறு எது கேட்டாலும் சொல்லத் தெரியவில்லை! எதைக் கொடுத்தாலும் வாங்க மறுக்கிறது!"

"தாயார்க்காரி எங்கு தவித்துக்கொண்டிருக்கிறாளோ? ஹூம்...."

திடுக்கிட்டு நின்றேன். ஒருவேளை என் ராஜியாக இருக்குமோ?

அவ்வளவுதான்; அங்கிருந்த கும்பலை விலக்கிக் கொண்டு அசுர வேகத்தில் முன்னேறினேன். அதோ....கண்களில் குளம்போல் நீர் முட்ட, தலை கலைந்து, முகம் வெளுக்க அழுது கொண்டிருப்பது....ஆம்; ராஜியேதான்! அப்பாடா! என் வயிற்றில் பாலை வார்த்தாளே, நான் பிழைத்தேனே!

யாரோ ஒரு பெண்மணி அவளை இடுப்பில் வைத்துக் கொண்டு ஏதேதோ கூறிச் சமாதானப்படுத்த முயன்று கொண்டிருந்தாள். ஒரு கையில் மிட்டாயும், மற்றொரு கையில் வாழைப்பழமும் கொடுக்கப் பட்டிருந்தன. அவற்றைத் தின்னாமல் விசித்துக் கொண்டிருந்த குழந்தை என்னைக் கண்டவுடன் அவற்றை வீசி எறிந்து விட்டு 'அக்கா....!' என்று கூவியவாறு அந்த அம்மாளின் இடுப்பிலிருந்து சரசர வென்று இறங்கி ஓடி வந்து என் காலைக் கட்டிக் கொண்டு விட்டாள்!

நானும் சுற்றியிருந்த கும்பலைக்கூட மறந்து, "நிமிஷத்திலே என்ன நிலை கலங்க அடித்துவிட்டாய், கண்ணே!" என்று கதறிக் குழந்தையைத் தூக்கி முகத்தோடு முகம் சேர்த்து முத்தமாரி சொரிந்தேன். தோளில் சாய்த்துக் கொண்டிருந்த குழந்தையின் கேவல் மனத்தை உலுக்கியது. அருவிபோலப் பெருகிய கண்ணீரை அடக்க மாட்டாதவளாகக் குழந்தையைப் பின்னும் இறுக அணைத்துக் கொண்டேன். இந்தச் செய்கையிலே ஏற்பட்ட மன ஆறுதலோடு, 'இது வரை குழந்தையைச் சமாதானப்படுத்திய பெண்மணிக்கு நன்றி தெரிவிக்கக் கூட இல்லையே' என்ற எண்ணமும் தோன்றவே வெட்கித் தலைநிமிர்ந்தேன்.

இதற்குள் அந்த அம்மாள், "குழந்தை உங்களுடையதா? ஜாக்கிரதையாக அழைத்துக் கொண்டு போக வேண்டாமா, அம்மா? என் புடவையும் உங்கள் புடவையும் ஒரே மாதிரியாக இருக்கவே, குழந்தை அடையாளம் தெரியாமல் நீங்கள்தானாக்கும் என்று நினைத்து என் பின்னாலேயே வந்திருக்கிறாள்; இப்படித் தலைப்பைப் பிடித்துக் கொண்டே ஓடி வருகிறதே. இந்தக் குழந்தை யார் என்று பார்க்க எதேச்சையாகத் திரும்பவே, வேற்று முகத்தைக் கண்டவுடன் அழத் தொடங்கி விட்டாள். என்ன கேட்டாலும் சொல்லாமல் விசித்து விசித்துத் தேம்புகிறாள். நல்ல வேளை! ஏதோ கடவுள் புண்ணியத்தில் நீங்களே தேடிக் கொண்டு வந்து விட்டீர்கள்!" என்று மொழிந்து விட்டு "வாருங்கள் போகலாம்" என்றவாறு வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்ற கும்பலை விலக்கிக் கொண்டு அப்பால் நடந்தாள். நானும் ராஜியை இடுப்பில் தூக்கி வைத்துக் கொண்டு பின்தொடர்ந்தேன், இயந்திரம் போல்!

திடீரென்று அப்போது என் மனம் ஒருதீவிர மான சிந்தனைக்குத் தாவி விட்டது! ஆமாம்; அந்தப் பெண்ணின் முகம்....? எங்கே...., எப்போது...., எந்தச் சந்தர்ப்பத்தில் அவ்வதனத்தை நான் பார்த்திருக்கிறேன்? மிகவும் பரிச்சயப்பட்ட சாயல் பிரதிபலிக்கிறதே! அந்தக் குரலும் கூட அல்லவா நான் எங்கோ கேட்டிருப்பது போல் தோன்றுகிறது!

இதற்குள் கும்பலைவிட்டு வெகுதூரம் விலகி நடந்து விட்ட அந்த அம்மாள் மணல் மீது உட்கார்ந்தாள். நானும் அருகில் அமர்ந்து அம் முகத்தை உன்னித்து நோக்கியவாறு அமர்ந்தேன். நாங்கள் ஒரு இடத்தில் அமர வேண்டும் என்றே காத்திருந்தாற் போல் அந்தக் கணமே என் மனத் திரையில் அவள் யார் என்றும் பழைய நினைவு பளிச்சிட்டது.

என் பாலியத் தோழி நிம்மி!

எனக்கு ஆச்சரியத்தினால் மூச்சுத்திணறியது. "நிர்மல நாயகி அல்லவா தங்கள் பேர்?"

"ஆமாம்; நீ சுகமாய் தானே? உன்னைச் சந்தித்து எத்தனை வருஷங்கள் ஆகி விட்டன? இந்த இடைக் காலத்தில் அடையாளம் கண்டு கொள்ள முடியாதபடி நீ தான் எவ்வளவு மாறிப் போய் விட்டாய்? விதவைக் கோலம் வேறு! இந்த நிலை உனக்கு எப்போது ஏற்பட்டது? இந்தக் குழந்தை ஒன்றுதானா உனக்கு? வா, இங்கு சமீபத்தில் தான் என் வீடு இருக்கிறது. இன்று இரவு என் வீட்டில் தங்கி நாளைப் போகலாம். நாம் கடைசியாகப் பிரிந்ததிலிருந்து இன்று வரையில் நடந்த எல்லா விஷயங்களையும் சொல்" என்று ஆவலுடன் கேள்விகளைச் சொரிந்தவாறே எழுந்து என் கையைப் பற்றி இழுத்துக் கொண்டு பரபரப்புடன் கரையை நோக்கிப் புறப்பட்டாள்.

குழந்தை கிடைத்த சந்தோஷம் ஒரு புறம் இருக்க, நெடு நாட்களாகச் சந்திக்காத அருமைத் தோழியைச் சந்தித்த மகிழ்ச்சியும் சேர்ந்து கொள்ளவே நான் பேசும் சக்தியை இழந்து விட்டவள் போலானேன். அவள் இதுவரை பேசியதெல்லாம் கனவில் கேட்டதாகத் தோன்றியது. எனினும் மெல்லச் சமாளித்துக்கொண்டு, "இல்லை, நிலா! நான் இன்று உன்னுடன் வர இயலாது. அம்மாவிடம் சொல்லி விட்டு வந்திருந்தால் அவள் கவலைப் படாமல் இருப்பாள். சொல்லாமல் வந்து விட்டேனாதலால் இரவு போகா விட்டால் என்னவோ ஏதோ என்று மிகவும் விசாரப் பட்டுப் போவாள். இப்போதே ரொம்ப நேரம் ஆகி விட்டது. எனவே நாளைக்காலை ஒன்பது மணி சுமாருக்கு உன் வீட்டுக்கு வந்து விடுகிறேன். பிறகு சாயங்காலம் வரையில் இருந்து சாவகாசமாக உன் கேள்விகளுக் கெல்லாம் விடையளிக்கிறேன். சரிதானே? மறந்து விட்டேனே. இந்தக் குழந்தை என்னுடையதா என்று கேட்டாய் அல்லவா? கடவுள் எனக்கு அந்தப் பாக்கியத்தை மட்டும் அளிக்கவில்லை. இவன் என் பக்கத்து வீட்டுக் குழந்தை. நான் போய் வரட்டுமா...?" என்று விடைபெற்றுக்கொண்டு தனி வழியில் பிரிந்து சென்றேன்.

பாதையெல்லாம் நிலாவைப் பற்றியே சிந்தனை எழுந்தது.

அடேயப்பா! அவள் தான் எப்படி இருக்கிறாள்? வயது நாற்பதுக்கு மேலாகியும் கூட இருபது வயதுக்கு மேல் மதிப்பிட முடியாதபடி அன்று கண்ட மேனிக்குச் சிறிதும் அழிவில்லாமல் அப்படியே இருக்கிறாளே! நாங்கள் ஒன்றாகக் கூடிக் குதித்துக் கும்மாளமிட்ட இன்ப நாட்கள் என் கண் முன் விரிந்தன.

ஆரம்பப் பள்ளிக்கூடத்தில் ஐந்தாம் வகுப்பை முடித்துக் கொண்டு உயர்நிலைப் பள்ளியில் முதல் படிவத்தில் சேர்ந்தபோது தான் முதன் முதலில் நிலா எனக்கு அறிமுகமானாள். என்னைப் போலவே அவளும் வகுப்பில் புதிதாகச் சேர்ந்திருந்தாள். வகுப்பிலுள்ள அத்தனை மாணவிகளிலும் அவள் தான் நல்ல அழகி. அந்தச் சின்னஞ்சிறு பிராயத்திலே எனக்கு அவளைப் பற்றி இவ்வளவு தான் கூறத் தெரிந்தது.

இந்த நிலாவை எவனாவது கவிஞன் ஒருவன் அன்று கண்டிருந்தால் 'சிரிக்கும் விழிகள், மிளிர்க்கும் நாசி, செவ்வரிக் கன்னங்கள்,



"அந்த ஆளு புலியிலிருந்து வந்திருக்கார்."
"இருக்கு மாதிரி இருக்காரே!"

சிவந்த அதரங்கள், அன்ன நடை, மின்னல் இடை, பின்னற் சடை, அப்பப்பா......! என்ன அழகு' என்று வியந்து ஒரு சிங்கார மகா காவியமே இயற்றியிருப்பான். அவள் அழகிலே சொக்கிய நான் எப்போதும் அவளுடனேயே சுற்றிக் கொண்டிருப்பேன். அவளை என் சிநேகிதி என்று கூறிக் கொள்வதிலே எனக்கு அளாதிப் பெருமை. படிப்பிலும் நல்ல குழந்தை. இத்தனை சிறந்தும் துளிக் கூடக் கர்வம் இல்லாமல் எல்லோரையும் காட்டிலும் என்னிடம் அதிகமாகவே அவள் நெருங்கிப் பழகினாள். அன்று ஏற்பட்ட நட்பு நாளுக்கு நாள் இறுகி நாங்கள் இணைபிரியாத் தோழிகளானோம்.

எங்களுக்குள் இரகசியம் என்பதே கிடையாது. என்னை அவள் வீட்டிலோ அல்லது அவளை என் வீட்டிலோ தான் காணமுடியும். இருவரையும் தனித்தனியே காணுவது மிகவும் துர்லபம்.

இந்த நிலையில் நாங்கள் பத்தாவது வகுப்பை எட்டினோம். இப்போது காலம் என்ற மந்திரவாதி வேறு பருவம் என்றபொருளைத் தூவி நிலாவின் பொன்னுடலுக்கும் புது மெருகேற்றி இருந்தான். பெண்களே அவள் அழகைக் கண்டு பித்தம் கொள்ளும் நிலையில் இருந்தார்கள் என்றால் ஆடவர்களின் நிலைக்குக் கேட்கவா வேண்டும்?

மலர்களைச் சுற்றி ரீங்காரிக்கும் வண்டு களைப் போல் நிலாவின் புறம் பாடி அவள் கடைக்கண் பார்வைக்காகக் காத்துக் கிடந்தனர் மாணவர்கள்.

இச்சமயத்தில் தான் திடீரென்று ஒரு நாள் என் பள்ளிப் படிப்புக்கு முற்றுப்புள்ளி வைக்கப் பட்டது. பருவம் எய்திய பெண் அந்நிய ஆடவர் முன்னிலையில் செல்லக் கூடாது என்பதே அதற்குக் காரணம். நிலாவின் வீட்டுக்குப் போவதற்குக் கூட எனக்குத் தடைஉத்தரவு பிறப்பிக்கப்பட்டு விட்டது!

பள்ளிப் படிப்பை விட்ட பிறகு என் ஒரே பொழுதுபோக்கு நிலாவைச் சந்திப்பது ஒன்று தான். அதுவும் இருக்க அதையும் தடை செய் தார்)...என் பெற்றோரும் அழுது அடம் பிடித்துக் கெஞ்சிக் கூத்தாடி எப்படியோ

அவள் வீட்டுக்கும் போய்வர மட்டும் அனுமதி பெற்றுக் கொண்டு விட்டேன்! அதன் பிறகு தினமும் அவள் பள்ளிக்கூடம் விட்டுத் திரும்பிய பிறகு நான் அவள் வீட்டுக்குச் செல்வதும், விடுமுறை நாட்களில் அவள் என் வீட்டுக்கு வருவதும் வழக்கமாயின.

காலம் கரைந்து சென்றது. நிர்மலாவும் ஒருவாறு உயர்நிலைப்பள்ளி இறுதி வகுப்பில் தேர்ச்சி பெற்றாள். இதன் பிறகு அவளுக்கு வீட்டிலேயே சங்கீத டியூஷன் போதிக்கப் பட்டது. அவள் இசை பயிலும் வேளைகளில் அநேகமாக நானும் கூடவே இருப்பேன். நிர்மலைக்குச் சூட்சுமமான ஞானத்தோடு இனிமையான சாரீரமும் அமைந்திருந்தது. சங்கீதத்தில் நாளுக்கு நாள் அபிவிருத்தியாக முன்னேறிக் கொண்டிருந்தாள்.

அவளுக்கு இசை கற்பிக்கும் ஆசிரியர் சேகர் இளம் வயது வாலிபரேயானாலும், பயிற்சி அளிப்பதில் மிக்க திறமை வாய்ந்தவர். எப்படிப் போதித்தால் நன்றாக மனதில் பதியுமோ, அதை உணர்ந்து சங்கீதத்தின் நெளிவு சுளிவுகளைத் தெளிவாக விளக்குவார். பெண் குரலின் இழைவும் குழைவும், ஆண் குரலின் கம்பீரமும் கார்வையும் ஒருங்கே கலந்திருந்த அவர் குரலின் நயத்திலே சொக்கி நேரம் போவது தெரியாமல் எத்தனையோ நாட்கள் நாங்கள் மெய் மறந்திருக்கிறோம்! அதிலும் மோகனராகத்திலே அவர் தணியாத தாகம் கொண்டவர். மேலும் தோற்றத்திலும் நல்ல அழகர். கலை பொருந்திய அவர் முகத்திலே கலைத்திறன் பளிச்சிட்டது.

சிறிது காலத்துக்கு அப்புறம் எங்கள் வீட்டில் எனக்குத் திருமணம் செய்விப்பதற்கான முயற்சிகள் நடைபெறலாயின.

வழக்கம் போல் நிர்மலா அடிக்கடி என் வீட்டிற்கு வந்து கொண்டிருந்தாள். ஆனால் நான் அவள் வீட்டுக்குப் போவதை வெகுவாகக் குறைத்துக் கொண்டிருந்தேன். இப்போதெல்லாம் சதா சேகரின் புகழ் பாடுவதே நிர்மலைக்கு வேலையாகப் போய் விட்டது. இத்தனைக்கும் சேகர் அவளுக்குச் சங்கீத டியூஷன் சொல்லித் தருவது திடீரென்று நிறுத்தப் பட்டதோடு அல்லாமல் அவர் அவள் வீட்டுக்கு வருவதற்கே தடை உத்தரவு பிறப்பிக்கப் பட்டிருப்பதாகவும் கேள்விப் பட்டேன். காரணம், சேகரைக் குரு ஸ்தானத்திலிருந்து அகற்றிக் காதலன் என்ற பீடத்தில் அமர்த்தி விட்டாள் என்பதை அவள் இதயமாகிய நிலைக் கருவி தெளிவாகச் சுட்டிக் காட்டி விட்டதுதான்.

விதியாகிய மாலுமி அவள் இதயம் காட்டும் திசையில் வாழ்க்கைப் படகை ஓட்டிக் கரை சேர்ப்பானோ, என்னவோ?

ஒரு வெள்ளிக்கிழமை மாலை ஐந்து மணி சுமாருக்கு நிர்மலா என் வீட்டுக்கு வந்தாள். அவள் கன்னம் கன்றிச் சிவந்து முகத்துக்குத் தனிக் கவர்ச்சியை ஊட்டியிருந்தது. அவளை அழைத்துக் கொண்டு என்னுடைய அறையை அடைந்தேன்.

இதயப் பேழையைத் திறந்து அந்தரங்கம் என்ற அணிகலன்களைக் காணவென்று கொட்டினாள். தாழ்ந்த குரலில் அவள் இரகசியமாகக் கூறினாள்:

"அடி, கமலா! சேகரும் என்னைக் காதலிக்கிறாராம். அழுத்தக்காரர்; நேற்றுத்தான் இதை வாய் திறந்து என்னிடம் கூறினார்."

அவர்கள் இருவரும் திருமணம் செய்து கொண்டு இசை உலகிலே ஒரு பரபரப்பை உண்டாக்கப் போகிறார்களாம்; அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கு ராக தேவதைகளின் பெயரைச் சூட்டி, அவர்களைக் கலை தேவியின் பரிபூரண கடாட்சத்துக்கும் பாத்திரமானவர்களாக ஆக்கிவிடப் போகிறார்களாம்; ஸ்வரமும் அநுஸ்வரமும்போல், ஆரோகணமும் அவரோகணமும் போலக் கற்பனைச் சிறகடித்து இசை வானிலே கானம் பாடும் இரு வானம்பாடிகளாகப் பறந்து செல்லப் போகிறார்களாம்!

இவ்வாறு இன்னும் அவள் கூறியதையெல்லாம் என்னிடம் மனம் விட்டுச் சொல்லி அந்த நினைவுக்கடலிலே மூழ்கி மகிழ்ச்சியில் திளைத்தாள் நிர்மலா!

அன்று என்னிடமிருந்து விடைபெற்றுக் கொண்டு அவள் வீடு திரும்பி வெகுநேரம் வரை ஏனோ என் மனம் சரியாகவே இல்லை. இத்தனை நாட்களாக இல்லாத ஏதோ ஒரு புது உணர்ச்சி தொல்லையை அடைந்தது. அது தான் பொறாமையோ, என்னவோ? ஏதோ கிடைப்பதற்கரிய மாணிக்கம் ஒன்றை இழந்து விட்டது போல் ஏக்கம் தோன்றியது என்னுடைய மனத்தில்.

அரும்பு மீசையும், குறும்புப் பார்வையுமாகக் கரும்புபோல் இனிக்கப் பேசும் சேகரை மணக்க நிர்மலாதான் என்ன பாக்கியம் செய்திருக்க வேண்டும்?

அன்றிலிருந்து என்னால் அவளுடன் முன் போல் மனம் விட்டுப் பழக முடியவில்லை. ஆனால் இதையொன்றும் உணராத நிர்மலா வழக்கம் போலவே வித்தியாசமில்லாமல் பழகினாள். சேகர் அவளுடன் பேசிய ஒவ்வொரு வார்த்தையையும் மறைக்காமல் உற்சாகத்துடன் என்னிடம் கூறுவாள்.

நேற்று அவர்கள் சினிமாவுக்குச் சென்றிருந்தார்களாம். அதற்கு முன் தினம் காவேரிக் கரையில் சந்தித்துக் கொண்டார்களாம். தினம் தினம் அருகிலுள்ள பூங்காவில் ஒரு மணிக்குமேல் சந்தித்து வருகிறார்களாம். இவற்றையெல்லாம் கேட்கக் கேட்க எனக்கு மனத்தை என்னவோ செய்தது!

அகத்திலுள்ளதை முகமே காட்டிக் கொடுத்திருக்க வேண்டும்! 'என்ன கமலா? உன் முகமே சரியாக இல்லையே? உன் உடம்புக்கு என்ன?' என்று என்னை ஒரு சமயம் பரிவுடன் வினவிய நிர்மலா என்மேல் கண்வைத்துப் பார்த்தாள். 'ஒன்றுமில்லை, சாதாரணத் தலைவலி' என்று கூறி அவளை அனுப்பி வைத்தேன்.

இந்தச் சமயத்தில்தான் என் விவாகம் நிச்சயமாயிற்று. இதில் ஆச்சரியம் என்னவென்றால், எனக்கு வரவிருந்த மணாளன் யார் என்கிறீர்கள்? நிர்மலாவின் குரு, சேகரேதான்!

என்னால் நம்பவே முடியவில்லை! செய்தி அறிந்தவுடன் எனக்கு ஏற்பட்ட உணர்ச்சியை வர்ணிப்பது முடியாத காரியம். சேகர் நிர்மலாவிடம் நெஞ்சைப் பறி கொடுத்தவர் என்னும் மர்மத்தைத் தெரிந்து கொண்டிருந்தும் அவரை நான் மணப்பதா?

ஆனால்......அவர் ஆண்மகன் அல்லவா? ஆதலால், காதல் 'கீதல்' என்றெல்லாம் இளம் வயதில் கற்பனை செய்துகொண்டு அதிலே விபரீதமற்ற இன்பம் காணும் உரிமை பெற்றவராயிற்றே! அதற்காக அவரைக் களங்கம் உற்றவராகக் கருதுவது தமிழ்ப் பெண்ணாகிய எனக்குப் பண்பாகுமா?

இப்படியெல்லாம் அவர் சார்பில் வாதாடியது என் மனச்சாட்சி. தில்லையின் இல்லத்தில் முன்பு நான் அவரை முதல் தடவையாகக் கண்டவுடனே என்னை அறியாமலேயே என் பேதை நெஞ்சு அவர் வசமாகி விட்டதால் தானோ என்னவோ. அவரைப் பற்றி நான் அறிந்த இந்த இரகசியம்கூட எனக்கு அவர்மீது எள்ளளவு சஞ்சலத்தையும் உண்டாக்கவில்லை. அதற்கு மாறாகத் தில்லையின் மீதேதான் எனக்கு ஆத்திரம் மூண்டது! சாகசக்காரி! அத்தனை அழகையும், அவ்வளவு பக்குவமான வாலிபத்தின் பிடிப்பிலே துடித்த ஒரு ஆடவரிடம் பிரயோகித்தால், பாவம், அவர்தான் என்ன செய்வார்? எனினும் கல்யாணம் என்று ஆகிவிட்டால் பிறகு அவளை மறந்து விடுவது ஒரு ஆண் மனத்துக்கு எவ்வளவு கலபம்!

இதில் அவர் எப்படித் திருமணத்துக்குச் சம்மதித்தார் என்பது வேறு திகைப்பாக இருந்தது. முதலில் இந்தச் சம்பந்தத்துக்கு இணங்க முடியாதென்று மிகவும் முரண்டு பிடித்ததாகவும், கடைசியில் வேண்டா வெறுப்பாக வேறு வழியில்லாமல் சம்மதித்து விட்டதாகவும் யாரோ கூறினார்கள். எப்படியாவது அவரை மணந்துகொண்டால் போதுமென்றிருந்தது எனக்கு. ஆனால், எங்கள் விவாகம் நிச்சயமாகி விட்டதையோ, கூடிய விரைவில் சடங்கு நிறைவேற ஏற்பாடுகள் நடந்து கொண்டிருப்பதையோ, தில்லையிடம் என் வாயால் கூறுவதற்கு மட்டும் கடைசி வரையில் எனக்குத் தைரியம் பிறக்கவேயில்லை! முதன் முதலாக அவளிடம் நான் சொல்லாமல் மறைக்க விரும்பியது இது ஒன்றேதான். ஆனால் உள்ளத்திலே இந்தச் சுமையைத் தாங்கிக் கொண்டு அவளுடன் நான் எப்படி இதயபூர்வமாகப் பழக முடியும்?

ஆகையால் இதற்குப் பிறகு அவள் என்னைச் சந்திப்பதைக்கூட நான் விரும்பவில்லை. தவிர, ஒருவேளை சேகர் மூலம் அவளுக்கு விஷயம் தெரிந்து, அதனால் அவள் என்னிடம் வந்து அவரை விட்டுக் கொடுக்க வேண்டும் என்று மன்றாடிக் கெஞ்சினால் நான் என்ன செய்வது என்று வேறு பயந்தேன். இன்னும் எத்தனையோ கிலேசங்கள் பாழும் பெண் மனத்திலே! இவற்றின் விளைவாக, என் திருமணம் நிச்சயம் செய்யப்பட்ட தினத்துக்கும் விவாக தினத்துக்கும் இடையே கழிந்த சில நாட்களுக்குள் கடைசியில் ஒரு பயங்கரச் சூழ்ச்சியிலே கூடத் துணிந்து இறங்கும் நிலைமைக்கு வந்து விட்டேன்!

பிறகு.........?

வேறென்ன? விரைவிலேயே ஒரு நல்ல நாளில் நான் கமலா-சேகரானேன். திருமணத்தன்று தில்லை வரவில்லை. அதன் பிறகு நான்கு நாட்கள் சென்ற பின்பே திருமணப் பரிசுடன் எங்களைக் காண வந்தாள் தில்லை.

நீள் விழிகளிலே நீர் கரந்து, சிவந்த அதரங்களில் சோகப் புன்னகை ஏந்தி, வட்ட மதி போன்ற முகம் வாடிக் கிடக்க வந்தாள். நானும் உற்சாகமில்லாமல் வரவேற்று உதட்டளவில் உபசாரமாகப் பேசினேன். நெடு நேரம் வரையில் ஏதோ சம்பிரதாயத்துக்காக உரையாடினேன். ஆனால் கடைசி வரையில் அவள், 'உனக்கும் சேகருக்கும் திருமணம் நடக்கப் போகிறது என்ற விஷயத்தை என்னிடம் கூறாமல் மறைத்தாயே?' என்று என்னைக் கேட்கவே இல்லை. விடைபெற்றுக் கொள்ளும் சமயத்தில் மட்டும் ஆவலை அடக்க முடியாதவளாக, 'எங்கே உன் கணவர்? அவரையும் பார்த்துவிட்டுப் போகலாம் என்றால் காணவே இல்லையே' என்று கேட்டு விட்டாள். 'நான்கு நாட்களாக ஏற்பட்ட அலைச்சலிலே அவர் நன்றாக அயர்ந்து உறங்குகிறார்' என்று அப்பட்டமான பொய்யை மனமறிந்து கூறி அவளை ஏமாற்றி அனுப்பிவிட்டேன்.

ஆம்; இனி அவர்கள் இருவரும் சந்திப்பதை நான் விரும்பவில்லை என்பதைத்தான் இப்



படிச் சொல்லியும் சொல்லாமல் அவளுக்கு உணர்த்தினேன்.

அன்று பிரிந்தவர்கள் தான் நாங்கள்! பிறகு என் கல்யாணம் முடிந்த சூட்டோடு, நான் என் கணவரை அவள் வசித்த அந்த ஊரிலிருந்து வெகு தொலைவுக்கு இட்டுச் சென்று, ஸிம்லா நகரில் இல்லற வாழ்க்கை தொடங்கி விட்டேன். அதனால் இதுவரையில் இடையே நாங்கள் சந்தித்துக் கொள்ளவே வகை ஏற்படவில்லை. இருபது ஆண்டுகளுக்குப் பிறகு இன்றுதான் நாங்கள் ஒருவரையொருவர் மீண்டும் கண்டுகொள்கிறோம்!

இவ்வாறெல்லாம் அவளைப் பற்றியே எண்ணியவாறு காவேரிக் கரையிலிருந்து வழி நடந்த நான் அன்று வீட்டை அடையவும், பக்கத்து வீட்டிலிருந்து ராஜியைத் தேடிக் கொண்டு ஆள் வரவும் சரியாக இருந்தது. உடனே குழந்தையை அனுப்பி விட்டுச் சாப்பிட உட்கார்ந்தேன். சாப்பிட்டவாறே அம்மாவுக்கு, ராஜி சிறிது நேரத்துக்குக் காணாமல் போனதையும் அதனால் நான் தில்லைநாயகியைச் சந்திக்க நேரிட்டதையும் விவரமாகக்



எந்தத் திட்டமும் அலுவலகத்திலேதான் தொடங்குகிறது. ஒவ்வொருவரும் தம் தம் கடமையைச் செம்மையாகச் செய்வதன் மூலமே திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்ற முடியும். ஆமாம், இதில் காணப்படும் குறை நமது நாட்டின் முன்னேற்றத்துக்கே முட்டுக்கட்டையாகும்.

- நேர்மையோடு கடமையைச் செய்யுங்கள்.
- வேலைகளைக் குவியவிட வேண்டாம். காலந் தவறாமல் வேலை செய்வது, பொது மக்களுக்கு நற்பணியும் உங்கள் உயர்வுக்கு வழியுமாகும்.
- அதிகம் சேமித்து, இன்சூரன்ஸ், பிராவிடென்ட் நிதி ஆகியவற்றிலும் அரசாங்கத்தின் சிறு சேமிப்புத் திட்டங்களிலும் முதலீடு செய்யுங்கள். இச் சேமிப்பு நமது திட்டத்தின் வெற்றிக்கும் உங்கள் எதிர்கால வாழ்வுக்கும் ஒருங்கே உதவுகிறது.
- ஒழிந்த நேரங்களில் வீட்டுக் கடமைகளில் ஈடுபடுங்கள்.
- பாரத் சேவக் சமாஜம், பிரதேசப் படை முதலிய ஸ்தாபனங்கள் பொதுத் தொண்டு செய்யும் நல்வாய்ப்பை உங்களுக்கு அளிக்கின்றன.

திட்டத்துக்கு உதவுங்கள் முன்னேற்றம் அடையுங்கள்

DAu-58/392

கூறினேன். "என்ன ஆச்சரியம் அம்மா! இத்தனை வயதாகியும் இல்லே சின்னப் பெண்ணைப் போலக் கட்டுக் குலையாமல் எப்படி இருக்கிறள் என்கிறீர்கள்!" என்றேன்.

"அவளுக்கென்ன? காசும் பணமுமாகக் கவலையற்ற வாழ்வு. ஒரே பெண் தானும். அதுவோ அழகிலே அம்மாவை மிஞ்சிவிடும் போல இருக்கிறதாம்! சந்தோஷமோ சக பலமோ என்று கேட்டதில்லையா? நீ டில்லிக்குப் போன சிறிது நாட்களில் திடீரென்று வீட்டைக் காலி செய்து கொண்டு இல்லே தன் அம்மாவோடு திருச்சிக்கோ என்னமோ போய் விட்டாள்.

"போன வருஷம் தான் திரும்பி வந்து பழைய வீட்டைப் புதுப்பித்து அதிலே வசிக்க ஆரம்பித்திருக்கிறர்கள்!" என்று கூறினள் என் அம்மா.

அன்று இரவு படுத்த பின்பும் இல்லேயைப் பற்றிய நினைவு அகலவில்லை. மறு நாள் பொழுது புலர்ந்ததும் ஒன்பது மணிக்குள் கிளம்பி விட்டேன் இல்லேயின் வீட்டுக்கு. வழக்கம் போல் அடுத்த வீட்டுக் குழந்தை ராஜியும் என்னுடன் வந்தாள்.



ஆவலுடன் என் வரவை எதிர்பார்த்துக்காத்திருந்த இல்லே என்னை அன்புடன் உள்ளே அழைத்துச் சென்ருள். சிறியவீடேயானுலும் வெகு நேர்த்தியாகக் கட்டப் பட்டிருந்தது. வெளிர் பச்சை நிறச் சுண்ணும்பு பூசப்பட்டிருந்த சுவர்கள் கண்களுக்குக் குளிர்ச்சியை அளித்தன. வாசல் அறையில் சரஸ்வதி படமும் இல்லே நடராஜனின் திருவுருவப்படமும் இருந்தன. அறையின் ஒரு மூலேயில் மேஜையும் நாற்காலியும் போடப்பட்டிருந்தன. மற்றப்படி ஒரு கட்டிலும் அதைத் தவிர உறையினுள் மூடிய வீணை ஒன்றும் தரையில் வைக்கப்பட்டிருந்தன. வாசலறையை அடுத்த கூடத்தில் தேசத் தலைவர்களின் படங்களும், இயற்கைக் காட்சிகள் சிலவற்றின் படங்களும் மாட்டப்பட்டிருந்தன. கூடத்தின் நடுவில் ஊஞ்சல் போடப் பட்டிருந்தது. அதை அடுத்துச் சமையல் அறை. பின்புறம் அழகிய சிறு தோட்டம். இவற்றையெல்லாம் பார்த்து விட்டு வந்த நான் "எங்கே இல்லே? உனக்கு ஒரு மகள் இருக்கிறதாகக் கேள்விப்பட்டேனே, காணவே இல்லையே....?" என்றேன்.

உடனே இல்லே "மோகனு! மோகனு!" என்று குரல் கொடுக்கவும், "இதோ வந்து விட்டேன், அம்மா!" என்ற இன்னிசை நாதத்தைத் தொடர்ந்து மாடிப் படிகளில் யாரோ இறங்கி வரும் சத்தமும் கேட்டது. மறு கணம், பார்த்துக் கொண்டிருக்கும்போதே, அடி வானத்திலே பௌர்ணமிச் சந்திரன் உதித்தாற் போலக் கண்களைக் கூசச் செய்யும்படி, கொள்ளை அழகு கொஞ்சிக் குமிழியிட உள்ளே நுழைந்த இருபது வயதுப் பருவ மங்கை ஒருத்தியைக் கண்டவுடன் ஒரு கணம் நான் ஸ்தம்பித்தே விட்டேன். காரணம், இருபது வருஷங்களுக்கு முன்பு பார்த்த இல்லேயையே மறுபடியும் பார்ப்பது போன்ற பிரமை ஏற்பட்டது.

அதே கருத்து அடர்ந்த கூந்தல்; அதே கரு வண்டுக் கண்கள்; அதே கள்ளமற்ற சிரிப்பு; அதே கவர்ச்சிகரமான முகம்! இல்லேயை விட அழகு என்றே சொல்ல வேண்டும். இத்தனை அழகு இவளுக்கு எப்படி வந்தது?

"மோகனு! என் பால்ய சிநேகிதி கமலா இன்று வரப் போவதாகச் சொல்லி யிருந்தேனே, அவள் தான் இவள்" என்று கூறித் தன் பெண்ணுக்கு என்னை அறிமுகப்படுத்தினள் இல்லே. அந்தப் பெண் நாணத்துடன் என்னைப் பார்த்து இதழ்க் கடையோரத்தில் இள நகையை இழைய விட்டாள்.

இதற்குள்ளாகவே குழந்தை ராஜி மோகனுவிடம் 'அக்கா அக்கா' என்று உறவு கொண்டாடி ஒட்டிக் கொண்டுவிட்டாள். சிறிது நேரம் வரையில் ஏதேதோ பொது விஷயங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம். பிறகு மணி பன்னிரண்டாகி விடவே, எல்லோருமாகச் சாப்பிட்டோம். அன்று இல்லே பலமான விருந்தே தயார் செய்திருந்தாள்.

ஒருவாறு சாப்பிட்டு முடிந்ததும், குழந்தையும் மோகனுவும் மாடிக்குச் சென்றுவிட்டனர். தனித்திருந்த நானும் இல்லேயும் கூடத்திலிருந்த ஊஞ்சலில் வந்து அமர்ந்தோம். வெகு நேரம் வரை நாங்கள் ஒருவரோடொருவர் பேசிக் கொள்ளவே இல்லை. பழைய நினைவுகளில் மனத்தை இலயிக்க விட்டு மௌனமாய் அமர்ந்திருந்தோம். கடைசியில் எங்களிடையே நிலவிய அமைதியைத் இல்லேயே கலேத்தாள்.

"என்ன கமலா! நானே வந்து உன் கேள்விகளுக்கு விவரமாக விடையளிக்கிறேன் என்று கூறியவள் வாய் திறவாமல் மௌனம் சாதிக்கிருயே? எங்கே, நாம் பிரிந்தபிறகு என்ன நடந்தது? கூறு, கேட்போம்?"

"விவரமாகச் சொல்லுவதற்கு விசேஷமாக ஏதும் நடக்கவில்லை, இல்லே! டில்லியில் குடியேறியிருக்கும் தமிழர்கள் நம் கலாபிமானத்தினுல் ஐம்பதும் நூறும் கொடுத்துத் தங்கள் குழந்தைகளுக்குப் பாட்டு சொல்லித் தர முற்படுகிறர்கள் என்று கேள்விப்பட்டு, மணமான ஒன்றிரண்டு நாட்களிலேயே அங்கே குடியேறினேம். அங்கே அவருக்குத் தேவையான 'டியூஷன்'கள் கிடைத்தன. பிறகு இருபதுவருஷங்கள் சந்தோஷமான வாழ்க்கை

நடத்தினேம்; என் துரதிர்ஷ்டம், சமீபத்தில் காலன் அவருக்கு அழைப்பு அனுப்பி விட்டான். இந்தக் கதிக்கு ஆளானதும் நான் இங்கு வந்து விட்டேன். வந்த இந்த ஐந்தாறு மாதங்களாக உள்ளேயே அடைந்து கிடந்தேன். நேற்று பக்கத்து வீட்டுப் பெண் ராஜி திருவிழாவைப் பார்க்க வேண்டும் என்று ஆசைப்பட்டுப் பிடிவாதம் பிடிக்கவே, சரி என்று புறப்பட்டேன். பிறகு நடந்ததெல்லாம் தான் உனக்கே நன்ருகத் தெரியும். இவ்வளவு தான் என் வரலாறு.''

''அது சரி, கமலா! உன் கணவர் நல்ல ஆரோக்கியமுள்ளவராயிற்றே? திடீரென்று அவருக்கு என்ன நேர்ந்தது? அவரை மணந்த நீ மிகவும் பாக்கியசாலி என்று சந்தோஷப்பட்டேன். ஆனால் இப்போது உன்னைப் பார்க்க மிகவும் வருத்தமாக இருக்கிறது.''—அவளுடைய கண்களில் கண்ணீர் குளம் போல் தேங்கி நின்றது.

''என்ன செய்வது, இல்லை? எதற்கும் கொடுத்து வைத்திருக்க வேண்டும் இல்லையா? நல்லவர்களுக்குச் சொல்லாமல் சாவு வரும் என்பார்களே, அதை மெய்ப்பிப்பது போல் நன்ருக இருந்தவரை ஊரெல்லாம் உலவிய 'ப்ளு' ஜுரம் மூன்றே நாட்களில் பலி கொண்டது. என் துக்கிரி அதிர்ஷ்டம்தான் அவரை இவ்வளவு சீக்கிரம் சாக அடித்து விட்டதோ, என்னவோ! ஒரு வேளை அவர் வேறு 'யாரையாவது' மணந்து கொண்டிருந்தால் இன்னும் அதிக நாட்கள் உயிருடன் இருந்திருப்பாரோ என்று எனக்கே சில சமயம் வேதனையாக இருக்கும். நல்ல கணவரை அடைந்தேன். ஆனால் அவருடன் என் காலம் முடியுமளவு வாழக் கொடுத்து வைக்கவில்லை!''—எனக்குத் துக்கம் தொண்டையை அடைக்க வார்த்தைகள் விக்கின.

''வருத்தப்படாதே, கமலா! அந்த நாட்களில் எனக்குக் கிடைக்க வேண்டிய சேகரை நீ கணவராக அடைந்து விட்டாய் என்று தோன்றும்போதெல்லாம் முதலில் என் பெண் மனம் சிறிது ஏங்கவே செய்தது. ஆனாலும் வெகு சீக்கிரத்திலேயே என் மனத்தைச் சமாதானப்படுத்திக் கொண்டு எனக்குக் கிட்டாமற் போன பாக்கியம் என் ஆருயிர்த் தோழியாகிய உனக்காவது கிடைத்ததே என்று அளவற்ற மகிழ்ச்சியே கொண்டேன். ஆனால் நீ என்னை நன்ருகப் புரிந்து கொள்ளவில்லை என்பதை உன்னை விவாகத்துக்குப் பின் பரிகடன் சந்தித்த அன்று, அவர் விழித்துக் கொண்டிருக்கும்போதே அயர்ந்து தூங்குகிருர் என்று நீ சொன்ன போது, நான் புரிந்து கொண்டு விட்டேன். அதன் பிறகும் எங்கே உன்னிடமிருந்து அவரை அபகரித்துக் கொண்டு விடுவேனே என்ற பயத்தினுல்தானே நீ தில்லிக்குச் சென்றுவிட்டாய்?''

''ஆமாம்; நான் பயந்ததில் தவறு என்ன இருக்கிறது? அந்த நாட்களில் நீ அவரை உள்ளன்புடன் காதலித்ததும் அவர் உன்னிடம் மயங்கினுர் என்பதும் மறுக்க முடியாத உண்மை. ஏனென்ருல் இவற்றை நீயே என்னிடம் கதை கதையாகக் கூறியிருக்கிருய். திருமணம் செய்துகொண்ட பிறகு எந்தப் பெண்ணும் தன் கணவன் தன்னைத் தவிர வேறெருத்தியை மனத்தாலும் நினைக்கக்கூடாது என்று எண்ணுவது இயற்கை!''

''ஆம், கமலா! நீ சொல்வதுபோல் அவரை உள்ளத்திலே வைத்துப் பூஜித்தேன் என்பதை ஒப்புக் கொள்கிறேன். ஆனால் அவர் எனக்குக் கிட்டாமற் போனபோது நான் நீ எண்ணியது போல் உன்மேல் பொருமை கொள்ளவில்லை. அதற்குப் பதில் உன் நல்வாழ்வுக்காகவே பிரார்த்தனை செய்தேன். அவருடன் கழித்த அந்தச் சில நாட்களின் இன்ப நினைவுகளிலேயே என் வாழ்க்கையின் இத்தனை வருஷங்களைக் கழித்து விட்டேன். இனியும் கழித்து விடுவேன். இறந்து தெய்வமாகிவிட்ட அவரைப் பற்றி மனம் விட்டுப் பேசுவதில் இப்போது தவறு ஏதும் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. நீ என்ன சொல்கிருய்?''

''சொல்வதற்கென்ன இருக்கிறது, இல்லை? நானும் உன் எண்ணத்தை ஆமோதிக்கிறேன். எங்கே, அவர் உன்னுடன் சில நாட்களைச் செலவிட்டதற்காக உன்னையே நினைத்து ஏங்கி என்னை வெறுப்பாரோ என்று எண்ணி நான் பயந்தது போல் அல்லாமல், மணமான பிறகு உன்னைப் பற்றியே எண்ணுமல் என்னை எவ்வளவு சந்தோஷமாக வைத்துக் கொள்ள முடியுமோ, அவ்வளவு சந்தோஷமாக நடந்து கொண்டு அன்பைச் சொரிந்தார். எங்கள் இன்பமான வாழ்க்கையின் எடுத்துக் காட்டாக எனக்கு ஒரு குழந்தை கூடப் பிறக்காமல் தெய்வம் வஞ்சனை செய்து விட்டதைக் கூட நான் அறிகம் உணராதவாறு என்மீது பாசம் செலுத்தினுர். அப்படியிருக்க எனக்கு என்ன குறை? பார்க்கப் போனுல் இந்த விஷயத்தில் நீ கூட, பாவம், அதிர்ஷ்டமற்றவள் தான். ஏனென்ருல் கைக்கு எட்டியது வாய்க்குக் கிட்டாமல் அவருடன் கழித்த நாட்களின் நினைவுகள்தானே உனக்குக் கடைசியில் மிஞ்சியது....'' என்னையும் மீறிச் சட்டென்று தெறித்து விட்டன இந்தச் சொற்கள். அவள் மனத்தில் பழைய உணர்ச்சிகள் கிளர்ந்து எழுந்து வருத்தம் உண்டு பண்ணுமே என்னும் நினைவே யில்லாமல் நான் மீண்டும் தொடர்ந்தேன்.

''எங்களுக்குத் திருமணம் நிச்சயமான பிறகு உனக்கும் அவருக்கும் இடையே உள்ள தொடர்பு மேலும் வளர்வதை நான் அடியோடு வெறுத்தேன். அதை எப்படியாவது தடுக்க வேண்டும் என்ற ஆத்திரத்தில் அப்போது உனக்கு மரணமே கிட்டியிருந்தால் கூட நான் வருந்தியிருக்கமாட்டேன். ஏன், நானே கூட அன்று உன்னைத் தீர்த்துக் கட்டி விட வேண்டும் என்றே எண்ணிவிட்டேன். அதைச் செயலாக்க நான் செய்த சூழ்ச்சி.... அம்மம்மா! இப்போது நினைத்தாலும் உடல் சிலிர்க்கிறது! நல்ல வேளை; கடவுள் கிருபையால் அத்தகைய விபரீதம் ஏதும்நிகழவில்லை!''

நான் வெளியிட்ட மர்மத்தைக் கேட்டவுடன் இல்லையின் முகத்தில் ஆச்சரியக் குறி படர்ந்தது. ''அப்படியா? எனக்கு ஒன்றும் தெரியாதே! அப்படி நீ என்ன செய்தாய்?'' என்று தடுமாறினுள்.

நான் கூறினேன்—''இங்கே நம் ஊரில் காவேரிக் கரையை யொட்டி ஒரு சவுக்குத் தோப்பு இருக்கிறதே, அதன் பக்கமாக இரவு வேளையில் யாரேனும் இளம் பெண் போனுல்

முனியோ, பேயோ அறைந்து விடும் என்றும், போனவர்களில் ஒருவராவது உயிருடன் திரும்பியதில்லையென்றும் அப்போதெல்லாம் நமது வீட்டிலுள்ள பெரியவர்கள் கூறுவார்களே? நினைவிருக்கிறதா?'' என்று சொல்லிவிட்டு மிகுந்த ஆவலுடன் அவள் முகத்தைக் கூர்ந்து நோக்கினேன்.

''ஆமாம், நன்றாக ஞாபகம் இருக்கிறது. அதற்கும் நீ செய்த காரியத்துக்கும் என்ன சம்பந்தம்? புரியவில்லையே!''


''புரியும்படி சொல்கிறேன், கேள். நீயும் சேகரும் பூங்காவிலும், கோவிலிலும் இன்னும் இதர இடங்களிலும் சந்திப்பதைப் பற்றி உன் அந்தரங்கங்களையெல்லாம் என்னிடம் நீ கூறியிருக்கிறாய் அல்லவா? அதை மனத்தில் வைத்துக் கொண்டு என் எண்ணத்தைச் செயலாக்க முற்பட்டேன். அதாவது இரவு எட்டு மணிக்கு மேல் எப்படியாவது உன்னைச் சவுக்குத் தோப்பு பக்கமாகப் போகும்படி செய்துவிட்டால் உன்னைப் பேயறைந்து போட்டு விடும் என்று நான் திடமாக நம்பினேன். ஆகையால்....''

''ஆகையால்....?''

'''இரவு எட்டு மணி சுமாருக்குச் சவுக்குத் தோப்பில் எனக்காகக் காத்திரு' என்று சேகர் எழுதியது போல் நானே உனக்கு ஒரு கடிதம் எழுதி எதேச்சையாக எங்கள் வீட்டுக்குக் கல்யாண காரியமாக வந்திருந்த அவருடைய ஆள் வசமே அனுப்பினேன். என் திட்டம் என்ன என்பது புரிந்ததா?''

அவள் விழிகளில் கண்ணீர் ஆறுப் பெருகலாயிற்று. ஐந்து நிமிஷங்களுக்குப் பின் ஏதோ நினைத்துக் கொண்டவள் போல் கண்களைத் துடைத்துக் கொண்டு உள்ளே சென்றாள். திரும்பும்போது ஒரு சிறிய கடிதத்துடன் வந்தாள். ஆம், இருபது வருஷங்களுக்கு முன்னால் என் கைப்பட எழுதப்பட்ட அதே கடிதம்தான். அதைப் பார்த்தவாறே துக்கம் தோய்ந்த முகத்துடன் சற்று நேரம் உட்கார்ந்திருந்தாள் தில்லை.

அந்தச் சூழ்நிலையின் சோகப் பிடிப்பிலே சிக்கிய என் வெறி ஒருவாறு சற்று அடங்கி, எனக்கு அவள்மேல் இரக்கம் ஏற்பட்டது. எனவே அவளைச் சமாதானப்படுத்தும் நோக்கத்துடன் கூறினேன்—''மனத்தைத் தேற்றிக் கொள், தில்லை! இது நடந்து எத்தனையோ ஆண்டுகள் கழிந்து விட்டன. அப்போது நாம் இளவயதினர். இப்போது வயதும் நாற்பதுக்கு மேல் ஆகிவிட்டது. என் கணவர் எனக்கே உரிமையாயிருக்க வேண்டும் என்ற ஆசையினால் பொறாமை கொண்டு அப்படிச் செய்து விட்டேன். என்னை மன்னித்து விடு, தில்லை!'' உணர்ச்சியால் உந்தப் பெற்று அவள் கைகளைப் பற்றியபோது என் கண்களும் கலங்கி விட்டன.



க: பார்த்தாயா. நம்ப சித்தப்பனே! அவருக்குக் கரப்பின்னு - உசிரு. விழுந்து பிராணனே விட்டு விடுவார்!

அவள் கூறினாள்:—''உன் ஆசை நியாயமானது தான், கமலா. அதனால் நீ இப்படிச் செய்து விட்டாய் என்பதற்காக நான் வருத்தமே படவில்லை. ஆனால் என் வாழ்நாட்களிலேயே எனக்குச் சேகரிடமிருந்து வந்த முதலும் கடைசியுமான கடிதம் இது ஒன்று தான் என்று எண்ணி இத்தனை காலமாகப் பத்திரப்படுத்தி வைத்திருந்தேன். ஆனால் இன்று இதுவும் அவர் கையால் எனக்கு எழுதப்படவில்லை என்று அறிந்து கொண்டபோது தான் என் நெஞ்சே வெடித்து விடும் போல் இருக்கிறது.'' இதைக் கூறிவிட்டுத் தில்லை கையிலிருந்த கடிதத்தை ஆயிரம் சுக்கல்களாகக் கிழித்து எறிந்துவிட்டாள். அவளுடைய விரக்தியான வார்த்தைகளும் செய்கையும் எனக்கு மிக்க வேதனையை அளித்தன. அவள் முகத்தையே இமை கொட்டாமல் பார்த்தவாறு இருந்தேன்.

சிறிது நேரத்தில் அவள் வதனத்தில் வழிந்த வருத்தம் மறைந்து அதரங்களில் புன்னகை அரும்பலாயிற்று. ஏதோ கூறத் திடம்பெற்று விட்டாற் போலக் கண்களில் உறுதி பளிச்சிட்டு மிளிர அவள் சம்பாஷணையை மீண்டும் தொடங்கினாள்.

''அது சரி. ஆனால் உண்மையில் அன்று நாங்கள் இருவரும் சந்தித்துக் கொண்டோம் என்பதை நீ அறிவாயா, கமலா?''

எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. ''இல்லை! ஒருகாலும் நீ சொல்வதை நான் நம்ப முடியாது! ஏனென்றால் கடைசி வரை நான் இம்மாதிரிக் கடிதம் எழுதியது அவருக்குத் தெரியவே தெரியாது!'' அடிபட்ட வேங்கையைப் போல ஆத்திரத்தோடு கூறினேன் நான்.

சாவதானமாகப் பதிலிறுத்தாள் தில்லை: ''ஆமாம்! நீ இதை அவரிடம் சொல்லியிருக்க மாட்டாய் என்பதை நான் நம்புகிறேன். பின் எப்படி அவர் என்னைச் சந்தித்தார் என்றுதானே கேட்கிறாய்? கவனமாகக் கேள். அது நீ எழுதிய கடிதம் என்று எனக்குத் தெரியாதாகையால், அவர்தான் எழுதியிருக்கிறார் என்று நம்பிய நான் 'எட்டு மணிக்கெல்லாம் சவுக்குத் தோப்பில் தவறாமல் சந்திக்கவும்' என்று கடிதம் கொண்டு வந்த ஆள் மூலமாகவே பதில் எழுதிக் கொடுத்து அதைச் சேகரிடம் சேர்க்குமாறு கூறி அனுப்பி விட்டேன். அவனும் கொடுத்திருக்கிறான். அவரும் வந்திருந்தார்.

அவருக்கு நான் எழுதிய பதில் குறிப்பு கடிதத்திற்குப் பதில் என்பதாகத் தெளிவாகாமல் அமைந்து விட்டதாலும், அந்தக் கடிதம் நிஜமாக அவரேதான் எழுதியது என்று வேறு நான் மனப்பூர்வமாக நம்பியதாலும் அன்று நாங்கள் சந்தித்த போது இதைப் பற்றிய பேச்சே வரவில்லை! ஆகையால் நாளது வரையில் உன் சூது எனக்குத் தெரியாது. உண்மையில், உங்கள் கல்யாணம் நிச்சயமாகியவுடன் ஒரு நாள் அவர் என்னைத் தேடி வந்து, தமது வயதான தாயின் பேச்சைத் தட்டாமலேயே இந்தத் திருமணத்துக்குச் சம்மதித்திருப்பதாகவும், ஆகையால் அதற்கு மேல் நான் அவரை மறந்து விட்டு அடுத்த ஜன்மத்திலாவது நாங்கள் தம்பதிகளாக வாழ அருளுமாறு தெய்வத்தைப் பிரார்த்திக்க வேண்டுமென்றும், கண்களில் நீர் ததும்ப நாத்தழுதழுக்கக் கூறி விட்டுச் சென்றிருந்தார்.

"அத்தகைய உறுதி படைத்த அவரிடமிருந்து எனக்கு மேற்கண்டபடி கடிதம் வந்தவுடன் பிரமித்தேன். அவரை மீண்டும் ஒரு தடவை பார்க்கவாவது கொடுத்து வைத்தோமே என்று உள்ளம் மகிழ்ந்தேன். குறித்த நேரத்தில் அங்கே போய்க் காத்துக் கிடந்தேன். அவரும் வந்தார். யாராவது பார்த்தால் ஆபத்து என்று எடுத்துக் காட்டி வீட்டுக்கு அழைத்தேன். என் அம்மா எங்கோ வெளியூர் போயிருந்தது எனக்குத் தெரியுமாதலால் வீட்டில் ஒருவரும் இருக்க மாட்டார்கள் என்று நான் அறிந்திருந்தேன். என் வற்புறுத்தலை மீற மாட்டாமல் முடிவில் அவர் அன்று கடைசித் தடவையாக என் வீட்டுக்கு விஜயம் செய்தார். அத்தனை காலமும் இல்லாத புதுமையாய் எங்கள் கட்டுப்பாட்டுக்கு மீறிய ஏதோ ஒரு சக்தி எங்களை அதிகம் பேசவொண்ணாமல் அடித்தது!

"அரைமணி நேரம்கூட இருந்திருக்க மாட்டார். என்றாலும் அந்த ஒரு நாள் என் வாழ்க்கையிலேயே மறக்க முடியாத ஒரு மகத்தான நாள்! அன்புள்ள கமலா, நீ இப்படி எனக்குக் கடிதம் எழுதியதால்தானே நான் அவரைச் சந்திக்க முடிந்தது? அதற்காக நான் உனக்கு என் ஆயுள் உள்ளவரை என்றென்றும் நன்றி உள்ளவளாக இருப்பேன்....."

என் மனத்தில் குரோதம் குமுறியது. அவர்கள் சந்திப்பதைத் தடுப்பதாக எண்ணிக் கொண்டு, அவர்கள் சந்திப்புக்கு நானே காரணமாக அமைந்து விட்டேனே என்று உள்ளம் பொருமிக் கொண்டிருந்தது. இது நடந்து இருபது ஆண்டுகள் கழிந்து விட்டதென்றாலும், ஏதோ இன்று நடப்பது போல் பொறாமையால் வெதும்பினேன். சிறிது நேரம் இருவரும் பேசவில்லை. ஒருவாறு சமாளித்துக் கொண்டு அவளிடம் கூறலானேன்:



டாக்டர்: உங்கள் ஜுரத்துக்கு மாத்திரை அனுப்பினேனே! உடனே வியர்த்து விட்டதா?

நோயாளி: இல்லே, உங்கள் 'பில்'லைப் பார்த்தவுடன் நன்றாக வியர்த்தது!

"போகிறது! உனக்கு வாழ்விலேயே ஒரு நாள் தானே மறக்க முடியாத நாளாகக் கூறுகிறாய். ஆனால் எனக்கு இத்தனை வருஷங்களாக அவருடன் வாழ்ந்த ஒவ்வொரு நாளுமே மறக்க முடியாத திருநாட்கள். என் அறிவின்மையால் நேர்ந்த அந்தச் சந்திப்புத்தானே நீ அவரைக் கடைசியாகச் சந்தித்தது? பாவம், இன்றைக் கெல்லாமிருந்தால் உனக்கு அதனால் என்ன கிடைத்திருக்கப் போகிறது? அவருடன் பேசிய பேச்சுக்களும், சில சந்திப்புக்களும் தானே? ஆனால் எனக்கோ, அவருடைய உடலிலிருந்து கடைசி மூச்சுப் பிரியும் வரை அவருடன் உள்ளத்தாலும் உடலாலும் உறவாடிய இன்ப நினைவு வாழ்நாள் வரையிலும் வற்றாத ஜீவநதியாக என் நெஞ்சிலே ஓடிக் கொண்டிருக்கும் பாக்கியம் அல்லவா கிடைத்திருக்கிறது. அதனால் உன் அற்பத் திருப்தியைக் குறித்துப் பொறாமை கொள்ளாமல் உனக்காகப் பரிதாபமே படுகிறேன், இல்லே!"

அவள் உடனே ஏதோ பதில் கூற எத்தனித்தாள். ஆனால் அதற்குள் ஏதோ கலகலவென்று பேசிச் சிரித்தவண்ணம் குழந்தை ராஜியும் மோகனாவும் மாடியிலிருந்து இறங்கவே எங்கள் பேச்சு தடைபட்டு விட்டது.


இல்லேயிடம் விடைபெற்று வீட்டுக்குக் கிளம்பி விட்டேன். வாசலில் தயாராகக் காத்திருந்த வண்டியில் ராஜியை அமர்த்தி விட்டு நானும் ஏறிக் கொண்டேன். வாசல் வரை வந்து வழியனுப்பிய இல்லே வண்டி புறப்படும் கடைசி நிமிஷத்தில் கூறினாள். "எனக்காக நீ பரிதாபப்படுவதாகச் சொன்னாயல்லவா? ஆனால் நீ அப்படிச் செய்யத் தேவையே இல்லே, கமலா! ஏனென்றால் சேகரும் நானும் சந்தித்த அந்தக் கடைசிச் சந்திப்பினால்தான் எனக்கு....."

சொல்ல வந்ததை முடிக்காமல் பக்கத்தில் நின்றுகொண்டிருந்த தன் மகள் மோகனாவின் மீது கண்ணோட்டம் செலுத்தி, முகத்திலே பெருமை பொங்க நின்றாள் இல்லே தாயவி! அப்போது மோகனாவின் மீது என் பார்வையும் எதேச்சையாகத் திரும்பியது: பக்கவாட்டுத் தோற்றம் காட்டிச் சௌந்தர்ய பிம்பமென அவள் நின்று கொண்டிருந்த கோணத்திலே அந்த எழில் வதனத்தைக் கணநேரம் கவனித்தேனோ இல்லையோ, எனக்குத் தூக்கி வாரிப் போட்டு விட்டது. பின் இதென்ன அதிசயம்! அசப்பில் இல்லேயின் ஜாடையாகவே தெரிந்த அந்த ஓவிய முகத்திலே, கூர்ந்து கவனித்தால் இலை மறைவு காய் மறைவாக என் கணவருடைய சாயலும் பிரதிபலிப்பதை அல்லவா காண்கிறேன்!

"இல்லே, இல்லே... இதென்ன புதிர்?"

கூக்குரலாய் வெளி வந்த என் கேள்வியை அவள் காதில் விழ முடியாமல் அடித்துவிட்டு ஏக இரைச்சலுடன் கிளம்பி முன்னோக்கிப் பாய்ந்தது குதிரை வண்டி!

Printed and Published by R. Ananthanarayanan for the Proprietors Messrs Bharathan Publications Private Limited at the Kalki Press, Kilpauk, Madras 10
Managing Editor: T. Sadasivam


நீங்கள்
களைப்பு
அடையும்
பொழுது
தேநீர்
உங்களுக்கு
உற்சாக
மூட்டுகிறது
நான்தான் டீ

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon